எம். துருஷெ

Rs. 3.00

# வி.இ.லெனின் எழுதிய "'இடதுசாரி' கம்யூனிசம் — இளம் பருவக் கோளாறு"

Rs 10/-

முன்னேற்றப் பதிப்பகம்
மாஸ்கோ

விற்பனையாளர்கள்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்
சென்னை

NEW CENTURY BOOK HOUSE (P) LTD.
Rs. 8.50
MADRAS-98

**Труш М.**

О РАБОТЕ В. И. ЛЕНИНА „ДЕТСКАЯ БОЛЕЗНЬ ‚ЛЕВИЗНЫ' В КОММУНИЗМЕ"

*на тамильском языке*

**Trush M.**

ON V. I. LENIN'S "'LEFT-WING' COMMUNISM – AN INFANTILE DISORDER"

*in Tamil*

© முன்னேற்றப் பதிப்பகம், 1989
சோவியத் நாட்டில் அச்சிடப்பட்டது

T $\frac{0102020000-042}{014(01)-89}$ 308-89

ISBN 5-01-001465-3

பொருளடக்கம்

முன்னுரை . . . . . . . . . . 5
போல்ஷிவிசம், அக்டோபர் புரட்சி அனுபவத்தின் சர்வதேச முக்கியத்துவம் . . . . . 27
புரட்சிப் போராட்டத்தின் செயல் திட்டமும் செயல்முறையும் . 57
கம்யூனிஸ்டுகளும் தொழிற்சங்கங்களும் . . . . . . . . . . 71
புரட்சிகர நாடாளுமன்ற செயல் முறை . . . . . . . . . . 87
சமரசங்களின் பாலான லெனினிய அணுகுமுறை . . . . . . . 110
சோஷலிசப் புரட்சியைப் பற்றிய தத்துவம் . . . . . . . . 148
புதிய வகையான கட்சி . . . . 193
முடிவுரை . . . . . . . . . 216

சொற்றொடர் விளக்கம் . . . 223

## முன்னுரை

வி. இ. லெனின் **''இடதுசாரி'' கம்யூனிசம் — இளம் பருவக் கோளாறு** என்ற நூலை 1920 ஏப்ரல் — மேயில் எழுதினார். இது 1920 ஜூலை — ஆகஸ்டில் நடைபெற்ற கம்யூனிச அகிலத்தின் இரண்டாவது காங்கிரசையொட்டி எழுதப்பட்டது. காங்கிரசின் முடிவுகளுக்குச் சித்தாந்த தத்துவார்த்த அடிப்படையாக விளங்கிய இது சர்வதேச கம்யூனிஸ்டு இயக்கத்தின் முன் நின்ற உடனடிப் பிரச்சினைகளுக்குப் பதிலளித்தது. இந் நூல் தான் எழுதப்பட்ட காலத்தின் வரம்பு களைத் தாண்டி விட்டதை வாழ்க்கை காட்டி யுள்ளது. இந்நூல் ஆரம்ப நோக்கங்களைப் பெரிதும் விஞ்சி, முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்திற்கான மாற்றம் நடைபெறும் சகாப்தத்தில் வர்க்கப் போராட்டத்திற்குத் தலைமை தாங்கி வழிகாட்டும் உண்மையான கலைக்களஞ்சியமாகத் திகழுகிறது.

அப்போதுதான் தோற்றுவிக்கப்பட்ட இளம் கம்யூனிஸ்டுக் கட்சிகள் ''புரட்சி வேலையின் அமைப்புத்துறை, கட்டமைப்பு, முறை மற்றும் உள்ளடக்கத்தை உண்மையிலேயே புரிந்து கொள்ளும் பொருட்டு''* இவற்றிற்கு உதவுவதுதான்

---

* வி. இ. லெனின், **தேர்வு நூல்கள்**, பன்னிரண்டு தொகுதிகளில், தொகுதி 12, மாஸ்கோ, முன்னேற்றப் பதிப்பகம், 1982, பக்கம் 238.

வி. இ. லெனினின் நோக்கமாக இருந்தது.

மேற்கு ஐரோப்பாவின் பெரும்பாலான அரசுகளில் லெனினிய வகையிலான புதிய கம்யூனிஸ்டுக் கட்சிகளைத் தோற்றுவிப்பதற்கான அடித்தளம் முதலாவது உலக யுத்த ஆண்டுகளிலேயே தயாரிக்கப்பட்டது. 1914ஆம் ஆண்டில் அரம்பமான ஏகாதிபத்திய யுத்தம் உழைப்பாளிகள் அனைவருக்கும் ஒரு கசப்பான படிப்பினையைக் கற்பித்தது; இரண்டாவது அகிலத் தலைவர்களின் சந்தர்ப்பவாதக் கொள்கை எத்தகையதொரு முட்டுக் கட்டைக்கு இட்டுச் செல்லக் கூடும் என்று இது காட்டியது. 1912இல் நடந்த பாசெல் சோஷலிஸ்டுக் காங்கிரசின் முடிவுகளை இவர்கள் மறந்தனர்; வந்து கொண்டிருந்த ஏகாதிபத்திய யுத்தத்திற்கு எதிராய் தீவிரமாகப் போராடும்படி எல்லா நாடுகளிலும் உள்ள தொழிலாளர்களுக்கு இக்காங்கிரஸ் அறைகூவல் விடுத்தது. சந்தர்ப்பவாதத் தலைவர்களோ இதற்கு செவிமடுக்காது தத்தம் அரசாங்கங்களின் ஆக்கிரமிப்புக் கொள்கைக்கு ஆதரவளித்தனர். எனவே யுத்தம் ஆரம்பமான முதல் மாதங்களிலிருந்தே எல்லா நாடுகளிலும் தொழிலாளர் இயக்கம் தீவிரமடையத் துவங்கியது; எல்லா சமூக-ஜனநாயகக் கட்சிகளிலும் இடதுசாரி பிரிவுகள் வலுப்பட்டன. அதாவது முதலாளித்துவ நாடுகளில் உண்மையான புரட்சிகர கட்சிகளையும் குழுக்களையும் ஏற்படுத்தத் தேவையான உள்நாட்டு சூழ்நிலைகளைத் தயார்படுத்தும் படிப்படியான நிகழ்ச்சிப் போக்கு குறிப்பிட்ட அளவிற்கு யுத்தத்தால் துரிதப்பட்டது. அன்

றைய வலதுசாரி சமூக-ஜனநாயகம் ஏகாதிபத் தியத்தின் இராணுவவெறிக் கொள்கையுடன் தன்னைத் தொடர்புபடுத்திக் கொண்டு, யுத்தத் தைக் கட்டவிழ்த்து விட்டவர்களுக்கு ஆதரவளித் ததன் மூலம் மக்கள் திரளினரின் கண்களில் தன்னைத் தானே பெருமளவில் அம்பலப் படுத்திக் கொண்டது.

1917இல் ருஷ்யாவில் நடைபெற்ற மாபெரும் அக்டோபர் சோஷலிசப் புரட்சி உலகப் புரட்சி கர நிகழ்ச்சிப் போக்கின் வளர்ச்சி மீது தீர்மான கரமான தாக்கம் செலுத்தியது. இதுதான் வெற்றிகரமான முதல் பாட்டாளி வர்க்கப் புரட்சியாக இருந்தது. அக்டோபர் புரட்சி சமா தானத்தைப் பற்றிய பிரச்சினையை, யுத்தத்தை நிறுத்த வேண்டியதைப் பற்றிய பிரச்சினையை உறுதியோடு முன்வைத்ததன் மூலம் மேலைய நாடுகளில் மக்கள் திரளினரின் புரட்சிப் போராட்டத்தின் வளர்ச்சிக்கான முதல் பெரும் உந்து சக்தியை அளித்தது ஆழ்ந்த அடையாளச் சிறப்புடையது.

மேலைய நாடுகளின் ஆளும் வட்டங்கள் யுத்தத் தைத் தொடருவதில் உறுதியாக நிற்பதைக் கண்ட போரிடும் ஐரோப்பிய நாடுகளின் உழைப் பாளிகள் 1918ஆம் ஆண்டின் இரண்டாம் பாதி யில் பலத்த புரட்சிப் போராட்டங்களைத் துவக் கினர். ஜெர்மனி, ஆஸ்திரியா, பின்லாந்து, இன் னும் சில நாடுகளில் புரட்சி இயக்கம் வெடித்தது. சமூக-ஜனநாயகம் இச்சம்பவங்களை எப்படி அணுகியது? இராணுவத்துடனும் பூர்ஷ்வா அர சாங்கங்களுடனும் துரோக உடன்படிக்கை

களைச் செய்து கொள்வதிலிருந்து புரட்சிவீரர் களைச் சுட்டுக் கொல்வதிலும் அடக்கியொடுக்கு வதிலும் பங்கேற்பது வரை சகலவித வழி களையும் பின்பற்றி மேற்கே புரட்சி பரவாமல் தடுப்பதுதான் சமூக-ஜனநாயக நடவடிக்கை முழு வதன் நோக்கமாயிருந்தது. இத்தகையதொரு சூழ்நிலையில் தொழிலாளர் இயக்கத்தின் உள்ளே தோன்றிய பிரிவினைப் போக்குகள் தொழி லாளர் வர்க்கத்தின் புதிய, புரட்சிகர கட்சி கள் உருவாக இட்டுச் சென்றன.

1918இல் வர்க்கப் போராட்டங்களின் போக் கில் ஆஸ்திரியா, ஜெர்மனி, போலந்து, பின் லாந்து, இன்னும் பல நாடுகளில் கம்யூனிஸ்டுக் கட்சிகள் தோன்றின, அர்ஜென்டைனா, கிரீஸ், ஸ்வீடனில் இடதுசாரி சோஷலிஸ்டுக் கட்சிகள் பிறந்தன. பின்னால் இவை கம்யூனிஸ்டுக் கட்சி களாகப் பெயரை மாற்றிக் கொண்டன.

1919இல் கம்யூனிஸ்டு அகிலத்தின் தோற்ற மானது கம்யூனிச இயக்கம், புதிய வகையான மார்க்சிய-லெனினியக் கட்சிகளின் இயக்கம் யதார்த்தமாகியதைக் குறித்தது. 1919 மார்ச்சு முதல் 1920 செப்டெம்பர் வரையில் யூகோஸ் லாவியா, பல்கேரியா, டென்மார்க், அமெரிக்க ஐக்கிய நாடு, மெக்சிக்கோ, ஸ்பெயின், இந்தோ னேஷியா, இரான், கிரேட் பிரிட்டன், துருக்கி, உருகுவே ஆகிய நாடுகளில் கம்யூனிஸ்டுக் கட்சி கள் தோன்றின. ருமேனியா, இத்தாலி, லுக்சம் பர்க் நாடுகளின் சோஷலிஸ்டுக் கட்சிகளும், நார்வே கட்சியும், பிரிட்டிஷ் சுதந்திர தொழி லாளர் கட்சியின் ஸ்காட்லாந்துப் பிரிவும், இன்

னும் பல நாடுகளின் புரட்சிக் குழுக்களும் தொழிற்சங்கங்களும் கம்யூனிஸ்டு அகிலத்தில் சேருவதாய் அறிவித்தன. 1922ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் உலகில் 37 கம்யூனிஸ்டு மற்றும் தொழிலாளர் கட்சிகள் இயங்கின.

கம்யூனிஸ்டுக் கட்சிகள் சிக்கலான சூழ்நிலையில் வெவ்வேறு வழிகளில் தோன்றின. முதலாளி வர்க்கமும் சகலவித பிற்போக்குச் சக்திகளும் வெறித் தாண்டவமாடிய கடினமான சூழ்நிலையில் கம்யூனிஸ்டுகள் மக்கள் திரளினருக்காகப் போராடினார்கள். தொழிலாளர் இயக்கத்தின் உள்ளே அனுபவம் மிக்க வலதுசாரி சோஷலிஸ்டுக் கட்சிகள் இளம் கம்யூனிஸ்டுக் கட்சிகளுக்கு எதிராகச் செயல்பட்டு, அமைப்பு ரீதியாக அணி திரண்டிருந்த பாட்டாளி வர்க்கத்தினரில் கணிசமான பகுதியினர் மத்தியில் சீர்திருத்தவாத மற்றும் திருத்தல்வாதக் கருத்துகளைப் பரப்பின; இவற்றைத் தவிர மத்தியவாதக் கட்சிகளும் இயங்கின, இவை தம் பொய் புரட்சி வறட்டுத் தத்துவத்தால் முன்னணித் தொழிலாளர்கள் சரியான புரட்சிகரப் பாதையைத் தேர்ந்தெடுக்க இடையூறு செய்தன. கம்யூனிஸ்டு இயக்கத்தின் உள்ளேயே ‘‘இடதுசாரி’’ அபாயம் அதிகரிக்கத் துவங்கியது; இளம் கம்யூனிஸ்டுகளுக்கு அரசியல் அனுபவமின்மை, போதுமான தத்துவார்த்தப் பயிற்சியின்மை, இவர்களால் யதார்த்தத்தை மதிப்பிட இயலாமை, வர்க்கப் போராட்டத்தின் எல்லா பிரச்சினைகளுக்கும் ஒரே அடியில் விரைவாகத் தீர்வு காண வேண்டும் என்ற நாட்டம் ஆகியவைதான் இந்த

அபாயத்திற்கான காரணங்களாகும். கம்யூனிஸ்டுக் கட்சிகள் விரைவாக வளர்ச்சியடைந்த பொழுது, துரோகமிழைத்து எதிரியின் தரப்பிற்கு மாறவல்ல சகல விதமான அன்னிய சக்திகளும் ஊசலாடும் சக்திகளும் இக்கட்சிகளினுள் புகும் அபாயம் தோன்றியது. ஒரு சில ஐரோப்பிய நாடுகளில், எடுத்துக்கட்டாக ஜெர்மனி, பிரிட்டன், ஹாலந்து, இத்தாலியில் ''இடது சாரி'' கம்யூனிஸ்டுக் குழுக்கள் தோன்றின, இவை கம்யூனிஸ்டுகளை மக்கள் திரளினரிடமிருந்து பிரித்து துர்ச்சாகசப் பாதைக்கு இட்டுச் சென்றன. தம்மை ''அதி தீவிர புரட்சியாளர்களாக'' அறிவித்துக் கொண்ட இவர்கள் புரட்சிப் போராட்டத்தில் கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைமைப் பாத்திரத்தை மறுத்தனர், கட்சியில் கட்டுப்பாட்டையும் ஜனநாயக மத்தியத்துவத்தையும் நிராகரித்தனர், தொழிற்சங்கங்கள், மற்ற வெகுஜன ஸ்தாபனங்கள் (இவை பிற்போக்குச் சக்திகளின் தலைமையில் இருந்தாலும் கூட), பூர்ஷ்வா ஆட்சியமைப்புகளாகிய முனிசிபல் கவுன்சில்கள், நாடாளுமன்றம் ஆகியவற்றில் கம்யூனிஸ்டுகள் செயல்பட வேண்டியதன் அவசியத்தைப் புரிந்து கொள்ளவில்லை, பாட்டாளி வர்க்கம், உழைப்பாளிகளின் முற்போக்கு அரசியல் ஸ்தாபனங்களுடன் கம்யூனிஸ்டுக் கட்சிகள் ஒத்துழைப்பதையும் உடன்படிக்கை செய்து கொள்வதையும் எதிர்த்தனர்.

இளம் கம்யூனிஸ்டு இயக்கத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சிப் போக்குகள்தான் இந்நூலை எழுதும்படி வி. இ. லெனினைத் தூண்டின. வலது

சாரி சந்தர்ப்பவாதத்திலிருந்து, குறிப்பாக இதன் மத்தியவாத வகையிலிருந்து தத்துவார்த்த ரீதியில் பிரிந்து நிற்காமல், ‘‘இடதுசாரி’’ கம்யூனிசம் தோன்றியதற்கான காரணங்களை விஞ்ஞான ரீதியாகப் பகுப்பாய்வு செய்யாமல், இதை விமர்சிக்காமல், வறட்டுச் சூத்திரவாத மற்றும் குறுங்குழுவாத தவறுகளை அகற்றாமல் புதிய வகையான பாட்டாளி வர்க்க கட்சியைத் தோற்றுவிக்க முடியாது என்று ருஷ்ய புரட்சி இயக்கத்தின் வரலாற்றுப் படிப்பினைகளின் எடுத்துக் காட்டில் வி. இ. லெனின் மெய்ப்பித்தார். இரண்டு முனைகளில் — வலதுசாரி சந்தர்ப்பவாதத்திற்கு எதிராயும் ‘‘இடதுசாரி’’ சந்தர்ப்பவாதத்திற்கு எதிராயும் — சமரசமற்ற போராட்டத்தை நடத்துவதுதான் கம்யூனிஸ்டு இயக்க வளர்ச்சியின் முக்கிய சிறப்பியல்புகள், நியதிகளில் ஒன்று என்று கருதிய லெனின் தன் நூலில் இதற்காக ஒரு தனி அத்தியாயத்தை ஒதுக்கினார்.

புதிய கம்யூனிஸ்டுக் கட்சிகள் குழந்தை நோய்கள் போன்ற வளர்ச்சிக் குறைபாடுகளால் பீடிக்கப்படுவதால்தான் வி. இ. லெனின் தன் நூலுக்கு இப்பெயரிட்டார். ‘‘இடதுசாரிகளின்’’ தவறுகள் இவர்களின் அரசியல் மற்றும் தத்துவார்த்த முதிர்ச்சியின்மைக்கும் இவர்களின் அரசியல் குழந்தைத்தனத்திற்கும் சான்று பகர்ந்தன. ‘‘இடதுசாரி’’ என்ற சொல்லை மேற்கோள் குறிகளுக்குள் லெனின் குறிப்பிடக் காரணம், மார்க்சியக் கட்சிதான் உண்மையிலேயே புரட்சிகரமான, இடதுசாரிக் கட்சி என்பதாகும். இதைவிட

''இடதுசாரிக்குச்'' செல்ல யார் முயன்றாலும் அவர்கள் சந்தர்ப்பவாதத்தில், பிற்போக்காளர் களுடன் சென்று நிற்பார்கள்.

''இடதுசாரி'' கம்யூனிசம் தோன்றுவதற்கான காரணங்களை லெனின் பகுப்பாய்வு செய்தார். இவர் இதை சமூக-ஜனநாயகத் தலைவர்களின் சீர்திருத்தவாதம், அரசியல் சந்தர்ப்பவாதத்திற் கான எதிர்ச்செயலாகக் கருதினார்; ''இடது சாரி'' கம்யூனிஸ்டுகள் என்பவர்கள் புரட்சிகரத் தொழிலாளர் இயக்கத்திலிருந்து பிரிந்து நிற்கும் குறுங்குழுவாதக் குழுக்களேயன்றி வேறல்ல என்று இவர் நிரூபித்தார். அதே நேரத்தில் கம்யூ னிஸ்டுகளின் அரசியல் அனுபவமின்மையும் மக் கள் திரளினரின் மத்தியில் பொறுமையாகப் பணியாற்றும் திறமையின்மையும்தான் ''இடது சாரி'' போக்கிற்கான தவறுக்கு மூல ஊற்று களாகும். விரைவாகப் புரட்சியில் வெற்றி பெற வேண்டும் என்ற நாட்டம் கம்யூனிஸ்டுகளில் ஒரு பகுதியினரிடையே இடதுசாரி மனநிலை களைத் தோற்றுவித்தது. இது முந்தைய கால கட்டங்களில் உருவாக்கப்பட்ட போராட்ட வடி வங்களை நிராகரிக்கும் போக்கிற்கு இட்டுச் சென்றது.

''இதைவிட முட்டாள்தனமான ஒன்றை, 'இடதுசாரிப்' புரட்சியாளர்களால் புரட்சிக்கு ஏற்படும் கேட்டை விட பெரிய ஒன்றைக் கற் பனை செய்வதுகூட கடினம்!''* என்பது லெனி னுக்கு நன்கு புரிந்தது.

---

* வி. இ. லெனின், தேர்வு நூல்கள், தொகுதி 10, பக்கம் 239.

''இடதுசாரிப்'' போக்கிற்கான சமூகக் காரணம், தொழிலாளர் மற்றும் கம்யூனிஸ்டு இயக்கத்தின் மீது குட்டி பூர்ஷ்வாப் புரட்சித் தன்மை செலுத்திய தாக்கமாகும். திவாலாகிப் போன சிறு உடைமையாளன், வாழ்க்கை விரைவாக மோசமடைந்ததை அனுபவித்தவன், தன் வாழ்க்கைக்கான பொருளாயத அடிப்படையை இழந்தவன், வர்க்கத் தன்மையை இழந்தவன், முதலாளித்துவக் கேடுகளால் ஆட்டிப் படைக்கப்பட்டவன் எளிதாக கடைக்கோடி புரட்சி நிலைக்கு மாறுவான்.

இவன் உடனடி புரட்சிக்கு முயலுவான், கிளர்ச்சி மனப்பாங்கையும் அராஜகவாதத்தையும் தொழிலாளர் இயக்கத்தினுள் புகுத்துவான். இப்படிப்பட்ட அவசர புரட்சிக்கோலம் நீண்ட, பொறுமையான, ஒழுங்கமைக்கப்பட்ட போராட்டத்திற்கு ஏற்றதல்ல.

அக்டோபர் புரட்சிக்குப் பின் ஐரோப்பிய நாடுகளில் நடந்த தொழிலாளர் போராட்டங்கள் தொழிலாளர்களின் உணர்வில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தின. மூலதனத்திற்கு எதிரான போராட்டத்தில் தம் அணிகளின் ஸ்தாபன அமைப்பு, ஒற்றுமையை விட வலிமையானதொரு சாதனம் வேறில்லை என்பதை இவர்கள் தம் அனுபவத்தில் உணர்ந்தனர். புரட்சி சித்தாந்தம், கொள்கையின் பால் மக்கள் திரளினரை வென்று ஈர்ப்பதுதான் பாட்டாளி வர்க்கப் போராட்டத்தின் வெற்றிக்கான முக்கிய நிபந்தனையாகும். இது மக்கள் திரளினரின் மத்தியில் இருக்குமாறும், இவர்களைத் தம்முடன் அழைத்துச்

செல்லுமாறும், தொழிலாளி வர்க்கத்தின் அன்றாடப் போராட்டத்திற்கும் இறுதி லட்சியத்திற்கான போராட்டத்திற்கும் இடையில் தொடர்பைக் கண்டுபிடிக்குமாறும் கம்யூனிஸ்டுக் கட்சிகளுக்குக் கட்டளையிடுகிறது.

''இடதுசாரிகளின்'' அதிசாகசவாதத்தையும் மக்கள் திரளினரின் மத்தியிலான பணியை இவர்கள் அலட்சியப்படுத்துவதையும் வி. இ. லெனின் கண்டித்து விமர்சித்தார். குறுங்குழுவாதத்திற்கான — இது கம்யூனிஸ்டுகள் தம்மைத் தாமே தனிமைப்படுத்திக் கொள்வதற்கு இட்டுச் செல்லும் — முக்கியக் காரணத்தை மக்கள் திரளினரின் பாலான நம்பிக்கையின்மையில், இவர்களை அணுகும் திறமையின்மையில் தேட வேண்டும். மக்கள் திரளினரை அணுகும் முறைகளை லெனின் சுட்டிக் காட்டினார். இவற்றில் முக்கியமானவை பின்வருமாறு: விரைவாக மாறும் அரசியல் சூழ்நிலையில் நிலவரத்தை மதிப்பிட கம்யூனிஸ்டுகள் கற்றுக் கொள்ள வேண்டும், பல்வேறு சமூக போராட்ட வடிவங்களை (ஏற்கெனவே தெரிந்தவை உட்பட) பின்பற்ற வேண்டும், பழைய முறைகளுக்குப் புதிய சாரத்தை அளிக்க வேண்டும், நிலவரம் மாறும் பொழுது இம்முறைகளைத் திறமையாக, விஷயமறிந்து பயன்படுத்த வேண்டும், சட்டபூர்வமான பணியையும் தலைமறைவுப் பணியையும் இணைத்துச் செயல்பட வேண்டும், ஒரு வகையான செயல் தந்திரங்களிலிருந்து வேறு வகையான செயல் தந்திரங்களுக்கு, அதிக செயல்முனைப்பான, எதிரி எதிர்பாராத செயல்தந்திரங்களுக்கு மாற

வேண்டும், எல்லா போராட்ட சாதனங்களை யும் முறைகளையும் கிரகிக்க முயல வேண்டும்.

சீர்திருத்தவாத தொழிற்சங்கங்களிலும் உழைப்பாளிகளின் மற்ற வெகுஜன ஸ்தாபனங் களிலும் பணியாற்ற மறுப்பது லெனினின் கருத் துப்படி, பூர்ஷ்வாக்களுக்குத்தான் லாபம். ஏனெ னில் இப்படி மறுப்பதன் மூலம் இந்த ஸ்தாபனங் கள் பூர்ஷ்வா வலதுசாரி சோஷலிஸ்டு தலை வர்களின் கரங்களுக்கு மாறும். பூர்ஷ்வாக் கொள்கையை அம்பலப்படுத்தவும் மக்கள் திரளி னரை வளர்க்கவும் பாராளுமன்ற மேடையைப் பயன்படுத்தவும் கம்யூனிஸ்டுகள் மறுக்கக் கூடாது.

''தூய'' பாட்டாளியைச் சுற்றி பல்வேறு வகை யானவர்கள் உள்ளனர், இவர்கள் பாட்டாளி என்ற நிலையிலிருந்து அரைப் பாட்டாளி, சிறு மற்றும் நடுத்தர விவசாயி என்ற நிலையை நோக்கி சென்று கொண்டிருப்பவர்கள், மேலும் பாட்டாளிகளே தம் வளர்ச்சி மட்டத்திலும் தேசிய இனம், மதச் சார்பு, தொழிற்பயிற்சி ஆகியவற்றிலும் வெவ்வேறானவர்கள் என்பதை யெல்லாம் கம்யூனிஸ்டுக் கட்சிகள் தெட்டத் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும் என் றார் லெனின். எனவே வெவ்வேறு வகையான வர்களை வெவ்வேறு விதங்களில் அணுக வேண் டும், இவர்களுடன் புரியக் கூடிய மொழியில் பேச வேண்டும். தொழிலாளர்கள், விவசாயி கள், சிறு உடைமையாளர்களின் வெவ்வேறு கட்சிகளை அணுகும் முறையைக் கண்டுபிடிக்க வேண்டும், குட்டி பூர்ஷ்வா ஜனநாயகவாதிகளு

டனும் பாட்டாளியை நோக்கித் திரும்பும் ஊச லாடும் சக்திகளுடனும் சமரசங்களைச் செய்து கொள்ள வேண்டும்.

தன் நூலில் லெனின் போல்ஷிவிசத்தின் உலக வரலாற்று முக்கியத்துவத்தையும், புரட்சிகர மார்க்சியத் தத்துவம், நடைமுறை வளர்ச்சியில் புதிய கட்டமாக விளங்கும் அதன் சித்தாந்த செழுமையையும் கோடிட்டுக் காட்டுகிறார்; மனிதகுலம் முதலாளித்துவத்திலிருந்து சோஷ லிசத்திற்கு மாறும் நிகழ்ச்சிப் போக்கிற்குத் துவக்க மாக அமைந்த மாபெரும் அக்டோபர் சோஷ லிசப் புரட்சியின் சர்வதேச முக்கியத்துவத்தைச் சுட்டிக் காட்டுகிறார்; உதித்தெழுந்து வளர்ந்து கொண்டிருக்கும் உலக கம்யூனிஸ்டு இயக்கத்தின் சித்தாந்த, அரசியல், ஸ்தாபன அடிப்படைகளை ஆதாரப்படுத்துகிறார்; இந்த இயக்கத்தின் அனு பவத்தைத் தொகுத்துரைக்கிறார், ஒரு சில ஐரோப்பிய கம்யூனிஸ்டுக் கட்சிகளில் ''இடது சாரிப்'' போக்கு தோன்றியதைப் பகுப்பாய்வு செய்கிறார், சமூக விடுதலைக்காகப் பாட்டாளி வர்க்கம் நடத்தும் போராட்டத்தில் வலதுசாரி மற்றும் இடதுசாரி சந்தர்ப்பவாதம் எவ்வளவு ஆபத்தானது என்று காட்டுகிறார்.

வர்க்கப் போராட்டத்தின் புறவய நியதிகள், புரட்சியின் அகவயக் காரணி, பொது அம்சத் திற்கும் சிறப்பு அம்சத்திற்கும் உள்ள விகிதம், கம்யூனிஸ்டுக் கட்சிகளின் நடவடிக்கையில் சர்வ தேசிய அம்சத்திற்கும் தேசிய அம்சத்திற்கும் இடையிலான பரஸ்பரத் தொடர்பு, புரட்சி நிலவரத்தின் சாரமும் அறிகுறிகளும், சோஷ

லிசத்தில் ஜனநாயகத்தின் வளர்ச்சி போன்ற அடிப்படை தத்துவார்த்தப் பிரச்சினைகளின் மீது லெனின் இந்நூலில் விசேஷ கவனம் செலுத்துகிறார்.

1917ஆம் ஆண்டின் அக்டோபர் புரட்சி உலகந் தழுவிய அளவில் சோஷலிசத்திற்கு மாறிச் செல்வதற்கான துவக்கமாக அமைந்து, இது உலகப் புரட்சிப் போக்கின் பல தத்துவார்த்தப் பிரச்சினைகளைப் புதிய விதத்தில் முன்வைத்துள்ளது என்று லெனின் கோடிட்டுக் காட்டுகிறார். ''எங்களுடைய புரட்சியின் குறிப்பிட்ட சில அடிப்படை இயல்புகள் ஒரு மண்டலத்துக்கோ, தனியொரு தேசத்துக்கோ, ருஷ்யாவுக்கோ மட்டும் உரித்தான முக்கியத்துவத்துடன் கூட, சர்வதேச முக்கியத்துவமும் பெற்றவை''* என்று குறிப்பிடும் லெனின், சோஷலிசப் புரட்சி மற்றும் புதிய சமுதாயத்தின் கட்டுமானம் குறித்து மார்க்சியம் கண்டுபிடித்த, சர்வபொது முக்கியத்துவமுடைய முக்கிய நியதிகள் எப்படி முதன்முதலாக அக்டோபர் புரட்சியில் நடைமுறையில் வெளிப்பட்டன என்று காட்டுகிறார். புரட்சியின் போக்கில் தொழிலாளி வர்க்கத்தின் அரசியல் ஆட்சியை ஏற்படுத்த வேண்டும், கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைமைப் பாத்திரத்திற்கு வகை செய்ய வேண்டும், தொழிலாளி வர்க்கத்திற்கும் உழைக்கும் விவசாயிகளுக்கும் மற்ற அரைப் பாட்டாளிப் பிரிவினருக்கும் இடையில் கூட்டை ஏற்

---

* அதே நூல், பக்கம் 183.

படுத்த வேண்டும் என்று அக்டோபர் புரட்சி காட்டியது.

ருஷ்யப் புரட்சியின் இந்த முக்கிய அம்சங்கள் மற்ற நாடுகளில் நடைபெறப் போகும் சோஷலிசப் புரட்சிகளில் தவிர்க்க இயலாது நடைபெறும். வர்க்கப் போராட்டத்தின் பொது விதிகளை கம்யூனிஸ்டுகள் தம் நடவடிக்கையில் ஆக்கபூர்வமாகப் பயன்படுத்த வேண்டும் என்றார் லெனின். ஒவ்வொரு கட்சியும் திட்டவட்டமான சூழ்நிலையில் ''கம்யூனிசத்தின் பொதுவான, அடிப்படையான கோட்பாடுகளை வர்க்கங்களுக்கிடையிலான, கட்சிகளுக்கிடையிலான பிரத்தியேக உறவுகளுக்கு, கம்யூனிசத்தை நோக்கி அமைந்த எதார்த்த வளர்ச்சியின் பிரத்தியேகக் கூறுகளுக்குப் பொருத்தமாய் அனுசரிக்கத் தெரிந்து கொள்ள வேண்டும். இந்தப் பிரத்தியேக உறவுகளும் கூறுகளும் ஒவ்வொரு நாட்டிலும் வெவ்வேறாய் இருக்கின்றன.''* ருஷ்ய அனுபவத்தை ஆக்கபூர்வமாகப் பயன்படுத்துமாறு லெனின் எச்சரித்தார்; ஒவ்வொரு நாட்டின் தேசிய சிறப்பியல்புகள், புறவய அம்சங்கள், புரட்சி நிகழ்ச்சிப் போக்கின் திட்டவட்டமான வரலாற்றுச் சூழ்நிலைகள், சமூக மாற்றங்கள் ஆகியவற்றை உரிய விதத்தில் மதிப்பிட வேண்டும் என்றார்.

உலக சோஷலிச அமைப்பு தோன்றி வளர்ந்த வரலாறு, புதிய சமுதாயத்தின் கட்டுமானம் பற்றி மார்க்சிய-லெனினியம் முன்வைத்த பொது

---

* அதே நூல், பக்கம் 299.

அம்சங்களை முழுமையாக மெய்ப்பித்துள்ளது. இந்த அம்சங்களாவன: தொழிலாளி வர்க்கத்தின் தலைமையில் உழைப்பாளிகளின் ஆட்சி; விஞ்ஞான சோஷலிச தத்துவத்தால் ஆயுதந் தரித்த கம்யூனிஸ்டுக் கட்சி சமுதாய வளர்ச்சிக்குத் தலைமை தாங்குதல்; முக்கிய உற்பத்திச் சாதனங்களின் மீது பொதுச் சொத்துடைமையை நிலைநாட்டி இதன் அடிப்படையில் மக்களின் நலன் கருதி பொருளாதாரத்தைத் திட்டமிட்ட வகையில் வளர்த்தல்; சோஷலிச ஜனநாயகத்தை வளர்த்தல்; எல்லா மக்களினங்கள், தேசிய இனங்களின் சமத்துவமும் நட்புறவும்; புரட்சியின் சாதனைகளை வர்க்க எதிரிகளின் தாக்குதல்களிலிருந்து காப்பாற்றுதல்.

இதில் தனிப்பட்ட நாடுகளில் இந்நியதிகள் எந்தெந்த திட்டவட்டமான வடிவங்களில் வெளிப்படுகின்றன என்பதன் மீது கவனம் செலுத்துமாறு லெனின் கோரினார்.

சர்வதேச கம்யூனிஸ்டு இயக்கத்தின் பிரபல தலைவர்கள் கூறியுள்ள கருத்துகள், வி. இ. லெனின் எழுதிய இந்நூலின் மிகப் பெரும் முக்கியத்துவத்திற்குச் சான்று பகர்கின்றன. சர்வதேச கம்யூனிஸ்டு இயக்கத்தின் மிகப் பழம் தலைவர்களில் ஒருவரும் பிரிட்டிஷ் கம்யூனிஸ்டுக் கட்சியின் ஸ்தாபகர்கள், தலைவர்களில் ஒருவருமாகிய வில்லியம் கல்லாஹெர் 1920ஆம் ஆண்டு கம்யூனிஸ்டு அகிலத்தின் இரண்டாவது காங்கிரசில் தான் லெனினைச் சந்தித்தது பற்றி பின்வருமாறு எழுதுகிறார்: ''என்னை ஸ்மோல்னி மாளிகையினுள் இட்டுச் சென்றனர், அங்குதான்

எனக்கு அத்தாட்சி சீட்டு வழங்குவதாயிருந்தது. வரவேற்பறையில் நான் ஒரு ஆங்கில மொழி நூலைக் கண்டேன். லெனின் எழுதிய அந்நூல் அப்போதுதான் வெளிவந்திருந்தது. **'இடதுசாரி' கம்யூனிசம் — இளம் பருவக் கோளாறு** என்பது அந்நூலின் பெயர். ஜெர்மனியைப் பற்றிய இடத்தைப் படித்து விட்டு, பிரிட்டனைப் பற்றி எழுதப் பட்டிருந்த பிரிவைப் படிக்க ஆரம்பித்தேன். அங்கு நான் ஒரு மோசமான உதாரணமாகக் குறிப்பிடப்பட்டிருப்பதைக் காண எனக்கு அதிர்ச்சி ஏற்பட்டது. அரசியல் பிரமுகர் என்ற முறையில் எனது சாதனைகளைப் பற்றிய மிகைப் படுத்தப்பட்ட கருத்துகளுடன்தான் நான் கிரேட் பிரிட்டனை விட்டுப் புறப்பட்டேன். ஆனால் லெனினின் நூலில் நான் படித்தது என்னை திகைக்க வைத்தது....

''காங்கிரசின் அரசியல் கமிஷனில் நான் 'இடதுசாரி' குழுவின் சார்பில் பேசினேன். என்னை ஒரு 'குழந்தையாக' கருதுவது தோழர் லெனினுக்கு எளிதாயிருக்கலாம், ஆனால் புரட்சிப் போராட்டத்தில் நான் ஒன்றும் குழந்தை யல்ல என்று என் பேச்சில் (லெனின் நூலை மனதில் வைத்து) கூறினேன். 'நான் இந்த விஷயத்தில் ஒரு நிபுணன்...' என்று நான் மிகப் பெரும் சுய உறுதியோடு குறிப்பிட்டேன்.

''அரசியல் கமிஷனின் கூட்டத்தில் ஜெர்மன் பிரதிநிதி பாவுல் லேவி (இவர் பின்னர் கம்யூ னிஸ்டுக் கட்சியிலிருந்து நீக்கப்பட்டார்) என் மீது தனிப்பட்ட முறையில் கொச்சையாக வசை பாடினார். அவருக்குக் கடும் பதிலடி தரும் முக

மாக லெனின் 'தோழர் கல்லாஹெர் தவறுகள் செய்யலாம், ஆனால் அவர் என்றென்றும் புரட்சிக்கு விசுவாசமாயிருப்பார்' என்றார். என் மீது அவருக்கிருந்த ஆழ்ந்த நம்பிக்கையைப் பிரதிபலித்த இச்சொற்களை நான் வாழ்நாள் பூராவும் மறக்கவில்லை. கடுமையான நேரங்களில் இச்சொற்கள் எனக்கு ஆதரவாகக் காதுகளில் ஒலித்தன.'' *

ஆண்டுகள் உருண்டோடின. தனது மரணத்திற்குச் சில காலம் முன் வில்லியம் கல்லாஹெர் சோவியத் யூனியனுக்கு வந்திருந்த பொழுது மாஸ்கோவில் உள்ள லெனின் மியூசியத்திற்குச் சென்றார். அவருடன் கூடச் சென்றவர்கள் — இந்நூலாசிரியரும் இவர்களில் அடங்குவார் — லெனினின் ''இடதுசாரி'' **கம்யூனிசம் — இளம் பருவக் கோளாறு** என்ற நூல் வைக்கப்பட்டிருந்த இடத்தின் அருகே நின்றனர். அப்போது ஒரு அசாதாரண சம்பவம் நடந்தது. முதுபெரும் கம்யூனிஸ்டாகிய தோழர் கல்லாஹெர், வழிகாட்டியையும் கூட வந்தவர்களையும் சற்று நகருமாறு வேண்டிக் கொண்டு பின் ருஷ்ய மரபுப்படி முழங்கால் வரை குனிந்து லெனினின் நூலிற்கு மரியாதை செலுத்தினார்.

லெனினின் எந்த நூலில் தன் பெயர் பன்முறை குறிப்பிடப்பட்டிருந்ததோ, எது இடதுசாரி குறுங்குழுவாதத் தவறுகளைத் திருத்திக்

---

* **விளதீமிர் இலியீச் லெனினைப் பற்றிய நினைவுக் குறிப்புகள்**, ஐந்தாவது தொகுதி, மாஸ்கோ, 1979, பக்கங்கள் 269 — 270 (ருஷ்ய மொழியில்).

கொள்ள உதவியதோ அந்த நூலின் முன் தலை வணங்கி தன் மரியாதையைத் தெரிவித்தார் கல்லாஹெர். சர்வதேச தொழிலாளர் இயக்கம் உலகப் பாட்டாளி வர்க்கத்தின் மாபெரும் தலைவனுக்கு இப்படி தன் மரியாதையைச் செலுத்தியது.

1986ஆம் ஆண்டு **கம்யூனிஸ்டு** இதழில் கானடா நாட்டு கம்யூனிஸ்டுக் கட்சியின் பொதுச் செயலர் வில்லியம் கஷ்தான் எழுதிய **நாங்கள் லெனினிடம் கற்றோம்** என்ற கட்டுரை பிரசுரமாகியது. இதில் இவர் பின்வருமாறு எழுதினார்: '' **'இடதுசாரி' கம்யூனிசம் — இளம் பருவக் கோளாறு** என்ற நூல் கானடாவிலிருந்த சோஷலிச சிந்தனையாளர்களின் கண்களைத் திறந்து விட்டது. அப்போது எங்களுடைய தொழிற்சங்க இயக்கத்தில் அராஜகவாத சிண்டிக்கலிசம் குறிப்பிட்ட தாக்கம் செலுத்தியது. தொழிற்சங்கத் தலைவர்களில் ஒரு பகுதியினர் குறுங்குழுவாதத்தின் பக்கம் சாய்ந்தனர், வழக்கமான தொழிற்சங்கங்களில் அணிதிரண்டுள்ள தொழிலாளர் திரளினரிடமிருந்து பிரிந்த, புதிய 'தூய' தொழிற்சங்கங்களை ஏற்படுத்த இவர்கள் முயன்றனர். 'நாடாளுமன்ற எதிர்ப்பு வாதங்களால்' பாதிக்கப்பட்ட இன்னுஞ் சிலரோ, நாடாளுமன்ற போராட்ட முறையை நிராகரிப்பதுதான் மிகப் புரட்சிகரமானது என்று கருதினர். பல்வேறு வகையான சீர்திருத்தவாதங்கள் பரவின. **'இடதுசாரி' கம்யூனிசம் — இளம் பருவக் கோளாறு** என்ற நூல் அச்சூழலில் கலங்கரை விளக்காகத் திகழ்ந்தது. மக்கள் திரளினரின் மத்தியில் எப்படி வேலை செய்வது,

தொழிலாளிகள், மற்ற உழைப்பாளிகளின் வர்க்க உணர்வு மட்டத்தை எப்படி உயர்த்துவது, ஐக்கிய முன்னணி, புரட்சிக் கூட்டுகளின் பிரச்சினைகளுக்கு எப்படித் தீர்வு காண்பது ஆகியவை சம்பந்தமாக லெனின் தன் நூலில் குறிப்பிட்டிருந்த கருத்துகள் எங்களுடைய இளம் கட்சிக்கும் புரட்சி மனப்பாங்குடைய மற்றெல்லா தொழிலாளர்களுக்கும் பெரிதும் முக்கியமானவை. **'இடதுசாரி' கம்யூனிசம் — இளம் பருவக் கோளாறு** என்ற இந்நூல்தான் தொழிலாளி வர்க்கம் மற்றும் தொழிற்சங்கங்களில் அணிதிரண்ட தொழிலாளர் இயக்கத்தின் பாலான எங்களுடைய கம்யூனிஸ்டுக் கட்சியின் வேலைத்திட்ட அணுகுமுறையின் அடிப்படையாகத் திகழ்ந்தது.

''லெனினின் இந்நூலை நான் நினைவு கூரக் காரணம் இதுதான் கானடாவின் புரட்சி மனப்பாங்குள்ள தொழிலாளர்களுக்கு லெனினுடன் ஏற்பட்ட முதல் தொடர்பு என்பதாகும். பின்னர் கானடா கம்யூனிஸ்டுக் கட்சியின் வரலாற்று வளர்ச்சியின் எல்லா கட்டங்களிலும் லெனினின் அடிப்படைக் கருத்துகள் எங்கள் கட்சிக்குத் திசைகாட்டியாக விளங்கின.'' *

உருகுவே கம்யூனிஸ்டுக் கட்சியின் முதல் செயலர் ரோட்னி அரிஸ்மேன்டியும் லெனினின் நூலிற்கு இன்றைய காலகட்டத்தில் உள்ள முக்கியத்துவத்தை உயர்வாக மதிப்பிடுகிறார். இவர் பின்வருமாறு குறிப்பிடுகிறார்: '' **'இடதுசாரி' கம்**

---

* **கம்யூனிஸ்டு,** *1986,* இதழ் *6,* பக்கம் *83* (ருஷ்ய மொழியில்).

**யூனிசம் — இளம் பருவக் கோளாறு** என்ற நூலில் லெனின் கம்யூனிஸ்டுக் கட்சிகளை ஒரு யதார்த்த மான அரசியல் சக்தியாக மாற்றும் மாபெரும் கடமையை விமர்சன ரீதியில் முன்வைக்கிறார். இன்று மார்க்சியம்-லெனினியம் சோஷலிச நாடு களிலும் முதலாளித்துவ நாடுகளிலும் உள்ள கோடானுகோடி மக்களுக்கு உத்வேகமளிக் கிறது, உலக சிந்தனை முழுவதன் மீதும் விஞ் ஞான ஆராய்ச்சிகள் மீதும் தாக்கம் செலுத்து கிறது. இது இன்று உலகில் நடைபெறும் சமூக அரசியல், விஞ்ஞான, தொழில்நுட்பப் புரட்சி களின் பிரச்சினைகளுக்குத் தீர்வைத் தேடும் முற் போக்கு இயக்கங்களின் அச்சாணியாகத் திகழு கிறது.'' *

கலிபோர்னியாவிலிருந்து ரோபின் தென்பார் என்பவர் 1921இல் லெனினுக்குப் பின்வருமாறு எழுதினார்: '' '**இடதுசாரி**' **கம்யூனிசம் — இளம் பருவக் கோளாறு** என்ற உங்களுடைய சிறு பிரசுரம் என் மீது மிகப் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது; இதையடுத்து நான், பல்லாண்டு களாக இடதுசாரி கம்யூனிசத்துடன் கொஞ்சிக் குலாவியதை விட்டு, மீண்டும் இங்குள்ள சோஷ லிஸ்டுக் கட்சியில் சேர்ந்தேன். இதில் தெட்டத் தெளிவான, திட்டவட்டமான, நிதானமான பகுப்பாய்வு அடங்கியுள்ளது; எனது சோஷலிஸ்டு தோழர்களுக்கு நான் உதவ விரும்பினால், நானும் அவர்களில் ஒருவனாகக் கலந்து அவர் களுக்கு உதவ வேண்டுமே தவிர, ஒதுங்கி நின்று

* *World Marxist Review*, 1976, No 1.

விமர்சிக்கக் கூடாது என்று இது என்னை நம்ப வைத்தது. இந்நூலை துணிவோடு வெளியிட்ட *Vancouver Federationist* பதிப்பகத்தாருக்கு என் பாராட்டை தெரிவித்தேன். அவர் எனக்கு நன்றி தெரிவித்தார்... பின்னர் நூலை வெளி யிட்டதற்காகக் கைது செய்யப்பட்டார்.''*

''**இடதுசாரி**'' **கம்யூனிசம் — இளம் பருவக் கோளாறு** என்ற நூலில் லெனின் குறிப்பிட்டுள்ள கருத்துகள் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந் தவை என்பதை அரசியல் பிரமுகர்களும் விஞ் ஞானிகளும் எழுத்தாளர்களும் ஒப்புக் கொள் கின்றனர். பிற்போக்கு, ஒடுக்குமுறைக்கு எதிரா யும் நியாயத்தின் அடிப்படையிலான, முழு சமத்துவம் நிலவும் சமுதாயத்தை, தனிநபரின் சுதந்திரமான வளர்ச்சிக்கு வகை செய்யும் சமு தாயத்தைக் கட்டி வளர்ப்பதற்காகவும் உழைப் பாளிகள் நடத்தும் போராட்டத்திற்கு இக் கருத்துகள் ஊக்கமளிக்கின்றன.

இந்நூலை லெனின் கிட்டத்தட்ட 70 ஆண்டு களுக்கு முன் எழுதினார். ஆனால் இன்றும் இது தன் முக்கியத்துவத்தை இழக்கவில்லை. செயல்தந்திரம், செயல்முறை பற்றிய மிக முக்கிய பிரச்சினைகளில் மாபெரும் பாட்டாளி வர்க்கத் தலைவனின் ஆலோசனைகளை இந்த அற்புத மான படைப்பில் உலகெங்கும் உள்ள கம்யூனிஸ்டு கள் காணுகின்றனர், தொடர்ந்து காணுவர்.

---

* **அயல் நாடுகளிலிருந்து லெனினுக்கு வந்த கடிதங்கள்**, *மாஸ்கோ, 1969, பக்கம் 222 (ருஷ்ய மொழியில்).*

வருமாண்டுகள் இந்நூலுக்குப் புதிய வெற்றி களைக் கொண்டு வரும்.

இன்று கம்யூனிஸ்டுகள்தான் சமூக, தேசிய இன ஒடுக்கு முறைக்கு எதிராக மிகத் தொடர்ச்சி யாகப் போரிடுகின்றனர். பூமியில் சமாதானத் தைப் பேணிக் காக்கவும், மக்களின் நல்வாழ் உரிமைகளுக்காகவும், உலக நாகரிகத்தைப் பேணிக் காக்கவும் நடைபெறும் போராட்டத் தில் கம்யூனிஸ்டுகள் முன்னணியில் நிற்கின்றனர்.

பல்வேறு விதமான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் கம்யூனிஸ்டுக் கட்சிகள் லெனினியப் படிப்பினையை ஆதாரமாகக் கொண்டு செயல் படுகின்றன, வர்க்கப் போராட்டத்திலும், சோஷ லிசக் கட்டுமானத்திலும் லெனினியத் தலைமை யின் அனுபவத்தைப் பயன்படுத்துகின்றன, நவீன சூழ்நிலையில் மார்க்சிய-லெனினியத்தை ஆக்க பூர்வமாக வளர்க்கின்றன.

## போல்ஷிவிசம், அக்டோபர் புரட்சி அனுபவத்தின் சர்வதேச முக்கியத்துவம்

வி. இ. லெனின் உலக புரட்சி அனுபவத்தைக் கம்யூனிஸ்டு மற்றும் தொழிலாளர் கட்சிகளின் மிக முக்கிய சாதனையாகக் கருதினார். அவர் இதை வர்க்கச் சமர்களில் அடையப்பட்ட மாபெரும் அறிவுப் பொக்கிஷமாக, விஞ்ஞான ரீதியான பொதுமைப்படுத்தலுக்கான மூல ஊற்றாக, உலக கமயூனிஸ்டு இயக்கம் முழுவதன், இதன் ஒவ்வொரு அங்கத்தின் வளர்ச்சிக்கு அவசியமான நிபந்தனையாக மதிப்பிட்டார். புரட்சித் தத்துவம் மற்றும் நடைமுறை நடவடிக்கையின் வளர்ச்சிக்கான குன்றா மூல ஊற்றை லெனின் தொழிலாளர் இயக்கத்தின் அனுபவத்தில் கண்டார். புரட்சிகரக் கொள்கையானது ''முதலாவதாக, பிற நாடுகளின் அனுபவத்தை — முக்கியமாய் முதலாளித்துவ நாடுகளேயான இந்தப் பிற நாடுகள் இதே மாதிரியான அனுபவத்தைக் கண்டு வருமாயின், அல்லது அண்மையில் கண்டிருக்குமாயின் — கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கோருகிறது; இரண்டாவதாக, அது அந்தந்த நாட்டிலும் செயல்படும் எல்லாச் சக்திகளையும் கோஷ்டிகளையும் கட்சிகளையும் வர்க்கங்களையும் வெகுஜனங்களையும் கணக்கில் எடுத்துக் கொள்ள

வேண்டுமென்றும்'' * கோருகிறது.

20ஆம் நூற்றாண்டின் மிகப்பெரும் நிகழ்ச்சியும், மனிதகுல வளர்ச்சியில் முக்கியத் திருப்புமுனையாக விளங்கியதுமான மாபெரும் அக்டோபர் சோஷலிசப் புரட்சியின் படிப்பினைகளைக் கிரகிப்பதும் போல்ஷிவிக் கட்சியின் அனுபவத்தை ஆராய்வதும் சரியான அரசியல் கொள்கையை வகுக்கவும் வர்க்கப் போராட்டத்திற்குத் தலைமை தாங்கும் கலையைக் கற்றுக் கொள்ளவும் ஒரு அவசியமான முன்தேவையாகும் என்கிறார் லெனின்.

அக்டோபர் புரட்சி நமது சகாப்தத்தின் மிகப் பெரும் சர்வதேசிய சம்பவம், உலகெங்கும் உள்ள உழைப்பாளிகளின் சாதனையாகும், ஏனெனில் இது சுரண்டலின் அடிப்படையை அழித்து, புதிய சமூக பொருளாதார அமைப்பைத் தோற்றுவித்தது; இப்புதிய அமைப்பு சாராம்சத்திலேயே சமூக ஒடுக்குமுறையைத் தவிர்க்கிறது. இதுதான் முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்தை நோக்கிய மாற்றத்திற்கு துவக்கமாக அமைந்த வெற்றிகரமான முதல் பாட்டாளி வர்க்க சோஷலிசப் புரட்சியாகும்.

அக்டோபர் புரட்சிக்குப் பிந்தைய ஆண்டுகளில் அக்டோபர் புரட்சியின் தாக்கம் — பரவலான பொருளில் — மேன்மேலும் தெளிவாகி வருகிறது; உலகெங்கும் புரட்சி எழுச்சியின் மீது இதன் தாக்கம் வலுக்கும் என்ற லெனினின் கணிப்பு

---

* வி. இ. லெனின், **தேர்வு நூல்கள்**, தொகுதி 10, பக்கம் 284.

மெய்ப்பிக்கப்பட்டு வருகிறது. இப்புரட்சி, ஏகாதிபத்தியத்திற்கு எதிராகப் போராட மக்கள் கிளர்ந்தெழ உதவியது, உழைப்பாளிகளின் சர்வதேசிய ஒருமைப்பாட்டிற்கு ஊக்கமளித்தது. ருஷ்யாவிற்குப் பின் புரட்சி ஐரோப்பாவில் ஹங்கேரி, ஜெர்மனி, பின்லாந்து, ஆஸ்திரியாவில் ஆரம்பமாகியது, ஆசியா, ஆப்பிரிக்கா, லத்தீன் அமெரிக்காவில் தேசிய விடுதலை இயக்கம் வலுப்பட்டது.

மற்ற நாடுகளின் மீதான அக்டோபர் புரட்சியின் நேரடித் தாக்கத்தைக் குறிப்பிட்ட வி. இ. லெனின் குறுகிய பொருளில் இதன் முக்கியத்துவத்தை விசேஷமாகக் கோடிட்டுக் காட்டினார். அதாவது ஒரு சில முக்கிய அம்சங்கள் சர்வதேச அளவில் மீண்டும் நடைபெறும், இந்த அம்சங்கள் மற்ற நாடுகளின் சோஷலிசப் புரட்சிகளிலும் காணப்படும், "ருஷ்ய மாதிரியானது எல்லா நாடுகளுக்கும் அவற்றின் தவிர்க்க முடியாத சமீபத்திய எதிர்காலங் குறித்து ஒன்றை—மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றை—புலப்படுத்திக் காட்டுகிறது"*. இதே கருத்தைத் தொடர்ந்த லெனின் பின்வருமாறு எழுதினார்: "இப்பொழுது நமக்குக் கணிசமான அளவில் சர்வதேச அனுபவம் கிடைத்திருக்கிறது; எங்களுடைய புரட்சியின் குறிப்பிட்ட சில அடிப்படை இயல்புகள் ஒரு மண்டலத்துக்கோ, தனியொரு தேசத்துக்கோ, ருஷ்யாவுக்கோ மட்டும் உரித்தான முக்கியத்துவத்துடன் கூட, சர்வதேச முக்

* அதே நூல், பக்கம் 184.

கியத்துவமும் பெற்றவை என்பதை இந்த அனுபவம் திட்டவட்டமாகப் புலப்படுத்துகிறது. சர்வதேச முக்கியத்துவம் என்பதாக இங்கு நான் கூறுவது இப்பதத்தின் விரிவான பொருளில் அல்ல; எங்களுடைய புரட்சியால் எல்லா நாடுகளுக்கும் ஏற்படும் விளைவுகளின் பொருளில், இப்புரட்சியின் முதல் நிலைக் கூறுகளில் சிற்சில மட்டுமின்றி யாவுமே, மற்றும் அதன் துணைக் கூறுகளில் பலவுங்கூட, சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்தவையே. இப்பதத்தின் மிகக் குறுகிய பொருளில் தான், எங்கள் நாட்டில் நடந்தேறியது சர்வதேச அளவில் பொருந்துவதாகும், அல்லது சர்வதேச அளவில் திரும்பவும் நடைபெறுவது வரலாற்று வழியில் தவிர்க்க இயலாததாகும் என்கிற பொருளில்தான், இதைப் பற்றி இங்கு நான் கூறுகிறேன். எங்களுடைய புரட்சியின் சில அடிப்படை இயல்புகள் இந்த முக்கியத்துவத்தைப் பெற்றுள்ளன என்பதை ஏற்றுக் கொண்டே ஆக வேண்டும்.'' *

''ருஷ்ய மாதிரியில்'' எதை மற்ற நாடுகளுக்கும் பொதுவானதாக, தவிர்க்க இயலாததாக லெனின் கருதினார்?

வி. இ. லெனின் இரண்டு அம்சங்களைக் குறிப்பாகச் சுட்டிக் காட்டினார்: முதலாவதாக, புரட்சி வெற்றியடையவும் சோஷலிசத்தைக் கட்டவும் தொழிலாளி வர்க்கத் தலைமையின் அவசியம், அதாவது பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் அவசியம்; இரண்டாவதாக, அணிதிரண்ட,

---

* அதே நூல், பக்கங்கள் 183 – 184.

கட்டுப்பாடுள்ள தொழிலாளி வர்க்கக் கட்சி அவசியம், இது உழைப்பாளர் திரளினருடன் நெருக்கமாகத் தொடர்பு கொண்டிருக்க வேண்டும், புரட்சியின் வெற்றிக்கும் புதிய சமுதாயத்தின் கட்டுமானத்திற்கும் நடைபெறும் போராட்டத்தில் இவர்களுக்குத் தலைமை தாங்க வல்லதாய் இருக்க வேண்டும். இக்கருத்துநிலைகளை மேலும் விளக்கும் முகமாக லெனின் சோஷலிசத்திற்கான பாதை சோஷலிசப் புரட்சியாகும், இதற்கு முதலில் உழைப்பாளி மக்கள் திரளினர் ஆட்சியைப் பிடிக்க வேண்டும், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை ஏதாவது ஒரு வடிவில் நிலை நாட்ட வேண்டும், அடிப்படை உற்பத்திச் சாதனங்களைத் தனியார் கரங்களிலிருந்து எடுத்து பொதுச் சொத்தாக்க வேண்டும்; தொழிலாளி வர்க்கத்திற்கும் பாட்டாளியல்லா உழைப்பாளிப் பிரிவினருக்கும், முதலாவதாக ஏழை விவசாயிகளுக்கும் இடையில் கூட்டை ஏற்படுத்த வேண்டும் (சமுதாயத்தை புரட்சிகரமாக மாற்றியமைக்க இது அவசிய நிபந்தனையாகும்); வெவ்வேறு நாடுகளில் உள்ள வெவ்வேறு மக்களினங்களைச் சேர்ந்த தொழிலாளிகள், உழைப்பாளிகளின் சர்வதேசிய ஒருமைப்பாடு வேண்டும்; தேசிய இன ஒடுக்குமுறைக்கு முடிவு கட்டி, மக்களினங்களிடையே நட்புறவை நிலைநாட்ட வேண்டும்; புரட்சியின் சாதனைகளை உள்நாட்டு, வெளிநாட்டு எதிரிகளிடமிருந்து பாதுகாக்க வேண்டும் என்றார்.

ஜெர்மன் பாட்டாளி வர்க்கத் தலைவர் எர்னெஸ்ட் தேல்மன் 1925இல் பின்வருமாறு எழுதி

னார்: ''ஒரேயொரு காரணி மட்டும் இல்லாம லிருந்தால் 1917ஆம் ஆண்டு நவம்பர் 7ஆம் தேதி தொழிலாளி வர்க்கத்தால் ஆட்சியைப் பிடித் திருக்க முடியாது என்று நிச்சயமாகக் கூற முடி யும். தீர்மானகரமான முக்கியத்துவத்தைக் கொண்டிருந்த இக்காரணி வரலாற்றிற்குப் புதிய திசையைக் காட்டியது. லெனினின் தலைமை யிலிருந்த போல்ஷிவிக்குகளின் கட்சியாகிய ருஷ்ய கம்யூனிஸ்டுக் கட்சிதான் இக்காரணியாகும்....' பாட்டாளி வர்க்கப் புரட்சியில் போல்ஷிவிக் கட்சியின் தலைமைப் பங்கைப் பற்றிய லெனினிய படிப்பினை அக்டோபர் புரட்சியில் செயலில் நிறைவேறியது.'' *

தொழிலாளி வர்க்கத்தின் வரலாற்றுக் கட மையை வெற்றிகரமாக முடிக்க சுறுசுறுப்பான மார்க்சிய-லெனினியக் கட்சி அவசியம் என்பது லெனினியக் கட்சி விட்டுச் சென்ற மிக முக்கியப் படிப்பினையாகும்.

போல்ஷிவிக் கட்சிதான் 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் தன் தத்துவார்த்த, ஸ்தாபன, அர சியல் நடவடிக்கையை மார்க்சியம் என்னும் விஞ் ஞான தத்துவத்தின் அடிப்படையில் அமைத்துக் கொண்ட முதல் கட்சியாகும், இதுதான் இப் படிச் செய்த ஒரே கட்சியுமாகும்; இதோடு கூட வளர்ச்சியின் ஒவ்வொரு கட்டத்திலும் ஏகாதி பத்திய சகாப்தத்தில் ருஷ்யாவின் சூழ்நிலை களுக்கு ஏற்ற புதிய கருத்துகள் சேர்த்துக் கொள்ளப்பட்டன.

* E. Thälmann, *Reden und Aufsätze zur Geschichte der deutscher Arbeiterbewegung*, Berlin, 1958, Bd. 1, S. 273.

தத்துவத்தையும் நடைமுறையையும் இணைப்பதில் உள்ள திறமையில்தான் போல்ஷிவிச அனுபவத்தின் முக்கியத்துவம் அடங்கியுள்ளது. மார்க்சிய-லெனினிய தத்துவத்தின் அடிப்படையில் தான், புரட்சி இயக்கத்தின் வளர்ச்சியைப் பற்றிய புறவய விதிகளின் அடிப்படையில்தான் மக்கள் திரளினருக்குத் தலைமை தாங்கி வழிநடத்தும் கலையை போல்ஷிவிக்குகள் கற்றனர். இந்த அனுபவத்தைக் கவனத்தில் கொண்டதே மேற்கொண்டு தத்துவத்தை வளர்க்க அடிப்படையாக விளங்கியது. எனவேதான் போல்ஷிவிக்குகளின் கோட்பாடுகள் விஞ்ஞான பூர்வமானவையாகவும் நடைமுறையில் இவற்றின் நிறைவேற்றம் வெற்றிகரமானதாகவும் உள்ளன. ''இடதுசாரி'' கம்யூனிசம்... நூலில் லெனின், போல்ஷிவிசம் நடைமுறை வரலாற்றைப் படைத்துள்ளதாயும், இதன் அனுபவச் செழுமைக்கு உலகில் ஈடு இணையே கிடையாது என்றும் முடிவிற்கு வருகிறார். ஏனெனில் ''இந்நாடு கண்ட புரட்சிகர அனுபவத்துக்கும், அதிவேகமாகவும் பல்வேறு வகைப்பட்டதாகவும் வரிசையாக வந்த வெவ்வேறு இயக்க வகைகளுக்கும் – சட்டபூர்வமானதும் சட்டவிரோதமானதும், அமைதியானதும் புயலின் மூர்க்கம் கொண்டதும், தலைமறைவானதும் பகிரங்கமானதும், சிறு குழுக்களின் அளவிலானதும் பரந்த வெகுஜன வீச்சு கொண்டதும், நாடாளுமன்ற வடிவிலானதும் பயங்கரவாத வடிவிலானதும் ஆகிய விதவிதமான இயக்க வகைகளுக்கும் – ஏறத்தாழ ஒப்பானவற்றையுங்கூட வேறு எந்த நாடும் கண்டதில்லை.

வேறு எந்நாட்டிலும் நவீனச் சமுதாயத்தின் எல்லா வர்க்கங்களுக்குமுரிய போராட்டத்தின் இத்தனை விதமான வடிவங்களும் வகைகளும் முறைகளும் இவ்வளவு குறுகிய கால வரம்பினுள் ஒன்றுகுவிந்ததில்லை.'' *

1903இல் ருஷ்ய சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியில் போல்ஷிவிக் போக்கு தோன்றியதிலிருந்து 1917 அக்டோபர் வரை ருஷ்யாவில் சக்திகளின் சமன்நிலையும் அரசியல் நிலவரமும் மிக விரைவாக மாறி வந்துள்ளன. ஆனால் இந்த கடுமையான மாற்றங்கள் போல்ஷிவிக் கட்சியையோ, கட்சித் தலைவரான லெனினையோ திகைப்படையச் செய்யவில்லை. சம்பவங்களைக் கட்சி மிக உன்னிப்பாகக் கவனித்து வந்தது, இவற்றைப் பகுப்பாய்வு செய்தது, சரியான கொள்கையையும் செயல்முறையையும் நிர்ணயித்தது, நிலவரத்தைத் திறமையாகப் பயன்படுத்தியது, மக்கள் திரளினரைத் தன் பக்கம் இழுப்பதற்கான சரியான பாதைகளைத் தேர்ந்தெடுத்தது.

தொழிலாளி வர்க்கத்தின் முன்னும் கட்சியின் முன்னும் உள்ள எல்லா கடமைகளையும் நிறைவேற்றும் பொருட்டு சம்பவங்களின் சங்கிலித் தொடரில் முக்கியமானதைக் கண்டுபிடிக்கவே போல்ஷிவிக்குகள் எப்போதும் முயன்றனர். புதிய செயல்தந்திர கட்டத்தின் துவக்கம், செயல் முறையை மாற்ற வேண்டிய தருணம், முன்நிற்கும்

---

* வி. இ. லெனின், **தேர்வு நூல்கள்**, தொகுதி 10, பக்கம் 191.

கடமைகளை நிறைவேற்ற அவசியமான நட வடிக்கைகளின் ஆரம்பம் ஆகியவற்றைச் சரிவர நிர்ணயிக்கவும், போராட்டத்தின் முக்கியத் திசையமைவை முடிவு செய்யவும் போல்ஷிவிக்கு கள் முயன்றனர். போல்ஷிவிக்குகள் எப்போதும் தம் எதிரியை, அவனுடைய செயல்முறையை, செயல்தந்திரத்தை ஆராய்ந்து கிரகித்தனர்.

கம்யூனிஸ்டுகளான லெனினியவாதிகள் மக்கள் திரளினர் மத்தியில் ஒவ்வொரு கட்டத்திலும் அயராமல் பன்முகப் பணியாற்றினர், புரட்சிப் போராட்டங்களின் அனுபவத்தை ஆக்கப்பூர் வமாக வளர்த்தனர் என்று போல்ஷிவிக்குகளின் அனுபவம் காட்டுகிறது. ஒப்பீட்டளவில் குறுகிய வரலாற்றுக் காலகட்டத்தில் **(1903 – 1917)** போல் ஷிவிக்குகள் சிறு பாட்டாளி வர்க்கப் புரட்சி யாளர் குழுவிலிருந்து வலிமையான, வெல்லற் கரிய, சுயமான தொழிலாளி வர்க்கக் கட்சியாக வளர்ந்தனர். இவர்கள் ருஷ்யாவின் தொழி லாளர் இயக்கத்தில் முழு சித்தாந்த வெற்றி பெற்றனர், பாட்டாளி மக்கள் திரளினரை அணிதிரட்டி, நாட்டை புரட்சிகரமாகப் புதுப் பிக்கும் பொதுமக்கள் போராட்டத்தில் இவர் களின் தலைமைப் பாத்திரத்திற்கு வகை செய் தனர்.

ருஷ்யாவில் சுரண்டலாளர்களின் ஆதிக்கத்தை முறியடித்து, பாட்டாளி வர்க்க சர்வாதி காரத்தை நிலைநாட்டி, தொழிலாளி வர்க் கத்தை கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைமையில் சமுதாயத்தின் தலைமைச் சக்தியாக மாற்றிய மாபெரும் அக்டோபர் சோஷலிசப் புரட்சி சர்வ

தேசத் தொழிலாளர் இயக்கத்தின் மீது மிகப் பெரும் தாக்கம் செலுத்தியது, முதலாளித்துவத் திற்கு எதிரான போராட்டத்தைத் தீவிரப்படுத் தியது, இப்போராட்டத்தின் ஸ்தாபன அமைப் பைப் புதிய மட்டத்திற்கு உயர்த்தியது.

''ருஷ்யப் புரட்சி உலகம் முழுவதற்கும் சோஷ லிசத்திற்கான பாதையைச் சுட்டிக் காட்டி யது''* என்று 1918 ஆகஸ்டில் லெனின் குறிப்பிட் டார்.

இரண்டாவது அகிலத்தின் சந்தர்ப்பவாதத் தலைவர்கள் எதைப் புரிந்து கொள்ளவில் லையோ அதை ருஷ்யாவிற்கு வெளியில் உள்ள முன்னணித் தொழிலாளர்கள் விரைவில் புரிந்து கொண்டனர்; போல்ஷிவிக் தத்துவம், செயல் முறையின் அடிப்படைகள் சர்வதேச முக்கியத்து வம் உடையவை என்பதைப் புரட்சி வர்க்கத்தின் உள்ளுணர்வு ஊகித்தது என்று லெனின் கோடிட்டுக் காட்டினார்.

அக்டோபர் புரட்சி வெற்றி பெற்றதையடுத்து முதன்முதலாக உலகின் பரப்பில் ஆறிலொரு பகுதியில் முதலாளித்துவம் நடைமுறையில் அகற் றப்பட்டது, சோஷலிசத்தை நோக்கிய மாற்றம் துவங்கியது. இதன் மூலம் தொழிலாளி வர்க்கம், விவசாயிகளுக்குத் தலைமை தாங்கிய போல் ஷிவிக் கட்சி ஆழ்ந்த சர்வதேச முக்கியத்து வமுடைய தியாகச் செயல் புரிந்தது, இது எல்லா

* V. I. Lenin, *Collected Works*, vol. 28, Moscow, Progress Publishers, 1965, p. 43.

மக்களினங்களுக்கும் ஒரு மாபெரும் எடுத்துக் காட்டாகியது.

வர்க்க எதிரிகளின் சதிகளாலோ, சந்தர்ப்ப வாதிகள், ஓடுகாலிகளின் பின்வாங்கல்களாலோ அக்டோபர் புரட்சியின் வரலாற்று முக்கியத்து வத்தைக் குறைக்க முடியவில்லை. மாறாக, ஆண்டுகள் செல்லச் செல்ல, அக்டோபர் புரட்சி யின் மகத்துவம் மேன்மேலும் தெளிவாகி வரு கிறது. இம்மகத்துவம் 1917 முதல் இன்று வரை உலகின் முதல் சோஷலிச நாடு அடைந்துள்ள வரலாற்று வெற்றிகளில் உருக்கொண்டுள்ளது. இரண்டாவது உலக யுத்தத்தில் பாசிச சக்தி களின் மீது அடையப்பட்ட வெற்றியிலும் ஏகாதி பத்தியத்தின் காலனியாதிக்கம் சரிந்து விழுந் ததிலும் சோஷலிச முகாம் உருவானதிலும் இது உருக்கொண்டுள்ளது.

இன்று அக்டோபர் புரட்சியின் மகத்துவம் சோஷலிச மாற்றங்களின் அனுபவப் பொக்கிஷத் தில் அடங்கியுள்ளது; சோஷலிசப் பாதையில் நடைபோடும் எல்லா நாடுகளும் இதில் தம் பங்கை ஆற்றுகின்றன. இந்த அனுபவத்தைத் தொடர்ந்து பரிவர்த்தனை செய்து கொள்வதும் சோஷலிச, கம்யூனிச கட்டுமானத்தில் இதைப் பரஸ்பரம் கவனத்தில் கொள்வதும் கம்யூனிஸ்டு இயக்க வளர்ச்சியின் மிக முக்கியக் காரணியாகி யுள்ளன, இன்றைய சூழ்நிலையில் சர்வதேசிய வாதத்தின் சிறந்த வெளிப்பாடாகத் திகழு கின்றன.

இன்று சோஷலிச நாடுகளின் அனுபவம் என் பது ஒரு கூட்டு அனுபவமாகும். இது புதிய சமூக

அமைப்பின் சர்வதேசிய சாரத்தையும், மார்க்சிய-லெனினிய தத்துவம் மற்றும் சோஷலிச நாடுகளில் உள்ள சோதரக் கட்சிகளின் கொள்கை ஆகியவற்றின் ஆழ்ந்த ஆக்கபூர்வமான தன்மையையும் வெளிப்படுத்துகிறது.

அக்டோபர் சோஷலிசப் புரட்சியின் ஒரு சில முக்கிய அம்சங்களுக்கு சர்வபொது முக்கியத்துவம் இருக்கக் காரணம் என்ன?

அக்டோபர் புரட்சியின் படிப்பினைகளை மதிப்பிடும் பொழுது, இப்புரட்சி ஒரு மிகப் பெரும் நாட்டில் நடைபெற்றது, இங்கு சமுதாய வளர்ச்சி பல்வேறு மட்டங்களில் இருந்தது என்பதை நவீன தொழிலாளி வர்க்கம் கவனத்தில் கொள்ள வேண்டும். புரட்சிக்கு முந்தைய ருஷ்யா அன்றைய உலகின் ஒரு சிறு மாடலாக இருந்தது என்று எவ்வித மிகைப்படுத்தலுமின்றி கூற முடியும். வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகள் அனைத்திலுமிருந்த எல்லா முக்கிய வர்க்க சக்திகளும் சமூக பொருளாதார வடிவங்களும் முன்னாள் ருஷ்யப் பேரரசில் இருந்தன. ஆம், உண்மையில் மிகப் பல்வேறான சமூக பொருளாதார அமைப்புகளை அங்கு காண முடிந்தது: வளர்ச்சியடைந்த ஏகபோக முதலாளித்துவ அம்சங்கள், உயரிய உற்பத்திக் குவிப்பு, அதே நேரத்தில் நிலப்பிரபுத்துவ மிச்சங்கள் ஆகியவை இருந்தன; இவற்றோடு தனிப்பட்ட உயர் வளர்ச்சியடைந்த தொழிற்துறை, கலாசார மையங்களும், நன்கு அணிதிரண்ட பாட்டாளி வர்க்கமும், அதே சமயம் பொதுவில் பின்தங்கிய பொருளாதாரமும் சமூக நிலையும் நிலவின.

உற்பத்திக் குவிப்பிலும் எனவே பாட்டாளி வர்க்கத் திரட்சியிலும் ருஷ்யா முன்னணியில் நின்றது. அதே நேரத்தில் ருஷ்ய கிராமங்களில் பண்ணையடிமை முறையின் மிச்சங்களை அடக்கிய அமைப்புகள் நிலவின, ருஷ்யாவின் ஒரு சில தேசிய இன எல்லைப் பகுதிகளோ காலனியாதிக்க, அரைக் காலனியாதிக்க நிலையிலிருந்தன. மேலைய அம்சங்களும் கீழைய அம்சங்களும் இரண்டுமே ருஷ்யாவில் இருந்தன. ருஷ்யாவில் நடந்த புரட்சி, ஏகாதிபத்தியத்திற்கு எதிரான புரட்சிப் போராட்டத்தின் எல்லா முக்கியப் போக்குகளையும் திசைகளையும் இணைத்தது. இதில் தொழிலாளர் இயக்கத்தின் பெரும் எழுச்சி விவசாயப் புரட்சி வெடிப்புகளுடனும், ஒடுக்கப்பட்ட மக்களினங்களின் முன்பின் காணா தேசிய விடுதலைப் போராட்டத்துடனும், உலக ஏகாதிபத்திய யுத்தத்திலிருந்து வெளியேறுவதற்காக நடந்த தேசிய இயக்கத்துடனும் இணைந்திருந்தது. இந்த சிறப்பு அம்சம்தான் புரட்சி அனுபவத்தின் பல்வேறு அம்சங்களின் சர்வதேசிய முக்கியத்துவத்திற்கும், வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளிலும் காலனிகளிலும் அரைக் காலனிகளிலும் இதைப் பயன்படுத்த உள்ள வாய்ப்பிற்கும் காரணமாகும்.

அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்கு எவ்வளவுதான் சிறப்பு அம்சங்கள் இருந்த போதிலும் இது நடைபெறக் காரணமாயிருந்த முரண்பாடுகள் ஜாரிச ருஷ்யாவிற்கு மட்டுமின்றி, ஏகாதிபத்தியக் காலகட்டத்தில், முதலாளித்துவத்தின் பொது நெருக்கடி காலகட்டத்தில் மற்றெல்லா நாடு

களுக்கும் பொதுவானவையாக இருந்தன. எனவே முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத் திற்கு மாறும் எல்லா நாடுகளுக்கும் பொதுவான சில நிகழ்ச்சிப் போக்குகளை இப்புரட்சியில் காண லாம். இவையெல்லாம் ஒன்று சேர்ந்து உலகின் முதல் சோஷலிச அரசாகிய சோவியத் ருஷ் யாவை எதிர்கால அரசின் சமூக வளர்ச்சிக்கான எடுத்துக்காட்டாக, பல்வேறு நாடுகள் கடக்கப் போகும் வரலாற்றுப் பாதையின் முன்மாதிரி யாக ஆக்கின. அதாவது அக்டோபர் புரட்சி யானது உலகப் புரட்சியின் வளர்ச்சி மீது தன் அரசியல், சமூக தாக்கத்தைச் செலுத்தியது.

அக்டோபர் புரட்சி உலக ஏகாதிபத்திய அணி யைப் பிளந்து, பாட்டாளி வர்க்கப் புரட்சிகளின் சகாப்தத்தை, முதலாளித்துவத்திலிருந்து சோஷ லிசத்திற்கு மாறும் சகாப்தத்தைத் திறந்தது, சோஷலிசப் புரட்சி எந்தப் பாதையில் செல்ல வேண்டும் என்பது—குறைந்த பட்சம் இதன் முக்கிய அம்சங்கள்—தெளிவானது. அக்டோபர் புரட்சியின் சர்வதேச முக்கியத்துவம் இதில்தான் அடங்கியுள்ளது. புரட்சிக்கு ஒவ்வொரு நாட்டி லும் எவ்வளவு தனியம்சங்கள் இருந்தாலும், இதன் முக்கிய கட்டங்கள், சிறப்பியல்புகள், அடிப்படை நிபந்தனைகள் கண்டுபிடிக்கப்பட்டு முன்வைக்கப்பட்டன.

1917இல் உலகின் முதல் சோஷலிச அரசு தோற்றுவிக்கப்பட்டதானது, உலகில் முதலாளித் துவ அமைப்போடு கூட புதிய சமூக அமைப் பாகிய சோஷலிசமும் தோன்றியதைக் குறித்தது. சோவியத் யூனியன் நிலவியதும் இதன் பொருளா

தார, சமூக, அரசியல் முறையின் செயல்பாடும் முதலாளித்துவத்தின் பொது நெருக்கடி ஆழமாவதன் மீது தாக்கம் செலுத்தின. இதன் முக்கிய விளைவு, புவியியல் ரீதியிலும் பொருளாதார ரீதியிலும் முதலாளித்துவத்தின் செயல்பாட்டுத் துறை குறுகியதாகும். உலகில் நிலவரம் அடியோடு மாறியது. 1917 அக்டோபருக்குப்பின் தகிடுதத்தங்களைச் செய்வது முதலாளித்துவத்திற்கு மேன்மேலும் கடினமாகியது. சோவியத் நாடு தான் நிலவியதாலேயே ஆண்டுகள் செல்லச் செல்ல முதலாளித்துவத்தின் உள் முரண்பாடுகளை வலுப்படுத்தியது, இதன் பலவீனங்களை வெளிப்படுத்தியது, உலக ஏகாதிபத்தியத்தின் பொருளாதார, சமூக, அரசியல் அமைப்பு முழுவதன் நெருக்கடியை ஆழப்படுத்தியது. இதனால் சோஷலிசம் நிலவாத நாடுகளில் மக்கள் திரளினருக்குக் குறைந்தபட்ச இழப்புகளை ஏற்படுத்தக் கூடிய வடிவங்களில் (இதற்குத்தான் மார்க்சிய-லெனினியவாதிகள் எப்போதும் முயன்றனர்) புரட்சியை நடத்தி சோஷலிசத்திற்கு மாறும் வாய்ப்பு ஏற்பட்டது. அக்டோபர் புரட்சிக்குப் பின் எந்த ஒரு நாடு புரட்சிப் பாதைக்கு வந்தாலும் — அது உலகின் எப்பகுதியில் இருந்தாலும் சரி — அது தன்னந்தனியாக நிற்கும் நிலை மாறியது.

தேசிய விடுதலைப் போராட்டத்தின் பெரும் வெற்றிகள் அக்டோபர் புரட்சியுடன் நேரடியாகத் தொடர்புடையவை. அக்டோபர் புரட்சியின் இந்தத் தாக்கம் நன்கு தெட்டத் தெளிவாகத் தெரிந்தது.

ஒரு மக்களினம், தேசிய இனத்திற்கு மட்டும் சொந்தமாயிராத முதல் புரட்சி அக்டோபர் புரட்சியாகும். ருஷ்யாவில் 100க்கும் மேற்பட்ட மக்களினங்களும் தேசிய இனங்களும் வாழ்ந்தன. தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை என்ற ஒரு முக்கிய பிரச்சினைக்கு அக்டோபர் புரட்சி தீர்வு கண்டது. ருஷ்யாவில் வாழ்ந்த மக்களினங்கள் பல்வேறு தேசிய, பொருளாதார, அரசியல், கலாசார வளர்ச்சி மட்டங்களில் இருந்தன, வெவ்வேறு அரசு வளர்ச்சி மட்டத்தில் நின்றன. உதாரணமாக, பின்லாந்தில் சொந்த அரசு அம்சங்கள் நிலவின என்றால், நனாய், எவேன்க் மற்றும் இதர சில மக்களினங்கள் குலமரபு மட்டத்தில், வர்க்கங்களுக்கு முந்தைய சமூக அமைப்பு மட்டத்தில் வாழ்ந்தன, அரசு அமைப்பின் அம்சங்களைப் பற்றிய ஞானம் கூட இவற்றுக்கு இருக்கவில்லை. இவ்வாறு பல்வேறு வளர்ச்சி மட்டங்கள் நிலவியதானது தேசிய இனப் பிரச்சினையில் தீர்வு காண்பதைச் சிக்கலாக்கியது.

புரட்சிக்கு முன்னரே போல்ஷிவிக் கட்சி இப்பிரச்சினையின் மீது பெரும் கவனம் செலுத்தியது. கட்சி விஞ்ஞான அடிப்படையில் இப்பிரச்சினையின் தீர்வை அணுகியது, சுயமான அரசாக பிரிந்து செல்வது உட்பட தேசிய இனங்களுக்கான சுயநிர்ணய உரிமையைக் கட்சி தன் வேலைத்திட்டத்தில் சேர்த்தது. சோஷலிசப் புரட்சி வெற்றி பெற்ற முதல் நாளிலிருந்தே சோவியத் அரசாங்கம் தேசிய இனப் பிரச்சினையின் தீர்வில் சர்வதேசியவாத கோட்பாடுகளைப்

பிரகடனப்படுத்தியது. ருஷ்யாவிலிருந்த எல்லா மக்களினங்களின் சமத்துவம், அரசுரிமை; பிரிந்து சென்று தனி அரசு அமைப்பது உட்பட சுய நிர்ணய உரிமை; சகலவித தேசிய இன மற்றும் மதச் சலுகைகளையும் மட்டுப்பாடுகளையும் ரத்து செய்தல்; ருஷ்யாவில் வாழும் தேசிய சிறுபான்மையினர் மற்றும் இனக் குழுக்களின் சுதந்திரமான வளர்ச்சி ஆகியவை இவற்றிலடங்கும்.

*1917* டிசம்பர் *18 (31)*இல் வெளியிடப்பட்ட அரசாணை பின்லாந்தின் சுதந்திரத்தை அங்கீகரித்தது. அன்னிய நிலப்பரப்புகளை ஆக்கிரமிக்கும் நோக்கத்தோடு ஜாரிச அரசாங்கம் செய்து கொண்ட எல்லா சமமற்ற ஒப்பந்தங்களும் ரத்து செய்யப்பட்டன; போலந்தின் பிரிவினையைப் பற்றிய ஒப்பந்தங்கள் இவற்றிலடங்கும். போலந்து மக்களுக்கு சுதந்திர உரிமை வழங்கப் பட்டது, இது சுதந்திரமான போலந்திற்குப் பாதையமைத்தது.

ஜாரிசத்தின் கீழ் ஒடுக்கப்பட்ட மக்களினங்களின் பாலான கொள்கையை சோவியத் ஆட்சி திட்டவட்டமாக நிர்ணயித்தது; இவர்களுக்கு ஒரு அரசு அமைப்பு தேவைப்பட்டது என்பது ஒரு புறமிருக்க, தம் பொருளாதார, தேசிய இன, கலாசார சுதந்திரத்தை வலுப்படுத்திக் கொள்ள ருஷ்ய மக்களின் உதவியும் அதிகமாகத் தேவைப்பட்டது. அக்டோபர் புரட்சியானது தன் நாட்டில் தேசிய இனப் பிரச்சினையைத் தீர்த்த தோடு கூட அதே நேரத்தில் அயல் நாடுகளில், குறிப்பாக ருஷ்யாவின் அருகேயிருந்த ஆசிய

நாடுகளில் வாழ்ந்த மக்களினங்கள், தேசிய இயக்கங்களின் பாலான தன் கோட்பாடுகளையும் வெளிப்படுத்தியதானது தேசிய இனப் பிரச்சினைகளின் பாலான இதுவரை காணாத அணுகுமுறையாக இருந்தது. துருக்கி, பாரசீகம், சீனாவின் பாலான பிரதேச கோரிக்கைகளை சோவியத் ருஷ்யா கைவிட்டதும் இவற்றுடனான தளைபூட்டும் ஒப்பந்தங்களை நிராகரித்ததும் உலகம் முழுவதும் ஏகாதிபத்திய காலனியாதிக்கக் கொள்கையின் மீது பேரிடியாக விழுந்தது.

சோவியத் ருஷ்யாவின் புரட்சிகர தேசிய இனக் கொள்கை உலகம் முழுவதும், முதலில் ஆசியாவில் நிலவரத்தை அடியோடு மாற்றியது; இதனால் உலகம் முழுவதும் காலனியாதிக்கப் பேரரசுகளின் மீது இது நீண்டகால தாக்கத்தை ஏற்படுத்தியது. எனவே 1920ஆம் ஆண்டுகளின் ஆரம்பத்திலேயே ஒரு சில ஆசிய நாடுகளில் (துருக்கி, ஆப்கானிஸ்தான், பாரசீகம் போன்றவற்றில்) சமூக, பூர்ஷ்வா அல்லது நிலப்பிரபுத்துவ எதிர்ப்புப் புரட்சிகள் ''வெடித்ததில்'' வியப்பேதுமில்லை; இவற்றில் பரவலான மக்கள் திரளினர் பங்கேற்றனர். இவை மொத்தமாக கிழக்கில் நிலவிய தேக்கமுற்ற நிலப்பிரபுத்துவ உறவுகளை ஆட்டங்காண வைத்தன, ஒரு சில சந்தர்ப்பங்களில் (மங்கோலியா, தூவா, சீனாவின் சில பிரதேசங்கள்) இவை மக்களாட்சி தோன்ற வழியமைத்தன.

இவ்வாறாக அக்டோபர் புரட்சி, ருஷ்யப் பேரரசின் பரந்த எல்லைப் பகுதிகளில் வாழ்ந்த கோடானுகோடி மக்களைக் காலனியாதிக்கச்

சார்பு நிலையிலிருந்து விடுவித்தது, உலகம் முழு வதும் தேசிய விடுதலை இயக்கத்தைப் புதிய மட்டத்திற்கு உயர்த்தியது; இது இறுதியில் ஏகாதி பத்தியத்தின் காலனியாதிக்க முறை தகர்ந்து விழவும், பல டஜன் இளம் அரசுகள் தோன்றவும் வழியமைத்தது. அனேகமாக, 1917ஆம் ஆண் டில் அக்டோபர் புரட்சி மட்டும் வெற்றி பெறாம லிருந்தால் இன்று உலகம் வேறுவிதமாகக் காட்சி யளித்திருக்கும்; மனிதகுலத்தின் எதிர்காலமும் சமுதாய வளர்ச்சியின் முக்கியப் போக்குகளும் வேறு மாதிரியானவையாக இருக்கும். இந்தப் போக்குகள் இன்று கோடானுகோடி மக்களுக்கு, குறிப்பாகப் பெரும்பாலான உழைப்பாளிகளுக்கு நல்ல வாழ்க்கையை வழங்குகின்றன.

அக்டோபர் புரட்சி, முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்திற்கு மாறும் பொது நியதிகளைக் காட்டி உலகப் புரட்சி நிகழ்ச்சிப் போக்கின் மீது பெரும் தாக்கம் செலுத்தியது. இதனால் சோஷலிசத்திற்கு மாறுவதைப் பற்றிய தத்து வார்த்த வாய்ப்பு நடைமுறையில் மெய்ப்பிக் கப்பட்டது. இந்த அம்சமே உலகெங்கும் புரட்சி சக்திகளுக்கு சுய நம்பிக்கையை ஏற்படுத்தியது. இது தவிர ருஷ்யப் புரட்சியின் அனுபவமும் இதன் ஊக்கமும் இதில் பங்கேற்ற மனிதர்களும் இதன் லட்சியங்களும் சாதனைகளும் மற்ற நாடு களில் புரட்சி இயக்கங்கள் வளர உதவின, இந்நாடுகளில் புரட்சி சக்திகள் தோன்றவும் இளம் கம்யூனிஸ்டுக் கட்சிகள் உருவெடுக்கவும் வழிகோலின.

இதை மேலைய நாடுகளில் பல நேரங்களில்

கொச்சையாகப் புரிந்து கொள்கின்றனர், அதாவது ஏதோ சோவியத் ருஷ்யாவும் கம்யூனிஸ்டு அகிலமும் மற்ற நாடுகளில் உள்ள கம்யூனிஸ்டுக் கட்சிகளின் மீது தம் கொள்கையையும் சித்தத்தையும் திணிப்பதாயும், அக்கட்சிகளும் சோவியத் அனுபவத்தைக் கண்மூடித்தனமாகப் பின்பற்றுவதாயும் சித்தரிக்கின்றனர். இது மற்ற நாடுகளின் புரட்சிப் போக்கின் மீதான அக்டோபர் புரட்சியின் செல்வாக்கைக் கொச்சைப்படுத்துவதாகும்.

எப்படி வேர்கள் நன்கு ஊன்றிய பின்தான் மரம் வளருமோ அதே போல் தேசியப் புரட்சி இயக்கம் உருவாகி வளர்ந்த பின்தான் அதிலிருந்து கம்யூனிஸ்டுக் கட்சிகள் வளரும். ஒரு நாட்டில் நடைபெறும் புரட்சி இயக்கத்துடன் தொடர்பின்றி மேற்கொள்ளப்படும் எந்த ஸ்தாபன அமைப்பு நடவடிக்கைகளாலும் அரசியல் கட்சிகளை, அதுவும் தொழிலாளி வர்க்கத்தின் முன்னணிப் படையாகிய அரசியல் கட்சியைத் தோற்றுவிக்க முடியாது.

ஆனால் சித்தாந்தத் தாக்கம் இருக்கலாம். அதாவது ஒரு நாட்டில் தொழிலாளி வர்க்கத்தின் எந்த ஒரு அரசியல் கட்சியும் இல்லாத பொழுது, தொழிலாளி வர்க்கம் எண்ணிக்கையில் குறைவானதாக இருக்கும் பொழுது அக்டோபர் புரட்சியின் தாக்கத்தால் தனிப்பட்ட முற்போக்கு மனிதர்களிடையே புரட்சிகரக் கருத்துகள் உதித்து பரவின, இக்கருத்துகளின் அடிப்படையில் இவற்றைச் சுற்றி பலர் அணிதிரண்டனர். காலப் போக்கில், தொழி

லாளி வர்க்கம் வளர்ச்சியடைந்து, சமூக மாற்றங் களைப் பற்றிய கருத்துகள் மக்கள் திரளினரை ஆட்கொண்ட பின்னர்தான் வலிமையான, உறுதியான கம்யூனிஸ்டு இயக்கம் தோன்றுவதன் மீது அக்டோபர் புரட்சியின் தாக்கம் வெளிப் பட்டது.

உதாரணமாக வியட்நாமில் புரட்சிப் போக் கின் வளர்ச்சியை எடுத்துக் கொள்ளலாம். அக் டோபர் புரட்சியைப் பற்றி ஹோசிமின் 1920க்களின் தொடக்கத்திலேயே அறிந்தார். வியட்நாமில் தொழிலாளி வர்க்கம் வளர்ந்து, ஹோசிமின் தலைமையில் வெகுஜன கம்யூ னிஸ்டுக் கட்சி உருவாக ஒரு சில பத்தாண்டுகள் தேவைப்பட்டன. 1945 ஆகஸ்டில் வியட்நாமில் நடந்த புரட்சியின் மீதும் வியட்நாமிய மக்களின் போராட்டம், வெற்றியின் மீதும் அக்டோபர் புரட்சி செலுத்திய சித்தாந்தத் தாக்கத்தை இன்று யாரும் மறுக்க மாட்டார்கள். ஆயினும் வலிமை யான மக்கள் இயக்கத்தையும், உலகம் முழுவதை யும் வியப்பில் ஆழ்த்திய வியட்நாமிய மக்களின், குறிப்பாக இதன் கம்யூனிஸ்டுக் கட்சியின் தியா கத்தையும் சோவியத் ருஷ்யா ''ஏற்பாடு செய் தது'', ''திணித்தது'' என்று யாராவது கூற முடியுமா? அக்டோபர் புரட்சியின் லட்சியங்களும் அனுபவமும் வியட்நாமிய கம்யூனிஸ்டுக் கட்சி யைத் தோற்றுவிக்க ஊக்கமளித்தன.

இதே போன்ற உதாரணங்கள் பலவற்றைக் கூறலாம். ஒவ்வொரு நாட்டிலும் புரட்சிப் போக் கின் மீதான அக்டோபர் புரட்சியின் தாக்கம் காலத்திலும் வேகத்திலும் வெவ்வேறானதா

யிருக்கலாம் என்பதை இந்த உதாரணங்கள் காட்டுகின்றன. புரட்சிப் போக்கின் வளர்ச்சி முழுக்க முழுக்க ஒரு குறிப்பிட்ட நாட்டின் வரலாற்றுச் சூழ்நிலைகளைத்தான் சார்ந்துள்ளதே தவிர மாஸ்கோ அல்லது கிரெம்ளினின் விருப்பு வெறுப்புகளைப் பொறுத்து அமைவதில்லை. விஷயம் இப்படி எளிமையானதாக இருந்தால் உலகம் முழுவதிலும் எப்போதோ கம்யூனிச சமுதாயம் தோற்றுவிக்கப்பட்டிருக்கும். அங்கோலா நாட்டில், இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பின்னர் தான் அக்டோபர் புரட்சியைப் பற்றியே கேள்விப்பட்டனர், மார்க்சிஸ்டுக் கட்சி 1956இலேயே முதலில் தோற்றுவிக்கப்பட்டது. இந்நாட்டில் புரட்சி 1976இல் வெற்றியடைந்தது. பின்லாந்திலோ கம்யூனிஸ்டுக் கட்சி கிட்டத்தட்ட 70 ஆண்டுகளுக்கு முன்னர் தோற்றுவிக்கப்பட்டது, ஆனால் இன்று அங்கே சோஷலிசப் புரட்சியைப் பற்றிய பேச்சு கூடக் கிடையாது. உலகப் புரட்சிப் போக்கின் மீது அக்டோபர் புரட்சியின் தாக்கம் ஒரு சிக்கலான விஷயமாகும்; ஸ்தல மார்க்சிய இயக்கம் லெனினிய கட்சியின் அனுபவத்தை எந்த அளவிற்கு கிரகிக்கிறது என்பதிலும், இந்த இயக்கத்தின் சித்தாந்தத் தயார் நிலையிலும், அதாவது தார்மீக அரசியல் முக்கியத்துவமுடைய காரணிகளிலும் இது வெளிப்படுகிறது.

அக்டோபர் சோஷலிசப் புரட்சி, சோஷலிசத்திற்கும் சமாதானத்திற்கும் இடையிலான ஒற்றுமையை வார்த்தைகளில் அல்ல, நடைமுறையில் மெய்ப்பித்தது. சோவியத் ருஷ்யா, சமாதானம் என்ற சொல்லை உச்சரித்தபடியேதான் பிறந்

தது. சர்வதேச உறவுகளில் இதன் முதல் நடவடிக்கை ஏகாதிபத்திய யுத்தத்தை நிறுத்தக் கோரும் சமாதான அரசாணையாகும், இது இணைப்புகள், நட்ட ஈடு இன்றி சமாதானம் செய்து கொள்ளுமாறு போரிடும் அரசுகள் அனைத்திற்கும் அறைகூவல் விடுத்தது. ஏகாதிபத்திய யுத்தத்திற்கு எப்படி முடிவு கட்டுவது என்று உலகிற்கு சோவியத் ருஷ்யாதான் உதாரணம் காட்டியது. வரலாற்றிலேயே முதல் முறையாக சமாதான கருத்துகள், சமாதான சக வாழ்வு லட்சியங்கள் ஒரு முழு அரசின் வெளிநாட்டுக் கொள்கையின் கோட்பாடுகளாகப் பிரகடனப்படுத்தப்பட்டன. உலக அரசியலில் இவற்றிற்குள்ள முக்கியத்துவத்தை மதிப்பிடாமல் இருக்க முடியாது.

இச்சமாதானப் பதாகையை சோவியத் குடியரசு, அக்டோபர் புரட்சியின் புனிதமான கடமைகளில் ஒன்றாகக் கருதி எப்போதும் ஏந்தி வந்துள்ளது, இதைத் தன் வெளிநாட்டுக் கொள்கையின் பாரம்பரியமாக ஆக்கியுள்ளது. சமாதானம், படைக் கலைப்பிற்காக இது 1930ஆம் ஆண்டுகளில் போராடியது. சமாதானத்திற்காக சோவியத் யூனியன் இரண்டாவது உலக யுத்தத்தின் போர்முனைகளில் பாசிசத்திற்கு எதிராகப் போராடியது. இன்றும் சோவியத் யூனியன் சமாதானத்திற்காக, முழு படைக் கலைப்பிற்காக, அணு ஆயுத யுத்தத்திற்கு எதிராகப் போராடுகிறது.

சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சி, முதலாளித்துவ நாடுகளில் போராடி வரும்



4–207

சோதரக் கட்சிகளின் அனுபவத்தைக் கவனமாக ஆராய்கிறது, சோஷலிச நாடுகளின் நல்லனு பவத்தைப் பயன்படுத்திக் கொள்கிறது. இதி லிருந்து நல்லம்சங்களை எடுத்துக் கொள்வதே இதன் நோக்கம். லெனினியப் பாரம்பரியங் களுக்கு விசுவாசமான சோவியத் யூனியன் கம்யூ னிஸ்டுக் கட்சி பல்வேறு நாடுகளும் மக்களினங் களும் சோஷலிசத்தை நோக்கி நடைபோடும் வெவ்வேறு பாதைகளையும் சூழ்நிலைகளையும் ஒப்புக் கொண்டு, கணக்கில் கொள்கிறது. ஆனால் இவ்வளவு வேறுபாடுகளின் மத்தியிலும் சோஷலிசம் தன் சாரத்தில் வேறுபடக் கூடாது என்கிறது சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சி.

ஆண்டுகள் செல்லச் செல்ல உலக கம்யூனிஸ்டு இயக்கத்திற்கு மேன்மேலும் செழுமையான அனு பவம் கிட்டி வருகிறது. வர்க்க லட்சியங்களை அடையும் வழிகளும் முறைகளும் வடிவங்களும் செழுமைப்பட்டு வருகின்றன. நவீன காலகட்டம் மெய்ப்பிக்கும்படி, தேசிய வரம்புகளின் உள்ளும் சர்வதேசிய அளவிலும் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் தலைமையில் உள்ள தொழிலாளி வர்க்கமும், இதன் குழந்தையாகிய உலக சோஷலிச அமைப் பும்தான் சோஷலிசத்திற்கான போராட்டத்தின் புரட்சிகர அனுபவத்தை ஏந்தி நிற்கின்றன.

சமுதாயத்தின் புரட்சிகர மாற்றம் சம்பந்த மான பொது நியதிகளைப் பயிலுவதில் லெனி னிய அணுகுமுறையைப் பின்பற்றும் சோதர கம்யூனிஸ்டு, தொழிலாளர் கட்சிகளுக்குத் தத் தம் நாடுகளின் சமூக பொருளாதார சூழ்நிலை,

வரலாற்று பாரம்பரியங்கள், தேசிய சிறப்பியல்பு களுக்கு ஏற்ப இவற்றைப் பயன்படுத்தும் வாய்ப்பு கள் உள்ளன. இதைக் கவனத்தில் கொள் ளாவிடில் தவறேற்படும். அதாவது ஏதாவது ஒரு தேசிய அம்சம் அல்லது அம்சங்கள் சர்வ பொதுவானவையாக அறிவிக்கப்படலாம் அல் லது திட்டவட்டமான வரலாற்று, தேசிய சிறப் பியல்புகளிலிருந்து பிரிக்கப்பட்ட ஒரு வறட்டுச் சூத்திரம் என்றென்றும் நிலையானதாகப் பிர கடனப்படுத்தப்படலாம்.

எந்த ஒரு நாட்டின் கம்யூனிஸ்டுக் கட்சியும் முற்றிலும் சுதந்திரமானது, உள்நாட்டு, வெளி நாட்டுப் பிரச்சினைகளில் சுயமாக முடிவு செய் யும் இது நாட்டில் சக்திகளின் சமன்நிலையின் சிறப்பியல்பைச் சரியாகக் கணக்கில் கொள்ளவும், மாற்றங்களை உழைப்பாளிகளின் நலன் கருதி முழுமையாகப் பயன்படுத்தவும் முயலுகிறது. புரட்சிகர மாற்றங்களின் பொது நியதிகளுக்கும் திட்டவட்டமான வரலாற்றுச் சூழ்நிலைகளுக் கும் இடையிலான பரஸ்பரத் தொடர்பை இயக்கவியல் பொருள்முதல்வாத ரீதியில் புரிந்து கொண்டால்தான் இயக்கத்தின் எல்லா வடிவங் களையும் எல்லா போராட்ட முறைகளையும் இவற்றின் பரஸ்பரத் தொடர்புகளையும் கம்யூ னிஸ்டுக் கட்சிகளால் சரிவரக் கவனத்தில் கொள்ள முடியும். முக்கியமானது என்னவெனில் அனுபவத்தை சர்வதேசியமயப்படுத்துவதெனில், விஷயங்களை இயந்திரகதியாக தொகுப்பது என்று பொருளாகாது, மாறாக விஷயங்களைத் திறமையாக தத்துவார்த்த ரீதியில் பொதுமைப்

படுத்த வேண்டும், ஆக்கபூர்வமாகப் பகுப்பாய்வு செய்ய வேண்டும், வளர்ச்சிப் பாதைகள், இயக்க முறைகளைக் கூட்டாக விவாதிக்க வேண்டும், ஏனெனில் ஒவ்வொரு புரட்சியும் ''அத்தகைய செழுமையான உள்ளடக்கத்தினை வழங்குகின்றது, போராட்ட வடிவங்கள் மற்றும் போராடும் தரப்புக்களின் சக்திகளது அணி சேர்க்கையில் இத்தகைய எதிர்பாராத பிரத்தியேக இணைப்புக்களை வெளிப்படுத்துகின்றது... எனவே சாமான்யர் மனதில் அற்புதமாகத் தோற்றமளிப்பவை நிறைய இருக்கும்.'' *

சோஷலிசம் நிலவாத நாடுகளில் உள்ள மார்க்சிய-லெனினியக் கட்சிகள் தத்தம் நாடுகளில் சோஷலிசப் பாதையில் உள்ள விசேஷ அம்சங்களைச். சரிவர நிர்ணயிக்க முயலுகின்றன.

ருஷ்ய அனுபவத்தையோ வேறெந்த ஒரு அனுபவத்தையோ மிகைப்படுத்துவதை லெனின் கண்டித்தார், இது வறட்டுத்தனத்திற்கு இட்டுச் செல்லும், குறிப்பிட்ட கட்சியைத் திட்டவட்டமான புரட்சிச் சூழலிலிருந்து பிரிக்கும். ஒரு கட்சியின் அனுபவத்தைப் பிற கட்சிகள் இயந்திரகதியாகப் பின்பற்றுவது சிந்திக்க முடியாதது, இது தவிர்க்கப்பட வேண்டும். இரண்டு அண்டை நாடுகளின் நிலைமைகள் கூட என்றுமே ஒரே மாதிரியானவையாக இருக்காது. நாட்டின் கடந்த காலம், நாட்டு மக்களின் பாரம்பரியங்கள், கலாசார சிறப்பியல்புகள் போன்றவை

---

* வி. இ. லெனின், தேர்வு நூல்கள், தொகுதி 5, பக்கங்கள் 11 – 12.

ஒவ்வொரு புரட்சியிலும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். லெனின் இந்த இயக்கவியல் அணுகுமுறையின் அடிப்படையில்தான் செயல்பட்டார். முதல் சோஷலிச நாட்டின் அனுபவத்தையும் அக்டோபர் புரட்சியின் படிப்பினைகளையும் இப்புரட்சியின் முக்கிய நியதிகளையும் — இவையின்றி முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்தை நோக்கிய மாற்றம் சாத்தியமில்லை — திறமையாகப் பயன்படுத்த வேண்டியதன் அவசியத்தை லெனின் பன்முறை கோடிட்டுக் காட்டினார்.

ஆம், உண்மையில் உலகப் புரட்சி இயக்கத்தின் அனுபவம், எந்த ஒரு கட்சியின் அனுபவமும் எல்லா நாடுகளிலும் உள்ள புரட்சியாளர்களுக்கான மதிப்பிடற்கரிய பொக்கிஷமாகும். இதை அப்படியே பின்பற்றாமல், கவனமாக ஆராய்ந்து, இதிலிருந்து படிப்பினைகளைக் கிரகிப்பதன் மூலம் எந்த ஒரு கட்சியும் புரட்சிப் போராட்ட பாதையை எளிதாக்குகிறது, அதன் முன்னுள்ள பிரச்சினைகளுக்கு சரியான தீர்வைத் தேடுவது சுலபமாகிறது. நிலவரத்தில் எவ்வளவு வேறுபாடுகள் இருந்த போதிலும் சோஷலிசம் நிர்மாணிக்கப்பட்டு வெற்றிகரமாக வளர்ந்து வரும் நாடுகளின் அனுபவத்தை அறிந்திருப்பதானது தத்தம் நாடுகளில் சோஷலிச மாற்றங்களுக்காகப் போராடும் கட்சிகளுக்குப் பயன்தர வல்லது.

முன்னாள் காலனி நாடுகளின் சமூக பொருளாதார பின்தங்கிய நிலை, மக்கள் திரளினரின் குறைவான அரசியல் உணர்வு ஆகியவைதான் சோஷலிசத் திசையமைவைத் தேர்ந்தெடுத்த

ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளின் (ஆப்கானிஸ்தான், கம்பூச்சியா, லாவோஸ், எத்தியோப்பியா, காங்கோ போன்றவை) ஆளும் கட்சிகள் செயல் தந்திரத்தை நிர்ணயிக்கும் போது தாக்கம் செலுத்துகின்றன. சோஷலிசப் பாதை தேசிய விடுதலைக் கட்டம், ஜனநாயகக் கட்டம், சோஷலிசக் கட்டம் ஆகிய வெவ்வேறு கட்டங்களின் வழியே செல்கிறது. முதலில் நாட்டின் சுதந்திரம், அரசுரிமையை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட தேசிய, ஜனநாயகக் கடமைகளைத் தீர்க்க வேண்டும், பின்னர்தான் படிப்படியாக வர்க்கக் கடமைகளுக்கு மாற வேண்டும்.

மார்க்சிய-லெனினியத் தத்துவத்தின் அடிப்படையில் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் சர்வதேச அனுபவத்தை ஆக்கபூர்வமாகப் பொதுமைப்படுத்துவதானது சர்வதேச கம்யூனிஸ்டு, தொழிலாளர் இயக்கத்தின் ஒற்றுமையை உயர்த்தவும் இதன் சித்தாந்த முதிர்ச்சியை வளர்க்கவும் அவசியமான நிபந்தனையாகும். புதிய சோதனைகளும் புதிய களங்களும் எதிரில் நிற்கின்றன. கம்யூனிசத்திற்காகப் போராடும் புதுப் புது அணிகள் இவற்றில் இறங்கும். இவை புதிய முறைகளைத் தேடுவதன் மீது கவனம் செலுத்தும் அதே நேரத்தில் கடந்த காலத்தின் சோதிக்கப்பட்ட அனுபவத்தைக் கிரகிப்பதன் மீதும் – இது புதிய சமுதாயத்தைக் கட்டுபவர்களுக்கு எப்போதும் அவசியம் – கவனம் செலுத்தும். எதிர்காலப் புரட்சிகள் உலக கம்யூனிஸ்டுகளுக்குப் புதிய விவரங்களைத் தரும்.

அக்டோபர் புரட்சி, இதன் லட்சியங்கள்,

இதன் பாரம்பரியம் ஆகியவற்றின் பாலான உறவைப் பற்றிய பிரச்சினை தொழிலாளர் இயக்கத்தில், உலகில் நடைபெறும் சித்தாந்த அரசியல் போராட்டத்தில் சந்தர்ப்பவாத சக்தி களுக்கும் புரட்சி சக்திகளுக்கும் இடையிலான விவாதங்களின் மைய அம்சமாக விளங்கி வரு கிறது. 1920க்களிலேயே இரண்டாவது அகிலத் தின் சந்தர்ப்பவாதத் தலைவர்கள் காவுத்ஸ்கி யின் தலைமையில், ருஷ்யப் புரட்சி மேலைய நாடுகளுக்கு ஏற்ற பாதையல்ல என்று நிரூபிக்க முயன்றனர். தொழிலாளர், விவசாயிகளின் ஆட் சிக்கு எதிராக, பாட்டாளி வர்க்க சர்வாதி காரத்திற்கு எதிராக சந்தர்ப்பவாதிகள், சோஷ லிசத்தின் வர்க்க சாரத்தை அழித்து, முத லாளித்துவத்தை மாற்றியமைக்கும் புரட்சிகர வழியை முன்மொழியாமல் பரிணாம வழியை முன்மொழிந்து, ''தூய ஜனநாயகம்'' பற்றிய கோஷங்களை வைத்தனர். வளர்ச்சியடைந்த நாடுகளுக்குப் புரட்சி என்பது சோஷலிசத்திற் கான போராட்ட முறையே அல்ல, சீர்திருத்தங் களின் மூலம்தான் இவை சோஷலிசத்தை அடைய முடியும் என்றனர் அவர்கள்.

இன்று அக்டோபர் புரட்சியின் முக்கியத்துவத் தைக் குறைக்க புதிய வாதங்கள் பயன்படுத்தப் பட்டாலும் இவற்றின் சாரம் மாறவில்லை; சமு தாயத்தின் புரட்சிகர மாற்றத்தை நிராகரிப் பதும் யதார்த்த சோஷலிசத்தை விமர்சிப்பதும் தான் இச்சாரமாகும். சோவியத் யூனியன்தான் பிரதான தாக்குதலுக்கு ஆளாகிறது. ஏனெனில் முதலாவதாக, சோவியத் யூனியன்தான் —

இதைச் சுற்றி சோஷலிச முகாம் நாடுகள் அணி திரண்டுள்ளன — ஏகாதிபத்தியத் திட்டங்களுக்கு எதிராயுள்ள முக்கியப் பொருளாதார, அரசியல், சித்தாந்த, இராணுவச் சக்தியாகும். இரண்டாவதாக, உலகெங்கும் உள்ள கோடானுகோடி மக்களுக்கு சோவியத் யூனியன்தான் யதார்த்த சோஷலிசத்தின் உருவமாகும். மூன்றாவதாக, சோவியத் யூனியனில் நிலவும் சோஷலிச அமைப்பைக் குறைகூறி களங்கப்படுத்துவது என்றால் அது பொதுவாக யதார்த்த சோஷலிசத்தையும் சோஷலிசம் அல்லா நாடுகளில் நிலவும் கம்யூனிஸ்டு இயக்கத்தையும் குறைகூறி களங்கப்படுத்துவதைக் குறிக்கும். ஒரு யதார்த்தம் என்ற வகையில் சோஷலிசத்தைப் பற்றிய சந்தேகங்களைக் கிளப்புவது என்றால் ஒரு தத்துவம் என்ற வகையில், பூர்ஷ்வா அமைப்பிலிருந்து வெளியேறும் வழி என்ற வகையில் சோஷலிசத்திற்கு எதிராக சந்தேகங்களைக் கிளப்புவது என்று பொருள்; எதற்காகப் போராடி தியாகங்களைச் செய்வது தகுமோ அந்த சோஷலிசத்திற்கு எதிராக சந்தேகங்களைக் கிளப்புவது என்று பொருள். உலகெங்கும் உள்ள கம்யூனிஸ்டுகள் சோஷலிச யதார்த்தத்தின் மீதான புழுதி தூற்றலை நிராகரித்து, யதார்த்த சோஷலிசத்தின் சாதனைகளைப் பிரசாரம் செய்வதன் மூலம் சர்வதேசியவாதத்தை வெளிப்படுத்துகின்றனர், தம்மையும் தம் நாட்டு மக்களையும் பூர்ஷ்வாப் பிரசாரத்திலிருந்து காப்பாற்றுகின்றனர்.

# புரட்சிப் போராட்டத்தின் செயல்திட்டமும் செயல்முறையும்

மார்க்சிய-லெனினிய செயல்முறையும் செயல் திட்டமும், சமூக, தேசிய விடுதலைக்காகப் பாட்டாளிகளும் எல்லா உழைப்பாளிகளும் நடத்தும் புரட்சிப் போராட்டத்திற்கு அரசியல் தலைமையை வழங்கும் விஞ்ஞானம், கலையாகும்.

செயல்திட்டம் என்பது தொழிலாளி வர்க்கப் போராட்டத்தின் முக்கிய லட்சியங்களையும் முக்கியத் திசையமைவையும், எனவே ஒரு குறிப்பிட்ட வரலாற்றுக் காலகட்டத்தில் தொழிலாளி வர்க்கக் கட்சியின் அரசியல் நடவடிக்கையின் பொதுத் திசையமைவையும் நிர்ணயிக்கிறது; இது தான் பாட்டாளி வர்க்கத்தின் முக்கிய வர்க்க எதிரியையும் அதாவது தீர்மானகரமான தாக்குதலின் திசையையும், அவ்வர்க்கத்தின் முக்கியக் கூட்டாளிகளையும் இதன் மறைமுக பலத்தையும் முடிவு செய்கிறது. கட்சியின் செயல்திட்டக் கடமைகள் நீண்ட காலகட்டத்தில் முடிவு செய்யப்படுகின்றன, முழு வரலாற்றுக் கட்டத்தில் இவை மாற்றமின்றி அப்படியே இருக்கும், கட்சியின் வேலைத்திட்ட ஆவணங்களில் இடம் பெறும்.

செயல்முறை என்பது, செயல்திட்டத்தின் ஒரு பகுதி, இதற்கு உட்பட்டது, இதற்கு வகை செய்வது, இதனுடன் பிரிக்க இயலாதபடி

தொடர்புடையது. செயல்முறைதான், புரட்சி நிகழ்ச்சிப் போக்கின் வளர்ச்சியின் ஒரு குறிப் பிட்ட கட்டத்தில் போராட்ட வழிகள், வடிவங் கள், முறைகளை நிர்ணயிக்கிறது. இது முக்கியத் திசையில் முயற்சிகளை அணிதிரட்ட உதவு கிறது. செயல்திட்டமும் செயல்முறையும் கொள் கையின் சாரமாகும், இவைதான் கட்சியின் அரசியல் கோட்பாடுகள், தொழிலாளி வர்க்கத் தின் இறுதி லட்சியங்களை அடையும் முறைகள், வழிகள், சாதனங்கள், வர்க்கப் போராட்டத்தை வழிநடத்தும் விதிகள் ஆகியவற்றை நிர்ணயிக் கின்றன.

செயல்திட்டமானது ஒரு விஞ்ஞானம் என்ற வகையில் சமூக அரசியல் வளர்ச்சி விதிகளின் அடிப்படையிலானது. இது இவ்விதிகளைப் பிரதி பலிக்கும் தத்துவத்திலிருந்து பிரிக்க இயலா தது; யதார்த்தத்தைப் பகுப்பாய்வு செய்யும் முறையாக இது விளங்குகிறது.

ஒரு கலை என்ற வகையில் செயல்திட்டத்திற் கும் செயல்முறைக்கும் அனுபவமும் திறமையும் வேண்டும்.

புரட்சிப் போராட்டத்திற்கு சரியான தலை மையை அளிக்க ஒரு புறம், சமூக விஞ் ஞானத்தைக் கிரகித்திருக்க வேண்டும்; இது பொருளாதாரத்திற்கும் அரசியலுக்கும் இடை யிலான தொடர்பையும், வேலைத்திட்டங்கள், கோஷங்களுக்கும் சமூக வர்க்க நலன்களுக்கும் இடையிலான தொடர்பையும் வெளிப்படுத்து கிறது. புறவய யதார்த்தம், சமூக அரசியல் வளர்ச்சியின் விதிகள் ஆகியவற்றை அறியவும்,

இவ்வளர்ச்சியின் தேவைகளுக்கேற்ற கொள்கையை உருவாக்கவும் விஞ்ஞானம் வாய்ப்பளிக்கிறது. மறுபுறம் அரசியல் கலையைக் கற்க வேண்டும், புதிய வாய்ப்புகளைப் பயன்படுத்தும் திறமையைப் பெற வேண்டும், எல்லா போராட்ட முறைகள், சாதனங்களையும் கவனத்தில் கொள்ள வேண்டும். அரசியல் கலையானது அரசியலை யதார்த்தத்துடன் இணைக்கவும் இதை செயல்படுத்தவும் உதவுகிறது.

தர்க்க முடிவுகள், தத்துவார்த்த கருத்துநிலைகள் ஆகியவற்றின் அடிப்படையில் மட்டுமின்றி, சரியான பாதையை "ஊகித்தறியும்" திறமைகளின் அடிப்படையிலும் சரியான அரசியல் முடிவுகளை எடுப்பதில்தான் அரசியல் கலை வெளிப்படுகிறது.

செயல்திட்டம், கட்சியின் முக்கிய அரசியல் கொள்கையைப் பின்பற்றுவதில் உறுதிக்கு வாய்ப்பளிக்கிறது, செயல்முறையோ ஏற்ற கொள்கை வரம்புகளுக்குள் பல்வேறு அரசியல் நடவடிக்கைகளுக்கான வாய்ப்பளிக்கிறது.

கட்சிக் கொள்கையின் செயல்வன்மை செயல்திட்டம், செயல்முறையின் ஒற்றுமையால் நிர்ணயிக்கப்படுகிறது; அதாவது பிரதான கொள்கையைப் பின்பற்றுவதில் தொடர்ச்சி வேண்டும், அதே சமயம் இக்கொள்கை நிறைவேற்றத்தின் வழிகள், சாதனங்கள், வேகங்களை நிர்ணயிக்கும் பொழுது நெளிவு சுழிவு வேண்டும்.

மார்க்சியக் கட்சியின் செயல்திட்டமும் செயல்முறையும் சர்வதேசியத் தன்மையை உடையவை, லெனின் கூறியபடி இவை "குறிப்பிட்ட

அரசிலும் (அதனைச் சுற்றிலுமுள்ள அரசுகளிலும் மற்றும் உலகெங்குமுள்ள அரசுகளிலும்) இருக்கும் வர்க்க சக்திகள் **யாவற்றையும்**, மற்றும் புரட்சி இயக்கங்களது அனுபவத்தையும் பற்றிய நிதான மான, முற்றிலும் புறநிலை நோக்குடன் கூடிய மதிப்பீட்டையே'' * தருகின்றன.

லெனினியக் கட்சி, உலகில் உருவாகிய புற வய சூழ்நிலையைப் பன்முக ரீதியில் பகுப்பாய்வு செய்ததால், அரசியல் செயல்திட்டத்தையும் செயல்முறையையும் நிர்ணயிக்க முடிந்தது, பொது முக்கியத்துவம் வாய்ந்த சில அம்சங்கள், கோட்பாடுகளைச் சுட்டிக் காட்ட முடிந்தது. பின்வருபவை இவற்றிலடங்கும்:

—விஞ்ஞான அடிப்படையில் கட்சியின் செயல் திட்டத்தையும் செயல்முறையையும் முடிவு செய் தல், தத்துவத்தை நடைமுறையால் சோதித்துப் பார்த்தல், மார்க்சிய-லெனினியத் தத்துவத்தின் அடிப்படையில் கொள்கையை உருவாக்குதல், சமூக வளர்ச்சி மற்றும் வர்க்கப் போராட்டம் பற்றிய புறவய விதிகளை அறிந்து பயன்படுத் தல், வர்க்க சக்திகளின் நிலவரம், சமன் நிலையைப் பகுப்பாய்வு செய்தல், நிலவக் கூடிய வர்க்கங்கள், அரசியல் சக்திகளின் பொருளா தார, அரசியல் நலன்களை ஆழ்ந்து புரிந்து கொண்டு கவனத்தில் கொள்ளுதல்;

—குறிப்பிட்ட வரலாற்றுச் சகாப்தத்தின் தன் மைக்கும் சாரத்திற்கும் ஏற்ப செயல்திட்டம்,

* வி. இ. லெனின், **தேர்வு நூல்கள்**, தொகுதி 10, பக்கம் 255.

செயல்முறையை நிர்ணயித்தல்; "... குறிப்பிட்ட சகாப்தத்தின் முக்கிய அம்சங்களைப் பற்றிய ஞானம்தான் குறிப்பிட்ட ஒரு நாட்டின் விவர மான சிறப்பியல்புகளைக் கவனத்தில் கொள் வதற்கான அடிப்படையாக விளங்கும்"*;

—அரசியலின் பாலான நிதானமான, வர்க்க அணுகுமுறை, வர்க்கப் போராட்டத்தின் சர்வ தேச அனுபவம், ஒரு குறிப்பிட்ட நாட்டின் புலப் பாடுகள், நிகழ்ச்சிப் போக்குகள், பாரம்பரியங் கள் ஆகியவற்றைப் பாரபட்சமின்றி கறாராகக் கவனத்தில் கொள்ளுதல், ஒவ்வொரு குறிப்பிட்ட செயல்திட்டக் கட்டத்தின் கடமைகளையும் நிறைவேற்றுவதில் புறவய ரீதியாக அக்கறை யுடைய ஒவ்வொரு அரசின் (இதைச் சுற்றியுள்ள மற்ற அரசுகளின், எல்லா நாடுகளின்) புரட்சி சக்திகளைப் பாரபட்சமின்றி கறாராகக் கவனத் தில் கொள்ளுதல், தொழிலாளி வர்க்கத்தின் கூட்டாளிகளை வெளிப்படுத்துதல், சமுதாயத் தின் மற்ற பிரிவினரும் மற்ற இயக்கங்களும் பொதுக் கடமைகளின் நிறைவேற்றத்தில் பங் கேற்கும் வழிகள், முறைகளைக் கண்டுபிடித்தல், மக்கள் திரளினரை பாட்டாளி வர்க்கக் கட்சி யின் கொள்கை பக்கம் கவர்ந்திழுத்தல்;

—செயல்திட்டம், செயல்முறையின் சர்வ தேசியத் தன்மை: லெனினின் வார்த்தைகளில் சொன்னால், தன் நாட்டிலும் உலகெங்கும் சோஷலிசமும் கம்யூனிசமும் வெற்றி பெறும் பொருட்டு அதிகபட்சம் பணி புரிய ஒவ்வொரு

* V. I. Lenin, *Collected Works*, vol. 21, p. 145.

கட்சிக்கும் உள்ள நாட்டத்தில் இது வெளிப்படுகிறது;

— சர்வதேச சூழ்நிலையையும், ஒவ்வொரு நாட்டிற்கும் மற்ற நாடுகளுடன் உள்ள தொடர்புகளையும், ஒவ்வொரு நாட்டின் புரட்சி இயக்கத்திற்கும் சர்வதேச தொழிலாளர் இயக்கத்துடன் உள்ள தொடர்புகளையும், சோஷலிசத்திற்கான பொதுப் போராட்டத்தின் சர்வதேசிய நலன்களையும் கவனத்தில் கொள்ளுதல்;

— தத்துவம், கொள்கையின் பாலான ஆக்க பூர்வமான அணுகுமுறை; அதே சமயம் வர்க்கப் போராட்ட அனுபவத்தைக் கவனமாகப் பயன்படுத்தல்;

— ஒரே ஐக்கிய செயல்திட்டத்திற்கேற்பப் புரட்சி இயக்கத்தின் வெகுஜன சக்திகளுக்குத் தலைமை தாங்கி வழிநடத்தல்; இச்செயல் திட்டத்தில் போராட்டத்தின் முக்கிய திசையமைவுகள் திட்டவட்டமாக வரையறுக்கப்பட்டிருக்கும், உடனடிக் கடமைகளும் தொழிலாளி வர்க்கத்தின் இறுதி லட்சியங்களும் நெருக்கமாக இணைக்கப்பட்டிருக்கும்;

— மக்கள் திரளினரை அவர்களின் சொந்த அனுபவத்திலேயே பயிற்றுவித்தல்; ''மக்கள் திரளினரின் உண்மையான பயிற்றுவிப்பை மக்கள் திரளினரின் சுயமான அரசியல் போராட்டத்திலிருந்து, அதுவும் குறிப்பாகப் புரட்சிப் போராட்டத்திலிருந்து என்றுமே பிரிக்க முடியாது'' என்றார் லெனின்;*

* V. I. Lenin, *Collected Works*, vol.23, p. 241.

—எல்லா போராட்ட வடிவங்களையும் கிர கித்து, இவற்றில் எவை குறிப்பிட்ட தருணத் திற்கு, குறிப்பிட்ட நாட்டிற்கு ஏற்றவையோ அவற்றைப் பயன்படுத்தும் திறமையைப் பெற் றிருத்தல்;

—ஒவ்வொரு கட்டத்திலும் தருணத்திலும், மற்ற கடமைகளின் வெற்றிக்கு வகை செய்து, இறுதி லட்சியத்தை அருகில் கொண்டுவரும் முக்கிய அம்சத்தைக் கண்டுபிடிக்கும் திறமை யைப் பெற்றிருத்தல்;

—இறுதி லட்சியத்திற்கான போராட்டத்தை உடனடிக் கடமைகளுக்கான, மக்கள் திரளினரின் அன்றாடத் தேவைகளுக்கான போராட்டத் துடன் இணைத்தல், எங்கெல்லாம் மக்கள் திர ளினர் உள்ளனரோ அங்கெல்லாம் அரசியல், ஸ்தாபனப் பணியாற்றல், பல்வேறு அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், வர்க்க எதி ரியின் மத்தியில் நிலவும் முரண்பாடுகளைப் பயன் படுத்துதல்.

இறுதி லட்சியத்திற்கான பொதுப் போராட் டத்தில் உலகெங்கும் உள்ள கம்யூனிஸ்டுகள் பங்கேற்பதுதான் பாட்டாளி வர்க்கக் கட்சி களின் செயல்திட்டம், செயல்முறையின் சர்வ தேசியத் தன்மையை நிர்ணயிக்கிறது என்றார் லெனின். பூர்ஷ்வாக்களின் ஆதிக்கத்தை முறி யடிப்பது, சோஷலிச அடிப்படையில் சமுதாய மாற்றங்களை நிறைவேற்றுவதற்காகத் தொழி லாளி வர்க்கம் அரசியல் ஆட்சியைப் பிடிப்பது ஆகியவைதான் இந்த இறுதி லட்சியங்களாகும்.

சூக்குமமாக, தத்துவார்த்த ரீதியில் மட்டும்

செயல்முறையைக் கம்யூனிஸ்டுகள் முடிவு செய்யக் கூடாது, மாறாக இதைத் திட்டவட்டமாக நிர்ணயிக்க வேண்டும் என்றார் லெனின். இவர் எழுதினார்: ''இனி முயற்சிகள் யாவற்றையும், கவனம் அனைத்தையும் வளர்ச்சியின் அடுத்த படியை அடைவதில் ஒன்றுகுவித்தாக வேண்டும். இந்தப் படி முந்தியதைப் போல அவ்வளவு அடிப்படையானதல்ல என்பதாகத் தோன்றலாம் — ஒரு விதத்தில் அது உண்மையுங்கூட. ஆனால் நடைமுறையில் இப்பணியைச் செய்து முடிப்பதற்கு இந்தப் படிதான் உண்மையில் மிகவும் அருகாமையில் அமைந்தது, உடனடியானது. பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கு வளர்ந்து செல்வதற்கான அல்லது அதனை அணுகுவதற்கான முறைகளைத் தேடிப்பிடிப்பதே இந்தப் படி.'' *

எனவேதான் மக்கள் திரளினரின் மத்தியில், மக்கள் திரளினருடன் தொடர்புடைய எல்லா ஸ்தாபனங்களிலும் — இவற்றிற்குப் பிற்போக்குச் சக்திகள் தலைமை தாங்கினால் கூட பரவாயில்லை — கம்யூனிஸ்டுகள் இடையறாது, பொறுமையாக, உறுதியோடு பிரசார, கிளர்ச்சி, ஸ்தாபனப் பணியாற்ற வேண்டும், இயன்ற வழிகளில் எல்லாம் மக்கள் திரளினரைப் புரட்சி நடவடிக்கைகளில் ஈடுபடுத்த வேண்டும்.

''இடதுசாரி'' வறட்டுச் சூத்திரவாதம் இளம் கம்யூனிஸ்டுக் கட்சிகளை மக்கள் திரளினரிடமிருந்து தனிமைப்படுத்தும் அபாயகரமான

---

* வி. இ. லெனின், தேர்வு நூல்கள், தொகுதி 10, பக்கம் 304.

பாதைக்குத் தள்ளியது. இளம் கம்யூனிஸ்டு இயக்கம் ''இடதுசாரிவாதத்தை'' நோக்கி ஈர்க்கப் பட்டதால், மக்கள் திரளினருடனான தொடர்பு களை இழக்கும் அபாயம் ஏற்பட்டது ஒருபுற மிருக்க, ஒரு நெருக்கடியான தருணத்தில் இவர் களைப் பாட்டாளி வர்க்கத் தலைமையின்றி விட்டு விடும் அபாயமும் நிலவியது. எனவே இடதுசாரி குறுங்குழுவாதக் கருத்துகள், நட வடிக்கைகளைப் பகுப்பாய்வு செய்யவும், ''இடது சாரி'' தவறுகளை அகற்றி தவிர்க்கும் வழிகள், முறைகள், சாதனங்களைக் காட்டவும், ''இடது சாரி'' கம்யூனிசம் என்ற இளம் பருவக் கோளா றைக் குணப்படுத்தாமல் மக்கள் திரளினரை வெற்றிகரமான சோஷலிசப் புரட்சிக்கு இட்டு வர முடியாது என்பதை நிரூபிக்கவும் லெனின் தன் நூலின் பல பக்கங்களை ஒதுக்கினார்.

''எல்லாப் போராட்ட முறைகளையும் நாம் கையாளத் தெரிந்து கொள்ளாவிடில், நமது விருப்பங்களுக்கு அப்பாற்பட்ட வழியில் பிற வர்க்கங்களது நிலையில் மாற்றங்கள் ஏற்பட்டு நாம் மிகவும் பலவீனமாயிருக்கும் ஒரு செயல் முறை முன்னணிக்கு வரும் போது, நாம் கடுமை யான, சில நேரங்களில் தீர்மானகரமான தோல் விக்கு உள்ளாக நேரலாம். ஆனால் எல்லாப் போராட்ட முறைகளையும் கையாள நாம் கற்றுக் கொண்டு விடுவோமாயின், வெற்றி நிச்சயமாய் நமதே; ஏனெனில், பகைவனுக்கு மிகவும் அபாயகரமான ஆயுதங்களை, மிகத் துரிதமாய் மரண அடி கொடுக்கக் கூடிய ஆயுதங் களை நாம் பிரயோகிப்பதற்கு நிலைமைகள்

நம்மை அனுமதிக்காவிட்டாலுங்கூட, நாம் மெய் யாகவே முன்னிலையிலுள்ள, மெய்யாகவே புரட்சி கரமான வர்க்கத்தினுடைய நலன்களைப் பிரதி பலிப்பவர்களாவோம்.'' *

லெனினின் தத்துவார்த்த முடிவுகள் சர்வ தேசப் புரட்சி அனுபவத்தின், குறிப்பாக போல் ஷிவிக் அனுபவத்தின் தொகுப்பின் விளைவாகும். இவை ஐரோப்பாவில் மட்டுமின்றி ஆசியா, ஆப்பிரிக்கா, லத்தீன் அமெரிக்கா கண்டங்களில் உள்ள நாடுகளிலும் புரட்சி போராட்டங்களில் நடைமுறை ரீதியாகச் சோதிக்கப்பட்டு வளர்க் கப்பட்டன.

போராட்ட முறைகள், வடிவங்களின் விஷ யத்தில் வலதுசாரி, இடதுசாரி சந்தர்ப்பவாதக் கருத்துகளைப் பற்றிய லெனினின் விமர்சனம் இன்றும் தன் முக்கியத்துவத்தை இழக்கவில்லை. ஏனெனில் நம் நாட்களிலும் தொழிலாளர் இயக் கத்தில் இத்தவறான போக்குகள் வெளிப்படு கின்றன.

மார்க்சிய-லெனினியக் கட்சிகளின் வேலைத் திட்டங்களில் தொழிலாளி வர்க்கப் புரட்சிப் போராட்டத்தின் லட்சியங்கள் குறிப்பிடப்பட் டுள்ளன. இவை உடனடி லட்சியங்களாக, இடை நிலை லட்சியங்களாக, இறுதி லட்சியங்களாக இருக்கலாம். கட்சி வேலைத்திட்டத்தின் சார மாகிய இவை செயல்திட்ட மைல் கற்களாகும்.

தொழிலாளி வர்க்கப் போராட்ட வழிகளும் சாதனங்களும் அந்தந்த கடமைகளால் நிர்ண

---

* அதே நூல், பக்கம் 310.

யிக்கப்படுகின்றன, அதே சமயம் இவை திட்ட வட்டமான சூழ்நிலைகளைப் பொறுத்தவை.

சரியான வழிகளையும் சாதனங்களையும் தேர்ந்தெடுப்பது புரட்சிக் கொள்கையின் மிக முக்கியக் கடமையாகும். அரசியலில் லட்சியங்களும் அவற்றை அடையும் சாதனங்களும் பரஸ்பரம் தொடர்புடையவை. எனவே அரசியல் தலைவர்கள் இத்தொடர்பைக் கண்டுபிடிக்கும் திறமையைப் பெற்றிருக்க வேண்டும், ஒவ்வொரு திட்டவட்டமான சந்தர்ப்பத்திலும் இது அந்த நிலவரத்திற்கும் வரலாற்றுச் சூழலுக்கும் ஏற்றதாயிருக்க வேண்டும். இத்தொடர்பைக் கண்டுபிடிப்பதில் குழப்பம் ஏற்பட்டால் அது தவறுகளுக்கு இட்டுச் செல்லும்.

மார்க்சிய-லெனினியக் கட்சிகள் தம் லட்சியங்களை அடைய சமாதான வழிகளையும் பலாத்கார போராட்ட வடிவங்களையும், சட்டபூர்வமான முறைகளையும் தலைமறைவு முறைகளையும் பயன்படுத்துகின்றன.

அரசியல் போராட்டத்தில் அடிக்கடி பல சிக்கலான பிரச்சினைகளுக்கு விரைவாகத் தீர்வு காண வேண்டி வரும்; முன்னர் விஞ்ஞான ரீதியாக அறிய முடியாத விவரங்கள் வெளிப்படும் பொழுது திருத்தங்களைச் செய்ய வேண்டி வரும். இங்குதான் அரசியல் கலைக்கான வாய்ப்பு பிறக்கிறது; இங்குதான் அனுபவத்தின் அடிப்படையில் சரியான நடவடிக்கையை முடிவு செய்யும் திறமையை வெளிப்படுத்த வேண்டும்; எதிரியின் மீது தம் சித்தத்தைப் புகுத்த வேண்டும், குறிப்பிட்ட சூழ்நிலையில் அதிகபட்சம் பயன் தரக் கூடிய

அரசியல் நடவடிக்கை வடிவங்கள், முறைகளைத் திறமையோடு பயன்படுத்த வேண்டும்.

ஒவ்வொரு நாட்டின் புரட்சி இயக்கத்தின் அனுபவமும் மார்க்சிய-லெனினியத்தைச் செழுமைப்படுத்தும். இத்தகைய அனுபவம் ஒரு சோதனைக் கூடமாகும், சமூக நடைமுறை முன்வைக்கும் கேள்விகளுக்கான பதில்கள் இங்கு தேடப்படுகின்றன. ஒவ்வொரு நாட்டின் அனுபவம், தொழிலாளி வர்க்கத்தின் ஒவ்வொரு புரட்சி கட்சியின் அனுபவம் என்பது சர்வதேச கம்யூனிஸ்டு, தொழிலாளர் இயக்கத்தின் முழுமையான சர்வதேசிய அனுபவத்தின் ஒரு பகுதி என்று வாழ்க்கை காட்டியுள்ளது. எனவேதான் உலக கம்யூனிஸ்டு இயக்கத்தின் வரலாற்று அனுபவத்தையும், மார்க்சிய-லெனினியக் கட்சிகளின் நவீன செயல்திட்டம், செயல்முறையையும், இக் கட்சிகளின் அன்றாட நடைமுறை நடவடிக்கையையும் ஆராய்வது ஊழியர்களின் சர்வதேசிய பயிற்சிக்கு மிக அவசியமாகும். இன்று கம்யூனிஸ்டுக் கட்சிகளின் நடைமுறையையும் மொத்தமாக கம்யூனிஸ்டுகளின் நடவடிக்கையையும் ஆராய்ந்து அறியாமல் நவீன உலகையும் இதில் நடைபெறும் சமூக அரசியல் போக்குகளையும் அறிய முடியாது.

''புரட்சியை ஏற்றுமதி செய்வதைப்'' பற்றிய ''இடதுசாரி கம்யூனிஸ்டுகளின்'' அதிசாகசவாதத் தத்துவங்களை மார்க்சிய-லெனினியக் கட்சிகள் நிராகரிக்கின்றன. ஏனெனில் சமூகப் புரட்சி உள்நாட்டுச் சூழ்நிலைகளின் அடிப்படையில்தான் தோன்றி வளருகிறது. ஒரு நாட்டின்

உள்விவகாரங்களில் தலையிடுவதன் மூலம் புரட்சி நிகழ்ச்சிப் போக்கைத் துரிதப்படுத்த செய்யப் படும் சகல வித முயற்சிகளும் சர்வதேச உறவு களின் ஜனநாயக கோட்பாடுகளுக்கு மட்டுமின்றி புரட்சியின் விதிகளுக்கும் முரண்பாடானவை.

சமீப காலத்தில் புரட்சிகர அதிசாகசவாத மும்—அதாவது ஆயுதப் போராட்டம் அல்லது "புரட்சிகர சிறுபான்மையினரின்" நடவடிக்கை கள் மட்டுமே சரியானவை என்ற இடதுசாரி தீவிரவாதிகளின் வாதம்—பெரிதும் ஆபத்தான தாகியுள்ளது. இந்தப் போக்குகளின் ஆதரவாளர் கள், விடுதலை இயக்கத்தின் புறவய விதிகளை நிராகரித்து விட்டு, சிறு இளைஞர் குழுக்களின் "புரட்சி நடவடிக்கைகளை" ஆதரிக்கின்றனர், அல்லது "கொரில்லா அணிகளைத்" தோற்று விக்க வேண்டும், "ஆட்சியைப் பிடிப்பதற்கான" தளங்களை ஏற்படுத்த வேண்டும் என்கின்றனர்.

இவர்களுடைய கருத்துப்படி பரவலான மக் கள் திரளினருடனான தொடர்புகளுக்குப் பதில் சுரண்டுபவர்கள் மீது சுரண்டப்படுபவர்களுக்கு உள்ள வெறுப்பும் மக்கள் மத்தியில் அவ்வப் போது வெடிக்கும் புரட்சிப் பொறிகளும் போதும்; மக்கள் திரளினருக்கு இரண்டாம் பட்ச பங்குதான் அளிக்கப்படுகிறது. புரட்சிகர அதிசா கசவாதம் மொத்தமாக ஜனநாயக இயக்கத் திற்குக் கடுமையான பின்விளைவுகளை ஏற்படுத் தும் என்று நடைமுறை காட்டுகிறது (உதாரணம் இந்தோனேஷியா, பொலிவியா சம்பவங்கள், இத்தாலியில் "சிவப்பு பிரிகேடுகள்").

இது தவிர விஞ்ஞான அடிப்படையிலான

வேலைத்திட்டமும் வெகுஜன ஆதரவும் இல்லாத இடதுசாரி சந்தர்ப்பவாதிகள் கடைக்கோடி பிற்போக்கிற்கு எளிதாக இரையாகின்றனர், இது சந்தர்ப்பவாதிகளைத் தன் நோக்கங்களுக்காகப் பயன்படுத்துகிறது.

மார்க்சிய-லெனினியக் கட்சிகள் லெனினிய ஆலோசனைகளைப் பின்பற்றி, புரட்சிகர அதிசாகசவாதத்தின் சகலவித வெளிப்பாடுகளுக்கும் எதிராகப் போராடுகின்றன, மக்கள் திரளினருடனான தொடர்புகளை மேன்மேலும் வலுப்படுத்த முயலுகின்றன, சீர்திருத்தவாதத்தின் சித்தாந்தம், நடைமுறையை விமர்சிக்கின்றன, அதே சமயம் இந்தச் சீர்திருத்தவாதத்தின் தாக்கத்தின் கீழுள்ள உழைப்பாளிகள் ஸ்தாபனங்களுடனான ஒத்துழைப்பிற்காகவும் தொழிலாளி வர்க்க ஒற்றுமைக்காகவும் போராடுகின்றன.

**''இடதுசாரி'' கம்யூனிசம் — இளம் பருவக் கோளாறு** என்ற நூலில் வி. இ. லெனின் சர்வதேச கம்யூனிஸ்டு இயக்கத்தின் முறையியல், பொது செயல்திட்ட, செயல்முறைக் கோட்பாடுகளைக் குறிப்பிட்டதோடு கூட பல்வேறு பிரச்சினைகளின் நடைமுறை தீர்விற்கு ஏற்ற மாதிரிகளையும் தந்துள்ளார். அரசியல் சமரசங்களின் கலை, அணிகளின் மறுசேர்க்கையில் ஏற்படும் மாற்றங்கள், முக்கிய தாக்குதலுக்கான சரியான தருணத்தைத் தேர்ந்தெடுத்தல், தொழிற்சங்கப் பணி, பூர்ஷ்வா நாடாளுமன்றங்களில் பங்கேற்றல், சமரசங்களின் பாலான உறவு போன்ற பிரச்சினைகளில் லெனின் தன் கருத்தை வெளியிடுகிறார்.

# கம்யூனிஸ்டுகளும் தொழிற்சங்கங்களும்

''இடதுசாரி'' கம்யூனிசம் — இளம் பருவக் கோளாறு என்ற நூலில் வி. இ. லெனின் தொழிற் சங்கங்களின் பாலான கம்யூனிஸ்டுக் கட்சிகளின் அணுகுமுறை மீது பெரும் கவனம் செலுத்து கிறார். பிற்போக்கு தொழிற்சங்கங்களில் கம்யூ னிஸ்டுகள் பங்கேற்கக் கூடாது என்று ''இடது சாரி'' கம்யூனிஸ்டுகள் முன்வைத்த ''தத்து வத்தை'' லெனின் கண்டித்தார்.

கட்சி, மதச் சார்பின்றி உழைப்பாளிகள் திர ளினர் அனைவரையும் இணைக்கும் மிகப் பர வலான ஸ்தாபனங்களாகத் தொழிற்சங்கங் களுக்கு லெனின் பெரும் முக்கியத்துவமளித் தார். சமூக பொருளாதாரக் கோரிக்கைகளுக் கான போராட்டத்தில் தொழிற்சங்கங்களுக்கு முக்கியப் பங்குள்ளதாக லெனின் கருதுகிறார்.

தொழிற்சங்கங்கள் தோன்றுவதை லெனின் தொழிலாளி வர்க்கத்தின் மிகப் பெரும் முன் னேற்றமாக, சிதறிக் கிடந்த நிலையிலிருந்து வர்க்க இணைப்பின் துவக்கத்தை நோக்கிய மாற்றமாகப் பார்க்கிறார். தொழிற்சங்கங்கள் கம்யூனிசப் பள்ளிகளாகும், இவை பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கு, தொழிலாளி வர்க்கம் ஆட்சி யைப் பிடிக்க, பின் தேசிய பொருளாதாரம் முழுவதையும் நிர்வகிக்க மக்கள் திரளினரைப் பயிற்றுவிக்கின்றன.

தொழிற்சங்கங்களின் பாலான கம்யூனிச செயல்முறையை உருவாக்கிய லெனின் தொழிற்சங்கங்களில் காணப்படும் சந்தர்ப்பவாத நிர்ப்பந்தங்களுக்கு எதிராக ஈவிரக்கமற்ற, உறுதியான போராட்டத்தை நடத்த வேண்டும் என்றார். பாட்டாளி வர்க்கக் கட்சி தொழிற்சங்கங்களுடன் உறுதியான தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதற்காக லெனின் அயராது போராடினார். ''மென்ஷிவிக்குகளின் நடுநிலைமைக்கு வேறுபட்டதாக நாம் இந்த நடவடிக்கையைத் தொழிற்சங்கங்களுக்கும் கட்சிக்கும் நெருக்கமான அணித்தொடர்பு, சோஷலிஸ்டு உணர்வை வளர்த்தல் மற்றும் பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகரமான கடமைகளைப் பற்றிய தெளிவு என்ற திசை வழியில் நடத்த வேண்டும்.'' *

அன்றாட கோரிக்கைகளுக்காக மட்டுமின்றி புரட்சி இயக்கத்தின் இறுதி லட்சியங்களுக்காகவும் நடைபெறும் போராட்டத்தில் பெரும்பாலான பாட்டாளிகளையும் உழைப்பாளிகளையும் ஈடுபடுத்துவதற்காக கம்யூனிஸ்டுகள் தொழிற்சங்கங்களில் பணியாற்ற வேண்டும் என்று லெனின் விளக்கினார். மக்கள் திரளினரின் மீதான பாட்டாளி வர்க்கத்தின் அரசியல் செல்வாக்கும், ஒரு குறிப்பிட்ட நாட்டில் நடை

---

* கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், வி. இ. லெனின், **அராஜகவாதமும் அராஜகவாத சிண்டிக்கலிசமும்**, மாஸ்கோ, முன்னேற்றப் பதிப்பகம், 1984, பக்கம் 301.

பெறும் பொருளாதார, அரசியல் போராட்டத்தின் மட்டமும் அளவுகளும் தொழிற்சங்கங்களில் கம்யூனிஸ்டுகள் ஆற்றும் பங்கைப் பொறுத்தவையாகும்.

மார்க்சிய-லெனினியக் கட்சிகள் தொழிற்சங்கங்களைப் பாட்டாளி வர்க்கத்தின், பல்வேறு உழைப்பாளர் பிரிவினரின் பரவலான ஜனநாயக ஸ்தாபனங்களாகக் கருதுகின்றன; இந்த ஸ்தாபனங்கள் புரட்சிகரக் கட்சிகளின் தலைமையில் உழைப்பாளிகளின் நலன்களுக்காகப் போராடுகின்றன, இவர்களின் வர்க்க உணர்வு வளர்ச்சியடைய உதவுகின்றன, வர்க்கப் போராட்டத்தின் வெகுஜன அணிதிரட்டலுக்கு உதவுகின்றன. ''மக்கள் திரளினரின் புரட்சிகர ஆற்றல் மட்டுமே மாற்றங்களுக்குத் தவிர்க்க இயலாது இட்டுச் செல்லும் ஒரே **உண்மையான** சக்தியாகும்''* என்று உலக தொழிலாளர் இயக்க நடைமுறை மெய்ப்பிக்கிறது.

நடைமுறையில் பாட்டாளி வர்க்கக் கட்சிகளுக்குத் தொழிற்சங்கங்களுடன் உள்ள தொடர்பு பின்வருபவற்றைக் குறிப்பிடுவதாக லெனின் கோடிட்டுக் காட்டினார்:

முதலாவதாக, ''பிரசாரத்தின் வடிவிலும் கிளர்ச்சியின் வடிவிலும் மிகவும் சிக்கலான, பல்வகைப்பட்ட பணிகள்'';

இரண்டாவதாக, ''தலைமையான தொழிற்சங்க ஊழியர்களுடன் மட்டுமின்றி, பொதுவாகச் செல்வாக்கு படைத்த தொழிற்சங்க

---

* V. I. Lenin, *Collected Works*, vol. 23, p. 213.

ஊழியர்களுடனும்'' * அடிக்கடி நடத்தப்படும் கூட்டங்கள்;

மூன்றாவதாக, சந்தர்ப்பவாதிகள், மென்ஷி விக்குகள், அராஜகவாதிகள் ஆகியோருக்கு எதிராக உறுதியுடன் போராட வேண்டும்; இவர்கள் பாட்டாளி வர்க்கக் கட்சியிடமிருந்து தொழிற்சங்கங்களுக்குச் ''சுதந்திரம்'' வேண்டுமென்று கோருகின்றனர், தொழிலாளி வர்க்கப் போராட்டத்தின் எல்லா வகைகளுக்கும் கட்சி தலைமை தாங்க வேண்டியதன் அவசியத்தை நிராகரிக்கின்றனர்.

தொழிற்சங்கங்களில் கம்யூனிஸ்டுகளின் நடவடிக்கை என்பது உழைப்பாளிகளைப் பயிற்றுவித்து வளர்க்கும் நீண்ட நிகழ்ச்சிப் போக்கு, தொழில் ரீதியான தடைகள், பழம் பாரம் பரியங்கள், மூட நம்பிக்கைகள் போன்றவற்றை அகற்றும் போக்கு. பரவலான மக்கள் திரளினரின் ஆதரவைப் பெற ''அவர்களால் சொந்த குட்டி முதலாளித்துவத் தப்பெண்ணங்களை நினைத்த மாத்திரத்தில் ஒரு நொடியில், மந்திர ஜாலத்தால், தெய்வ கடாட்சத்தால் விட்டொழித்து விட முடியாது; ஒரு கோஷம் அல்லது தீர்மானம் அல்லது சட்டத்தை வெளியிட்டு இதனைச் செய்து விட முடியாது; வெகுஜன குட்டி முதலாளித்துவச் செல்வாக்குகளை எதிர்த்துக் கடினமான நீண்டதொரு வெகுஜன போராட்டம் நடைபெறும் போதுதான் அவர்

---

* வி. இ. லெனின், **தேர்வு நூல்கள்**, தொகுதி 10, பக்கம் 229.

கள் இவற்றை விட்டொழிக்கிறார்கள்''* என்பதை நினைவில் கொள்ள வேண்டும். ''தொல்லைகளையும் புரட்டுகளையும் அடக்கு முறையையும்'' சந்தர்ப்பவாதிகளின் ''அவதூறு களையும் கண்டு அஞ்சாமல்'' ''நிச்சயம் வெகு ஜனங்கள் காணப்படும் இடங்களில் எல்லாம் வேலை செய்தாக வேண்டும்''** என்று லெனின் கம்யூ னிஸ்டுகளுக்கு அறைகூவல் விடுத்தார். ஏனெனில் கோடானுகோடி மக்களைச் சுறுசுறுப்பான சமூக அரசியல் நடவடிக்கை அரங்கிற்குக் கொண்டுவர இதைத் தவிர வேறு வழியில்லை.

பாட்டாளி வர்க்க மக்கள் திரளினருக்கு மட்டு மின்றி பாட்டாளிகள் அல்லாதோருக்கும், உழைப்பாளி திரளினருக்கும் சுரண்டப்படுபவர் களுக்கும் தலைமை தாங்க வேண்டுமெனில் கம்யூ னிஸ்டுகளுக்குத் திறமையாக பிரசாரம் செய்யத் தெரிந்திருக்க வேண்டும், அணிதிரட்டத் தெரிந் திருக்க வேண்டும், நகர மக்களுக்கு மட்டுமின்றி கிராம மக்களுக்கும் புரியும்படி விஷயங்களை எடுத்துச் சொல்ல வேண்டும்.

மக்கள் திரளினரின் சுறுசுறுப்பை வளர்க்க முடியும் என்பதை ''இடதுசாரிகள்'' நம்ப வில்லை, புரட்சி நிகழ்ச்சிப் போக்கில் இவர்களின் பங்கைப் புரிந்து கொள்ளவில்லை, மக்கள் திரளி னர் மத்தியில் இயங்க மறுத்தனர். தொழிற்சங் கங்களுக்குப் பிற்போக்குச் சக்திகள் தலைமை தாங்கியதைக் காரணம் காட்டி இவற்றில் பங்

---

* அதே நூல், பக்கம் 338.

** அதே நூல், பக்கம் 237.

கேற்கக் கூடாது என்றனர் ''இடதுசாரிகள்''. இது அடிப்படையிலேயே தவறானது என்றார் லெனின்.

லெனினைப் பொறுத்தமட்டில் பிற்போக்குத் தொழிற்சங்கங்களில் பணிபுரிய கம்யூனிஸ்டுகள் மறுப்பது என்பது தொழிலாளர் திரளினரை சந்தர்ப்பவாத, சீர்திருத்தவாதத் தலைவர்களின் நேரடிச் செல்வாக்கின் கீழ் விடுவதற்குச் சமமா யிருந்தது. ''பிற்போக்குத் தொழிற்சங்கங்களில் வேலை செய்ய மறுப்பதானது, தொழிலாளர் களில் போதிய அளவுக்கு வளர்ச்சி பெறாத அல்லது பிற்பட்ட பகுதியோரைப் பிற்போக்குத் தலைவர்கள் அல்லது முதலாளி வர்க்கக் கைக் கூலிகள் அல்லது தொழிலாளர் பிரபுக்குலத் தோர் அல்லது 'முற்றிலும் முதலாளித்துவமய மாகிவிட்ட தொழிலாளர்கள்'... செல்வாக்கிலே விட்டு வைப்பதையே குறிக்கிறது.'' ''இதை விடப் புரட்சிக்கு ஏற்படும் வேறு பெரிய கேடைக் கற் பனை செய்வதுகூட கடினம்!''* என்று கூறிய லெனின் சந்தர்ப்பவாத, சமூக இனவெறி, மத் தியத்துவவாதத் ''தலைவர்களைத்'' தொழிற்சங் கங்களிலிருந்து வெளியேற்றப் போராடுமாறு கம் யூனிஸ்டுகளுக்கு அறைகூவல் விடுத்தார்.

தொழிற்சங்கங்களில் பணியாற்ற வேண்டிய தன் முக்கியத்துவத்தைக் குறைத்து மதிப்பிடு வதானது தம் சொந்த சக்திகளை நம்பாததன் விளைவாகும், இது கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைமைப் பாத்திரத்தைப் புரிந்து கொள்ளாத

---

* அதே நூல், பக்கங்கள் 237, 239.

தையும் குறிக்கிறது. ''தொழிற்சங்கங்களின் 'பிற்போக்குத் தன்மையைக்' கண்டு அஞ்சுவதோ, அதனைத் தட்டிக் கழிக்க அல்லது தாவிச் செல்ல முயலுவதோ படுமோசமான மடமையே ஆகும். ஏனெனில் தொழிலாளி வர்க்கத்தின், விவசாயிகளின் மிகவும் பிற்பட்ட பிரிவினரையும் பெருந்திரளினரையும் பயிற்றுவித்து, போதமளித்து, அறிவொளிபெறச் செய்து, புது வாழ்வினுள் ஈர்த்திடுவதென்ற பாட்டாளி வர்க்க முன்னணிப் படைக்குரிய அந்தப் பணியைக் கண்டு அஞ்சுவதாகவே இதற்கு அர்த்தம்.'' *

அதிகம் படிக்காதவர்களை நம்ப வைக்க கற்றுக் கொள்ளுமாறும், அவர்கள் மத்தியில் பணி புரியும் திறமையைப் பெறுமாறும் வி. இ. லெனின் அறை கூவல் விடுத்தார். கம்யூனிஸ்டுகள் இதைச் செய்யாவிடில் சந்தர்ப்பவாதத் ''தலைவர்கள்'' சகல வித ராஜதந்திரங்கள், பூர்ஷ்வா அரசாங்கங்கள், மதகுருமார்கள், போலீஸ், நீதிமன்றங்கள் ஆகியவற்றின் உதவியால் கம்யூனிஸ்டுகளைத் தொழிற்சங்கங்களினுள் அனுமதிக்காமல் இருப்பார்கள், அவர்களைத் தொழிற்சங்கங்களிலிருந்து வெளியே தள்ளுவார்கள், தொழிற்சங்கங்களில் அவர்களின் பணியைப் பொறுக்க இயலாததாக்குவார்கள். எனவே ''இவற்றுக்கு எல்லாம் சளைக்காமல் நாம் எதிர்த்து நிற்கும் திறனுடையோராய் இருக்க வேண்டும்; எந்தத் தியாகமும் புரிய

---

* அதே நூல், பக்கம் 234.

சித்தமாயிருக்க வேண்டும்'' * .

இன்று தொழிற்சங்கங்கள்தான் மிகப் பெரும் உழைப்பாளர் ஸ்தாபனங்களாகும்; இவற்றின் முக்கியத்துவம் இதில்தான் அடங்கியுள்ளது. உலகில் உள்ள பல்வேறு தொழிற்சங்கங்களில் சுமார் 500 மில்லியன் உறுப்பினர்கள் உள்ளனர்; இவர்கள் உலகத் தொழிலாளி வர்க்கத்தில் அனேகமாக பாதிப் பகுதியினர். சோஷலிச நாடுகளில் 90 – 100 % தொழிலாளர்கள், அலுவலக ஊழியர்களும் விடுதலையடைந்த நாடுகளில் சுமார் 30 % உம் தொழிற்சங்கங்களில் உள்ளனர்.

முதலாளித்துவ நாடுகளில் தொழிற்சங்கங்கள் பெரும் சமூக அரசியல் சக்தியாகும். தொழிலாளி வர்க்கத்தின் வெகுஜனப் போராட்டங்களுக்கு இவைதான் தலைமை தாங்குகின்றன. சமுதாயத்தின் பொருளாதார, அரசியல், கலாசார வாழ்க்கையில் இவற்றின் பங்கும் செல்வாக்கும் மேன்மேலும் வலுப்பட்டு வருகின்றன.

சமூக அரசியல் செயல்திட்டங்களைத் தீட்ட வேண்டியது எவ்வளவு அவசியம் என்பதைத் தொழிற்சங்கங்கள் மேன்மேலும் நன்கு புரிந்து கொண்டு வருகின்றன. ஊதிய உயர்வு பிரச்சினைகள்; வேலை நேரத்தைக் குறைத்தல்; உற்பத்தி முடக்கம், ஆள் நீக்கங்களைக் கைவிடுதல்; உடல்நலப் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்; வீட்டு வசதி பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுதல்; தொழில் நிறுவனங்களில் ஜனநாயக ரீதியான கட்டுப்பாடு; பிரதிநிதித்

---

* அதே நூல், பக்கம் 240.

துவமயப்படுத்தப்பட்ட சமூக பொருளாதார உறுப்புகளின் நடவடிக்கையில் பங்கேற்பது போன்ற அம்சங்கள் மேற்கூறிய செயல்திட்டங் களில் அடங்கும்.

மேற்கூறிய கோரிக்கைகளின் நிறைவேற்றம் உற்பத்தியில் உழைப்புச் சூழலை மேம்படுத்தவும் உழைப்பாளிகளின் பொருளாயத நிலையைச் சீர் படுத்தவும் உதவும். ஏகபோகங்கள், அரசு ஒடுக்க கொள்கை ஆகியவற்றிற்கு எதிரான போராட் டத்தைத் தொழிற்சங்கங்கள் மேன்மேலும் வலுப் படுத்தி வருகின்றன. தொழிற்சங்கப் போராட் டத்திற்கு அரசியல் தன்மையை அளிப்பது மேன் மேலும் அதிகரித்து வருவது முக்கியமாக இதில் வெளிப்படுகிறது.

தொழிலாளர்கள், அலுவலக ஊழியர்களை இயன்ற அளவு அதிகமாகத் தொழிற்சங்க உறுப் பினர்களாக்குவது நவீன தொழிலாளர் இயக் கத்தின் மிக முக்கிய பிரச்சினைகளில் ஒன்றாகும். ஏனெனில் இன்றும் பல முதலாளித்துவ நாடு களில் தொழிலாளர்கள், அலுவலக ஊழியர் களில் கணிசமான பகுதியினர் தொழிற்சங்கங் களில் உறுப்பினர்களாயில்லை. முரட்டுத்தன மான நிர்ப்பந்தம், வேலை நீக்கம், தொழிற்சங்க உறுப்பினர்களைப் பழிவாங்குதல், தண்டனை களுக்கு உள்ளாக்குதல், ஸ்தாபன கட்டுப்பா டற்ற தொழிலாளர்களுக்குத் தொழிற்சங்கங் களின் மீது வெறுப்பை ஏற்படுத்துதல், தொழிற் சங்கங்கள் உற்பத்திக் கட்டுப்பாட்டைக் குலைப் பதாகக் குற்றம் சாட்டுதல் போன்றவை இதற்குக் காரணங்களாகும்.

முதலாளிகளும் நிர்வாகத்தினரும் லஞ்சங்கள் கொடுத்தும், சலுகையுள்ள ஒரு சில தொழிலாளர்களுக்குச் சிறப்புரிமைகளை வழங்கியும், இவர்கள்தான் தொழிலாளர் நலன்களைப் பாதுகாப்பதாயும் தொழிற்சங்கங்கள் அல்லவென்றும் ஒரு மாயையைத் தோற்றுவிக்க முயலுகின்றனர்.

தனிப்பட்ட தொழில் நிறுவனங்களிலும் நாடு தழுவிய அளவிலும் போட்டி தொழிற்சங்கங்கள் தோற்றுவிக்கப்படுகின்றன, முற்போக்குத் தொழிற்சங்கங்களுக்குச் ''சலுகைகள் வழங்கி'' அவற்றைப் பணியவைக்க முயற்சிக்கப்படுகிறது.

வலதுசாரி சந்தர்ப்பவாத தொழிற்சங்கத் தலைவர்களின் ''சமூகக் கூட்டுப் பங்கான்மை'' சமரசக் கொள்கை தொழிற்சங்க உறுப்பினர் எண்ணிக்கை அதிகரிக்கவும் தொழிற்சங்கங்களின் செல்வாக்கு வளரவும் பெருந் தடையாக உள்ளது. இக்கொள்கை தொழிலாளர்களின் வர்க்க உணர்வு வளர்ச்சியடைய இடையூறாக உள்ளது, தொழிற்சங்க அணிகளின் பிளவை அதிகப்படுத்துகிறது. ஒரு சில நாடுகளில் தனிப்பட்ட சில பிரிவு தொழிலாளர்களையும் அலுவலக ஊழியர்களையும் தொழிற்சங்கங்களில் சேர்த்துக் கொள்வதில் பாரபட்சம் காட்டப்படுகிறது.

தொழிற்சங்கங்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான நிபந்தனைகளில் ஒன்று இவற்றின் ஸ்தாபன பலத்தை வலுப்படுத்துவதாகும் என்று கம்யூனிஸ்டுகள் கருதுகின்றனர். துறை ரீதியான தொழிற்சங்கங்களை ஏற்படுத்துமாறும் இவற்றை தேசிய மற்றும் அனைத்துலக தொழிற்சங்க

மையங்களுடன் சேர்க்குமாறும் இவர்கள் கோரு கின்றனர்.

ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தில் தொழிலாளி வர்க்கத்தின் கூட்டாளிகளான விவ சாயிகள், அறிவுத் துறையினர், நடுத்தர நகரப் பிரிவினர் ஆகியோரை அணிதிரட்டுவதற்கும் பெரும் முக்கியத்துவம் உண்டு. எனவேதான் கிராமப் பணி மீது, விவசாயத் தொழிலாளர் களின் தொழிற்சங்கங்களை வலுப்படுத்தும் பணி மீது கம்யூனிஸ்டுக் கட்சிகள் பெரும் கவனம் செலுத்துகின்றன. உதாரணமாக, இத்தாலிய கம்யூனிஸ்டுக் கட்சி விவசாயத் தொழிலாளர் களை அணிதிரட்டுவதன் மீது பெரும் கவனம் செலுத்தி வருவதால் இத்துறையில் கட்சிக்கு நல்ல செல்வாக்கு நிலவுகிறது.

இன்றைய கட்டத்தில் தொழிற்சங்க இயக் கத்தில் நடைபெறும் நிகழ்ச்சிப் போக்குகள் உடலுழைப்பு மற்றும் மூளையுழைப்புத் துறை யினரின் ஒற்றுமை வளர்ந்து வலுப்பட உதவு கின்றன. விஞ்ஞான தொழில்நுட்பப் புரட்சியின் சூழ்நிலையில் மூளையுழைப்புத் துறையினரின் சுரண்டல் வலுத்து வருவதானது ஒரு புறம் தொழிற்சங்கங்களில் அணிதிரளுமாறு இவர் களை ஊக்குவிக்கிறது, மறுபுறம் தம் உரிமை களைக் காப்பதற்காகத் தொழிலாளர்களின் தொழிற்சங்கங்களை நெருங்கி வருமாறு செய் கிறது.

உதாரணமாக, 1970இல் பிரிட்டனில் உள்ள கலப்புத் தொழில்துறை பொறியியலர்கள், தொழில்நுட்பப் பணியாளர்களின் சங்கமும், கட்



6–207

டமைப்பு பொறியியலர் சங்கமும் சமஷ்டி அடிப் படையில் இயந்திரக் கட்டுமானத் துறையினர் மற்றும் வார்ப்புத் துறையினர் சங்கத்துடன் இணைந்தன. இவ்வாறாக பிரிட்டிஷ் தொழில் துறையின் மிகப் பெரும் பிரிவில் உள்ள உழைப் பாளிகளின் ஐக்கியத் தொழிற்சங்கம் பிறந்தது. அலுவலக ஊழியர்கள் மற்றும் விஞ்ஞான தொழில்நுட்பப் பணியாளர்களின் தொழிற்சங் கங்கள் தேசிய தொழிற்சங்க மையமாகிய பிரிட் டிஷ் தொழிற்சங்கக் காங்கிரசில் சேர வேண்டு மென்று பிரிட்டிஷ் கம்யூனிஸ்டுகள் பாடுபடு கின்றனர்.

ஜெர்மன் கம்யூனிஸ்டுக் கட்சி உறுப்பினர் களின் சுறுசுறுப்பான நடவடிக்கைகளின் பய னாய் ஜெர்மன் சமஷ்டிக் குடியரசின் பல தொழிற்சங்கங்களில் தொழிலாளர்களும் அலு வலக ஊழியர்களும் ஒரே ஸ்தாபனத்தில் உள் ளனர். பிரான்சில் அரசு மற்றும் தனியார் நிறு வனங்களின் அலுவலக ஊழியர்களின் தொழிற் சங்கங்களில் கணிசமான பகுதி பொதுத் தொழி லாளர் சம்மேளனத்தில் உள்ளது.

பல கம்யூனிஸ்டுக் கட்சிகள் தொழிற்சங்கங் களில் தீவிரப் பங்காற்றுவதோடு கூட, உழைப் பாளிகளின் நலன்கள், உரிமைகளைப் பாது காக்கும் ஜனநாயக அமைப்புகளை வலுப்படுத்து வதன் மீதும் பெரும் கவனம் செலுத்துகின்றன. உதாரணமாக, பொதுத் தொழிலாளர் சம்மேள னத்தில் உள்ள பிரெஞ்சு கம்யூனிஸ்டுகள் தொழிற்சாலைக் கமிட்டிகளில் பெரும் பங்காற்று கின்றனர்; இது இவர்களின் செல்வாக்கு வளர

வும் கம்யூனிச எதிர்ப்பின் அடிப்படை குறையவும் உதவுகிறது. பிரெஞ்சு கம்யூனிஸ்டுகள் தொழிற் சங்க ஜனநாயகத்தைப் பின்பற்றுவதற்காகப் போராடுகின்றனர்; அதாவது தொழிற்சங்கங் களின் வேலைத்திட்டக் கோரிக்கைகளை முன் வைப்பதிலும் நடைமுறை நடவடிக்கைகளிலும் உறுப்பினர்கள் கட்டாயமாகப் பங்கேற்க வேண் டும் என்று இதற்குப் பொருள்.

பிரான்ஸ், இத்தாலி போன்ற நாடுகளில் கம்யூ னிஸ்டுகளின் முயற்சிகளின் பயனாய் பெரும் முற்போக்குத் தொழிற்சங்க ஸ்தாபனங்கள் இயங்குகின்றன. மூலதனத்திற்கு எதிரான போராட்டத்தின் எல்லா மட்டங்களிலும் தொழிற்சங்கங்களின் நடவடிக்கையை அதிகப் படுத்தும் செயல்வன்மை மிக்க முறைகளைப் பயன்படுத்த பிரெஞ்சு கம்யூனிஸ்டுகளும் இத்தா லிய கம்யூனிஸ்டுகளும் பெரும் கவனம் செலுத்து கின்றனர். இவர்கள் சமூக, அரசியல் பிரச்சினை களின் தீர்வில் தொழிற்சங்கங்கள் பங்கேற்கு மாறு செய்கின்றனர், உழைப்பாளிகளின் நலன் கள் சம்பந்தப்பட்ட விஷயங்களிலும் நாடு தழு விய அளவில் தொழிற்சங்க இயக்கத்தின் ஒற்றுமை சம்பந்தமான விஷயத்திலும் தொழிற் சங்க உரிமைகளை விரிவுபடுத்தப் பாடுபடு கின்றனர்.

அமெரிக்கத் தொழிற்சங்க இயக்கத்தில், வலதுசாரி தலைமையின் சமரசக் கொள்கையை ஒத்துக் கொள்ளாத சாதாரண உறுப்பினர்களின் பிரிவு ஒன்று தோன்றியுள்ளது. சாதாரண தொழிற்சங்க உறுப்பினர்களின் வெகுஜன இயக்

கம் என்பது, ''சமூக கூட்டுப் பங்காண்மைக்'' கொள்கை, அரசியலில் தொழிற்சங்கங்கள் பங் கேற்காமலிருக்கும் கொள்கை ஆகியவற்றிற்கு எதிராயும், தொழிற்சங்க ஜனநாயகத்திற்கு உயி ரூட்டி வளர்க்கவும், தொழிற்சங்கங்களை வர்க்கப் போராட்டத்தின் முன்னணிப் படையாக்கவும், தொழிற்சங்கங்களை முக்கிய சக்தியாக்கவும் நடக்கும் போராட்டத்தின் ஆரம் பம் என்று அமெரிக்க கம்யூனிஸ்டுக் கட்சி கருதுகிறது.

தொழிற்சங்க இயக்கத்திற்கும் உழைப்பாளி களின் வர்க்கப் போராட்டத்திற்கும் உத்வேகம் அளிக்க வல்ல ஒரு முற்போக்கு ஸ்தாபன மையத்தை ஏற்படுத்தும் வாய்ப்பை அமெரிக்க கம்யூனிஸ்டுகள் சாதாரண தொழிற்சங்க உறுப் பினர்களின் இயக்கத்தில் பார்க்கின்றனர். இந்த இயக்கத்தை விரிவுபடுத்தவும் இதை ஸ்தாபன, அரசியல், சித்தாந்த ரீதியாக வலுப்படுத்தவும் அமெரிக்க கம்யூனிஸ்டுகள் பாடுபடுகின்றனர்.

இன்று வர்க்கப் போராட்டத்தின் வளர்ச்சி மட்டம், தொழிற்சங்க ஸ்தாபனங்களுடனான பரஸ்பர உறவுகளின் விஷயத்தில் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் முன் பெரும் கோரிக்கைகளை முன் வைக்கிறது.

சமூக பொருளாதார மாற்றங்களின் வெற்றி யும் புரட்சி சாதனைகள் எவ்வளவு தூரம் உறுதியானவை என்பதும் தொழிற்சங்கங்களில் அணிதிரண்டுள்ள உழைப்பாளி மக்கள் திரளினர் பாட்டாளி வர்க்கத்தின் முன்னணிப் படைக்கு அளிக்கும் ஆதரவைப் பொறுத்தன என்று சர்வ

தேச தொழிலாளர் இயக்க அனுபவம் காட்டு கிறது.

நம் நாட்களில் உலகந் தழுவிய அளவிலும் பிராந்திய அளவிலும் நடைபெறும் பரவலான மக்கள் திரளினரின் நடவடிக்கைகள் அதிகரித் துள்ளன. முதலாளித்துவ நாடுகளில் வேலை யிடங்களைக் காப்பாற்றிக் கொள்ளவும் வாழ்க் கைத் தரத்தை உயர்த்தவும் நடைபெறும் போராட்டம் சமாதானத்தைப் பேணிக் காப் பதுடன் நெருக்கமாகத் தொடர்புடையது. ஏகா திபத்திய அரசுகள் ஆயுதப் போட்டிக்காக ஏராள மான நிதிகளை ஒதுக்குவதால்தான் பொருளா தாரத்தில் சிக்கல்கள் தோன்றுகின்றன, ஊதியம் குறைகிறது, வேலையிடங்கள் குறைக்கப்படுகின் றன என்பது தொழிற்சங்கங்கள், எல்லா ஜன நாயகச் சக்திகளுக்கும் நன்கு புரிகிறது.

சமாதானத்திற்காகவும் யுத்தத்திற்கு எதிரா யும் நடைபெறும் போராட்டம் பல நாடுகளில் ஜனநாயக வெகுஜன இயக்கங்களின் புதிய வடி வங்களைத் தோற்றுவித்துள்ளது.

தொழிற்துறை ரீதியாக வளர்ச்சியடைந்த முத லாளித்துவ நாடுகளில் உள்ள தொழிற்சங்கங் களும் ஜனநாயகச் சக்திகளும் வளர்முக நாடு களில் உள்ள உழைப்பாளிகளுடன் சேர்ந்து வாழ்க்கையை மேம்படுத்தவும் உலக சமாதானத் திற்காகவும் தீவிரமாகப் போராடுகின்றன. பல நாடுகளில் பல்வேறு விதமான ஸ்தாபனங்கள் பரவலான அடிப்படையில் தோற்றுவிக்கப்பட் டுள்ளன, இவை ஒடுக்கப்பட்ட மக்களினங்களின் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்துடன் தம்

ஒருமைப்பாட்டைத் தெரிவிக்கின்றன. பல ஸ்தல தொழிற்சங்கங்கள் இத்தகைய ஸ்தாபனங்களுக் குத் தம் ஆதரவைத் தெரிவிக்கின்றன. அரசியல், பொருளாதார சூழ்நிலைகளை மேம்படுத்துவதற் கான போராட்டத்தில் உலக தொழிற்சங்க இயக் கத்தின் வரம்புகளுக்குள் கூட்டு நடவடிக்கைகள் அதிகரித்துள்ளதைத் தொழிற்சங்கங்களின் சர்வ தேச மகாநாடுகள் காட்டுகின்றன. ஏகாதிபத் தியச் சக்திகள் செயற்கையான தடைகளை முன் வைக்கும் பொழுது ஒற்றுமையை வலுப்படுத்து வது அவ்வளவு எளிதல்ல. தொழிற்சங்கங்களும் வெகுஜன ஜனநாயக ஸ்தாபனங்களும் முழு ஜனநாயக பரஸ்பர மன ஒற்றுமையை ஏற்படுத்து வதற்கான வாய்ப்புகளைத் தேட வேண்டும்.

கோடானுகோடி உழைப்பாளிகள் தனிப்பட்ட முறையில் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள் ளும் பொழுது, பரஸ்பர பிரச்சினைகள், நம்பிக் கைகளுடன் அறிமுகமாகி வரும் பொழுது ஏகாதி பத்திய பிரசாரம் தன் பலத்தை இழக்கிறது. 1986இல் பெர்லினில் நடைபெற்ற 11ஆவது சர்வ தேச தொழிற்சங்கக் காங்கிரஸ் இதற்குச் சான் றாகும். சர்வதேச தொழிற்சங்க ஒற்றுமையை வலுப்படுத்துவதிலும், நல்ல வாழ்க்கைக்காகவும் சமாதானம், சமூக முன்னேற்றத்திற்காகவும் போராட ஜனநாயகச் சக்திகளை அணிதிரட்டு வதிலும் இது ஒரு முக்கிய நடவடிக்கையாக அமைந்தது.

வர்க்கப் போராட்டத்தின் சட்டபூர்வமான வடிவம் என்ற வகையில் மார்க்சியக் கட்சியின் புரட்சிகர நாடாளுமன்ற செயல்முறையின் அடிப் படைகளை வி. இ. லெனின்தான் முதன் முதலில் உருவாக்கி நடைமுறையில் பயன்படுத்தினார். மேற்கு ஐரோப்பிய சந்தர்ப்பவாதக் கட்சிகள் தம் நாடாளுமன்றப் பிரிவிற்குச் சுய முக்கியத்து வம் அளித்து, இதைக் கட்சிக்கு மேலாக வைத் தன; ஆனால் லெனினும் போல்ஷிவிக்குகளும் நாடாளுமன்ற நடவடிக்கையைக் கட்சிப் பணி யின் வடிவங்களில் ஒன்றாகத்தான் பார்த்தனர். ''நமக்கு ஒரேயொரு ஐக்கிய தொழிலாளர் இயக் கம், பாட்டாளிகளின் வர்க்கப் போராட்டம் மட்டுமே உண்டு. நாடாளுமன்ற நடவடிக்கை உட்பட மற்றெல்லா வடிவங்களையும் நாம் முழு மையாக இப்போராட்டத்திற்கு உட்படுத்தியாக வேண்டும்.''* நாடாளுமன்றத்தில் போல்ஷிவிக்கு களின் நடவடிக்கையின் சிறப்பு அம்சம் என்ன வெனில் நாடாளுமன்றக் கட்சிக் குழு கட்சித் தலைமைக்குக் கீழ்ப்பட்டு இயங்கியது என்பத தாகும்.

''இடதுசாரி'' கம்யூனிசம் — இளம் பருவக்

* V. I. Lenin, *Collected Works*, vol. 12, p. 485.

கோளாறு என்ற நூலில் வி. இ. லெனின் நாடாளுமன்றத்தில் கம்யூனிஸ்டுகளின் பங்கேற்பை இரண்டு பக்கங்களிலிருந்து அணுகுகிறார். ஒரு புறம் இதைச் சட்டபூர்வமான வர்க்கப் போராட்டத்தின் வடிவமாயும் மறுபுறம் மக்கள் திரளினர் மத்தியில் கட்சியின் அரசியல் பணியின் வடிவமாயும் கருதுகிறார். பூர்ஷ்வா நாடாளுமன்றங்களில் பங்கேற்க வேண்டாம் என்று "இடதுசாரி" கம்யூனிஸ்டுகள் கூறுவது எவ்வளவு தவறானது, புரட்சிக்கு எவ்வளவு ஆபத்தானது என்று லெனின் இந்நூலில் விமர்சிக்கிறார்.

ஜெர்மனி, ஹாலந்து, பிரிட்டன், பிரான்சில் உள்ள "இடதுசாரிகள்" நாடாளுமன்றத்தில் பங்கேற்பது என்பது ஏதோ "வரலாற்று வழியில் காலாவதியாகி விட்டது"* என்று காரணம் கூறி தாம் நாடாளுமன்றங்களில் பங்கேற்காதிருப்பதை நியாயப்படுத்த முயன்றனர். இப்படிப்பட்ட கருத்துகள் எவ்வளவு தவறானவை என்று லெனின் எண்ணற்ற உதாரணங்களில் மெய்ப்பித்தார். பூர்ஷ்வா நாடாளுமன்றத்தின் உண்மையான வர்க்கச் சாரத்தை மக்கள் திரளினரே உணர்ந்து, உண்மையில் இது யாருக்குச் சேவை புரிகிறது, யாரைப் பாதுகாக்கிறது என்று நடைமுறையில் அறிந்ததும்தான் பூர்ஷ்வா நாடாளுமன்றவாதம் அரசியல் ரீதியிலும் நடைமுறையிலும் மறையும்.

---

* வி. இ. லெனின், தேர்வு நூல்கள், தொகுதி 10, பக்கம் 243.

பல முதலாளித்துவ நாடுகளில் குட்டி பூர்ஷ்வாப் பிரிவினர் நாடாளுமன்றத்தை நம்புகின்றனர், இது தம் நலன்களைக் காக்குமென்று எதிர்பார்க்கின்றனர், தம் நம்பிக்கைகளை இதனுடன் தொடர்புபடுத்துகின்றனர். தொழிலாளி வர்க்கத்தின் பின்தங்கிய பகுதிகளும் நாடாளுமன்றம் என்பது பூர்ஷ்வாக்களின் கரங்களில் உள்ள ஒரு அரசியல் ஏமாற்றுக் கருவி என்பதைப் புரிந்து கொள்ளவில்லை. "உண்மையிலேயே பின் தங்கிய, பூர்ஷ்வாக்களால் ஏமாற்றப்பட்ட மக்கள் திரளினரின் முன் நாடாளுமன்றத்தின் உண்மையான தன்மையை எப்படி விளக்கப் போகின்றீர்கள்? அதில் நீங்கள் இடம் பெறாவிடில் ஒரு குறிப்பிட்ட நாடாளுமன்ற தகிடுதத்தத்தை எப்படி அம்பலப்படுத்தப் போகின்றீர்கள்? நீங்கள் நாடாளுமன்றத்திற்கு வெளியிலிருந்தால் ஒரு குறிப்பிட்ட கட்சியின் நிலையை எப்படி விளக்கப் போகின்றீர்கள்? நீங்கள் மார்க்சியவாதிகள் என்றால், முதலாளித்துவ சமுதாயத்தில் வர்க்கங்களுக்கு இடையிலான பரஸ்பர உறவுகளும் கட்சிகளுக்கு இடையிலான பரஸ்பர உறவுகளும் நெருக்கமாகத் தொடர்புடையவை என்பதை ஒத்துக் கொண்டாக வேண்டும். நான் மீண்டும் கேட்கிறேன், நீங்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களாக இல்லாவிடில், நீங்கள் நாடாளுமன்ற நடவடிக்கையை மறுத்தால் இதையெல்லாம் எப்படி விளக்கப் போகின்றீர்கள்? தொழிலாளி வர்க்கம், விவசாயிகள், சிறு ஊழியர்கள் ஆகிய பரவலான பிரிவினருக்கு தம் சொந்த அனுபவத்தில் நம்பிக்கை வராதிருந்தால் வேறெந்த வாதத்

தாலும் அவர்களை நம்ப வைத்திருக்க முடியாது என்று ருஷ்யப் புரட்சியின் வரலாறு தெட்டத் தெளிவாகக் காட்டுகிறது.'' *

நாடாளுமன்றத்தில் ஜனநாயக மாற்றங்களைச் செய்ய வல்ல சக்திகள் தொழிலாளி வர்க்கத்தின் வசம் இல்லாமல், நாடாளுமன்றம் முழுக்க முழுக்க பூர்ஷ்வாக்களின் கரங்களில் இருக்கும் வரை கம்யூனிஸ்டுகள் இதில் பங்கேற்க வேண்டும். ''இடதுசாரி'' கம்யூனிஸ்டுகளைப் பார்த்து லெனின் கூறினார்: ''முதலாளித்துவ நாடாளுமன்றத்தையும் இதர வகையான பிற்போக்கு நிறுவனங்கள் அனைத்தையும் அகற்றிவிடும் பலம் உங்களிடம் இல்லாத வரை, அவற்றில் நீங்கள் வேலை செய்தே **ஆக வேண்டும்; ஏனெனில்** பாதிரிமார்களால் ஏமாற்றப்பட்டும், கிராம வாழ்க்கை முறையின் பிற்பட்ட நிலைமைகளால் முடக்கப்பட்டும் வரும் தொழிலாளர்களை இவற்றில்தான் இன்னமும் நீங்கள் காண்பீர்கள்....'' * * இத்தகைய சூழ்நிலையில் கம்யூனிஸ்டுகள் தேர்தல் பிரசாரங்களிலும் தேர்தல்களிலும் கலந்து கொண்டு கம்யூனிஸ்டுகளை நாடாளுமன்ற உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுத்து, சுறுசுறுப்பான நாடாளுமன்றக் குழுவை ஏற்படுத்த முயல வேண்டும். இக்குழுவினர் ''முதலாளித்துவ நாடாளுமன்ற வெற்றுப் பணிகளில் ஈடுபடாது வெகுஜனங்களுக்கிடையி

---

* V. I. Lenin, *Collected Works*, vol. 31, p. 255.

* * **வி. இ. லெனின், தேர்வு நூல்கள்,** தொகுதி 10, பக்கம் 247.

லான பிரசாரம், கிளர்ச்சி, நிறுவன ஒழுங் கமைப்பு ஆகிய அவசர அவசியப் பணிகளில் கவனம் செலுத்தும்படி''* லெனின் கம்யூனிஸ்டு களுக்கு ஆலோசனை கூறினார்.

முதலாளித்துவத்தில் ஜனநாயகச் சுதந்திரங் களை மக்களை ஏமாற்றும் கருவியாக பூர்ஷ்வா பயன்படுத்தும் நிலைமை மாறி, இவற்றை அர சியல் அறிவொளியூட்டும் கருவியாக்க வேண்டும்; இதற்கு ஜனநாயகச் சுதந்திரங்களை அதிகபட் சம் பயன்படுத்துவதுதான் கம்யூனிஸ்டுகளின் கடமை என்றார் லெனின். லெனின் கம்யூனிஸ்டு களுக்குப் பின்வருமாறு அறிவுரை கூறினார்: ''நீங்கள் ஒரு புதிய சமுதாயத்தைச் சமைக்க விரும்புகிறீர்கள், ஆயினும் திடநம்பிக்கையும் பற்றுறுதியும் கொண்ட வீரமிக்க கம்யூனிஸ்டு களாலான சிறந்த நாடாளுமன்றக் குழு ஒன் றினைப் பிற்போக்கு நாடாளுமன்றத்தில் நிறுவு வதில் உள்ள சிரமங்களைக் கண்டு அஞ்சுகிறீர் கள்! இது சிறுபிள்ளைத்தனம் அல்லவா?''** தொடர்ந்து லெனின் கம்யூனிஸ்டுகளுக்குப் பின் வருமாறு ஆலோசனை கூறினார்: ''பழைய சோஷலிச, தொழிற்சங்கவாத, சிண்டிக்கலிஸ்டு, நாடாளுமன்றப் பணி முறையை, ஒரு புதிய முறையாக, கம்யூனிஸ்டுப் பணி முறையாக வழி நெடுகிலும், வாழ்க்கையின் எல்லாத் துறைகளி லும் மாற்ற வேண்டும்.... மேற்கு ஐரோப்பா விலும் அமெரிக்காவிலும் கம்யூனிஸ்டுகள் வழக்

---

* அதே நூல், பக்கங்கள் 247, 339.

** அதே நூல், பக்கம் 257.

கத்துக்கு மாறான, சந்தர்ப்பவாதமல்லாத, பதவி வேட்டையாக அமையாத ஒரு புதிய ரக நாடாளுமன்ற முறையைத் தோற்றுவிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும்....'' *

பூர்ஷ்வா நாடாளுமன்றத்தில் பங்கேற்பதைச் சட்டபூர்வமான வர்க்கப் போராட்ட வடிவங்களில் ஒன்றாக கம்யூனிஸ்டுகள் கருத வேண்டும் என்றார் லெனின். எல்லா கம்யூனிஸ்டுக் கட்சிகளும் புரட்சிகர நாடாளுமன்ற செயல்முறையைக் கிரகித்தாக வேண்டும் என்று லெனின் வலியுறுத்தினார். பூர்ஷ்வா ஜனநாயகத்தின் மக்கள் விரோதத் தன்மையையும் பிற்போக்கின் சதிகளையும் அம்பலப்படுத்தும் பொருட்டும், மக்கள் திரளினர் மத்தியில் உள்ள அரசியல் சாசன மாயைகளை அகற்றவும், நாடாளுமன்ற சீர் திருத்தவாதத் தலைவர்களை சமரசமின்றி, ஈவிரக்கமின்றி கடுமையாகச் சாடவும், இத்தலைவர்கள் தவிர்க்க இயலாதவாறு திவாலாவதைத் துரிதப்படுத்தவும், பரவலான மக்கள் திரளினருக்கு ''கம்யூனிசத் திசையிலே'' ** அரசியல் கல்வி புகட்டவும் உறுதியான போராட்டத்தை, எந்த இடர்ப்பாடுகளையும் கண்டு நின்று விடாத போராட்டத்தை நடத்தும் நோக்கத்தோடு கம்யூனிஸ்டுகள் நாடாளுமன்ற உறுப்பினர்களாக வேண்டும் என்றார் லெனின்.

கம்யூனிஸ்டு இயக்கத்தின் வளர்ச்சிப் போக்கில் நாடாளுமன்ற நடவடிக்கையின் முக்கியத்து

---

* அதே நூல், பக்கங்கள் 313, 314.

** அதே நூல், பக்கம் 308.

வமும் அவசியமும் நிலைபெற்றன. நாடாளுமன் றத்தின் மூலம் மக்கள் திரளினருடன் தொடர் பேற்படுத்திக் கொள்ளவும் இவர்களின் நலன் களைப் பாதுகாக்கவும், புரட்சி லட்சியங்களுக் காக இவர்களை அணிதிரட்டவும் கம்யூனிஸ்டு களுக்குப் பெரும் வாய்ப்பேற்பட்டது. எந்த நாடு களில் எல்லாம் மக்கள் முன்னணி அரசாங்கங்கள் ஏற்படுத்தப்பட்டனவோ அங்கெல்லாம் நாடாளு மன்ற கம்யூனிஸ்டுக் கட்சிப் பிரிவுகள் இந்த அரசாங்கங்களுக்கு ஆதரவளித்தன, ஜனநாயகத் திற்காகவும், யுத்தம், பாசிசத்திற்கு எதிராயும் நடந்த போராட்டத்திற்கு ஆதரவளித்தன (பிரான்ஸ், இத்தாலி, சிலி).

நாடாளுமன்றத்தில் கம்யூனிஸ்டுகள் பங்கேற்ப தால் பரவலான அளவில் முக்கியமான அரசியல் பணியாற்ற கம்யூனிஸ்டுக் கட்சிகளுக்கு வாய்ப் பேற்படுகிறது. பிரான்ஸ், இத்தாலி, பின்லாந்து, இந்தியா, ஸ்ரீலங்கா, ஜப்பான், இன்னும் பிற நாடுகளின் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் நடவடிக் கைகள் இதற்கு சிறந்த உதாரணமாகும்; இந்த நாடுகளின் நாடாளுமன்றங்களில் இக்கட்சிக் குழுக்கள் நன்கு செயல்படுகின்றன.

உலக கம்யூனிஸ்டு இயக்கத்தின் புரட்சிகர நாடாளுமன்றவாத சர்வதேசிய செயல்முறை சம்பந்தமான பின்வரும் முக்கிய கோட்பாடு களை லெனின் உருவாக்கி ஆதாரப்படுத்தினார்:

முதலாவதாக, நாடாளுமன்றத்தில் கம்யூ னிஸ்டுகளின் பணிக்கும் நாடாளுமன்றத்திற்கு வெளியில் உழைப்பாளி திரளினரின் புரட்சி இயக் கத்திற்கும் இடையிலான பிரிக்க இயலாத்

தொடர்பு; வர்க்க எதிரிகளைத் தோற்கடித்து, அடிப்படை ஜனநாயக மாற்றங்களின் நிறைவேற்றத்தைத் துரிதப்படுத்த சட்டபூர்வமான மற்றும் தலைமறைவு பாட்டாளி வர்க்கப் போராட்ட வடிவங்கள் அனைத்தையும் பயன் படுத்தல்;

இரண்டாவதாக, நாடாளுமன்ற கம்யூனிஸ்டு உறுப்பினர்களுக்கும் தொழிலாளர்கள், அந்தந்த தொகுதி உழைப்பாளிகளுக்கும் மற்றும் தொழிற் சங்கங்கள், இளைஞர் ஸ்தாபனங்கள், மாதர் அமைப்புகள் போன்ற சமூக ஸ்தாபனங்களுக்கும் இடையில் நெருங்கியத் தொடர்பு நிலவ வேண் டும்;

மூன்றாவதாக, நாடாளுமன்ற கம்யூனிஸ்டுக் கட்சிக் குழுக்களை ஏற்படுத்தி இவற்றின் நடவடிக்கையைக் கட்சியின் மத்தியக் கமிட்டி கறாராக கண்காணிக்க வேண்டும், கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கட்சிக் கட்டுப் பாட்டிலிருந்து சற்றும் பிறழாமல் நடக்க வேண் டும்;

நான்காவதாக, வர்க்க எதிரிகளை அம்பலப் படுத்தவும், சட்ட நகல்களின் விவாதங்களில் கோட்பாட்டு ரீதியான, கம்யூனிசக் கொள் கையைப் பின்பற்றவும், நாடாளுமன்ற கட்சிப் பிரிவிற்காகக் கட்சி தீட்டிய வேலைத்திட்டத்தின் அடிப்படையில் பொருளாதார, அரசியல் முன் மொழிவுகளை (இவை மக்கள் திரளினரின் கோரிக்கைகளைப் பிரதிபலிக்கும், சமுதாய வாழ்க்கையில் கம்யூனிஸ்டுகளின் செல்வாக்கு பெருக வழிகோலும்) வெளியிடவும் நாடாளு

மன்ற மேடையை கம்யூனிஸ்டு உறுப்பினர்கள் சகல விதங்களிலும் பயன்படுத்த வேண்டும்;

ஐந்தாவதாக, நகராட்சி மன்றங்களில் கம்யூனிஸ்டு உறுப்பினர்கள் இயங்க வேண்டும்.

புரட்சிக்குத் தயாராகும் காலகட்டத்தில் மட்டுமின்றி புரட்சியின் போதும் மக்கள் நலன் கருதி சட்டங்களைச் செயல்படுத்த தொழிலாளி வர்க்கம் பூர்ஷ்வா நாடாளுமன்றத்தைப் பயன்படுத்தும் வாய்ப்பு பற்றிய முடிவு இன்றைய சூழ்நிலையில் மார்க்சிய-லெனினியத் தத்துவத்தின் வளர்ச்சியில் ஒரு முக்கிய அம்சமாக அமைந்தது. 1957ஆம் ஆண்டு நடைபெற்ற சோஷலிச நாடுகளின் கம்யூனிஸ்டு, தொழிலாளர் கட்சிகளின் பிரதிநிதிகளின் கூட்டத்தில் ஏற்கப்பட்ட பிரகடனத்தில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டது: ''மக்களுடைய பெரும்பான்மையை ஆதாரமாகக் கொண்டு, முதலாளிகள், நிலச்சுவான்தார்களுடனான சமரசக் கொள்கையைக் கைவிட இயலா சந்தர்ப்பவாதச் சக்திகளுக்கு உறுதியான பதிலடி தந்து, பிற்போக்கு, மக்கள் விரோதச் சக்திகளை முறியடித்து, நாடாளுமன்றத்தில் உறுதியான பெரும்பான்மையை வென்று, நாடாளுமன்றத்தை பூர்ஷ்வா வர்க்க நலன்களுக்குச் சேவை செய்யும் கருவியிலிருந்து உழைக்கும் மக்களுக்குச் சேவை புரியும் கருவியாக மாற்றும் வாய்ப்பு தொழிலாளி வர்க்கத்திற்கு உள்ளது....''

தொழிலாளி வர்க்கம் அரசியல் போராட்டத்தில் நாடாளுமன்றத்தை வெற்றிகரமாகப் பயன்படுத்தப் பின்வரும் அம்சங்கள் தேவை:

முதலில், நாடாளுமன்றம் நாட்டைப் பிரதி

பலிக்கும் ''கண்ணாடியாக'' மாற கம்யூனிஸ்டுக் கட்சிகள் போராட வேண்டும்; அதாவது நாட்டு வாழ்வில் தாம் ஆற்றும் பங்கிற்கேற்ப தொழிலாளி வர்க்கமும் உழைப்பாளி மக்கள் திரளினரும் பிரதிநிதித்துவப்படுத்தும் ஜனநாயக உறுப்பாக நாடாளுமன்றம் மாற வேண்டும்;

இரண்டாவதாக, மக்கள் திரளினரின் பரவலான இயக்கம் நிலவ வேண்டும்; இது இடதுசாரி நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீதும் (சமூக-ஜனநாயகவாதிகள், சோஷலிஸ்டுகள் போன்றோர்) மொத்தமாக நாடாளுமன்றத்தின் மீதும் தாக்கம் செலுத்த வல்லதாய் இருக்க வேண்டும்;

மூன்றாவதாக, கம்யூனிஸ்டுக் கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் ஜனநாயகம், சோஷலிசத்தைக் குறிக்கோளாகக் கொண்ட மற்ற தொழிலாளி வர்க்க, உழைப்பாளிகள் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் ஒற்றுமை நிலவ வேண்டும். இப்படிப்பட்ட செயல்முறை நாடாளுமன்றத்தில் உழைப்பாளர் பிரதிநிதிகளின் செல்வாக்கு வளர உதவும், கம்யூனிஸ்டுக் கட்சிகளுக்கும், சோஷலிச மாற்றங்கள் மற்றும் சமாதானக் கொள்கைக்கு எதிர்ப்புத் தெரிவிக்காத அரசியல் சக்திகளுக்கும் இடையில் ஒத்துழைப்பு நிலவுவதை எளிதாக்கும்.

நாடாளுமன்றம் உண்மையில் மக்களின் சித்தத்தைப் பிரதிபலித்தால்தான், இது தன் செயற்பாட்டில் தொழிலாளி வர்க்கம் மற்றும் உழைப்பாளிகளின் வெகுஜன ஸ்தாபனங்களை ஆதாரமாகக் கொண்டு இயங்கினால்தான் இதனால்

மக்களின் சித்தத்தை நிறைவேற்ற முடியும் என்று **''இடதுசாரி'' கம்யூனிசம் — இளம் பருவக் கோளாறு** என்ற நூலில் லெனின் எழுதினார். தொழிலாளர் இயக்கத்தின் சர்வதேச அனுபவம் இதை மெய்ப்பிக்கிறது. இதன் தொடர்பில், உழைப்பாளிகளின் பரவலான வெகுஜன ஸ்தாபனங்களைத் தோற்றுவிக்க வேண்டியது முதற் கடமையாகும். நாடாளுமன்ற நடவடிக்கை, நாடாளுமன்றத்திற்கு வெளியில் நடக்கும் வெகுஜன நடவடிக்கை ஆகிய இரண்டு போராட்ட வடிவங்களையும் இயக்கவியல் ரீதியாக இணைத்தால்தான் எல்லா மட்டங்களிலும் உள்ள பிரதிநிதித்துவ நிறுவனங்களை உழைப்பாளிகளின் போராட்டத்துடனும், இவர்களுடைய ஸ்தாபனங்களின் நடவடிக்கைகளுடனும் நெருக்கமாக இணைக்க முடியும்.

நாடாளுமன்ற உரிமைகளைப் பறிக்க, குறிப்பாக எங்கெல்லாம் கம்யூனிஸ்டுகள், மற்ற இடதுசாரி சக்திகளின் செல்வாக்கு அதிகமோ அங்கெல்லாம் இப்படிச் செய்ய பூர்ஷ்வா வர்க்கம் முயலுகிறது. ஆட்சியதிகாரம் முழுவதையும் தம் கரங்களில் வைத்திருக்கவும் நிர்வாக ஆட்சியதிகாரத்தைச் சட்டமியற்றும் உறுப்புகளின் கட்டுப்பாட்டிலிருந்து அகற்றவும் ஏகபோக முதலாளித்துவத்தின் ஆளும் வட்டங்கள் முயலுகின்றன.

நாடாளுமன்றத்தின் பங்கை விரிவுபடுத்த வேண்டும், எல்லா அரசியல், சமூக, பொருளாதார பிரச்சினைகளையும் சுயமாகத் தீர்க்க வல்ல ஜனநாயக உறுப்பாக இதை மாற்ற வேண்டும் என்று கம்யூனிஸ்டுக் கட்சிகள் போராடுகின்றன.

நாடாளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படும் கம்யூனிஸ்டுகள் நாடாளுமன்றக் குழுவை ஏற்படுத்துகின்றனர்; இது நாடாளுமன்றத்தில் கட்சியின் கூட்டுப் பிரதிநிதியாகும். கம்யூனிஸ்டு நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பெரும் பணி எதிர்நோக்கியிருக்கிறது; இதை இவர்கள் முக்கியமான கட்சிக் கடமையாகக் கருதுகின்றனர். சமூக உறவுகள், உழைப்பாளிகளின் ஜனநாயக உரிமைகள் பற்றிய சட்டங்கள், பொருளாதார பிரச்சினைகள், மக்கள் திரளினரின் தேவைகள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் ஆகியவற்றை இவர்கள் நாடாளுமன்றத்தின் முன் விவாதத்திற்கு வைக்கின்றனர். இப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் பூர்வாங்க கட்டத்தில் வெகுஜன ஸ்தாபனங்களை, குறிப்பாகத் தொழிற்சங்கங்களை ஈடுபடுத்துகின்றனர், இதன் மூலம் உழைப்பாளிகளின் நலன்கள் கவனத்தில் கொள்ளப்படுகின்றன. சில சந்தர்ப்பங்களில் நாடாளுமன்றக் குழுக்களின் நடவடிக்கையோடு மக்கள் திரளினரின் போராட்டமும் சேரும் பொழுது நாடாளுமன்றங்கள் முற்போக்குச் சட்டங்களை நிறைவேற்றும்படி நிர்ப்பந்திக்கப்படுகின்றன.

சட்டங்களை உருவாக்குவதில் பரவலான மக்கள் திரளினரை ஈடுபடுத்துவதன் மூலம், தொழிலாளி வர்க்கம் ஆட்சியைப் பிடித்ததும் இவர்கள் புரட்சிக் கொள்கையைப் பின்பற்ற கம்யூனிஸ்டுகள் இவர்களைப் பயிற்றுவிக்கின்றனர். கமிஷன்களில் செயல்படும் பொழுது பூர்ஷ்வா சமுதாயத்தின் குறைபாடுகளை அம்பலப்படுத்தும் திட்டவட்டமான விவரங்களை அறிய முடிகிறது.

அரசாங்கத்தின் நடவடிக்கைகள், அதன் திட்டங் களைப் பற்றிய கேள்விகளைக் கேட்பது கம்யூ னிஸ்டுகளின் நாடாளுமன்ற நடவடிக்கையில் ஒரு முக்கிய அம்சமாகும். இக்கேள்விகளுக்கு அமைச் சர்களோ, அரசாங்கமோ பகிரங்கமாகப் பதில் சொல்லியாக வேண்டும். கம்யூனிஸ்டு நாடாளு மன்ற உறுப்பினர்கள் சபையின் விவாதங்களில் பங்கேற்கின்றனர், இவர்களின் உரைகள் பத்திரி கைகளில் பிரசுரமாகி பரவலான உழைப்பாளி களைச் சென்றடைகின்றன. இவர்கள் முதலா ளித்துவ அமைப்பை விமர்சித்து சோஷலிச லட்சியங்களைப் பிரசாரம் செய்கின்றனர். இது மக்கள் மத்தியில் பரவலான எதிரொலியை ஏற் படுத்துகிறது. நாடாளுமன்றத்திற்கு வெளியே பரவலான மக்கள் திரளினருடன் கம்யூனிஸ்டு களுக்கு எவ்வளவுக்கெவ்வளவு நெருங்கிய தொடர்பு நிலவுகிறதோ அவ்வளவுக்கவ்வளவு நாடாளுமன்றத்தில் கம்யூனிஸ்டு உறுப்பினர் களின் பணி வெற்றிகரமாயிருக்கும்.

ஸ்தல சுயநிர்வாக உறுப்புகள் (நகராட்சி மன் றங்கள்) பூர்ஷ்வா அரசு அமைப்பில் கீழ்மட்ட உறுப்புகளாகும்; இவை மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றன. ஸ்தல சுயநிர்வாக உறுப்புகளில் கம்யூனிஸ்டுகளின் அன்றாடப் பணி, பல்வேறு மக்கள் பிரிவினரின் தேவைகளை ஆழ்ந்து பயிலவும் இவர்களுடன் நிரந்தரத் தொடர்பேற்படுத்திக் கொள்ளவும் வாய்ப்பளிக் கிறது, தம் வேலைத்திட்டத்தின் செயல்வன் மையை வெளிப்படுத்த உதவுகிறது.

கம்யூனிஸ்டுகள் உள்ளூர் சமூக பொருளாதார

பிரச்சினைகளை அரசியல் போராட்டத்திற்கான மேடையாக மாற்ற முயலுகின்றனர். பிரான்ஸ், இத்தாலி, இன்னும் சில நாடுகளில் கம்யூனிஸ்டுகள் நகராட்சி மன்றங்களின் நடவடிக்கைகளை விரிவுபடுத்துவதில் வெற்றியடைந்துள்ளனர். நகராட்சி மன்றங்களில் கம்யூனிஸ்டுகளுடைய பணியின் முக்கியக் கோட்பாடு மக்கள் திரளினரை நிரந்தர அடிப்படையாகக் கொண்டு இயங்குவதும் உழைப்பாளிகளின் சுயபலத்தை வளர்ப்பதுமாகும். கம்யூனிஸ்டுகள் நகராட்சி மன்றங்களில் தம் முன்மொழிவுகளைக் கட்சிக்கருத்துகளைப் பிரசாரம் செய்வதுடன் தொடர்புபடுத்துகின்றனர், இவற்றைத் தொழிற்சாலைக் கூட்டங்களிலும் வெகுஜன ஸ்தாபனங்களிலும் விவாதத்திற்கு வைக்கின்றனர், வட்டார மக்களுடன் கலந்தாலோசிக்கின்றனர். நகராட்சி மன்ற நடவடிக்கைகளில் ஒளிவுமறைவு இருக்கக்கூடாது என்பதற்காக கம்யூனிஸ்டுகள் போராடுகின்றனர், வாக்காளர்கள் இவற்றைக் கண்காணிக்க ஏற்பாடு செய்கின்றனர். சமீப ஆண்டுகளில் ஸ்பெயின், போர்ச்சுகல், பின்லாந்து, ஜப்பான், இந்தியா, இன்னும் சில நாடுகளில் ஸ்தல ஆட்சி உறுப்புகளில் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் நிலை கணிசமாக வலுப்பட்டுள்ளது.

உடனடிப் பிரச்சினைகளின் தீர்வில் உழைப்பாளிகளை அதிகபட்சம் ஈடுபடுத்துவதுதான் நகராட்சி மன்றங்களில் கம்யூனிஸ்டுகளின் நடவடிக்கையின் கோட்பாடாகும். ஸ்தல சுயநிர்வாக உறுப்புகளில் சமூக செயல்திட்டங்கள், ஏழைகளின் வரிச் சுமையைக் குறைத்து பணக்காரர்

களின் மீதான வரிகளைக் கூட்டுவது, வீடு கட்டுமானம், பொதுப் போக்குவரத்து வளர்ச்சி, பள்ளி கட்டுமானம், நர்சரிகளின் வளர்ச்சி, கலாசார மையங்கள், வேலைநிறுத்தம் செய்பவர்களுக்கு உதவித் தொகை ஒதுக்குதல், தொழில் நிறுவனங்களில் பொது உணவு விடுதிகளை ஏற்படுத்தல் ஆகியவற்றின் மீது கம்யூனிஸ்டுகள் பெரும் கவனம் செலுத்துகின்றனர்.

எங்கெல்லாம் நகராட்சி மன்றங்களில் கம்யூனிஸ்டுக் கட்சிகளுக்குப் போதுமான செல்வாக்கு உள்ளதோ அங்கெல்லாம் இவை மற்ற ஜனநாயக சக்திகளுடன் சேர்ந்து ஸ்தல சுயநிர்வாக உரிமைகளை விரிவுபடுத்தப் பாடுபடுகின்றன.

கம்யூனிஸ்டுகளின் தலைமையிலான நகராட்சி மன்றங்கள் சோஷலிச நாடுகளுடன் பன்முகத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ள முயலுகின்றன, சோதர நகரங்களுடன் நல்லுறவுகளை நிலைநாட்டுகின்றன, சோவியத் நாட்டுடனான நட்புறவுக் கழகங்களில் பங்கேற்கின்றன, தூதுக் குழுக்களைப் பரிமாறிக் கொள்கின்றன, தம் நடவடிக்கையில் சோஷலிச நாடுகளில் உள்ள நகரக் கவுன்சில்களின் அனுபவத்தைப் பயன்படுத்திக் கொள்கின்றன.

கம்யூனிஸ்டுக் கட்சிகள் தேர்தல் பிரசாரங்களுக்குப் பெரும் முக்கியத்துவம் அளிக்கின்றன. பொதுக் கூட்டங்களில் பேசும் பொழுதும் வானொலி, தொலைக் காட்சியில் உரையாற்றும் பொழுதும் பத்திரிகைகளில் எழுதும் பொழுதும் கம்யூனிஸ்டுக் கட்சி வேட்பாளர்கள் தம் கட்சியின் பொது அரசியல் கொள்கையின் அடிப்படை

யில் தீட்டப்பட்ட வேலைத்திட்டங்களை முன் வைக்கின்றனர். முக்கிய அரசியல் பிரச்சினை கள் குறித்து உரையாற்றுவதன் மூலம் இவர் கள் மக்கள் திரளினருடனான தொடர்புகளை வலுப்படுத்துகின்றனர், பூர்ஷ்வா அரசியல் செல் வாக்கிலிருந்து மக்களை விடுவிக்க உதவுகின் றனர். மக்களை அரசியல் ரீதியில் சுறுசுறுப்பான வர்களாக ஆக்கும் போராட்டத்தில் கம்யூனிஸ்டு கள் பெரும் விளக்கப் பணியாற்றுகின்றனர், பட்டி தொட்டிகளுக்கெல்லாம் சென்று எல்லா பிரிவு மக்களையும் தம் செல்வாக்கின் கீழ் கொண்டு வர முயலுகின்றனர்.

கம்யூனிஸ்டுகள் தேர்தல் பிரசாரங்களுக்குப் பரிபூரணமாகத் தம்மைத் தயார்படுத்திக் கொள் கின்றனர். கம்யூனிஸ்டுக் கட்சிகளின் தேர்தல் மேடையானது வர்க்கப் போராட்டத்தின் தீவிரம், தேசிய சிறப்பியல்புகள், உடனடிக் கட மைகள் ஆகியவற்றைப் பொறுத்தது. சமூக ரீதியில் பார்த்தால் வேலைத்திட்டங்கள் பல் வேறு பிரிவு மக்களின் நலன்களைப் பிரதிபலிக் கின்றன.

தேர்தல் பிரசாரங்களில் பங்கேற்பதானது கம் யூனிஸ்டுக் கட்சிகள் மக்கள் மத்தியில் தம் செல் வாக்கைச் சரிபார்க்க வாய்ப்பளிக்கிறது, மக்கள் மத்தியில் தம் அரசியல் மற்றும் ஸ்தாபனப் பணியை மேம்படுத்தும் வழிகளை முடிவு செய்ய உதவுகிறது, தேர்தல் முடிவுகளை வைத்து வாக் காளர்களில் எவ்வளவு பேர் கம்யூனிஸ்டுகளின் கொள்கையை ஆதரிக்கின்றனர், நாட்டின் பல் வேறு பகுதிகளிலும் பல்வேறு சமூகப் பிரிவின

ரிடையேயும் கட்சிக்கு எவ்வளவு செல்வாக்கு உள்ளது என்று முடிவு செய்யலாம்.

கம்யூனிஸ்டுக் கட்சிகள் நாடாளுமன்றத்தில் அதிகபட்ச இடங்களைப் பெற போராடுகின்றன, ஏனெனில் நாடாளுமன்றத்தில் கம்யூனிஸ்டுகளால் எவ்வளவு சிறப்பாகச் செயல்பட முடியுமென்பது இந்த எண்ணிக்கையையும் பொறுத்தது. 1978இல் பிரெஞ்சு நாடாளுமன்றத்திற்கு 80 கம்யூனிஸ்டு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டனர். இவர்கள் ஒரு சுறுசுறுப்பான நாடாளுமன்றக் குழுவாக இயங்கினர்; 1981இல் இடதுசாரிக் கட்சிகளின் வெற்றியில் இக்குழு கணிசமான பங்காற்றியது.

ஆனால் முதலாளித்துவ நாடுகளில் நாடாளுமன்றத்தில் கம்யூனிஸ்டுகளின் செயல்பாட்டிற்கு இடர்க்கண் விளைவிக்கும் பல மட்டுப்பாடுகள் உள்ளன. உதாரணமாக ஸ்வீடனில் உள்ள ஒரு சட்டத்தின்படி, நாடு தழுவிய அளவில் 4% க்கு குறைவான வாக்குகளைப் பெறும் கட்சிக்கு நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் கிடையாது. ஸ்விட்சர்லாந்து சட்டங்களின்படி, நாடாளுமன்றத்தில் ஒரு கட்சிக்குக் குறைந்தபட்சம் 5 இடங்கள் இருந்தால்தான் அது நாடாளுமன்ற குழுவாகும், அப்போதுதான் அதற்கு நாடாளுமன்றக் கமிஷன்களில் இடமுண்டு.

கிரேட் பிரிட்டனின் தேர்தல் முறை ஆதிக்கம் செலுத்தும் வர்க்கங்களுக்கேற்ற இரண்டு கட்சி ஆட்சி முறையை ஸ்திரப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டது. 1924 வரை கன்சர்வேட்டிவ் கட்சியினரும் லிபரல் கட்சியினரும் இப்படி மாறி

மாறி வந்தனர், பின்னர் கன்சர்வேட்டிவ் மற்றும் லேபர் கட்சியினர் மாறி மாறி பதவிக்கு வருகின்றனர். உழைப்பாளிகளின் உண்மையான பிரதிநிதிகளை ஆட்சிப் பீடத்திற்கு அனுமதிக்காமல் இருப்பதைத்தான் இரண்டு கட்சிகளின் தலைவர்களும் தம் முக்கியக் கடமையாகக் கருதுகின்றனர். இந்நாட்டில் அமலில் உள்ள தேர்தல் முன்பண முறையின்படி ஒவ்வொரு வேட்பாளரும் 150 பவுன்களைச் செலுத்த வேண்டும். சாராம்சத்தில் பார்த்தால் இது சிறு கட்சிகளுக்கு ஒரு தடையாகும். வேட்பாளர் மொத்த வாக்குகளில் 1/8 பங்கு வாக்குகளைப் பெறாவிடில் இப்பணம் திருப்பித் தரப்பட மாட்டாது.

இந்த முன்பணம் எதைக் குறிக்கிறது என்பதை பின்வரும் கணக்கீடு காட்டுகிறது. எல்லா 625 தொகுதிகளிலும் வேட்பாளர்களை நிறுத்த கம்யூனிஸ்டுக் கட்சி விரும்பினால் முன்பணத்திற்கு மட்டும் சுமார் 1 லட்சம் பவுன்கள் வேண்டும். ஒரு தொழிலாளி வர்க்க கட்சி இவ்வளவு பணத்திற்கு என்ன செய்யும்? பூர்ஷ்வாக் கட்சிகளுக்கோ தேர்தல் பிரசாரத்திற்கு ஏகபோகங்கள் உண்மையில் மட்டற்ற நிதி வாய்ப்புகளை அளிக்கின்றன.

நாடாளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட கம்யூனிஸ்டுகள் கட்சிக் கடமைகளைக் கறாராக நிறைவேற்றுகின்றனர், கட்சி விதிமுறைகளைப் பின்பற்றுகின்றனர். உதாரணமாக, பிரெஞ்சு கம்யூனிஸ்டுக் கட்சியின் விதிமுறைகளில், ''நாடாளுமன்றம் அல்லது நகராட்சி மன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதியின் வாக்குரிமை

கட்சியின் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டது'', நாடாளுமன்றத்தில் கம்யூனிஸ்டுக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதிநிதி ''அரசாங்க நிறுவனங்களிலும் நாட்டிலும் கட்சிக் கொள்கையை ஆக்கபூர்வமாகச் செயல்படுத்தும் கட்சியின் பொறுப்புள்ள உறுப்பினர்'' என்று எழுதப் பட்டுள்ளது. இத்தாலிய கம்யூனிஸ்டுக் கட்சியின் விதிமுறைகளிலும் பின்வருமாறு எழுதப்பட்டுள்ளது: கம்யூனிஸ்டு (தேர்ந்தெடுக்கப்பட்டதும்) ''தன்னை முழுக்க முழுக்க கட்சிக்கு உட்படுத்திக் கொள்ள வேண்டும்'', ''தன் அரசியல் நடவடிக்கையைப் பற்றியும் தேர்தல் வேலைத் திட்ட நிறைவேற்றம் பற்றியும் கட்சி உறுப்புகளின் முன்னும் வாக்காளர்கள் முன்னும் அறிக்கை சமர்ப்பித்தாக வேண்டும்''. புரட்சிகர நாடாளுமன்றவாதம் பற்றிய லெனினியக் கோட்பாடுகளின் செயல்வன்மை சர்வதேச கம்யூனிஸ்டு இயக்கத்தின் அனுபவத்தால் மெய்ப்பிக்கப்படுவது இதிலிருந்து தெளிவாகிறது.

கம்யூனிஸ்டுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுவிற்கும் வெகுஜன இயக்கத்திற்கும் இடையில் எப்படிப்பட்ட தொடர்பு நிலவ வேண்டும் என்பது மிகச் சிக்கலானதொரு விஷயமாகும். நாடாளுமன்ற நடவடிக்கைகளுக்கு வெகுஜன இயக்கத்தின் ஆதரவு உரிய நேரத்தில் கிட்டாவிட்டாலோ அல்லது நாடாளுமன்ற முன்முயற்சி வெகுஜன இயக்கத்திலிருந்து பின்தங்கினாலோ வெற்றிகளை அடைவது பன்மடங்கு கடினமென்று தெரிகிறது.

இன்று கம்யூனிஸ்டுகள் உறுப்பினர்களாயுள்ள

நவீன நாடாளுமன்றத்தின் சூழல் மிகவும் சிக்கலானது; அதுவும் தொழிலாளி வர்க்கத்தின் பிரதிநிதிகளுக்கு இச்சிக்கல் இன்னமும் அதிகம். என்றாலும் இடர்ப்பாடுகளைப் பொருட்படுத்தாது கம்யூனிஸ்டுகளின் செல்வாக்கு நாடாளு மன்றங்களில் வளர்ந்து வருகிறது. நாடாளுமன் றங்களின் சட்டமியற்றும் நடவடிக்கையில் கம்யூ னிஸ்டுகளின் பங்கேற்பு, நிரந்தர கமிஷன்களில் இவர்களின் பணி, அயல்நாடுகளுடனான தொடர்புகளுக்கான நாடாளுமன்றக் குழுக் களில் அங்கம் வகிப்பது ஆகியவை இதற்குச் சான்று பகர்கின்றன. இங்கே, பிரெஞ்சு கம்யூ னிஸ்டுக் கட்சியின் சார்பில் நீண்ட நாட்களாக நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கும் ஆர். பலான்ஜேயின் கூற்று குறிப்பிடத்தக்கது: "22 ஆண்டுகளுக்கு முன் நான் பிரெஞ்சு நாடாளு மன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு முதன்முத லாக சபைக்கு வந்த பொழுது என்னையறியாம லேயே உடல் சிலிர்த்தது. நமது கடும் எதிரி களாகிய பூர்ஷ்வா அரசியல்வாதிகளின் அருகில் உட்கார வேண்டும் என்ற எண்ணமே என்னை மயிர் கூச்செறிய வைத்தது. ஆனால் பின்னர் யோசித்துப் பார்த்து, நாடாளுமன்றம் என்பது கைக்கலப்புக் களம் அல்ல, இது அரசியல் சமருக் கான அரங்கம் என்று புரிந்து கொண்டேன்." *

நாடாளுமன்ற நடவடிக்கையைச் சரியாகத் திட்டமிடும் திறமை, இதற்குத் தலைமை தாங்கும் திறமை கம்யூனிச நாடாளுமன்றவாதக்

---

* *L'Humanité Dimanche*, 1967, No 104, p. 11.

கோட்பாடுகளை அறிந்திருப்பதால் தானாகவே வந்து விடாது; மாறாக இது அனுபவத்தில்தான் வரும், நேரடிப் பணியில்தான் சிறிது சிறிதாகச் சேரும். தொழிலாளி வர்க்கத்தின் பிரதிநிதிகள் நாடாளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படுவதால் இந்த பூர்ஷ்வா அமைப்பின் "மதிப்பு" குலைக்கப்படுகிறது. நாடாளுமன்றம் கடும் அரசியல் சமர்களுக்கான களமாகிறது. கம்யூனிஸ்டு நாடாளுமன்றக் குழுக்களின் செல்வாக்கு நீண்ட, கடும் போராட்டத்தில் வெல்லப்பட்டது. பெல்ஜிய கம்யூனிஸ்டுக் கட்சி மத்திய கமிட்டியின் பொலிட் பீயூரோ உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுவின் தலைவருமான க. முலேன் கூறுகிறார்: "எங்களுடைய நாடாளுமன்ற நடவடிக்கை வெற்று அறிக்கைகளுடன் (இவை பல நேரங்களில் ஆக்கபூர்வமற்றவை) நின்று விட்ட ஒரு காலகட்டம் இருந்தது. நாடாளுமன்ற மேடையை நமது கண்ணோட்டங்களைப் பிரசாரம் செய்ய பயன்படுத்த வேண்டும் என்பதை நாங்கள் வெறுமனே இயந்திரகதியாகப் புரிந்து கொண்டோம். இதனால் பயன் கிட்டியதா? நாங்கள் எங்களுடைய கருத்துகளைக் கூறினோம், ஆனால் இவற்றின் எதிரொலி நாட்டில் குறைந்தபட்சமாகத்தான் இருந்தது." *

இன்று முதலாளித்துவ நாடுகளில் உள்ள கம்யூனிஸ்டுக் கட்சிகளின் நாடாளுமன்றக் குழுக்கள், பரவலான மக்கள் திரளினரின் நலன்களுக்கு ஏற்ற தீவிர முற்போக்கு ஜனநாயக சமூக, பொரு

* *World Marxist Review*, 1964, No 10.

ளாதார, அரசியல் செயல்திட்டங்களை நிறை வேற்றுவதற்காகப் போராடுகின்றன. கம்யூனிஸ்டு களின் நாடாளுமன்றப் பணியோடு சேர்ந்து மக்கள் திரளினரின் செயல்வன்மையுள்ள இயக் கங்களும் நடைபெற்றால்தான் சமூக முன்னேற் றம், ஜனநாயகத்திற்கான போராட்டத்தில் நாடாளுமன்றத்தை வெற்றிகரமாகப் பயன் படுத்த முடியும் என்ற லெனினியக் கருத்தை இன்றைய நாடாளுமன்றங்களில் கம்யூனிஸ்டு களின் பணி நன்கு மெய்ப்பிக்கிறது.

தேர்தல் பிரசாரங்களில் செயல்முறை பிரச் சினைகளை கம்யூனிஸ்டுக் கட்சிகள் அந்தந்த தருணத்தின் திட்டவட்டமான சூழ்நிலைகளுக் கேற்ப முடிவு செய்கின்றன. உதாரணமாக, சுரண்டல் வர்க்கங்களின் கொள்கையை உழைப் பாளிகள் கண்டனம் செய்வதைக் காட்ட கம்யூ னிஸ்டுக் கட்சிக்கு வேறு வாய்ப்பு இல்லாத பொழுது தேர்தல்களில் கலந்து கொள்ளாம லிருப்பதைப் பற்றிய பிரச்சினை எழுகிறது.

கம்யூனிஸ்டுகள் தம் இறுதி லட்சியமாகிய சோஷலிச சமுதாயத்தைக் கட்டுவதற்கு மட்டு மின்றி, போராட்டப் போக்கில் உழைப்பாளி களின் வாழ்க்கையை மேம்படுத்தவும் பூர்ஷ்வா அரசின் எல்லா ஜனநாயக நிறுவனங்களையும் பயன்படுத்துகின்றனர். நாடாளுமன்றங்களிலும் நகராட்சி மன்றங்களிலும் உறுப்பினர்களாயிருப் பதானது பல்வேறு முக்கிய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண கம்யூனிஸ்டுகளுக்கு உதவுகிறது. குறிப்பிட்ட இடத்தில் வாழும் உழைப்பாளிகளின் வரி சுமைகளைக் குறைக்கலாம், வீடு கட்டு

மானத் திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றலாம், பொதுப் போக்குவரத்தை வளர்க்கலாம், பள்ளிகள், கலாசார கேந்திரங்களின் கட்டுமானம், சாலை அமைப்பு, சாலைகளைப் பழுதுபார்த்தல், மின்சக்தி வழங்குதல் போன்றவற்றில் உதவலாம், தொழில் நிறுவனங்கள், மருத்துவக் கூடங்களில் நிலவரத்தைப் பரிசீலனை செய்யலாம், உழைப்புச் சட்டம் பின்பற்றப்படுவதைக் கண்காணிக்கலாம், இன்ன பிற.

பூர்ஷ்வா அரசியல் சட்ட வரம்புகளை சரியாகவும் திறமையாகவும் மக்கள் நலன் கருதி பயன்படுத்தினால் இந்த மட்டான வரம்புகள் கூட ஜனநாயக சீர்திருத்தங்களை நிறைவேற்றவும் உழைப்பாளிகளின் பொருளாயத நிலையை மேம்படுத்தவும் ஏற்ற வாய்ப்பைத் தோற்றுவிக்கின்றன என்று கம்யூனிஸ்டுகளின் நாடாளுமன்ற அனுபவம் காட்டுகிறது.

## சமரசங்களின் பாலான லெனினிய அணுகுமுறை

''இடதுசாரி'' கம்யூனிசம் — இளம் பருவக் கோளாறு என்ற நூலில் லெனின் தொழிலாளி வர்க்கத்தின் வெகுஜனக் கூட்டாளிகள் மீது பெரும் கவனம் செலுத்தினார். சமூக முன்னேற்றம், ஜனநாயகம், சோஷலிசம் ஆகியவற்றிற்காகப் போராடும் தொழிலாளி வர்க்கத்துடன் மேன்மேலும் புதுப் புது உழைப்பாளிகள் வந்து சேருவார்கள் என்று அவர் காட்டினார். பல்வேறு சமூகப் பிரிவினர், குழுவினரின் பாலான சித்தாந்த, அரசியல், ஸ்தாபன அணுகுமுறைகளைத் தேடிக் கண்டுபிடிக்குமாறும், இவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகள், சமூக ஸ்தாபனங்களுடன் கூட்டை ஏற்படுத்திக் கொள்ளும் வழிகளைத் தேடுமாறும் அவர் கம்யூனிஸ்டுகளுக்குச் சொன்னார். கூட்டுகளைப் பற்றிய சரியான கொள்கை, சுரண்டப்படும் அனைவரையும் பூர்ஷ்வா முறைகளில் அதிருப்தியடைந்த அனைவரையும் தன் பக்கம் இழுக்க பாட்டாளி வர்க்கத்திற்கு உதவும் என்றார் அவர்.

அக்டோபர் புரட்சிக்கு முந்தைய கட்டத்திலேயே லெனின் தொழிலாளி வர்க்கத்தின் கூட்டுகள் பற்றிய பிரச்சினையை விரிவாக ஆராய்ந்

தார். போல்ஷிவிக் கட்சியின் அனுபவம், ஜாரிசத்திற்கு எதிரான போராட்டத்திலும் பின் சோஷலிசப் புரட்சியிலும் தொழிலாளி வர்க்கத்திற்கு விவசாயிகளுடனும் நடுத்தர உழைப்பாளிகளுடனும் உறுதியான கூட்டு நிலவ வேண்டியதன் ஜீவாதார அவசியத்தையும் இக்கூட்டின் மிகப் பெரும் முக்கியத்துவத்தையும் ஊர்ஜிதப்படுத்தியது; இந்த அனுபவம் சமூக மட்டத்திலும் ஸ்தாபன மட்டத்திலும் இத்தகைய கூட்டுகளின் சாத்தியத்தைப் பற்றிக் கூறுகிறது. பாட்டாளி வர்க்கத்தின் வெகுஜனக் கூட்டுகள் தோன்றவும் வலுப்படவும் உழைப்பாளி மக்கள் திரளினரின் அடிப்படை நலன்கள் வழிகோலுகின்றன, எனவே இக்கூட்டுகள் புறவய ரீதியில் நியதியானவை.

குறிப்பிட்ட சூழ்நிலைகளில், உதாரணமாக குறிப்பிட்ட காரணங்களினால் மக்கள் திரளினர் அணிதிரளாமல் இருந்தால், சமூக மட்டத்திலான கூட்டு மட்டுமே சாத்தியம், இது பாட்டாளி வர்க்கக் கட்சியின் கோஷங்களின் கீழ் உழைப்பாளிகளின் கூட்டுப் போராட்டங்கள், நடவடிக்கைகளின் வடிவத்தைப் பெறுகிறது. பொது வேலைநிறுத்தம், ஆர்ப்பாட்டம், தன்னிச்சையான எழுச்சி, இது போன்ற இன்ன பிற போராட்ட வடிவங்களை லெனின் இத்தகைய கூட்டிற்கு உதாரணமாகக் கருதினார். புரட்சி சக்திகள் ''போதுமான அளவு ஸ்தாபன ரீதியாக அணிதிரளாமல் இருந்த பொழுது, பிளவுண்டு நின்ற பொழுது, உண்மையான மத்தியத் தலைமை இல்லாதிருந்த பொழுது, இது போன்ற

இன்ன பிற சந்தர்ப்பங்களில்'' * மேற்கூறிய கூட்டுகள் தன்னிச்சையாக, பாட்டாளி வர்க்கக் கட்சியின் நேரடித் தாக்கமின்றி உருவாயின, ஒரு குறிப்பிட்ட வடிவத்தைப் பெறாதவையாக, பல நேரங்களில் உணரப்படாதவையாக இருந்தன. ஆனால் இதனால் இவற்றின் முக்கியத்துவம் குறையவில்லை. வர்க்கப் போராட்டத்தின் அதிகபட்ச எழுச்சியின் பொழுதும் சமூக மட்டத்தில் மேற்கூறிய கூட்டுகள் தன்னிச்சையாக உருவாகின்றன, இவற்றில் உணர்வு பூர்வமான அம்சங்களைப் புகுத்த கம்யூனிஸ்டுகள் முயலுகின்றனர்.

கம்யூனிஸ்டுக் கட்சியின் வேலைத்திட்டத்துடன் முரண்படாத தனிப்பட்ட கோரிக்கைகள், லட்சியங்களை உள்ளடக்கிய வேலைத்திட்டங்களை உடைய கட்சிகளும் உழைப்பாளிகளின் வெகுஜன ஸ்தாபனங்களும் அரசியல் அரங்கில் செயல்படும் பொழுது ஸ்தாபன மட்டத்தில் கூட்டுகள் சாத்தியம். சோஷலிஸ்டுக் கட்சிகள், தொழிற்சங்கங்கள், பல்வேறு வெகுஜன இயக்கங்கள், சங்கங்களைப் பற்றி இங்கே குறிப்பிடப்படுகிறது. விவசாயிகள் மற்றும் நடுத்தரப் பிரிவினர் விஷயத்தில் நன்கு சிந்திக்கப்பட்ட, சரியான கட்சிக் கொள்கை பெரும்பாலான சந்தர்ப்பங்களில் ஊசலாடும் மக்கள் பிரிவினர் பூர்ஷ்வா தரப்பிற்கு மாறுவதைத் தவிர்க்கிறது. கூட்டுப் போராட்டங்களில் பரவலான உழைப்பாளிகள் வர்க்கச் சமாதான மாயைகளிலிருந்து விடுபட்டு சமூக

* V. I. Lenin, *Collected Works*, vol. 15, pp. 333—334.

முன்னேற்றம், ஜனநாயகத்திற்கான போராட்டத்தில் நன்கு இறங்குகின்றனர்.

கூட்டுகளைப் பற்றிய கம்யூனிஸ்டுக் கொள்கையானது அதே நேரத்தில் வர்க்க எதிரியின் முகாமில் உள்ள சகலவித முரண்பாடுகள், கருத்து வேறுபாடுகளையும் பயன்படுத்துவதை முன்னனுமானிக்கிறது. லெனின் பின்வருமாறு எழுதினார்: ''மிகுந்த வலுவுள்ள இந்தப் பகைவனைத் தோற்கடிப்பதெனில், முழு முனைப்பான முயற்சிகளை மேற்கொள்வதன் மூலமும், பகைவர்களிடையே இருக்கக் கூடிய எந்தப் பிளவையும் — மிகவும் சிறியதே ஆயினும் — பல்வேறு நாடுகளின் முதலாளித்துவ வர்க்கத்தாரின் நலன்களிடையிலும் அந்தந்த நாட்டினுள்ளும் முதலாளித்துவ வர்க்கத்தின் பல்வேறு கோஷ்டிகள் அல்லது வகைகளின் நலன்களிடையிலும் எழக் கூடிய எந்த மோதலையும் மிகவும் தீர்க்கமாகவும் கவனமாகவும் விழிப்புடனும் சாமர்த்தியமாகவும் **கட்டாயமாகவும்** பயன்படுத்திக் கொள்வதன் மூலமும், மற்றும் வெகுஜனக் கூட்டாளியை — இக் கூட்டாளி தற்காலிகமானவர்தான், ஊசலாட்டமுடையவர்தான், நிலையற்றவர்தான், நம்ப முடியாதவர்தான், குறிப்பிட்ட நிலைமைகளில் மட்டுமே கூட்டாளியாய் இருப்பவர்தான் என்றாலுங்கூட — வென்று கொள்வதற்கான எந்தவொரு மிகச் சிறிய வாய்ப்பையும் பயன்படுத்திக் கொள்வதன் மூலமுந்தான் இது சாத்தியமாகும். இதைப் புரிந்து கொள்ளாதவர்கள், மார்க்சியத்தை, **பொதுவாகவே** நவீன கால விஞ்ஞான சோஷலிசத்தைக் கடுகளவுங்கூட புரிந்து



8–207

கொள்ளும் ஆற்றல் தமக்கில்லை என்பதைத்தான் வெளிப்படுத்திக் கொள்கிறார்கள். செயலில் இந்த உண்மையைக் கையாளும் திறன் தமக்குண்டு என்பதை ஓரளவு கணிச அளவிலான காலத்திலும் நானாவிதமான அரசியல் சூழ்நிலைமைகளிலும் நடைமுறையில் நிரூபித்துக் காட்டாதவர்கள், உழைக்கும் மனித சமுதாயத்தார் அனைவரையும் சுரண்டலாளர்களிடமிருந்து விடுவிப்பதற்காகப் புரட்சிகர வர்க்கம் நடத்தும் போராட்டத்தில் அதற்குத் துணை புரியும் வழியை இன்னமும் தெரிந்து கொள்ளாதவர்களே ஆவர்.''* லெனினின் இக்கருத்தை வரலாற்று வளர்ச்சி மெய்ப்பித்துள்ளது.

தொழிலாளி வர்க்கத்தின் வெகுஜனக் கூட்டாளிகளுக்கான நடைமுறைப் போராட்டத்தில் சமரசங்களைப் பற்றிய பிரச்சினை தவிர்க்க இயலாதவாறு கம்யூனிஸ்டுக் கட்சிகளின் முன் தோன்றுகிறது. ''அரசியல் துறையில் சமரசம் என்கிற சொல், இன்னொரு கட்சியுடன் உடன்பாடு செய்து கொள்வதற்காக சில கோரிக்கைகளை விட்டுக்கொடுப்பது, தன்னுடைய கோரிக்கைகளில் ஒரு பகுதியைக் கைவிடுவது என்பதைக் குறிக்கிறது.''** வர்க்கப் போராட்ட நடைமுறை புரட்சிகர சமரசம், சந்தர்ப்பவாத சமரசம்

---

* வி. இ. லெனின், தேர்வு நூல்கள், தொகுதி 10, பக்கங்கள் 267—268.

** வி. இ. லெனின், நூல் திரட்டு, நான்கு பாகங்களில், மூன்றாம் பாகம், மாஸ்கோ, முன்னேற்றப் பதிப்பகம், 1978, பக்கம் 7.

என்ற இரண்டு முக்கிய வகைகளைச் சுட்டிக் காட்டியுள்ளது. தொழிலாளி வர்க்கக் கட்சி எப்போது ஒரு குறிப்பிட்ட தருணத்தின் அரசியல் மற்றும் செயல்முறைக் கடமைகளை செயல் திட்ட லட்சியங்களுக்கு உட்படுத்துகிறதோ அப் போது புரட்சிகர சமரசம் பிறக்கும்; ஒரு குறிப் பிட்ட தருணத்தின் உண்மையான அல்லது மாயையான அனுகூலத்திற்காகச் செயல்திட்ட லட்சியங்களை விட்டுக் கொடுத்து பெறப்படும் சமரசம் சந்தர்ப்பவாத சமரசமாகும்.

புரட்சிகர சமரசங்களில் பல வகைகள் உண்டு:

தொழிலாளி வர்க்கக் கட்சிக்கும் ஒரு குறிப் பிட்ட சமூகக் குழுவிற்கும் இடையிலான சம ரசம், இங்கே கம்யூனிஸ்டுக் கட்சி அக்குழுவின் சில தனி கோரிக்கைகளைத் தன் வேலைத்திட் டத்தில் சேர்த்துக் கொள்ளும்:

கம்யூனிஸ்டுக் கட்சிக்கும் சோஷலிஸ்டுக் கட் சிக்கும் (அல்லது இதைப் போன்ற கட்சிக்கும்) இடையிலான சமரசம்; இங்கே பொது லட்சி யத்தை அல்லது சில லட்சியங்களை (அரசாங்கத் தின் வேலைத்திட்ட நிறைவேற்றம் உட்பட) நிறைவேற்றுவதற்காகக் கூட்டாக வெகுஜனப் போராட்டத்தை நடத்த இரு தரப்புகளும் உறுதி மேற்கொள்கின்றன;

ஜனநாயக, பாசிச எதிர்ப்பு அரசாங்கத்தின் வேலைத்திட்டத்தைத் தீட்டுவதிலும் இத்திட் டத்தை நிறைவேற்றுவதிலும் (இந்த அரசாங் கத்தில் கம்யூனிஸ்டுகளின் பிரதிநிதிகள் பங்கேற் பது அல்லது அதற்கு மட்டான ஆதரவு தருவது) கம்யூனிஸ்டுக் கட்சிகளின் பங்கேற்பு;

லெனினிய சமாதான சகவாழ்வுக் கொள் கையை நிறைவேற்றும் பொருட்டு பாட்டாளி வர்க்க அரசிற்கும் பூர்ஷ்வா அரசிற்கும் இடையி லான சமரசம்.

அரசு ஏகபோக முதலாளித்துவத்தின் முரண் பாடுகள் வளர்ந்து ஆழமாகி வரும் போது, சமர சம் என்பது தொழிலாளி வர்க்கத்தின் வெகு ஜனக் கூட்டாளிகள் மற்றும் பல்வேறு ஜனநாயக அரசியல் ஸ்தாபனங்களின் நலன்கள், உரிமை களைப் பாதுகாக்கும் கருவியாகக் கூடும், பல நேரங்களில் இப்படி நடக்கவும் செய்கிறது. இது தவிர இன்று பிற்போக்கு, பாசிசப் போக்குகள் நிலவும் சூழ்நிலையில், ஆயுதப் போட்டி கட்டுக்கு மீறிப் போகும் போது மனித வாழ்க்கைக்கே அபாயம் ஏற்படுகிறது, இத்தகைய சூழ்நிலையில் சமரசம் என்பது இந்த ஆபத்தான போக்கு களுக்கு எதிரான போராட்ட சாதனங்களில் ஒன்றாகும்.

இந்நூலில் புரட்சிகர சமரசத்தின் முறையியல் கோட்பாடுகள் முக்கியமாக ஆராயப்படுகின்றன.

வர்க்க எதிரிகளைத் தோற்கடித்து வெற்றி பெறுவதை எளிதாக்கி துரிதப்படுத்தும் பொ ருட்டு, புறவய நிலவரம் கட்டளையிடும் போது, தொழிலாளி வர்க்கத்தின் வெகுஜன கூட்டாளி களுக்காகப் போராடும் போது தற்காலிக கூட் டாளிகளுடன் கூட கம்யூனிஸ்டுகளால் சமரசங் களையும் உடன்படிக்கைகளையும் செய்து கொள்ள முடியும், செய்து கொள்ள வேண்டும் என்றார் லெனின். புரட்சிகர செயல்திட்டம், செயல்முறை பற்றிய லெனினிய படிப்பினை

களின் முக்கியமான அம்சங்களில் ஒன்றாகிய இது நடைமுறையில் சோதிக்கப்பட்டது. ''சமரசங்கள் கூடாது என்று மார்க்சியம் கூறவில்லை, மாறாக இவற்றைப் பயன்படுத்துவது அவசியம் என்று மார்க்சியம் கருதுகிறது'' என்றார் லெனின். *

புரட்சிகரப் பாட்டாளி வர்க்கக் கட்சி பாட்டாளிகளின் நலன் கருதி சமரசங்களைப் பயன்படுத்தும் பிரச்சினை முதன்முதலாக விஞ்ஞான கம்யூனிச ஆசான்கள் மார்க்ஸ், எங்கெல்சால் முன்வைக்கப்பட்டு, கோட்பாட்டு ரீதியில் தீர்க்கப்பட்டது. குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில் பாட்டாளி வர்க்கத்தோடு தொடர்பற்ற கட்சிகளுடன் உடன்படிக்கைகளைச் செய்து கொள்ளலாம், பாட்டாளி வர்க்கத்திற்கு நேரடியாக அனுகூலமான அல்லது உடனடிக் கடமைகளின் தீர்விற்குப் பாதையைத் திறந்து விட்டு, விடுதலைப் போராட்டத்தின் இறுதி லட்சியத்தை அடைய உதவும் நடவடிக்கைகளுக்கான போராட்டத்தில் இக்கட்சிகளை ஆதரிக்கலாம் என்று அவர்கள் கூறினர். கம்யூன் உறுப்பினர்களாகிய பிளான்கிஸ்டுகள் ''ஒருவித சமரசமும் கூடாது'' என்று கூறியதை 1874 – 1875இல் எங்கெல்ஸ் கண்டித்தார். தொழிலாளர் கட்சி மற்ற கட்சிகளுடன் எந்த வித உடன்படிக்கைகளையும் செய்து கொள்ளக் கூடாது என்று எதிர்ப்பு தெரிவித்த டேனிஷ் சமூக-ஜனநாயகவாதி திரீருக்கு எழுதிய கடிதத்தில் (1889)

* V. I. Lenin, *Collected Works*, vol. 13, p. 23.

எங்கெல்ஸ் தன் கண்டனத்தைத் தெரிவித்த தோடு கூட, கம்யூனிஸ்டுகளைப் பொறுத்தமட்டில் சமரசம் என்பது கூட்டின், உடன்படிக்கையின் ஒரு வடிவம், எனவே இது கூட்டு நடவடிக்கைகளை முன்னனுமானிக்கிறது என்று சுட்டிக் காட்டினார். ''மற்ற கட்சிகளுடனான எந்த ஒரு உடன்படிக்கையையும், குறுகிய கால கூட்டு நடவடிக்கையைக் கூட நீங்கள் கோட்பாட்டு ரீதியாக நிராகரிக்கின்றீர்கள். இது அதிக அனுகூலமானதாக அல்லது குறைந்தபட்சம் தீங்களிப்பதாக இருக்கும் போது இதை முழுக்க முழுக்க மறுக்காதிருக்கும் அளவிற்குப் போதிய புரட்சி அனுபவம் எனக்கு உள்ளது'' என்று எங்கெல்ஸ் எழுதினார். இவ்வாறு பூர்ஷ்வா அல்லது குட்டி பூர்ஷ்வாக் கட்சிகளுடன் உடன்படிக்கைகளைச் செய்து கொள்ளும் போது கம்யூனிஸ்டுகள் பாட்டாளி வர்க்கக் கட்சியின் புரட்சிகரக் கோட்பாடுகளைத் தூய்மையாக வைத்திருக்க வேண்டும், பாட்டாளிகளின் வர்க்க ஸ்தாபனத்தின் சுதந்திரத்தைப் பேணிக் காக்க வேண்டும், ''கோட்பாடுகளை விலைபேசக் கூடாது'' என்று மார்க்சும் எங்கெல்சும் எப்போதும் கோடிட்டுக் காட்டினர்.

மார்க்ஸ், எங்கெல்சின் இக்கருத்துகளை லெனின் வளர்த்தார்; குறிப்பாக **''இடதுசாரி'' கம்யூனிசம் — இளம் பருவக் கோளாறு** என்ற நூலில் இவற்றின் மீது முக்கிய கவனம் செலுத்தினார்.

தொழிலாளி வர்க்கத்திற்கும் உழைப்பாளிகள் அனைவருக்கும் இடையில் நடவடிக்கை ஒற்று

மையை ஏற்படுத்துவது என்பது பாட்டாளிகளின் அரசியல் பங்கை அதிகப்படுத்தவும் பாட்டாளி களைச் சுற்றி பரவலான உழைப்பாளிகள் அணி திரளவும் அவசியமான முக்கிய நிபந்தனைகளில் ஒன்றாகும். இந்தச் செயல்முறையை கம்யூ னிஸ்டுக் கட்சிகள் எப்போதும் தம் நடவடிக்கை யின் மையத்தில் வைத்து இயங்கின. ''தொழி லாளி வர்க்க ஒற்றுமையில்லாவிடில் இதன் போராட்டத்தில் வெற்றி சாத்தியமில்லை'' என்று லெனின் எழுதினார்.* இத்தகைய ஒற்று மைக்காக கம்யூனிஸ்டுகள் செய்து கொள்ளும் சமரசம், உழைப்பாளிகளின் அன்றாடக் கோரிக் கைகளுக்காகவும், சர்வதேச தொழிலாளர் இயக் கம் மற்றும் தேசிய விடுதலை இயக்கத்தின் அடிப்படை, பொது நலன்களுக்காகவும், சமா தானம், ஜனநாயகம், சமூக முன்னேற்றம், சோஷலிசம் ஆகியவற்றிற்காகவும் நடைபெறும் போராட்டத்தை வலுப்படுத்த உதவும். தொழி லாளி வர்க்கத்தின் நலன்களுக்கான போராட் டத்திற்கு உதவி, தேவையான கூட்டாளிகளைத் தன் பக்கம் ஈர்த்து, அதே சமயம் ஏகபோக முதலாளிகளுக்கு எதிரான தொழிலாளி வர்க்கத் தின் சித்தாந்த அரசியல் போராட்டத்திற்கு இடர்ப்பாடுகளை விளைவிக்காத சமரசங்களை மட்டுமே கம்யூனிஸ்டுகள் ஏற்பர் என்றார் லெனின். ''தன்னையே உறுதியாக நம்பாதவன் தான் நம்ப முடியாத நபர்களோடுங்கூடத் தற் காலிகமான கூட்டணிகளில் சேருவதற்குப் பயப்

---

* V. I. Lenin, *Collected Works*, vol. 19, p. 112.

பட முடியும்; அப்படிப்பட்ட கூட்டணிகளில் சேராமல் எந்த ஓர் அரசியல் கட்சியும் இருக்க முடியாது.'' *

புறவய நிலவரம், உழைப்பாளி மக்கள் திர ளினரின் அடிப்படை நலன்கள், பூர்ஷ்வா முகா மில் நிலவும் முரண்பாடுகள், ஏகாதிபத்தியத் திற்கு எதிரான போராட்டத்தின் சிக்கலான சூழ்நிலைகளும் சமூக அரசியல் அம்சங்களும் (இவை பல நேரங்களில் ஒற்றுமையின் நலன் கருதி ஏகபோக எதிர்ப்பு, நிதி மேல்மட்ட எதிர்ப்பு, பாசிச எதிர்ப்புச் சக்திகளின் பரஸ்பர இணக்கங்களைக் கோருகின்றன) ஆகியவைதான் சமரசங்கள், உடன்படிக்கைகளைப் பயன்படுத்து மாறு கட்டளையிடுகின்றன. ''சர்வதேச முத லாளித்துவ வர்க்கத்தை வீழ்த்துவதற்காகப் போர் நடத்திக் கொண்டு — அரசுகளிடையே நடைபெறும் சாதாரணப் போர்களில் மிகவும் மூர்க்கமானதைக் காட்டிலும் மிகவும் கடின மான, நீண்ட போர் நடத்திக் கொண்டு — வளைந்து கொடுப்பதையும், பகைவர்களின் நலன்களுக்கிடையே ஏற்படும் மோதலை (அது தற்காலிகமானதே என்றாலும்) எவ்விதத்திலும் பயன்படுத்திக் கொள்வதையும், சாத்தியமான கூட்டாளிகளுடனான (இக்கூட்டாளிகள் தற் காலிகமானவர்கள், நிலையற்றவர்கள், ஊச லாட்டமுடையவர்கள், குறிப்பிட்ட நிலைமை களில் மட்டுமே கூட்டாளிகளாய் இருப்போர்

---

* வி. இ. லெனின், தேர்வு நூல்கள், தொகுதி 1, பக்கம் 217.

என்றாலுங்கூட) எந்த இணக்கத்தையும் அல்லது சமரசத்தையும் முன்கூட்டியே நிராகரித்து விடுவதென்றால் — அது எள்ளி நகையாடத் தக்கதல்லவா?'' * ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போராட்டத்தில் தொழிலாளி வர்க்கத்தின் வெகுஜனக் கூட்டாளிகளுடன் சமரசங்களுக்குச் செல்லும் கம்யூனிஸ்டுகள் பொது தேசியப் புரட்சி சக்திகள் தோன்ற உதவுகின்றனர்; ஏனெனில் லெனினுடைய வார்த்தைகளில் சொன்னால் இச் சமரசங்கள் ''ஒரு குறிப்பிட்ட, திட்டவட்டமான, மட்டான பொதுக் கடமைகளில் ஒன்றுபட்டு நிற்கும் பல்வேறு வர்க்கங்களின்'' ** பல்வேறு நலன்களைப் பற்றிய துல்லியமான பகுப்பாய்வின் அடிப்படையிலானவை. கம்யூனிஸ்டுகள் சமரசங்களைப் பயன்படுத்தி ''பாட்டாளிகளின் வர்க்க உணர்வின் பொது நிலையையும், புரட்சிகர மனப்பான்மையையும், போராடுவதற்கும் வெற்றியடைவதற்குமான ஆற்றலையும் உயர்த்தப் பார்க்கின்றனரே தவிர குறைக்கப் பார்க்கவில்லை'' ***.

1917இல் வி. இ. லெனின் சமரசங்களைப் பற்றி என்ற கட்டுரையில் பின்வருமாறு எழுதினார்: ''போல்ஷிவிக்குகளைப் பற்றி சாதாரணமாய் நிலவும் கருத்து என்னவெனில் — அவர்களை அவதூறு செய்கிற பத்திரிகைகள் ஊக்கி வளர்த்

---

* வி. இ. லெனின், தேர்வு நூல்கள், தொகுதி *10*, பக்கம் *266*.

** V. I. Lenin, *Collected Works*, vol. 12, p. 404.

*** வி. இ. லெனின், தேர்வு நூல்கள், தொகுதி *10*, பக்கம் *274*.

துள்ள கருத்து இது — போல்ஷிவிக்குகள் யாருட னும் சமரசம் செய்ய என்றைக்கும் ஒப்புக் கொள்ள மாட்டார்கள் என்பதே.

"புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்தின் கட்சி என்கிற முறையில் நமக்கு இந்தக் கருத்து பெருமையளிப்பதாயிருக்கிறது; ஏனெனில், புரட்சி யின், சோஷலிசத்தின் அடிப்படையான கோட் பாடுகளிடம் நமக்குள்ள விசுவாசத்தை நமது பகைவர்களுங்கூட ஒத்துக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது என்பதை இது நிரூபிக்கிறது. இருப்பினும் இந்தக் கருத்து தவறு என்பதை நாம் குறிப்பிட்டாக வேண்டும்." *

பாட்டாளிகளின் வர்க்கப் போராட்டத்திற்குத் தலைமை தாங்கி வழிகாட்டும் விஞ்ஞானம் என்ற வகையில் மார்க்சிய-லெனினியச் செயல் முறையின் மிக முக்கிய அம்சங்களில் ஒன்று வர்க்க சக்திகளின் நிலையையும் இவற்றின் விகி தாச்சாரத்தையும் வளர்ச்சியிலும் மாற்றத்திலும் பகுப்பாய்வு செய்வதாகும். எனவே சமூகக் குழுக் கள், பிரிவுகள், பல்வேறு கட்சிகளுடனான கூட் டணிகள், உடன்படிக்கைகளைப் பற்றிய கொள்கை தனிப்பட்ட நாட்டின் உள்வாழ்க் கையில் அல்லது உலக அரங்கில் நடைபெறும் மாற்றங்களைப் பொறுத்து மாறித்தான் தீரும். வி. இ. லெனின் சமரசங்களின் சாரத்தை வெளிப்படையாக்கினார், இவை நிலவும் சூழ் நிலைகள், இவற்றின் வடிவங்களை நிர்ணயித்

---

* வி. இ. லெனின், நூல் திரட்டு, மூன்றாவது பாகம், பக்கம் 7.

தார், பாட்டாளிகளின் வர்க்கப் போராட்டத்திலும் புரட்சிகரக் கட்சியின் செயல்முறையிலும் இவற்றின் இடத்தைச் சுட்டிக் காட்டினார். ''மெய்யான புரட்சிக் கட்சியின் கடமை எல்லா சமரசங்களையும் கைவிடுவது சாத்தியமல்லவெனப் பிரகடனப்படுத்துவதல்ல, ஆனால் அவை தவிர்க்க முடியாதவையாகிவிடும் போது, எல்லா சமரசங்களினூடேயும் தனது கோட்பாடுகளுக்கும், தனது வர்க்கத்துக்கும், தனது புரட்சிகர நோக்கத்துக்கும், புரட்சிக்கு வழியைச் செப்பனிடுதல், புரட்சி வெற்றி பெற மக்களுக்குப் போதமளித்தல் ஆகிய தனது பணிக்கு விசுவாசமாய் இருந்துவரச் சக்தி பெற்றிருப்பதேயாகும்.'' *

இவ்வாறாக மார்க்சிய-லெனினியம் முதலாவதாக, சமரசம் என்பது உழைப்பாளி மக்கள் திரளினரின் நடவடிக்கை ஒற்றுமைக்காகப் பாட்டாளி வர்க்கமும் இதன் புரட்சிகரக் கட்சியும் நடத்தும் போராட்ட வழிகளில் ஒன்று, இதற்குப் புறவயச் சூழ்நிலைகள் கட்டளையிடுகின்றன என்பதை ஒப்புக் கொள்கிறது; இரண்டாவதாக, சமரசங்களை நாடும் தொழிலாளி வர்க்கமும் இதன் புரட்சிகர முன்னணிப் படையும் தம் கோட்பாடுகளுக்கு விசுவாசமாக இருக்க வேண்டும், மக்கள் திரளினருடனான தொடர்புகளை வலுப்படுத்த வேண்டும், இவர்களின் நடவடிக்கையைத் தீவிரப்படுத்த வேண்டும் என்று கோருகிறது. புரட்சிகர சமரசத்திற்கும் சந்தர்ப்பவாத

---

* அதே நூல், பக்கம் 8.

சமரசத்திற்கும் இடையிலான அடிப்படை வேறு பாடு இதில்தான் அடங்கியுள்ளது; இச்சந்தர்ப்ப வாத சமரசம் மக்கள் திரளினரின் முதுகிற்குப் பின் செய்து கொள்ளப்படுகிறது, இது அவர் களைச் செயலற்றவர்களாக ஆக்குவதை நோக் கமாகக் கொண்டது, அவர்களை ஏமாற்றுவதே இதன் எண்ணம்.

புறவயச் சூழலை ஆழ்ந்து மதிப்பிட்டு இதன் அடிப்படையில் உடன்படிக்கைகள், சமரசங் களைப் புரட்சிகரமாகப் பயன்படுத்தும் பொழுது அது வெகுஜனக் கூட்டணிகளை ஏற்படுத்தவும் உழைப்பாளர் நலன் கருதி நடவடிக்கைகளில் ஒற்றுமையை ஏற்படுத்தவும் தொழிலாளி வர்க் கத்தின் முன்னணிப் படைக்கு உதவுகிறது. சமர சங்களைச் சரிவரப் பயன்படுத்துவதானது நடை முறைக் கடமைகளின் நிறைவேற்றத்தைத் துரிதப் படுத்தி எளிதாக்குகின்றது, கம்யூனிஸ்டுகளின் செயல்திட்ட நிறைவேற்றத்திற்கு உதவுகிறது. கூட்டணிகள், சமரசங்கள், உடன்படிக்கைகள் பற்றிய செயல்முறையை ஆக்கபூர்வமாகப் பயன் படுத்துவதானது தொழிலாளர் மற்றும் தேசிய விடுதலை இயக்கத்தில் மந்த நிலையையும் பிள வையும் அகற்ற உதவுகிறது. ‘‘எவ்வித சமரசங் களும் உடன்படிக்கைகளும் கூடாது’’, ‘‘எவ்விதக் கூட்டணிகளும் வேண்டாம்’’ என்று பிரகடனப் படுத்தும் ‘‘இடதுசாரி’’ வறட்டுச் சூத்திரவாதி கள் சாராம்சத்தில் தொழிலாளி வர்க்கத்தின் விரோதிகளுக்குத்தான் உதவுகின்றனர், ஏனெ னில் இச்செயல்முறை கடுமையான பின்விளைவு களை ஏற்படுத்தும் என்று வரலாறு பன்முறை

காட்டியுள்ளது: அதிதீவிர இடதுசாரி கோஷ்டிகள் கோட்பாடற்ற கம்யூனிச எதிர்ப்பு, சோவியத் எதிர்ப்பு, பயங்கரவாத ஸ்தாபனங்களாக மாறி சமாதானம், ஜனநாயகம், சோஷலிசத்திற்கான போராட்டத்திற்குப் பெரும் கேடிழைக்கக் கூடும். அது மட்டுமல்ல, சமரசமின்மை என்றழைக்கப்படுவதானது பல நேரங்களில் மார்க்சிய-லெனினியம் மற்றும் பாட்டாளி வர்க்க சர்வதேசியவாதத்திற்கு இழைக்கப்படும் துரோகத்தை மூடிமறைக்கிறது.

அதே நேரத்தில் சமரசம் உட்பட எந்த ஒரு செயல்முறை வழியையும் மிகைப்படுத்துவது லெனினியத்திற்கு அன்னியமானது. அரசியலில் சமரசங்கள் எவ்வளவு அவசியமானவை, தவிர்க்க இயலாதவை என்பதை ஆதாரப்படுத்திய லெனின் பின்வருவதைக் குறிப்பிட்டார்: ''ஜீவனுள்ள, இயங்காற்றல் படைத்த வரலாற்றுச் சக்தி என்ற வகையில் மார்க்சியம் தன் பலம் முழுவதையும் திரட்டி சமரசங்களுக்கு எதிராகப் போராடுவதை இது சிறிதும் மறுக்கவில்லை. இது முரண்பாடு என்றழைக்கப்படுவதை யாரால் கிரகிக்க முடியவில்லையோ அவருக்கு மார்க்சியத்தின் அரிச்சுவடிக் கூடத் தெரியாது.''* வர்க்கப் போராட்டத்தின் தர்க்கம், பரஸ்பர அனுகூலமுள்ள அரசு உறவுகள் ஆகியவற்றால் சமரசங்கள் ஏற்பட்டால், இவை உழைப்பாளிகளின் அடிப்படை நலன்களுக்கு ஏற்றவையாக இருந்தால் இவை ஏற்புடையவை, பயனுள்ளவை.

---

* V. I. Lenin, *Collected Works*, vol. 13, p. 23.

ஆனால் கம்யூனிஸ்டுகள் சமரசத்திற்காக சமர சத்தை அடைய என்றுமே முயல மாட்டார்கள், இதை என்றுமே சுய லட்சியமாக அவர்கள் வைப்பதில்லை. சமரசத்தை மிகைப்படுத்துவதா னது கோட்பாட்டு ரீதியான வர்க்க நிலைகளை விட்டுக் கொடுக்க தவிர்க்க இயலாதவாறு இட்டுச் செல்லும், கட்சியின் கரங்களைக் கட்டிப் போடும், கட்சியை வர்க்கத்திடமிருந்தும் மக்கள் திரளினரிடமிருந்தும் பிரிக்கும். இப்படிப்பட்ட சமரசத்தைப் புரட்சி சக்திகள் ஏற்புடையவை யல்ல என்று கூறி நிராகரிக்கின்றன. ''நாம் நம் பாதையில் நடைபோடுகின்றோம், நாம் முற்போக்கு வர்க்கத்தின் கட்சியாகத்தான் இருப் போம். இவ்வர்க்கம் இருபொருள் உள்ள கோ ஷம் ஒன்றைக் கூட மக்கள் முன் வைக்காது, பூர்ஷ்வாக்களின் எந்த ஒரு மோசமான காரியத் துடனும் நேரடியாகவோ, மறைமுகமாகவோ தன்னை இணைத்துக் கொள்ளாது, எல்லா சந்தர்ப்பங்களிலும், போராட்டம் எப்படி முடிந் தாலும் இதனால் புரட்சியின் நலன்களைக் காத்து நிற்க முடியும்'' என்று லெனின் எழுதி னார்.* சமரசங்கள், அவற்றின் பாலான அணுகுமுறை குறித்த லெனினின் கருத்துகள் இவைதான்.

எந்த எல்லைகளுக்கு அப்பால் சமரசம் சாத் தியமில்லையோ அந்த எல்லைகளை மார்க்சிய-லெனினியம் திட்டவட்டமாக வரையறுத்தது. எந்த எல்லைக்குப் பின் சமரசம் என்பது தன்

* V. I. Lenin, *Collected Works*, vol. 11, p. 19.

எதிர்மறையாகுமோ, எதற்குப் பின் அது நன் மையைத் தராமல் தீமையைத் தருமோ அந்த எல்லையை — அது மாறக் கூடியது, ஓரளவு நிபந் தனைக்குட்பட்டது — எப்படி நிர்ணயிப்பது? சந் தர்ப்பவாதத் தவறுகளுக்கு எப்படி இடமளிக் காமலிருப்பது, எப்படிக் கோட்பாடுகளில் இணங் கிப் போகாமலிருப்பது? வாழ்க்கையில் எல்லா சந்தர்ப்பங்களுக்கும் ஏற்ற தயாரான சிபாரிசு கிடையாது என்றார் வி. இ. லெனின். எல்லாம் திட்டவட்டமான வரலாற்றுச் சூழ்நிலையைப் பொறுத்தது. எனவே புரட்சிகர வர்க்கத்தின் அரசியல் தலைவர்கள் புறவயச் சூழ்நிலைகளை விஞ்ஞான பூர்வமாகப் பகுப்பாய்வு செய்யும் கலையைக் கற்க வேண்டும், எந்த சந்தர்ப்பங் களில் சமரசங்கள் அனுமதிக்க இயலாதவையோ (ஏனெனில் இவை சந்தர்ப்பவாதத்திற்குச் சம மானவை) அந்த திட்டவட்டமான சந்தர்ப்பங் களைக் கண்டறிந்து அவற்றை அம்பலப்படுத்தி விமர்சிக்க வேண்டும்.

வர்க்கப் போராட்டத்தின் நீண்ட கால அனு பவம்தான் ஒரு குறிப்பிட்ட சமரசத்தின் உண் மையான தன்மையைச் சரிவர நிர்ணயிக்கும் திறமையை அளிக்கும்; இந்த அனுபவம் கம்யூ னிஸ்டுக் கட்சிக்குத்தான் உண்டு. ''அவரவரும் தமது சொந்த அறிவைப் பயன்படுத்திக் கொண்டு, அந்தந்தச் சந்தர்ப்பத்திலும் தமக் குரிய நிலையை வகுத்துக்கொள்ளும் ஆற்ற லுடையவராய் இருத்தல் வேண்டும். குறிப்பிட்ட ஒரு வர்க்கத்தின் சிந்தனை ஆற்றலுடைய எல் லாப் பிரதிநிதிகளின் நீடித்த, விடாப்பிடியான,

பல்வேறுபட்ட, சர்வாம்ச முயற்சிகளின் மூலம் சிக்கலான அரசியல் பிரச்சினைகளுக்குச் சீக்கிர மாகவும் பிழையின்றியும் தீர்வு காண்பதற்குத் தேவையான அறிவும் அனுபவமும், இவற்றுடன் கூட அரசியல் நுட்பத் திறனும் பெற வேண்டியது உண்மையில் கட்சி நிறுவனத்துக்கும், தலைமைப் பதவி வகிப்பதற்குள்ள தகுதியுடைய கட்சித் தலைவர்களுக்குமுள்ள கடமைகளில் ஒன் றாகும்.'' *

சமரசங்கள், உடன்படிக்கைகளைச் செய்து கொள்ள அனுமதிக்கும் சில பொது நிபந்தனை களை மார்க்சிய-லெனினிய ஆசான்கள் சுட்டிக் காட்டினர்; பின்வரும் சந்தர்ப்பங்களில் புரட்சிக் கட்சி சமரசங்கள், உடன்படிக்கைகளைச் செய்து கொள்ளலாம்:

புரட்சிக் கட்சியின் சித்தாந்த, அரசியல் சுதந் திரம் முழுமையாக அப்படியே இருக்க வேண்டும், இதன் தத்துவார்த்த, வேலைத்திட்டக் கோட் பாடுகள் மீறப்படக் கூடாது;

தொழிலாளி வர்க்கத்தின், சர்வதேசத் தொழி லாளர் இயக்கத்தின் அடிப்படை, வர்க்க நலன் களுக்கு எவ்விதப் பங்கமும் நேரக் கூடாது;

மக்கள் திரளினரின் மத்தியில் கட்சியின் செல் வாக்கை மேலும் தொடர்ந்து வளர்க்கவும், வர்க்கப் போராட்டம் வளரவும், பாட்டாளி கள், உழைப்பாளிகளின் அரசியல் உணர்வை வளர்க்கவும் ஏற்ற சூழ்நிலை நிலவ வேண்டும்.

---

* வி. இ. லெனின், தேர்வு நூல்கள், தொகுதி 10, பக்கங்கள் 263 – 264.

உடன்படிக்கைகள் செய்து கொள்ளும் மார்க்சிய-லெனினியக் கட்சிகளுக்குக் கூட்டாளிகளை விமர்சிக்கவும், கூட்டு லட்சியத்திற்கு முரண்பாடான நடவடிக்கைகளில் அவர்கள் இறங்கும் போது அவர்களைக் கண்டிக்கவும் முழு உரிமையுண்டு. உடன்படிக்கை தொழிலாளி வர்க்கத்தின் நலன்களுக்கோ, புதிய நிலவரத்திற்கோ பொருந்தி வராவிட்டாலோ, கூட்டாளி தான் ஏற்ற உறுதிமொழிகளிலிருந்து மீறினாலோ உடன்படிக்கை முறிக்கப்படலாம், அப்போது சமரசக் குலைப்பிற்கு யார் காரணம் என்று உழைப்பாளிகளுக்கு விளக்க வேண்டும்.

சந்தர்ப்பவாதிகள் சமரசம் செய்து கொள்ளும் போது கோட்பாடுகள் விட்டுக் கொடுக்கப்படுகின்றன, இது வர்க்க எதிரிகளுடனான இணக்கக் கொள்கையாக மாறுகிறது, இது தொழிலாளர் இயக்கத்தை வலுப்படுத்தாமல் வலுக்குன்றச் செய்கிறது. வலதுசாரி சோஷலிஸ்டுகளின் தலைவர்கள் பூர்ஷ்வாக் கட்சிகளுடன் செய்து கொண்ட சமரசங்கள் இறுதியில் சோஷலிசத்திற்கான போராட்டத்தை நடைமுறையில் கைவிட இட்டுச் சென்றதை வரலாறு காட்டுகிறது. கம்யூனிஸ்டுகளோ, வெகுஜன இயக்கத்தை வளர்க்கவும் ஜனநாயக சக்திகளை அணிதிரட்டவும் விடுதலைப் போராட்டத்தில் தொழிலாளி வர்க்கத்தின் நிலையை வலுப்படுத்தவும் தான் சமரசங்களைப் பயன்படுத்துகின்றனர்.

சமரசங்களை செய்து கொள்ளும் பொழுது "எல்லா தேசங்களுக்கும் ஒரே மாதிரியாக இருக்கும் பாட்டாளி வர்க்கப் போராட்டம், பாட்



9-207

டாளி வர்க்க சர்வாதிகாரம் எனும் விஷயங் களில், ஆதாரமான, அடிப்படையான விஷயங் களில்'' * விட்டுக் கொடுக்கக் கூடாது என்றார் வி. இ. லெனின். மார்க்சிய சித்தாந்தம், பாட் டாளி வர்க்க சர்வதேசியவாதக் கோட்பாடு கள், சமூக, தேசிய விடுதலைக்கான போராட் டத்தில் தொழிலாளி வர்க்கத்தின் வரலாற்று வெற்றிகள், சோஷலிசத்தையும் கம்யூனிசத்தை யும் வெற்றிகரமாகக் கட்டுவதற்கான நிபந்தனை என்ற வகையில் சமாதானம் ஆகியவற்றில் விட் டுக் கொடுக்கக் கூடாது. அதே நேரத்தில் புரட்சி கர சமரசங்களையும் உடன்படிக்கைகளையும் திறமையாகப் பயன்படுத்தும் அவசியத்தை மறப் பதானது புரட்சியாளருக்கு மிகப் பெரும் ஆபத் தாக முடியும் என்றார் லெனின்.

மூன்று ருஷ்யப் புரட்சிகளில் பாட்டாளி வர்க்கக் கட்சிக்கும் பாட்டாளிகள் அல்லாத பிரிவினர், போக்குகளுக்கும் இடையில் புரட்சிகர உடன்படிக்கைகள், சமரசங்களில் போல்ஷிவிக்கு களுக்குப் பெரும் அனுபவம் கிட்டியுள்ளது. ''போல்ஷிவிசத்தின் வரலாறு பூராவிலும், அக் டோபர் புரட்சிக்கு முன்பும் சரி, பிற்பாடும் சரி, முதலாளித்துவக் கட்சிகள் உட்பட பிற கட்சிகளுடன் வளைந்து கொடுப்பதற்கும் இணக் கங்களுக்கும் சமரசங்களுக்குமான உதாரணங்கள் நிறைய இருக்கின்றன.'' * * இந்த சமரசங்கள், உடன்படிக்கைகளில் முக்கியமானவற்றை லெனின்

---

* அதே நூல், பக்கம் 131.

* * அதே நூல், பக்கம் 266.

தன் நூலில் சுட்டிக் காட்டுகிறார்.

முதலில் இது ''சட்ட பூர்வமான மார்க்சிஸ்டுகளுடனான'' (1895) உடன்படிக்கையாகும்; இவர்கள் பூர்ஷ்வா அறிவுஜீவிகள், மார்க்சியத்தைத் திரித்து சட்ட பூர்வமான பத்திரிகைகளில் எழுதினர் (பி. ஸ்துரூவே, இதரர்). 1905 முதல் போல்ஷிவிக்குகள் ''மிதவாத முதலாளி வர்க்கத்தாருக்கும் ஜாரிசத்துக்கும் எதிராய்த் தொழிலாளி வர்க்கத்துக்கும் விவசாயிகளுக்குமிடையிலான கூட்டணியை இடையறாது ஆதரித்து வந்துள்ளனர். ஆயினும் அவர்கள் ஜாரிசத்துக்கு விரோதமாய் முதலாளி வர்க்கத்தாருக்கு ஒரு போதும் ஆதரவளிக்க மறுத்ததே இல்லை... முதலாளித்துவ-புரட்சிகர விவசாயிக் கட்சியினரான 'சோஷலிஸ்டுப் புரட்சியாளர்களுக்கு' எதிரான எங்களது ஓயாத சித்தாந்த, அரசியல் போராட்டத்தைக் கைவிடவே இல்லை; இவர்கள் தம்மைப் பொய்யாக சோஷலிஸ்டுகள் என்று வர்ணித்துக் கொள்ளும் குட்டி முதலாளித்துவ ஜனநாயகவாதிகளாவர் என்பதைத் தொடர்ந்து அம்பலப்படுத்தி வந்தோம்.''* ஆனால் 1907இல் டூமாவிற்கு தேர்தல் நடந்த பொழுது ''சோஷலிஸ்டுப் புரட்சியாளர்களுடன்'' குறுகிய கால சம்பிரதாய அரசியல் கூட்டணியை ஏற்படுத்துவது பற்றி போல்ஷிவிக்குகள் உடன்படிக்கை செய்து கொண்டனர்.

1903 – 1912இல், லெனினின் வார்த்தைகளில் சொன்னால் ''சில ஆண்டுகளில் நாங்கள் மென்ஷி

---

* அதே நூல், பக்கம் 269.

விக்குகளுடன் ஒரே சமூக-ஜனநாயகக் கட்சியில் முறைப்படி ஒன்றுபட்டிருந்தோம்'' *; முதலாவது உலக யுத்தத்தின் பொழுது '' 'காவுத்ஸ்கிவாதிகளுடனும்', இடதுசாரி மென்ஷிவிக்குகளுடனும் (மார்த்தவ்), 'சோஷலிஸ்டுப் புரட்சியாளர்களில்' ஒரு பகுதியோருடனும் (செர்னோவ், நத்தன்சோன்) சிற்சில சமரசங்கள் செய்து கொண்டோம்; ஸிம்மர்வால்டிலும் கின்தாலிலும் நாங்கள் இவர்களுடன் சேர்ந்திருந்தோம், கூட்டு அறிக்கைகள் வெளியிட்டோம்''; ஆனால் ''சந்தர்ப்பவாதிகளும் பாட்டாளி வர்க்கத்தினுள் முதலாளித்துவச் செல்வாக்கினைப் புகுத்துவதற்கான சாதனமாய் இருந்தோருமான அவர்களுக்கு எதிராக எங்களுடைய சித்தாந்த, அரசியல் போராட்டத்தை'' ** போல்ஷிவிக்குகள் என்றுமே கைவிடவில்லை என்றார் அவர்.

''அக்டோபர் புரட்சி நடைபெற்ற அதே கணத்தில் நாங்கள் குட்டி முதலாளித்துவ விவசாயி மக்களுடன் முறைப்படி இல்லாவிட்டாலும், மிகவும் முக்கியமான (மிகவும் வெற்றிகரமானதுங்கூட) அரசியல் கூட்டணி வகுத்துக் கொண்டோம். சோஷலிஸ்டுப் புரட்சியாளர்களின் வேளாண்மைத் துறை வேலைத்திட்டத்தை எந்தவொரு மாற்றமுமின்றி அப்படியே முழுமையாக ஏற்றுக் கொள்வதன் வாயிலாக இதனைச் செய்தோம்'' —அதாவது, ''விவசாயிகளுடன் நாங்கள் உடன்பாடு காண விரும்பினோமே அன்றி அவர்களை

---

* அதே நூல், பக்கம் 270.

** அதே இடம்.

நசுக்கி ஒடுக்கிவிட விரும்பவில்லை என்பதை அவர்களுக்கு நிரூபித்துக் காட்டும் பொருட்டு மறுக்க முடியாததொரு சமரசம் செய்து கொண் டோம்'' * என்று ''இடதுசாரி'' கம்யூனிஸ்டு களுக்கு லெனின் சுட்டிக் காட்டுகிறார்.

1917 – 1918இல் போல்ஷிவிக்குகள், இடதுசாரி எஸ்ஸேர்களுடன் — இவர்கள் 1917 நவம்பர் 10 முதல் 1918 மார்ச் 18 வரை சோவியத் அர சாங்கத்தில் இடம் பெற்றிருந்தனர் – ''முறைப் படியான அரசியல் கூட்டணி'' வகுத்துக் கொண் டனர். இந்த சமரசம் முறிக்கப்பட்டதற்கு போல் ஷிவிக்குகள் காரணமல்ல. பிரெஸ்ட் சமாதானம் செய்து கொள்ளப்பட்ட பின் இடதுசாரி எஸ் ஸேர்கள் உடன்படிக்கையை முறித்தனர், 1918 ஜூலையில் சோவியத் ஆட்சிக்கு எதிராக ஆயுதக் கிளர்ச்சியில் இறங்கினர்.

அக்டோபர் புரட்சியின் வெற்றிக்குப் பின் இளம் சோவியத் குடியரசின் நிலை – இதுதான் முதலாளித்துவ வல்லரசுகளுக்கிடையில் ஒரே சோஷலிச அரசாக இருந்தது – முதல் பாட்டாளி வர்க்க அரசின் நலன் கருதி ஏகாதிபத்திய அரசு களுக்கு இடையிலான முரண்பாடுகளின் விஷ யத்தில் எச்சரிக்கையான, நெளிவு சுழிவான சர்வதேசக் கொள்கையைக் கடைபிடிக்குமாறு கோரியது; முதலாளித்துவ உலகில் இதை நிறை வேற்றும் வடிவங்களையும் முதலாளித்துவ நாடு களுடன் சுமுகமான உறவுகளை நிலைநாட்டு

---

* அதே இடம்.

வதற்கான விவேகமான வழிகளையும் தேட வேண்டியிருந்தது.

அரசியலில் லெனின் ஒரு மாபெரும் யதார்த்த வாதியாக இருந்தார், ஆனால் இந்த யதார்த்த வாதம் மார்க்சியத்தின் அசைக்க முடியா அடித் தளத்தை ஆதாரமாகக் கொண்டிருந்தது. அக்டோபர் புரட்சி வெற்றியடைவதற்கு நீண்ட காலம் முன்னரே, வரலாற்று நிகழ்ச்சிப் போக் கைப் பற்றிய ஆழ்ந்த விஞ்ஞான ரீதியான பகுப்பாய்வின் அடிப்படையில், முதலில் ஒரு சில அல்லது ஒரு தனிப்பட்ட நாட்டில் மட்டும் சோஷலிசம் வெற்றியடைய வாய்ப்புண்டு என்ற முடிவிற்கு லெனின் வந்தார். இன்று நம் காலத் தில் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள கோட்பாடாகிய சமாதான சகவாழ்வுக் கோட் பாட்டை லெனின்தான் பிரகடனப்படுத்தினார், வேறுபட்ட சமூக அமைப்புகளையுடைய அரசு களுக்கு இடையிலான சமாதான சகவாழ்வுக் கோட்பாட்டின் அடிப்படைகளைத் தத்து வார்த்த ரீதியாக உருவாக்கி, இவற்றை நடை முறையில் அமல்படுத்தும் வழிகளை (நிலையான சமாதானம், படைக்கலைப்பு, யுத்தங்களைத் தவிர்த்தல் ஆகியவற்றிற்கான போராட்டம்தான் இந்த வழிகளாகும்) சுட்டிக் காட்டினார். இது லெனினின் மாபெரும் வரலாற்றுச் சேவை யாகும். சோஷலிச அரசு அவசியமேற்படும் போது பூர்ஷ்வா அரசுகளுடன் சமரசங்களைச் செய்து கொள்ளலாம், செய்து கொள்ள வேண் டும் என்றார் லெனின். ‘‘பாட்டாளி வர்க்கப் புரட்சியின் ஆதரவாளன் முதலாளிகளுடன் சமர

சங்களை அல்லது உடன்படிக்கைகளைச் செய்து கொள்ளலாம். எல்லாமே எந்த சந்தர்ப்பத்தில் எப்படிப்பட்ட உடன்படிக்கை செய்து கொள்ளப் படுகிறது என்பதைப் பொறுத்தது.''*

சமரசங்களைப் பயன்படுத்தும் மார்க்சிய செயல்தந்திரக் கலைக்குத் தக்க எடுத்துக்காட்டு பிரெஸ்த் சமாதானமாகும். சோஷலிசப் புரட்சி யின் சாதனைகளைப் பேணிக் காக்கும் பொருட்டு சோவியத் அரசாங்கம், ஜெர்மன் ஏகாதிபத்தியம் வைத்த மிகக் கடும் நிபந்தனை களை ஏற்க வேண்டி வந்தது. அந்தத் தருணத்தில் சமரசத்தை மறுத்தால் அது சோவியத் ஆட்சியை அழித்து விடும் அபாயமிருந்தது. ''அது ஏகாதிபத் தியவாதிகளுடன் செய்து கொள்ளப்பட்ட ஒரு சமரசம் என்பது மெய்தான், ஆனால் அப்போ திருந்த நிலைமைகளில் செய்தே ஆக வேண்டி யிருந்த ஒரு சமரசமாகும்.''** வி. இ. லெனினின் அசாதாரண அரசு, கட்சி ஞானம், உறுதி, துணிவு ஆகியவற்றின் பயனாய், ஏகாதிபத்திய வாதிகளுடன் ஒப்பந்தங்களைச் செய்து கொள்ளக் கூடாது என்று எதிர்த்த ''இடதுசாரி'' கம்யூனிஸ்டுகளின் கடும் எதிர்ப்பை முறியடித்து ஜெர்மனியுடன் சமாதான ஒப்பந்தம் செய்து கொள்ள முடிந்தது. இதன் பயனாய் அத்தருணத் தில் பலவற்றை இழக்க நேரிட்டாலும், சோவியத் நாட்டால் தன்னை சோஷலிசப் புரட்சியின்

---

* V. I. Lenin, *Collected Works*, vol. 30, p. 491.

** வி. இ. லெனின், தேர்வு நூல்கள், தொகுதி 10, பக்கம் 209.

தொட்டிலாகக் காத்துக் கொள்ள முடிந்தது, வலிமையடையும் வாய்ப்பும் நேரமும் இதற்குக் கிட்டின, இதனால்தான் ஆக்கிரமிப்பாளர்கள், வெண் படையினருக்கு எதிராக நடந்த மூன்றாண்டு இரத்தக் களரியான போராட்டத்தில் வெற்றி பெற முடிந்தது. பிரெஸ்ட் சமாதான ஒப்பந்தம் சரியான செயல்தந்திர நடவடிக்கையாக இருந்தது, இது உலகப் புரட்சியின் வளர்ச்சியில் பெரும் பங்காற்றியது.

சமரசங்களின் பாலான லெனினிய அணுகுமுறையைப் புரிந்து கொள்வதில் 1918 ஆகஸ்டு 20இல் அமெரிக்கத் தொழிலாளர்களுக்கு லெனின் எழுதிய கடிதம் கணிசமாக உதவுகிறது: ''நிராயுதபாணியும் படைக்கலைப்புச் செய்ததுமான ருஷ்யாவை 1918 பிப்ரவரியில் ஜெர்மன் ஏகாதிபத்தியக் கொள்ளையர் தமது படைகளால் தாக்கிய பொழுது, பிரெஞ்சு முடியரசுவாதிகளுடன் ஓர் 'உடன்படிக்கை' செய்து கொள்ள நான் சற்றும் தயங்கவில்லை. சொல்லில் போல்ஷிவிக்குகளிடம் பரிவும், செயலில் பிரெஞ்சு ஏகாதிபத்தியத்திற்கு விசுவாசமும் பற்றுறுதியும் தோற்றுவித்த பிரெஞ்சு ராணுவ அதிகாரி கேப்டன் சதூல் என்னைக் காண பிரெஞ்சு அதிகாரி டி லுபெர்சாக்கை அழைத்து வந்தார். 'நான் ஒரு முடியரசுவாதி, எனது ஒரே நோக்கம் ஜெர்மனியின் தோல்வியை உறுதி செய்வதே' என்று டி லுபெர்சாக் என்னிடம் கூறினார்.... இது, ஜெர்மன் படையெடுப்பைத் தடங்கல் செய்யவும், ரயில்வேப் பாதைகளை வெடி வைத்துத் தகர்க்கவும், பிரெஞ்சு ராணுவ அதிகாரி

களான வெடிமருந்து சாதன நிபுணர்கள் நமக்குச் சில சேவைகள் புரிவது சம்பந்தமாக டி லுபெர் சாக்குடன் ஓர் 'உடன்படிக்கை' செய்துகொள் வதிலிருந்து என்னைச் சிறிதளவும் தடுக்கவில்லை. இது வர்க்க உணர்வுடைய ஒவ்வொரு தொழி லாளியும் ஏற்றுக்கொள்ளும் 'உடன்படிக்கைக்கு' ஓர் உதாரணம், சோஷலிசத்தின் நலன்களுக்கு சாதகமான ஓர் உடன்படிக்கை. நாங்கள் ஒவ் வொருவரும் தமது 'கூட்டாளியை' சுயவிருப் பத்தோடு தூக்கிலேற்றுவோம் என்பதை நாங் கள் அறிந்திருந்த போதிலும் பிரெஞ்சு முடியரசு வாதியும் நானும் கை குலுக்கினோம். சில காலத்திற்கு எங்கள் நலன்கள் தற்செயலாக இசைந்திருந்தன. முன்னேறிக் கொண்டு வந்த, பேராசை வெறிபிடித்த ஜெர்மானியருக்கு எதி ராக நாங்கள் ருஷ்யாவின் மற்றும் உலக சோஷ லிசப் புரட்சியின் நலன்களுக்காக இதற்குச் சம மான பேராசை வெறிபிடித்த இதர ஏகாதிபத் தியவாதிகளின் எதிர் நலன்களைப் பயன்படுத் தினோம்.'' *

இரண்டாவது உலக யுத்தத்தின் பொழுது தோற்றுவிக்கப்பட்ட ஹிட்லர் எதிர்ப்பு கூட்டணி சர்வதேச அரங்கில் சமரசத்திற்குத் தக்க எடுத்துக்காட்டாகும். இக்கூட்டணியில் சோவி யத் யூனியன், அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய நாடுகள் இடம் பெற்றிருந்தன.

முதலாளித்துவ நாடுகளின் கம்யூனிஸ்டுக் கட்சி

---

* வி. இ. லெனின், தேர்வு நூல்கள், தொகுதி 8, பக்கங்கள் 288 – 289.

கள் உழைப்பாளிகளின் ஒற்றுமைக்கான போராட்டத்தில் போல்ஷிவிசத்தின் அனுபவத்தைப் பரவலாகப் பயன்படுத்துகின்றன. இன்று பல்வேறு சமூக பொருளாதார பிரச்சினைகளில் ஒத்த கருத்தையுடைய எல்லா ஜனநாயக சக்திகளையும் அணிதிரட்டி பொது எதிரியாகிய ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போராட்டத்தை விரிவுபடுத்த சமரசங்களும் உடன்படிக்கைகளும் அவசியம்.

பல முதலாளித்துவ நாடுகளில் கம்யூனிஸ்டுக் கட்சி, சோஷலிஸ்டுக் கட்சி, சமூக-ஜனநாயகக் கட்சி போன்ற பல தொழிலாளர் கட்சிகளும், பல தொழிற்சங்கங்களும் இருப்பது தெரிந்ததே. ஒவ்வொரு கட்சிக்கும், தொழிற்சங்கத்திற்கும் குறிப்பிட்ட உழைப்பாளி பிரிவினர் மத்தியில் செல்வாக்கும் ஆதரவும் உண்டு. இது ஒரு புறவயக் காரணியாகும்; ஆனால் தொழிலாளி வர்க்கத்தில் உள்ள இப்படிப்பட்ட பிரிவுகள் பூர்ஷ்வாவிற்குத்தான் ஆதாயமானது. இதனால் தொழிலாளர் இயக்க அணிகள் பிளவுபடுகின்றன, இது உழைப்பாளிகளில் ஒரு பிரிவினரை தன் சித்தாந்த செல்வாக்கின் கீழ் வைத்திருக்க பூர்ஷ்வாவிற்கு உதவுகிறது, தொழிலாளிகள் ஒன்றுபட்டு ஐக்கிய ஏகாதிபத்திய எதிர்ப்பு அணியைத் தோற்றுவிக்க இடையூறாக உள்ளது. தொழிலாளி வர்க்கம், எல்லா உழைப்பாளிகளின் ஒற்றுமைக்காகப் போராடும் கம்யூனிஸ்டுகள், உழைப்பாளிகளின் எல்லா பிரிவினர் மத்தியிலும் இயங்குகின்றனர், அதே சமயம் சோஷலிஸ்டுகள், சமூக-ஜனநாயகவாதிகளுடன் ஒத்துழைக்

கும் வழிகளைத் தேடுகின்றனர். லெனின் இந்த வழியை கம்யூனிஸ்டுகளுக்குச் சுட்டிக் காட்டினார். தொழிலாளர் இயக்கத்தில் ஒற்றுமையை ஏற்படுத்துவதற்காகப் "பாட்டாளி வர்க்கத்தாரின் பல்வேறு தொகுப்புகளுடனும் தொழிலாளர்களின் பல்வேறு கட்சிகளுடனும் இணக்கத்துக்கு..."* பாடுபடுமாறு அவர் புரட்சிகரக் கட்சிகளுக்குக் கூறினார்.

*1921* ஜூலையில் கம்யூனிஸ்டு அகிலத்தின் மூன்றாவது காங்கிரஸ், தொழிலாளி வர்க்கத்தை ஆதாரமாகக் கொண்டு செயல்படும் மற்ற கட்சிகளை விமர்சிப்பதுடன் நின்று விடாமல், பாட்டாளிகளின் உடனடி நலன்களுக்காகக் கூட்டாகப் போராடுமாறு கம்யூனிஸ்டுக் கட்சிகளுக்கு சிபாரிசு செய்தது. நான்கு மாதங்கள் கழித்து கம்யூனிஸ்டு அகிலத்தின் நிர்வாகக் குழுவின் தலைமை சபை ஐக்கிய முன்னணி செயல் தந்திரம் பற்றிய ஆய்வுரைகளை லெனினின் மிக முக்கிய பிற்சேர்க்கையுடன்—மக்கள் திரளினரை தம் பக்கம் இழுப்பதற்கான போல்ஷிவிக் போராட்ட அனுபவம் சோதர கட்சிகளுக்கு எவ்வளவு முக்கியம் என்பதைப் பற்றியது இது—ஏற்றது. அக்டோபர் புரட்சியின் வெற்றிக்கு முன் மென்ஷிவிக்குகளின் சீர்திருத்தவாதத்திற்கு எதிராக அயராது போராடிய போல்ஷிவிக்குகள் அதே சமயம் புரட்சிகர நடைமுறையின் பல்வேறு திட்டவட்டமான பிரச்சினைகள் குறித்து

---

* வி. இ. லெனின், தேர்வு நூல்கள், தொகுதி *10*, பக்கம் *274*.

அவர்களுடன் பல முறை உடன்படிக்கைகளை யும் செய்து கொண்டனர். ''மூலதனத்திற்கு எதிரான போராட்டத்தில் மேன்மேலும் பரவலான தொழிலாளர் திரளினரை ஈடுபடுத்துவதுதான் ஐக்கிய முன்னணி செயல்தந்திரத்தின் லட்சியமும் உட்பொருளுமாகும். இத்தகையப் போராட்டத்தைக் கூட்டாக நடத்த முன்வருமாறு இரண்டாவது, இரண்டரையாவது அகிலங்களின் தலைவர்களுக்கு மீண்டும் மீண்டும் அறைகூவல் விடுக்கவும் கூட தயங்கக் கூடாது'' என்றார் லெனின். *

1922இல் லெனின் மீண்டும் ஐக்கிய முன்னணி செயல்தந்திரம் பற்றிய பிரச்சினைக்குத் திரும்பி வந்து, சீர்திருத்தவாதிகளுடன் சித்தாந்த ரீதியில் முறித்துக் கொண்ட கம்யூனிஸ்டுகள் உடனடி அரசியல் கடமைகளை நிறைவேற்ற — ஏகாதிபத்திய எதிர்ப்பு முன்னணியை விரிவுபடுத்த — அவர்களுடன் உடன்படிக்கைகளைச் செய்து கொள்ள வேண்டுமென்று மீண்டும் கோடிட்டுக் காட்டினார். ''கீழ்மட்டத்தில்'', உழைப்பாளிகள் மத்தியில் ஒற்றுமைக்காகப் பாடுபடும் அதே சமயம் ''மேல்மட்டத்திலும்'' ஒற்றுமைக்காகப் பாடுபட வேண்டியதன் அவசியத்தை லெனின் சுட்டிக் காட்டினார். மூலதனத்திற்கு எதிராக, சமூக முன்னேற்றத்திற்காக நடத்தப்படும் போராட்டத்தில் மேன்மேலும் பரவலான தொழிலாளர்கள், உழைப்பாளிகளின் வெகுஜன ஸ்தாபனங்கள், சீர்திருத்தவாதக் கட்சிகள், தொழிற்சங்கங்

---

* V. I. Lenin, *Collected Works*, vol. 42, p. 411.

களை ஈடுபடுத்துவதுதான் முக்கியக் கடமை யாகும். சர்வதேச அரங்கில் தொழிலாளர் கட்சி களின் ஒத்துழைப்பைப் பற்றிக் கூறும் பொழுது லெனின் இதே கருத்துகளைத்தான் கொண்டிருந் தார். கம்யூனிஸ்டு அகிலம், இரண்டாவது அகி லம், இரண்டரையாவது அகிலம் ஆகிய மூன்று அகிலங்களின் மகாநாடு தயாரான பொழுது, நிகழ்ச்சி நிரலின் விவாதத்தில், ''சம்பந்தப்பட்ட மூன்று தரப்புகளில் ஒவ்வொன்றின் பத்திரிகை களின் அதிகாரப் பூர்வமான அறிக்கைகளிலும் ஒப்புக் கொள்ளப்பட்ட துறையில் தொழிலாளர் திரளினரின் நேரடியான நடைமுறை கூட்டு நடவடிக்கை'' * பிரச்சினைகளை முக்கியமாகச் சேர்க்குமாறு கம்யூனிஸ்டு அகிலத்தின் தூதுக் குழுவுக்கு லெனின் சிபாரிசு செய்தார்.

*1935* ஆகஸ்டில் பாசிச அபாயம் அதிகரித்து வந்த பொழுது, பாசிசத்திற்கு எதிரான கூட்டுப் போராட்டத்திற்காக சமூக-ஜனநாயகவாதிகளு டன் உடன்படிக்கைகளை அடையும் வழிகளைத் தேடுமாறு கம்யூனிஸ்டு அகிலத்தின் 7ஆவது காங்கிரஸ் கம்யூனிஸ்டுகளுக்கு அறைகூவல் விடுத் தது.

முதலாளித்துவத்தின் பொது நெருக்கடி ஆழ மடைந்து வரும் பொழுது, இது பொருளா தாரம், அரசியல், சித்தாந்தத் துறைகளுக்குப் பரவும் பொழுது தொழிலாளி வர்க்கத்தின் கூட்டு நடவடிக்கைகளின் அவசியம் அதிகரிக் கிறது. கடந்த பத்தாண்டுகளில் நவீன பூர்ஷ்வா

---

* *Ibid.*, p. 393.

சமுதாயத்தின் எல்லா சமூக முரண்பாடுகளும் — வேலையில்லாத் திண்டாட்டம், மக்களில் கணிச மான பிரிவினரின் ஏழ்மை, ஊதியக் குறைவு, சமூக வசதி, கல்வி, மருத்துவம், வீடு கட்டு மானம், புறச் சூழல் பாதுகாப்பு ஆகியவற்றின் நெருக்கடி — பெரிதும் கூர்மையடைந்துள்ளன. ஏகாதிபத்தியம் தனது உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கையால் தன்னை ஒவ்வொரு நாட்டிலும் உள்ள மிகப் பெரும்பாலான மக்களுக்கு எதிராக வைத்துக் கொண்டது.

ஜனநாயக சீர்திருத்தங்களைச் செய்ய வேண் டும் என்றும் தொழில் நிறுவனங்களில் உழைப் பையும் உற்பத்தியையும் ஒழுங்கமைப்பதிலும் தேசிய அளவில் அடிப்படை சமூக பொருளாதார பிரச்சினைகளைத் தீர்ப்பதிலும் தொழிற்சங்கங் களின் பங்கை விரிவுபடுத்த வேண்டுமென்றும் கம்யூனிஸ்டுகள் மேன்மேலும் உறுதியுடன் கோரு கின்றனர். தொழிலாளி வர்க்கத்தினர் மட்டு மின்றி கோடானு கோடி உழைப்பாளி திரளின ரும் இக்கோரிக்கைகளுக்கு மேன்மேலும் ஆதர வளிக்கின்றனர். எல்லா ஜனநாயக சக்திகளும் — இவற்றில் கிட்டத்தட்ட மிகப் பெரும்பான்மை யான மக்கள் அடங்கியுள்ளனர் — பிளவுண்டு நிற் காமல் ஒன்றுபட்டு, ஒற்றுமையாக இயங்க வேண் டும் என்று கம்யூனிஸ்டு இயக்கம் முயலுகிறது. எனவேதான் தொழிலாளி வர்க்கத்தின் வெகு ஜன கூட்டணிகள், புரட்சிகர சமரசங்கள், உடன்படிக்கைகள் பற்றிய லெனினிய செயல்தந் திரம் வர்க்கப் போராட்டத்தின் இன்றைய கட்டத்திலும் தன் முக்கியத்துவத்தை இழக்க

வில்லை. தொழிலாளி வர்க்கத்தை (இதில் குறிப் பிட்ட பகுதியினர் இன்னமும் பூர்ஷ்வா சித்தாந் தத்தின் தாக்கத்தின் கீழ் உள்ளனர்) ஒன்று திரட்டுவது, பொது லட்சியங்களுக்கான போராட்டத்தில் இதைச் சுற்றி எல்லா முற் போக்குச் சக்திகளையும் அணிதிரட்டுவது — இது தான் வரலாற்று வளர்ச்சியே சர்வதேச கம்யூ னிஸ்டு இயக்கத்தின் முன் வைத்துள்ள புறவயக் கடமையாகும். தேசிய அம்சங்கள், சிறப்பியல்பு களைக் கணக்கில் கொண்டு இதை நிறைவேற் றும் வழிகளை கம்யூனிஸ்டுகள் தேடுகின்றனர். எந்த ஸ்தாபனங்கள், கட்சிகளின் வேலைத்திட் டங்கள் சீர்திருத்தவாதத் தன்மையைக் கொண் டிருந்தாலும் மூலதனத்திற்கு எதிரான, சோஷ லிசத்திற்கு ஆதரவான போராட்டத்தை தம் லட்சியமாக ஏதாவதொரு வடிவில் பிரகடனப் படுத்துகின்றனவோ அந்த ஸ்தாபனங்களும் கட்சி களும்தான் கம்யூனிஸ்டுகளின் உண்மையான அர சியல் கூட்டாளிகளாக முடியும் என்பது இயற் கையே. தொழிலாளர் இயக்கத்தின் மீதும் பல மேற்கு ஐரோப்பிய தொழிற்சங்கங்களின் மீதும் பெரும் தாக்கம் செலுத்தும் சோஷலிஸ்டு மற்றும் சமூக-ஜனநாயக கட்சிகள் இங்கு குறிப்பிடப்படு கின்றன.

இதன் தொடர்பில், நம் நூற்றாண்டின் கடைசி 25 ஆண்டுகளில் பல்வேறு வகையான வெகுஜன ஜனநாயக இயக்கங்கள் தீவிரமாக வளர ஆரம்பித்துள்ளது கவனிக்கத் தக்கதொரு அம்சமாகும். இவற்றில் சில குறிப்பிட்ட ஜன நாயக சுதந்திரங்களைப் பாதுகாக்கின்றன, சில

தேசிய விடுதலை இயக்கத் தன்மையை உடையவை, சில சாதாரணமான யுத்த எதிர்ப்பு இயக்கங்களாகும். லெனின் தன் காலத்தில் இப்படிப்பட்ட இயக்கங்களைக் கவனமாக ஆராய்ந்தார். ''மிகவும் பல்வேறான, பல் வண்ணமுடைய, பல் தன்மையுடைய, வெளித் தோற்றத்திற்குப் பிளவுபட்டுக் காணப்படும் வெகுஜனப் போராட்டத்தின் புறவய உண்மையை'' அரசியலில் கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியம் என்று அவர் கருதினார். *

இன்று, லெனினின் வார்த்தைகளில் சொன்னால், ஜனநாயகத்தை மறுக்கும் ஏகபோகங்களுக்கும் ஜனநாயகத்தை நாடும் மக்கள் திரளினருக்கும் இடையில் ஆழ்ந்த மோதல் நிலவுவது கண்கூடு. அதாவது ஏகபோகங்களுக்கும் மக்கள் அனைவருக்கும் இடையில் லெனின் கண்டு பிடித்து சுட்டிக் காட்டிய முரண்பாடு இன்று அனைத்துலக, சர்வதேசியத் தன்மையைப் பெற்று வருகிறது. இது ஏகபோகங்களுக்கும் மனிதகுலம் முழுவதன் நலன்களுக்கும் இடையிலான முரண்பாடாக, ஏகாதிபத்தியத்திற்கும் எல்லா கண்டத்து மக்களுக்கும் இடையிலான முரண்பாடாக மாறி வருகிறது. இம்முரண்பாட்டில் வர்க்க, சமூக, பொது ஜனநாயக அம்சங்கள் எல்லாமே உள்ளன. எனவேதான் தனிப்பட்ட நாடுகளின் வரம்புகளில் மட்டுமின்றி சர்வதேசிய அளவிலும் ஜனநாயக இயக்கங்கள்

* V. I. Lenin, *Collected Works*, vol. 22, p. 356.

வளர்ந்து வருகின்றன. கிட்டத்தட்ட எல்லா வர்க்கங்கள், குழுக்களைச் சேர்ந்தோரும் இந்த இயக்கங்களில் பங்கேற்கின்றனர். இவர்கள் எல்லோருக்கும் திட்டவட்டமான சமூக லட்சியங்கள் உண்டென்று கூற முடியாது. உதாரணமாக தொழிலாளி வர்க்கம் பொது ஜனநாயக, மானுட லட்சியங்களுக்கான போராட்டத்தைத் தன் வர்க்க நலன்களுடன் இயல்பாக இணைக்கிறது. அதே நேரத்தில் ஜனநாயக இயக்கங்களில் பங்கேற்கும் பலருக்குத் தாம் எதற்கு எதிராகத் தீவிரமாகப் போராடுகின்றோமோ அவற்றின் வர்க்க அடிப்படைகள் கூடத் தெரியாது, இவர்கள் சோஷலிசத்தின் லட்சியங்களிலிருந்து தள்ளி நிற்பவர்கள். ஆனால் இவற்றையெல்லாம் பொருட்படுத்தாது இவர்கள் ஏகாதிபத்தியத்திற்கு எதிராயும், மக்களின் நலன்களுக்கு முரண்பாடான இதன் மானுட விரோத அம்சங்களுக்கு எதிராயும் பாரபட்சமின்றிப் போராடுகின்றனர். இவர்கள் தம் நடவடிக்கைகளால் நடைமுறையில் சமூக முன்னேற்றத்திற்கான போராட்டத்தில் தீவிரப் பங்கேற்கின்றனர்.

மாபெரும் அக்டோபர் புரட்சி வெற்றி பெற்ற பின் ஒரு சகாப்தம் பிறக்கும், ''அதில் எல்லா அம்சங்களிலும், அதாவது தேசிய இனப் பிரச்சினைகள் உட்பட சகலவித பொருளாதார, அரசியல் பிரச்சினைகள் குறித்தும் பல போராட்டங்கள் நடக்கும். இந்தத் தீர்க்கப்படாத எல்லாப் பிரச்சினைகளிலிருந்தும் வரும் மோதல்களின் மொத்தத்திற்கான தீர்வுதான் சமூகப் புரட்சி

யைத் தரும்''* என்றார் லெனின். இந்த லெனினிய கணிப்பை வாழ்க்கை மெய்ப்பித்து வருகிறது. இது சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சி வேலைத்திட்டத்தின் புதிய பதிப்பிலும் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளது. சோஷலிசம் நிலவாத நாடுகளில் வெகுஜன ஜனநாயக இயக்கங்களின் எழுச்சி நம் காலத்தின் குறிப்பிடத் தக்க அம்சம் என்று இதில் கூறப்பட்டுள்ளது. இந்த இயக்கங்கள் புறவய ரீதியில் முதலாளித்துவப் பிற்போக்கு வட்டங்களின் கொள்கைக்கு எதிரானவை, இவை சமூக முன்னேற்றத்திற்கான பொதுப் போராட்ட அலையில் ஒன்று கலக்கின்றன.

உலக சோஷலிச, தொழிலாளர் மற்றும் கம்யூனிஸ்டு இயக்கச் சக்திகள், விடுதலையடைந்த நாடுகளின் மக்கள், வெகுஜன ஜனநாயக இயக்கங்கள் ஆகியவற்றிற்கு இடையில் இப்படிப்பட்ட பரஸ்பரச் செயலாக்கம் சாத்தியமே, ஏனெனில் இவையனைத்தும் பொதுவான அக்கறைகளால் இணைக்கப்பட்டுள்ளன. சமாதானம், ஜனநாயகம், சமூக முன்னேற்றம் ஆகியவற்றிற்கான போராட்டம் குறித்த அக்கறைகள்தான், அதாவது ஏகாதிபத்தியத்திற்கும் அதன் ஆக்கிரமிப்பு, ஒடுக்குமுறைக் கொள்கைக்கும் எதிரான போராட்டம் குறித்த அக்கறைகள்தான் இவை. அதே சமயம், வெகுஜன ஜனநாயக இயக்கங்களில் பங்கேற்பவர்களிடையில் யதார்த்தமான

* வி. இ. லெனின், முழு நூல் திரட்டு, தொகுதி 54, பக்கம் 464 (ருஷ்ய மொழியில்).

சித்தாந்த அரசியல் வேறுபாடுகள் இருப்பதை மறக்கக் கூடாது. இது முற்றிலும் புரியக் கூடியதே, ஏனெனில் ஜனநாயக இயக்கங்களின் உள்ளமைப்பு மிகப் பரவலானது. இப்போராட்டங்களின் சாரம், தன்மை பல்வேறானதாக இருப்பதானது இவற்றின் நடவடிக்கைகளை ஒத்திசைவிப்பதில் தனிப்பட்ட இடர்ப்பாடுகளைத் தோற்றுவிக்கிறது. இன்றைய நிலவரத்தின் சிக்கலையும், சமாதானம், சமூக முன்னேற்றத்திற்கான போராட்டத்தில் அனைத்து போராட்ட வீரர்களின் முக்கியத்துவத்தையும் புரிந்து கொள்ளும் மார்க்சிய-லெனினியக் கட்சிகள் மேற்கூறிய அம்சத்தைக் கவனத்தில் கொள்கின்றன.

தொழிலாளி வர்க்கம், எல்லா உழைப்பாளிகளின் ஒற்றுமைக்காக முதலாளித்துவ நாடுகளின் கம்யூனிஸ்டுக் கட்சிகள் நடத்தும் போராட்டமும், ஏகாதிபத்தியத்திற்கு எதிராக சீர்திருத்தவாத கட்சிகளுடன் இவை மேற்கொள்ளும் கூட்டு நடவடிக்கைகளும் இன்று சர்வதேச கம்யூனிஸ்டு இயக்கம்தான் செல்வாக்கு மிக்க அரசியல் சக்தியாகும் என்பதைக் காட்டுகின்றன. தொழிலாளி வர்க்கக் கட்சிகள், தொழிற்சங்க ஸ்தாபனங்களிடையே ஒற்றுமையை நிலைநாட்டுவதை நோக்கமாகக் கொண்ட கம்யூனிஸ்டுகளின் கொள்கைக்குப் பரவலான ஆதரவு கிட்டி வருகிறது, இது ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தில் தொழிலாளர் இயக்கத்தின் வாய்ப்புகளை அதிகப்படுத்துகிறது.

# சோஷலிசப் புரட்சியைப் பற்றிய தத்துவம்

**"இடதுசாரி" கம்யூனிசம் — இளம் பருவக் கோளாறு** என்ற நூலில் சோஷலிசப் புரட்சி பற்றிய தத்துவத்தை ஆராய்வதன் மீது முக்கியக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. "புரட்சி நிலவரம்" என்ற கருத்தின் சாரத்தைச் சுட்டிக் காட்டிய லெனின் இது தோன்றுவதற்கான நியதிகளை நிர்ணயித்துக் கூறினார். எங்கே, எப்படிப்பட்ட சூழ்நிலைகளில் புரட்சி நிலவரம் முதிர்ச்சியடைகிறது, சமூக வளர்ச்சியில் எந்த மாதிரியான புறவய மாற்றங்கள் புரட்சி நிலவரத்திற்கும் சமூகப் புரட்சிக்கும் இட்டுச் செல்கின்றன என்று அவர் காட்டினார்.

புரட்சிக்கு விரோதமான எல்லா வர்க்கச் சக்திகளும் மிகவும் குழப்பமடைந்து, போராட்டத்தில் வலுக்குன்றி, இதன் விளைவாக அரசியல் ரீதியாகப் பெரிதும் பலவீனமடைந்து, வர்க்க ரீதியில் தனிமைப்படுத்தப்பட்டு, "கீழ்மட்டத்தினர்" மீது ஆதிக்கம் செலுத்த இயலாத நிலையை, மக்கள் திரளினர் மீது செல்வாக்கு செலுத்த இயலா நிலையை அடைந்து, ஆதிக்க அமைப்பை அச்சக்திகளால் பேணிக் காக்க முடியாமல் போகும் போது புரட்சி நிலவரம் முதிர்ச்சியடைகிறது என்றார் லெனின். 1915ஆம் ஆண்டு லெனின் **இரண்டாவது அகிலத்தின் வீழ்ச்சி** என்ற

கட்டுரையில் புரட்சி நிலவரத்தை நன்கு விளக்கு கிறார். அவர் புரட்சி நிலவரத்தின் மூன்று அம்சங்களைச் சுட்டிக் காட்டுகிறார்: "1) ஆதிக்கம் செலுத்தும் வர்க்கங்களால் தம்முடைய ஆதிக்கத்தை மாற்றமற்று அப்படியே தொடர இயலாமை... சாதாரணமாக, 'கீழ்மட்டத்தினர் விருப்பப்படாதது' மட்டும் புரட்சியின் வளர்ச்சிக்குப் போதாது, 'மேல்மட்டத்தினர்' பழைய முறைப்படி வாழ 'இயலாது போவதும்' இதற்குத் தேவை. 2) ஒடுக்கப்படும் வர்க்கங்களின் ஏழ்மையும் துன்பங்களும் வழக்கத்தை விட கடுமையாதல். 3) மேற்கூறிய காரணங்களால், மக்கள் திரளினரின் சுறுசுறுப்பு கணிசமாக அதிகரித்தல்; 'சமாதான' காலத்தில் இவர்கள் தம்மை சுரண்டுவதை அனுமதிக்கின்றனர், ஆனால் கொந்தளிப்பான காலகட்டங்களிலோ நெருக்கடியின் மொத்த நிலவரத்தாலும் 'மேல்மட்டத்தினராலும்' சுயமான வரலாற்றுப் போராட்டத்திற்கு இவர்கள் ஈர்க்கப்படுகின்றனர்.

"தனிப்பட்ட குழுக்கள், கட்சிகளின் சித்தத்தை மட்டுமின்றி தனிப்பட்ட வர்க்கங்களின் சித்தத்தையும் சாராத இந்தப் புறவய மாற்றங்களின்றி புரட்சி என்பது—பொது விதியின்படி—இயலாதது. இந்தப் புறவய மாற்றங்களின் ஒட்டு மொத்தம்தான் புரட்சிகர நிலவரம் எனப்படுகிறது."*

ஆக, "மேல்மட்டத்தினரின்" நெருக்கடியும், "கீழ்மட்டத்தினரின்" நெருக்கடியும் ஒன்று சேரும் போது, அது மக்கள் திரளினரைப் புரட்சி

* V. I. Lenin, *Collected Works*, vol. 21, pp. 213—214.

நிலவரத்திற்கு இட்டுச் செல்கிறது. புரட்சி நில வரத்தின் ஒவ்வொரு குணாம்சத்தையும் தனித் தனியே பார்ப்போம்.

மேல்மட்டத்தினர், கீழ்மட்டத்தினர் ஆகிய இரு சாரரையும் பாதிக்கும் பொதுத் தேசிய நெருக்கடியைத்தான் லெனின் புரட்சி நிலவரத் தின் முதல் குணாம்சமாகக் குறிப்பிடுகிறார். ஆளும் வர்க்கங்களால் ‘‘பழைய முறைப்படி ஆண்டு நிர்வகிக்க’’ இயலாமல் போவதற்குப் பல காரணங்கள் உண்டு. இவை உள்நாட்டு அல்லது சர்வதேச அரசியல், பொருளாதார நெருக்கடிகளாகவோ, பரவலான மக்கள் திரளி னரின் நலன்களைப் பாதிக்கும் அடிப்படை சமூக மாற்றங்களாகவோ, இராணுவ அரசியல் தோல்வி களாகவோ, தேசிய, இன அடிப்படையிலான மோதல்களாகவோ, வேறு காரணங்களாகவோ இருக்கலாம்.

மேல்மட்டத்தினரின் நெருக்கடி அரசாட்சி பல வீனமடைவதில் அல்லது முழுமையாக திவாலா வதில், இதனால் நாட்டை நிர்வகிக்க முடி யாமல் போவதில், நாட்டின் முன் உள்ள பொரு ளாதார, அரசியல் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாமல் போவதில்தான் எப்போதும் வெளிப் படுகிறது. அதே சமயம், மேல்மட்டத்தினரின் எல்லா அரசியல் நெருக்கடிகளும் புரட்சி நிலவரத் திற்கான அறிகுறியாகாது என்பதை நினைவில் கொள்ள வேண்டும்; எந்த நெருக்கடி பொதுத் தேசிய அளவை எட்டுகிறதோ அது மட்டுமே புரட்சி நிலவரத்திற்கான அறிகுறியாகும். இது மேல்மட்டத்தினர், கீழ்மட்டத்தினர் ஆகிய இரு

சாரரையுமே பாதிக்கிறது, அதாவது "அரசு அமைப்பின் தனிப்பட்ட அங்கங்களை அல்ல, அதன் அடிப்படைகளையே பாதிக்கிறது, கட்டிடத்தின் தனித்தனி பகுதிகளையோ அல்லது குறிப்பிட்ட அடுக்குகளையோ அல்ல, அடித்தளத்தையே பாதிக்கிறது"*. பழைய முறையில் வாழ தமக்கு விருப்பமில்லை என்று மக்கள் திரளினர் தம் அதிருப்தியைத் தெரிவிப்பதிலும் பொதுத் தேசிய நெருக்கடி வெளிப்படுகிறது; குறிப்பிட்ட பொருளாதார, சமூக, அரசியல் சூழ்நிலைகளின் காரணமாய் இவர்கள் நிலவும் ஆட்சியமைப்பிற்கு எதிரான தம் எதிர்ப்பை வெளிப்படையாகத் தெரிவிக்கின்றனர்.

ஏகாதிபத்திய சகாப்தத்தில், பாட்டாளி வர்க்கப் புரட்சிகள் வெடித்துக் கொண்டிருக்கும் போது, மேல்மட்டத்தினரின் நெருக்கடியும் கீழ்மட்டத்தினரின் நெருக்கடியும், உற்பத்தியின் சமூகத் தன்மைக்கும் முதலாளித்துவ சுவீகரிப்பு வடிவத்திற்கும் இடையிலான முரண்பாட்டால் — இது வர்க்க உறவுகளில் உழைப்பிற்கும் மூலதனத்திற்கும் இடையிலான பகை முரண்பாட்டில் வெளிப்படுகிறது — தோன்றுகின்றன. கீழ்மட்டத்தினரின் நெருக்கடி என்பது முதலாளித்துவ உற்பத்தி உறவுகளின் நெருக்கடி, இது முற்போக்கு வர்க்கமாகிய பாட்டாளிகளுக்கும் பிற்போக்கு வர்க்கமாகிய பூர்ஷ்வாக்களுக்கும் இடையிலான போராட்டம்.

புரட்சி நிலவரத்தின் இரண்டாவது குணாம்

---

* V. I. Lenin, *Collected Works*, vol. 19, p. 222.

சம், உழைப்பாளர் மக்கள் திரளினரின் ஏழ்மை யும் வறுமையும் வழக்கத்தை விடக் கூடுதலா யிருப்பது. சமூக பொருளாதாரக் காரணங் களால் தோன்றிய இடர்ப்பாடுகளிலிருந்து மீளும் வழியைத் தேடும் மக்கள் திரளினர் புரட்சிப் போராட்டத்தில் இவ்வழியைக் கண்டுபிடிக் கின்றனர். ஏனெனில் ''ஆழ்ந்த பொருளாதாரத் தேவைகளால் உந்தித் தள்ளப்படும் மக்கள் திர ளினரால்தான் புரட்சியை நிறைவேற்ற முடி யும்'' *. ஆனால் இந்த குணாம்சத்தில் பொருளா தார அம்சம் மட்டும் அடங்கியிருக்கவில்லை. இதில் அரசியல், சித்தாந்த, தார்மீக அம்சங்களும் அடங்கும். ''கோடானு கோடி மக்கள் கட் டளைப்படி புரட்சியில் இறங்க மாட்டார்கள். மீளவே முடியாத வறுமை தோன்றும் போது, தாங்க இயலா வாழ்க்கைச் சூழலில் மக்கள் தள்ளப்படும் போது, கோடானுகோடி மக்களின் பொது எதிர்ப்பும் உறுதியும் எல்லா பழைய தடைகளையும் உடைத்துத் தள்ளும் போது, தம்மால் உண்மையிலேயே புதிய வாழ்வைப் படைக்க முடியும் என்ற நிலையில்தான் இவர் கள் புரட்சியில் இறங்குவார்கள்.'' * *

புரட்சி நிலவரத்தின் மூன்றாவது குணாம்சம், மேல்மட்ட, கீழ்மட்ட நெருக்கடிகளின் விளை வாய் தோன்றிய மக்கள் திரளினரின் அரசியல் சுறுசுறுப்பு அசாதாரணமாக உயர்ந்து காணப்படு தல். ''பழைய முறையில்'' வாழ விரும்பாத மக்கள்

---

* V. I. Lenin, *Collected Works*, vol. 11, p. 423.

* * V. I. Lenin, *Collected Works*, vol. 24, p. 503.

திரளினர், சுரண்டல் மற்றும் ஒடுக்குமுறையின் சகல வடிவங்களையும் ஒழித்துக் கட்ட முயலும் போது புரட்சி நெருக்கடிகளின் காலகட்டம் ஆரம்பமாகிறது.

முதலாளித்துவ வளர்ச்சியில் ஏகபோக கால கட்டத்தில் வர்க்கப் பகை முரண்பாடுகள் அளவிற்கதிகமாகக் கூர்மையடையும் போது மக்கள் திரளினரின் அரசியல் நடவடிக்கைகள் பெரிதும் அதிகரிக்கின்றன. சம்பவங்கள் விரைவாக வளர்ச்சியடையும் பொழுது மக்கள் திரளினரின் வர்க்க உணர்வும் விரைவாக வளர்ச்சியடைகிறது; கடைசி சுரண்டல் அமைப்பை ஒழித்துக் கட்டி, புதிய, சோஷலிச அமைப்பை நிறுவ வேண்டியது எவ்வளவு அவசியமென்று அவர்கள் உணருகின்றனர். ''மிகவும் நம்பிக்கையற்றவர்கள் கூட புரட்சியை நம்பத் தொடங்குகின்றனர். புரட்சியின் மீதான சர்வபொது நம்பிக்கையே புரட்சியின் ஆரம்பமாகும்'' என்றார் லெனின்.*

புரட்சி நிலவரம் பற்றிய லெனினிய படிப்பினை சோஷலிசப் புரட்சி பற்றிய மார்க்சிய-லெனினிய தத்துவத்தின் ஒரு பிரிக்க இயலா அங்கமாகும்; அரசு ஏகபோக மூலதனம், காலனியாதிக்க ஒடுக்குமுறைக்கு எதிராக, சோஷலிச, தேசிய விடுதலைப் புரட்சிகளின் வெற்றிக்காக கம்யூனிஸ்டு, தொழிலாளர் கட்சிகளின் தலைமையில் தொழிலாளி வர்க்கமும் உழைப்பாளி மக்கள் திரளினரும் நடத்தும் போராட்டத்தில் இது பெரும்

---

* V. I. Lenin, *Collected Works*, vol. 8, pp. 54—55.

முக்கியத்துவம் வாய்ந்ததாகும். ''புரட்சிகள் எப்போதுமே தயாரானவையாகப் பிறப்பதில்லை, ஜூப்பிட்டரின் தலையிலிருந்து வருவதில்லை, எங்கிருந்தோ திடீரென்று வந்து குதிப்பதில்லை. இதற்கு முன் எப்போதும் பொங்குதல்கள், நெருக்கடிகள், இயக்கங்கள், ஆத்திரம், அதாவது புரட்சியின் துவக்கம் இருக்கும்'' என்றார் லெனின்.*

புரட்சி நிலவரத்தைப் பற்றிய லெனினிய படிப்பினையானது சரியான, விஞ்ஞான பூர்வமான செயல்திட்டம், செயல்முறையைத் தீட்டவும், வலதுசாரி சந்தர்ப்பவாதிகளுக்கும் ''இடதுசாரி'' அதிசாகசவாதிகளுக்கும் எதிராக வெற்றிகரமாகப் போராடவும் மார்க்சிய-லெனினியக் கட்சிகளுக்கு உதவுகிறது. வலதுசாரி சந்தர்ப்பவாதிகள் பூர்ஷ்வாக்களுடன் உடன்படிக்கை செய்து கொள்ள முயலுகின்றனர் என்றால், ''இடதுசாரி'' அதிசாகசவாதிகளோ புரட்சி நிகழ்ச்சிப் போக்கு வளர்ச்சியின் புறவய நியதிகளை அலட்சியப்படுத்தி, மக்கள் திரளினரை அகாலப் போராட்டங்களுக்குத் தள்ளுகின்றனர். லெனின் காலத்தைப் போன்றே இன்றும் சோஷலிசப் புரட்சி தத்துவத்தையும் இதன் அங்கமாகிய புரட்சி நிலவரம் பற்றிய படிப்பினையையும் வலதுசாரி சீர்திருத்தவாதமும் இடதுசாரி சீர்திருத்தவாதமும் தாக்கி வருகின்றன. ஏனெனில் இந்தத் தத்துவங்கள் முக்கிய வெற்றிகளை அடைய சர்வதேச கம்யூனிஸ்டு இயக்கத்திற்கு உதவுகின்றன.

---

* V. I. Lenin, *Collected Works*, vol. 21, p. 451.

‘‘இடதுசாரி’’ வறட்டுச் சூத்திரவாதிகள் புரட்சி நிலவரம் என்பதை மக்கள் திரளினரின் அரசியல் நடவடிக்கையின் விசேஷ நிலையாகக் கருதி அகவய ரீதியாக அணுகினர், இத்தகைய நிலவரத்தைத் திடீரென்று, தன்னிச்சையாக, ஒரு சில நபர்களின் விருப்பு வெறுப்பிற்கேற்ப, எந்த இடத்திலும் எந்த நேரத்திலும் தோற்றுவிக்கலாம் என்றனர்; இவர்கள் அரசியலில் குறுங்குழுவாதத்தையும் அதிசாகசத்தனத்தையும் பின்பற்றினர், புறவய விதிகளை அலட்சியப்படுத்தினர், புரட்சி நிகழ்ச்சிப் போக்கில் முடிவு பெறாத கட்டங்களைத் தாண்டிச் சென்று அதன் மூலம் புரட்சியின் வளர்ச்சி வேகங்களைத் தன்னிச்சையாகத் துரிதப்படுத்த முயன்றனர்; இவற்றிற்காக லெனின் இந்த ‘‘இடதுசாரி’’ வறட்டுச் சூத்திரவாதிகளை விமர்சித்து கண்டித்தார். ‘‘கட்டளைப்படி, உடன்படிக்கையின்படி புரட்சி வேறொரு அன்னிய நாட்டிலும் பிறக்கக் கூடும்’’ என்று கூறியவர்களை அன்று லெனின் கண்டித்தார். அந்த விமர்சனம் இன்றும் தன் முக்கியத்துவத்தை இழக்கவில்லை. புரட்சி நடைபெற புறவயச் சூழ்நிலைகளும் அகவயக் காரணிகளும் முதிர்ச்சியடைய வேண்டியதன் அவசியத்தை இவர்கள் நிராகரிக்கின்றனர். ‘‘இவர்கள் ஒன்றா பைத்தியக்காரர்கள் அல்லது ஆத்திரமூட்டுபவர்கள்’’ என்றார் லெனின்.*

சோஷலிசப் புரட்சியின் வேர்கள் முதலாளித்துவ உற்பத்தி முறையின் முரண்பாடுகளில்,

* V. I. Lenin, *Collected Works*, vol. 27, p. 480.

இதன் உற்பத்திச் சக்திகளுக்கும் உற்பத்தி உறவு களுக்கும் இடையிலான மோதலில் அடங்கியுள் ளன; என்றாலும் சோஷலிசத்தின் பொருளாயத முன்தேவைகளின் முதிர்ச்சியும் சரி, பூர்ஷ்வாக் களுக்கு எதிராக வலுத்து வரும் பாட்டாளி களின் வர்க்கப் போராட்டமும் சரி இரண்டும் மட்டுமே புரட்சி வெற்றி பெற போதுமானவை யல்ல. சோஷலிசப் புரட்சி உட்பட எந்த ஒரு சமூகப் புரட்சிக்கு முன்னும் புரட்சி நிலவரம் இருக் கும், எந்த ஒரு சமூகப் புரட்சியின் வெற்றியைப் போன்றே சோஷலிசப் புரட்சியின் வெற்றியும் புரட்சி நிலவரமின்றி சாத்தியமில்லை என்று லெனின் கோடிட்டுக் காட்டினார். வேறு வார்த் தைகளில் சொன்னால், எல்லா சந்தர்ப்பங்களி லும் தொழிலாளி வர்க்கத்தால் வெற்றியடைய முடியாது. சோஷலிசத்திற்கேற்ற புறவய சமூக, பொருளாதார மற்றும் அரசியல் சூழ்நிலைகள் அதிகபட்சம் முதிர்ச்சியடைந்து, நாட்டில் வர்க்க, அரசியல் சக்திகள் குறித்த விதத்தில் நிலவினால்தான் சோஷலிசப் புரட்சியை நிறை வேற்றுவதற்கான வாய்ப்பேற்படும்.

அதே நேரத்தில் புரட்சி நிலவரம் என்பது முதலாளித்துவ உற்பத்தி முறையின் முரண்பாடு கள் வளர்ச்சியடைவதால் ஏற்படும் இயந்திரகதி யான பின்விளைவல்ல; எல்லாப் புரட்சி நில வரமும் புரட்சியில் முடிவதில்லை. புரட்சி என்பது யதார்த்தமாக, அது குறிப்பிட்ட வளர்ச்சியை அடைய வேண்டும். புரட்சி நிலவரமானது ''புரட்சி முதிர்ச்சியடையும்'' கட்டமாகத் திகழு கிறது. புரட்சி நிலவரம் வளர்ச்சியடையும் பாதை

எளியதல்ல — தனிப்பட்ட போராட்டங்களிலிருந்து நாடு தழுவிய புரட்சி நெருக்கடியாக இது வளருகிறது. இது தொழிலாளி வர்க்கம் மற்றும் சுரண்டப்படும் உழைப்பாளி மக்கள் திரளினரின் புரட்சியாற்றல் திரளும் நிகழ்ச்சிப் போக்காகும்; இந்த ஆற்றல் குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் பொங்கி, வெகுஜன புரட்சி இயக்கமாகிறது, இந்த மாற்றம்தான் புரட்சி நிலவரத்திலிருந்து புரட்சியை நோக்கிய பாய்ச்சலாகும்.

புரட்சி, அதுவும் சோஷலிசப் புரட்சி, எல்லாப் புரட்சி நிலவரத்திலிருந்தும் தோன்றி விடாது என்று லெனின் கூறினார். புரட்சி நிலவரம் என்றழைக்கப்படும் புறவயக் காரணிகளின் ஒட்டு மொத்தத்துடன் அகவயக் காரணிகளும் சேர்ந்து கொள்ளும் போதுதான் புரட்சி நடைபெறும். இந்த அகவயக் காரணிகளில் பின்வருபவை அடங்கும்: "பழைய அரசாங்கத்தை உடைக்கும் (அல்லது கீழிறக்கும்) அளவிற்கு வலிமையான புரட்சிகர வெகுஜன இயக்கங்களில் இறங்க புரட்சிகர வர்க்கத்திற்கு திறமையிருக்க வேண்டும்; இந்தப் பழைய அரசாங்கத்தை 'தூக்கியெறியாவிடில்' அது எப்போதுமே — நெருக்கடிகளின் சகாப்தத்தில் கூட — 'விழாது'." *

லெனினுடைய கருத்துப்படி பாட்டாளி வர்க்கப் புரட்சிகளின் சகாப்தத்தில் "புரட்சியின் அகவயக் காரணிகள்" என்ற கருத்தில் பின்வரும் முக்கிய அம்சங்கள் அடங்கும்:

---

* V. I. Lenin, *Collected Works*, vol. 21, p. 214.

முதலாவதாக, புரட்சியின் முக்கிய உந்து சக்தியாகிய தொழிலாளி வர்க்கம் புரட்சிக்குத் தயாராய் இருத்தல், அதாவது அரசியல் உணர்வு, முதிர்ச்சி, ஸ்தாபன ஒற்றுமை, புரட்சி நிலவரத்தின் போது கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைமையில் மிகத் துணிவான நடவடிக்கைகளில் இறங்குவது உறுதி.

இரண்டாவதாக, தொழிலாளி வர்க்கத்திற்கும் பாட்டாளியல்லா உழைப்பாளிப் பிரிவினருக்கும் இடையிலான கூட்டணி, அதாவது மக்கள் திரளினரின் ஸ்தாபன ஒற்றுமை, எல்லா உழைப்பாளிகள் மற்றும் சுரண்டப்படுபவர்களின் முன்னணிப் போராளியாகவும் பாதுகாவலனாகவும் திகழும் தொழிலாளி வர்க்கத்தைச் சுற்றி இவர்கள் அணி திரளுதல். ''இடதுசாரி'' கம்யூனிஸ்டுகளை விமர்சித்த லெனின், புரட்சியின் வெற்றிக்குத் தொழிலாளி வர்க்கத்தின் கம்யூனிஸ்டு முன்னணிப் படையின் போராட்டங்கள் மட்டும் போதா என்றார். ''வர்க்கம் அனைத்தும், விரிவான வெகுஜனங்கள் எல்லோரும் முன்னணிப் படைக்கு நேரடி ஆதரவு அளிக்கும் நிலையை அடையுமுன், அல்லது குறைந்தது அது குறித்துப் பரிவுடன் கூடிய நடுநிலையையும் பகைவனுக்கு ஆதரவளிக்காத நிலையையும் அடையுமுன், முன்னணிப் படையை மட்டும் முடிவுகட்டும் போரில் இறங்கச் செய்வதானது முட்டாள் தனம் மட்டுமின்றி கொடுங்குற்றமுமாகும்.''* வேறு வார்த்தைகளில் சொன்னால்

* வி. இ. லெனின், **தேர்வு நூல்கள்**, தொகுதி 10, பக்கம் 304.

தொழிலாளி வர்க்கத்திற்கு வெகுஜனக் கூட்டாளிகள் இருப்பதானது புரட்சியின் வெற்றிக்கு அவசியமான நிபந்தனையாகும், ஏனெனில் தன்னிச்சையான புரட்சி எழுச்சி எப்போது பாட்டாளி வர்க்க முன்னணிப் படையின் தலைமையில் ஆட்சியை வெல்லுவதற்கான அணிதிரண்ட, செயல்முனைப்பான போராட்டமாக மாறுகிறதோ அப்போதுதான் உழைக்கும் மாமக்கள் தம் வரலாற்றுக் கடமைகளையும் லட்சியங்களையும் உணருவார்கள்.

மூன்றாவதாக, புரட்சிக்கு முந்தைய மற்றும் புரட்சி நிலவரத்தின் எல்லாக் கட்டங்களிலும், புரட்சியின் பொழுதும் ஒரு முக்கிய அகவயக் காரணி கம்யூனிஸ்டுக் கட்சியாகும். பாட்டாளி வர்க்கத்தின் ஆட்சியை நிலைநாட்டுவதற்கான போராட்டத்தில் முக்கிய தலைமைச் சக்தியாகிய புரட்சிகரத் தொழிலாளி வர்க்கக் கட்சியின் நடவடிக்கைதான் சோஷலிசப் புரட்சியின் வெற்றிக்கான முக்கிய நிபந்தனை என்றார் லெனின். தொழிலாளி வர்க்கத்தின் மார்க்சிய-லெனினியக் கட்சியால்தான் உருவாகியுள்ள நிலவரத்தையும் வர்க்கச் சக்திகளின் சமன்நிலையையும் விஞ்ஞான பூர்வமாகப் பகுப்பாய்வு செய்ய முடியும், இவற்றின் வளர்ச்சியில் முக்கியப் போக்குகளைப் பிரித்துப் பார்க்க முடியும், செயல்தந்திர போராட்ட முறைகளையும், தீர்மானகரமான தாக்குதலின் திசையையும் தாக்குதலுக்கான தருணத்தையும் திறமையோடு நிர்ணயிக்க முடியும். குறிப்பிட்ட தருணத்தின் கடமைகளுக்கேற்ற, புரட்சியின் வெற்றியை நோக்கமாகக் கொண்ட

கொள்கையை இத்தகையதொரு கட்சியால்தான் பின்பற்ற முடியும்.

நான்காவதாக, புரட்சியின் வெற்றிக்கு, அரசியல் படையை ஒழுங்கமைப்பதோடு கூட புரட்சிகர இராணுவத்தில் பொருளாயத சக்தியும் தேவை. அதாவது புரட்சி சக்திகளின் இராணுவ ஸ்தாபனத்தைத் தோற்றுவித்து இதற்கு துருப்புகளின் ஆதரவை ஏற்பாடு செய்ய வேண்டும். "புரட்சி ஒரு வெகுஜனத் தன்மையை மேற்கொண்டு, துருப்புக்களை ஆட்கொண்டாலன்றி கடும் போராட்டம் என்ற பேச்சிற்கே இடமில்லை". *

புரட்சிகர நெருக்கடியின் பொழுது நிலவக் கூடிய அரசியல் அமைப்பிற்கு எதிராக மக்கள் திரளினரின் மத்தியில் ஒரு மாபெரும் எதிர்ப்புச் சக்தி இருக்கிறது. இச்சக்தி மக்கள் திரளினரின் சொந்த அரசியல் அனுபவத்திலிருந்து பிறக்கிறது; இந்த அனுபவம் மக்கள் திரளினருக்கு அறிவொளியூட்டி அவர்களைப் பாட்டாளி வர்க்கத்தைச் சுற்றி அணிதிரட்டுகிறது. "இத்தகையதொரு எதிர்ப்புச் சக்தியைத் தயார்படுத்த, மிகவும் பின்தங்கிய தொழிலாளர் பிரிவினரைப் போராட்டத்திற்குள் இழுக்க வேண்டும், பல ஆண்டுகளுக்கு உறுதியான, பரவலான, இடையறா பிரசார, கிளர்ச்சி, ஸ்தாபனப் பணியை நடத்த வேண்டும், சகலவித பாட்டாளி வர்க்கக் கூட்டணிகள், ஸ்தாபனங்களை ஏற்படுத்தி வலுப்

---

* வி. இ. லெனின், **தேர்வு நூல்கள்**, தொகுதி 3, பக்கம் 220.

படுத்த வேண்டும்'' என்றார் லெனின்.* புரட்சி கர நெருக்கடி என்பது சாராம்சத்தில் புரட்சி யின் ஆரம்பமாகும், ஆனால் அரசியல் சூடு புரட்சியாக வளருகின்றதா இல்லையா என்பது அகவயக் காரணி முதிர்ச்சியடைவதைப் பொறுத் தது. ''இடதுசாரி'' **கம்யூனிசம் — இளம் பருவக் கோளாறு** என்ற நூலில் லெனின் முக்கியமாக, சோஷலிசப் புரட்சியின் அகவயக் காரணிகளை ஆராய்கிறார், புரட்சிகர நெருக்கடியிலிருந்து பூர்ஷ்வாக்கள் மீளாமலிருக்க எப்படிச் செயல்பட வேண்டுமென்று கம்யூனிஸ்டுக் கட்சிகளுக்குச் சுட்டிக் காட்டுகிறார்.

''இடதுசாரிகளின்'' அதிசாகசவாதத்தை விமர் சித்த வி. இ. லெனின் தன் நூலில் ''முதிர்ச்சி யடைந்த அகவயக் காரணி'' என்னும் கருத்தை விளக்குகிறார். லெனினுடைய கருத்தின்படி மற்ற. எல்லா காரணிகளும் இருக்கையில், அகவயக் காரணியைப் புரட்சிக்கு ''முற்றிலும் முதிர்ச்சி யடைந்த'' காரணியாகக் கருத பின்வருபவை அவசியம்: புரட்சிகர வர்க்கத்தின் முன்னணிப் படைக்கு வர்க்க உணர்வுள்ள, அரசியல் ரீதியில் சுறுசுறுப்பான தொழிலாளர்கள், பரவலான பாட்டாளி வர்க்கத்தினர், அரைப் பாட்டாளி கள் மற்றும் பாட்டாளியல்லா உழைக்கும் மாமக் கள் ஆகியோரில் பெரும்பான்மையினரின் உறுதியான ஆதரவு வேண்டும்; பெரும்பாலான தொழிலாளர்கள் ஆட்சியை அரசியல் ரீதியாகப் பிடிப்பதன் அவசியத்தை உணர்ந்து தன் கம்

---

* V. I. Lenin, *Collected Works*, vol. 16, p. 301.

யூனிஸ்டுக் கட்சியின் தலைமையில் தீர்மானகர மான புரட்சி நடவடிக்கைகளுக்குத் தயாராய் இருக்க வேண்டும்; விவசாயிகள், சிறு தொழில் புரிவோர், அறிவுஜீவிகள், ஏன் குட்டி பூர்ஷ்வாக் கள் ஆகிய மற்ற உழைப்பாளிகள் பாட்டாளி களின் முன்னணிப் படையின் மீது அனுதாபம் காட்டி, இதன் புரட்சிகர மாற்றங்களை ஆதரிக்க வேண்டும்; தீர்மானகரமான தருணத்தில், தீர் மானகரமான இடத்தில் புரட்சியை வளர்த்துச் செல்ல இராணுவத்தைப் பயன்படுத்தும் வாய்ப் பிருக்க வேண்டும்.

''இடதுசாரி கம்யூனிஸ்டுகள் புரியும் தவறுகள் தற்போது மிகவும் அபாயகரமானவை. ஏனெனில் புரட்சியாளர்களில் சிலர் மேற்கூறிய... நிலைமை களில் ஒவ்வொன்றும் குறித்து போதுமான அளவுக்குச் சிந்தனையோடு கூடிய, போதுமான அளவுக்குக் கவனமான, போதுமான அளவுக்கு உணர்வுபூர்வமான, போதுமான அளவுக்குக் கருத்துக் கொண்ட போக்கை அனுசரிக்க வில்லை'' என்று லெனின் எழுதினார். *

இந்நூலில் லெனின் சமூகப் புரட்சியைப் பற்றிய அடிப்படை வரலாற்று விதியை முன்வைத்தார். ஒரு நாட்டில் புரட்சி தோன்றி வளர்ந்து வெற்றி யடைய எப்படிப்பட்ட புறவயச் சூழல்களும் அகவயக் காரணிகளும் நிலவ வேண்டும் என்பதை இது துல்லியமாக, விஞ்ஞான ரீதியில், ஒட்டு மொத்தமாக நிர்ணயித்துக் கூறுகிறது.

---

* வி. இ. லெனின், **தேர்வு நூல்கள்**, தொகுதி 10, பக்கம் 292.

லெனின் கருத்துப்படி, ''இருபதாம் நூற்றாண் டில் நடைபெற்ற மூன்று ருஷ்யப் புரட்சிகளும் அடங்கலாய் எல்லாப் புரட்சிகளாலும் ஊர் ஜிதம் செய்யப்பட்டிருக்கும் அடிப்படைப் புரட்சி விதி வருமாறு: புரட்சி நடைபெற வேண்டுமா னால், சுரண்டப்படும், ஒடுக்கப்படும் வெகுஜனங் கள் பழைய வழியில் தாம் வாழ்வது சாத்திய மல்ல என்பதை உணர்ந்து மாற்றங்கள் வேண்டு மெனக் கோரினால் மட்டும் போதாது; புரட்சி நடைபெற வேண்டுமானால், சுரண்டலாளர்கள் பழைய வழியில் வாழவும் ஆட்சி நடத்தவும் முடியாமற்போவது அவசியமாகும். பழைய வழி யில் வாழ **'அடிமட்டத்து வர்க்கங்கள்'** **விரும்ப வில்லை**, 'மேல் வர்க்கங்களால்' **பழைய வழியில் நடத்திச் செல்ல முடியவில்லை** என்கிற நிலை ஏற் படும் போது மட்டும்தான் புரட்சி வெற்றி பெற முடியும். இந்த உண்மையை வேறுவித மாகவும் கூறலாம்: தேசம் தழுவிய நெருக்கடி (சுரண்டப்படுவோர், சுரண்டுவோர் ஆகிய இரு சாரரையும் பாதிக்கும் நெருக்கடி) இல்லாமல் புரட்சி சாத்தியமன்று. இதிலிருந்து தெளிவாவது என்னவெனில், புரட்சி நடைபெறுவதற்கு, முதலா வதாக, பெரும்பான்மையான தொழிலாளர்கள் (அல்லது குறைந்தது, வர்க்க உணர்வு கொண்ட, சிந்தனை ஆற்றலுடைய, அரசியல் செயலாற்றல் வாய்ந்த தொழிலாளர்களில் பெரும்பாலோர்) புரட்சி இன்றியமையாததென்பதை நன்கு உணர்ந்திருப்பதும், புரட்சிக்காக உயிர் விடத் தயாராயிருப்பதும் அவசியமாகும்; இரண் டாவதாக, ஆளும் வர்க்கங்கள் அரசாங்க நெருக்

கடிக்கு — மிகவும் பிற்பட்ட நிலையிலுள்ள வெகுஜனங்களையும் அரசியல் அரங்குக்குக் கவர்ந்திழுக்கும் (இதுவரை செயலின்றி உறக்கத்தில் இருந்த உழைப்பாளர்களும் ஒடுக்கப்பட்டோருமான வெகுஜனங்களில் அரசியல் போராட்டம் நடத்தக் கூடியவர்களது தொகை விரைவில் பத்து மடங்கும், ஏன் நூறு மடங்கும் கூட பெருகி விடுவது மெய்யான எந்தப் புரட்சிக் குமுரிய அறிகுறியாகும்), அரசாங்கத்தைப் பலவீனமாக்கும், புரட்சியாளர்கள் விரைவில் அரசாங்கத்தை வீழ்த்துவதற்கு வகை செய்யும் அரசாங்க நெருக்கடிக்கு — இலக்காகி விடுவது அவசியமாகும்.'' *

அடிப்படைப் புரட்சி விதி புரட்சி நிலவரத்தை உள்ளடக்கியுள்ளது, ஆனால் அதனுடன் மட்டும் அது நின்று விடவில்லை. அரசியலில் புறவய, அகவய அம்சங்களுக்கு இடையிலான இடையறாத் தொடர்புதான் புரட்சி நிலவரத்தின் வளர்ச்சி மீதும் இதை புரட்சியாக மாற்றுவதன் மீதும் தாக்கம் செலுத்துகிறது என்று இவ்விதி காட்டுகிறது. இதன் பொருள் பின்வருமாறு:

முதலாவதாக, புரட்சி நிலவரம் நிலவுகிறது என்பதே மக்கள் திரளினரின் உயர்வான அரசியல் செயலாற்றல் புறவய ரீதியில் நிலவுவதற்கு, அதாவது புரட்சியின் அகவயக் காரணிகளின் குறிப்பிட்ட முதிர்ச்சிக்குச் சான்று பகர்கிறது;

இரண்டாவதாக, புரட்சி நிலவரத்தின் உக்கிரம் அதிகரிக்க அதிகரிக்க புரட்சி நிகழ்ச்சிப் போக்கின்

---

* அதே நூல், பக்கங்கள் 291 — 292.

வளர்ச்சியில் அகவயக் காரணிகளின் பங்கும் அதிகரிக்கும், அரசியல் சூடு அதிகபட்சமாயிருக்கும் போது, நாடு தழுவிய நெருக்கடியின் தருணத்தில் இப்பங்கு தீர்மானகரமானதாகும்.

வி. இ. லெனின் தான் கண்டுபிடித்த அடிப்படைப் புரட்சி விதியின் வழி நின்று கம்யூனிஸ்டு இயக்கத்தின் கடமைகளை நிர்ணயித்துக் கூறினார். ''சர்வதேசத் தொழிலாளர் இயக்கத்தின் வர்க்க உணர்வு கொண்ட முன்னணிப் படையின், அதாவது கம்யூனிஸ்டுக் கட்சிகள், குழுக்கள், போக்குகளின் உடனடியான பணி, விரிவான வெகுஜனங்களுக்கு (பெருமளவுக்கு இவர்கள் இன்னமும் உறக்க நிலையிலும் மந்த நிலையிலும் செயலற்றும், மரபால் கட்டுண்டும்தான் இருக்கிறார்கள்) தலைமை தாங்கி அவர்களைப் புதிய நிலைக்கு அழைத்துச் செல்லும் ஆற்றல் பெற வேண்டுமென்பதுதான்; அல்லது இன்னும் துல்லியமாய்ச் சொல்வதெனில் தமது சொந்தக் கட்சி மட்டுமின்றி இந்த வெகுஜனங்களும் புதிய நிலையை வந்தடையவும் அவர்களது முன்னேற்றத்துக்கும் வளர்ச்சிக்கும் தலைமை தாங்கும் ஆற்றல் பெற வேண்டுமென்பது தான்.'' *

அடிப்படைப் புரட்சி விதியின் வழி நின்று வி. இ. லெனின் முன்வைத்த கருத்துநிலையானது, புரட்சி இயக்கத்தில் ''இடதுசாரி'' குறுங்குழுவாதத்தைக் களைந்தெறியும் ஜீவாதார முக்கியத்துவத்திற்கும், கம்யூனிஸ்டுக் கட்சி பரவ

* அதே நூல், பக்கம் 305.

லான உழைப்பாளி மாமக்களுடன் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்தவும், சோஷலிசப் புரட்சியின் வெகுஜன அரசியல் படையை ஏற்படுத்தவும் முக்கியமான தத்துவார்த்த அடித்தளமாகியது. ''மாபெரும் புரட்சிகள் யாவற்றுக்குமான அடிப்படை விதி இது. ருஷ்யாவில் மட்டுமின்றி, ஜெர்மனியிலுங்கூட இது மிகுந்த வலிமையுடனும் தெட்டத் தெளிவாகவும் ஊர்ஜிதம் செய்யப்பட்டிருக்கிறது... ஒரு வர்க்கம் முழுவதும், உழைப்பாளி மக்களின் விரிவான பகுதிகள் யாவும், மூலதனத்தால் ஒடுக்கப்படுவோர் எல்லோரும் இத்தகைய ஒரு நிலையை அடைவதற்கு, வெறும் பிரசாரமும் கிளர்ச்சியும் மட்டும் போதாது. இதற்கு வெகுஜனங்கள் தாமே அரசியல் அனுபவம் பெற வேண்டியது அவசியமாகும்.''* அடிப்படைப் புரட்சிகர மாற்றங்களை நிறைவேற்ற வேண்டியதன் அவசியத்தை மட்டுமின்றி, இந்த லட்சியத்தை அடைவதற்காக கம்யூனிஸ்டுக் கட்சி தீட்டிய செயல்திட்டமும் செயல்முறையும் சரியானவை என்பதையும் மக்கள் திரளினர் தம் சொந்த அனுபவத்தில் உணர வேண்டும்.

பாட்டாளி வர்க்கப் புரட்சியின் மாபெரும் போர்த்தந்திரவாதியும் செயல்முறை நிபுணருமான வி. இ. லெனின், புரட்சி வெற்றி பெற தேவையான எல்லா (புறவய, அகவய) காரணிகளையும் பரிபூரணமாக விஞ்ஞான ரீதியில் ஆராய வேண்டியதன் கோட்பாட்டு ரீதியான அவசியத்தைக் கோடிட்டுக் காட்டுகிறார்.

---

* அதே நூல், பக்கங்கள் 305, 304 – 305.

‘‘வெகுஜனங்கள் ஆற்ற வேண்டிய நடைமுறைச் செயலாற்றல், **இறுதியான, முடிவு கட்டவல்ல போருக்கான**, கோடிக் கணக்கானோரின் படை வரிசைகளின் — இவ்வாறு கூறலாமெனில் — அணி வகுப்பு, ஒரு சமுதாயத்தின் வர்க்க சக்திகள் **யாவற்றின்** பரஸ்பர பலம் ஆகியவை பிரச்சினையாகிவிடுமாயின், அப்பொழுது பிரசார முறைகள் மட்டும் போதா; ‘தூய்மையான’ கம்யூனிசத்தின் உண்மைகளைத் திரும்பத் திரும்பக் கூறி வந்தால் மட்டும் போதாது. இந்நிலைமைகளில், வெகுஜனங்களுக்குத் தலைமை தாங்கும் பணியை இன்னமும் மேற்கொள்ளாத சிறு குழுவைச் சேர்ந்த பிரசாரகரைப் போல ஆயிரக் கணக்கில் எண்ணிக் கணக்கிட்டால் போதாது; லட்சக் கணக்கிலும் கோடிக் கணக்கிலும் எண்ணிக் கணக்கிட்டாக வேண்டும். இந்நிலைமைகளில், புரட்சிகர வர்க்கத்தின் முன்னணிப் படைக்குத் திடநம்பிக்கை ஏற்படச் செய்துவிட்டோமா என்று கேட்பதுடன் கூட, **எல்லா** வர்க்கங்களையும் — ஆம், விதிவிலக்கின்றி சமுதாயத்தின் எல்லா வர்க்கங்களையும் — சேர்ந்த வரலாற்று வழியில் செயலாற்றலுள்ள சக்திகள், முடிவு கட்டப்போகும் போர் வந்துவிட்டதென்பதற்கு ஏற்ற வகையில் அணி வகுத்து நிற்கின்றனவா என்றும் கேட்க வேண்டும்...’’ *

அடிப்படைப் புரட்சி விதியின் சாரத்தைப் புரிந்து கொண்டு மற்ற விதிகளுடன் சேர்த்து இதை நடைமுறையில் பயன்படுத்தும் திறமை

---

* அதே நூல், பக்கங்கள் *306 — 307*.

யானது புரட்சி நிகழ்ச்சிப் போக்கின் வளர்ச்சிக்கான புறவய வாய்ப்புகளோடு சேர்த்து அகவயக் காரணியை இவ்வளர்ச்சியைத் துரிதப்படுத்துவதற்குப் பயன்படுத்த மார்க்சிய-லெனினியக் கட்சிகளுக்கு வாய்ப்பளிக்கிறது; இது தவிர ஒவ்வொரு குறிப்பிட்ட கட்டத்திலும் எதிரெதிராய் நிற்கும் சக்திகளின் விகிதத்தைக் கணக்கில் கொள்ள உதவுகிறது, மக்கள் திரளினர் புரட்சிக்கு எந்த அளவு தயார் என்பதை நிர்ணயிக்கவும், சரியான செயல்திட்டத்தையும் செயல்முறையையும் தீட்டவும் வழிகோலுகிறது.

புறவய சூழ்நிலைகள் முதிர்ச்சியடைந்திருப்பதும் இவற்றுடன் அகவயக் காரணிகள் சேர வேண்டியதும் எவ்வளவு அவசியமென்று லெனின் கூறியது இன்று பெரும் முக்கியத்துவம் வாய்ந்தது என்கின்றனர் பிரெஞ்சு கம்யூனிஸ்டுகள்: ''வரலாற்று வளர்ச்சியில், வரலாற்று படைப்பில் புறவய மற்றும் அகவயக் காரணிகளுக்கு இடையிலான பரஸ்பரத் தொடர்புகளைப் பற்றிய லெனினிய மதிப்பீடு முன்னெப் போதையும் விட இன்று நமக்குப் பெரிதும் தேவைப்படுகிறது. இக்காரணிகளில் ஏதாவது ஒன்றை உரிய விதத்தில் மதிப்பிடாமலிருப்பதும் வேறொன்றை மிகைப்படுத்துவதும் அரசியலில் தவறுகளுக்கு இட்டுச் செல்லும்; அகவயக் காரணியை உரிய விதத்தில் மதிப்பிடாவிடில் அது தன்னிச்சையான இயக்கத்தை மிகைப்படுத்தும் போக்கிற்கு இட்டுச் செல்லும், இது வலதுசாரி சந்தர்ப்பவாதிகள் செய்யும் தவறாகும்; அல்லது தான்தோன்றித்தனம் தோன்றும், மக்

கள் திரளினரின் புறவய போராட்டச் சூழ்நிலைகள் அலட்சியப்படுத்தப்படும், இது 'இடதுசாரிகளின்' தவறாகும். லெனினின் இக்கருத்தை பிரான்சின் இன்றைய வளர்ச்சி முழுமையாக மெய்ப்பிக்கிறது. இரண்டு விதமான தவறுகளுமே ஒன்றையொன்று இட்டு நிரப்புகின்றன, இதன் மொத்த விளைவாக, தொழிலாளி வர்க்கத்தின், புரட்சி சக்திகளின் சித்தாந்தம் வலுக்குன்றுகிறது.''*

புறவயச் சூழ்நிலைகளுக்கும் அகவயக் காரணிகளுக்கும் இடையிலான விகிதாச்சாரம் பற்றி அமெரிக்க கம்யூனிஸ்டுக் கட்சியின் பொதுச் செயலர் கெஸ் ஹால் எழுதினார்: ''புரட்சி நிலவரம் புறவயக் காரணிகளால் தோற்றுவிக்கப்படுகிறது. தனிப்பட்ட விருப்பு வெறுப்பின்படி, அகவய ரீதியில், உறுதியையும் துணிவையும் வைத்து மட்டும் இதைத் தோற்றுவிக்க முடியாது. புறவயச் சூழ்நிலைகள் நிலவினால் உறுதியான நடவடிக்கைகளால் இதைத் துரிதப்படுத்த முடியும். விஷயம் இதில்தான் அடங்கியுள்ளது. கட்சி தன் விருப்பப்படி, மிகப்பெரும்பாலான மக்கள் திரளினரின் மத்தியில், புரட்சிக்கு அவசியமான மிகப்பெரும் புரட்சி எழுச்சியை ஏற்படுத்த முடியாது. ஆனால் கட்சியால் தன் நடவடிக்கையின் மூலம் மக்கள் திரளினரை தயார்படுத்த முடியும், தேவையான புரட்சிகர மாற்றங்கள் சம்பந்தமாக இவர்களுக்கு அரசியல்

---

* **லெனினியம் வெற்றி நடை போடுகிறது**, மாஸ்கோ, 1970, பக்கம் 441 (ருஷ்ய மொழியில்).

கல்வி புகட்ட முடியும், இதன் மூலம் புரட்சியை அருகில் கொண்டு வரலாம்.'' *

லத்தீன் அமெரிக்காவில் புரட்சிப் போராட்டத்தின் அனுபவத்தைப் பகுப்பாய்வு செய்த உருகுவே கம்யூனிஸ்டுக் கட்சியின் முதல் செயலர் ரோ. அரிஸ்மேண்டி, வர்க்கப் போராட்டத்தின் மீது சர்வதேசக் காரணிகளின் செல்வாக்கு அதிகரித்து வருவதைக் கோடிட்டுக் காட்டினார்: ''...கண்டத்தில் நிலவும் பொதுவான புறவயச் சூழலும், சோஷலிச முகாமின் பங்கு வலுப்பட்டு, முதலாளித்துவத்தின் நெருக்கடி ஆழமடைந்து வருவதன் பின்னணியில் உலக வளர்ச்சியும், புரட்சி நிலவரம் முதிர்ச்சியடைவதானது, மக்கள் திரளினரை போராட்டத்திற்குத் தட்டியெழுப்ப கட்சிக்குள்ள திறமையையும், இதன் செயல்முறையின் நெளிவு சுழிவுகளையும், இதனுடைய நடவடிக்கைகளின் ஆற்றலையும் வீச்சையும் சார்ந்திருப்பதை மேன்மேலும் அதிகப்படுத்துகின்றன.'' * *

வேறு வார்த்தைகளில் சொன்னால், லெனின் முன்னறிவித்தபடியே இன்றைய காலகட்டத்தில், நாடுகளின் முன் தோன்றும் புரட்சிப் போராட்டத்தின் வாய்ப்புகளைப் பயன்படுத்துவதில் மக்கள் திரளினரின் உணர்வு பூர்வமான நடவடிக்கையின் பங்கு, கம்யூனிஸ்டு மற்றும் தொழிலாளர்

---

* **லெனினியமும் உலக புரட்சி நிகழ்ச்சிப் போக்கும்**, *மாஸ்கோ, 1970, பக்கம் 145 (ருஷ்ய மொழியில்).*

* * *World Marxist Review*, 1964, No 10.

கட்சிகளின் முன்மொழிவுகள், முயற்சிகளின் பங்கு அதிகரித்து வருகிறது.

இவ்வாறாக, சமுதாய வாழ்க்கையில் புறவய, அகவயக் காரணிகளுக்கு இடையிலான இயக்கவியல் தொடர்பைப் பற்றிய மார்க்சிய-லெனினியக் கருத்தானது, வர்க்கப் போராட்டத்தின் செயல்திட்டம், செயல்முறையையும் பாட்டாளி வர்க்கக் கட்சிகளின் கொள்கையையும் உருவாக்குவதில் விஞ்ஞான அணுகுமுறைக்கான மிக முக்கிய தத்துவார்த்த முன்தேவைகளில் ஒன்றாகும்.

எந்த ஒரு புரட்சியிலும் பிரதான பிரச்சினை அரசியல் அதிகாரத்தைப் பற்றிய பிரச்சினையாகும். "எந்த வர்க்கம் ஆட்சி அதிகாரத்தை வைத்திருக்கிறது என்பதே எல்லாவற்றையும் நிர்ணயம் செய்கிறது."* சமூகப் புரட்சி எந்த வடிவத்தில் நடந்தேறினாலும் அரசாட்சி இன்னொரு வர்க்கத்தின் கரங்களுக்கு மாறுவதுதான் இதன் முக்கிய கடமையாகும்.

தொழிலாளி வர்க்கம் மற்றும் இதன் கூட்டாளிகளின் கரங்களுக்கு ஆட்சி வருவதுதான் சோஷலிசப் புரட்சிக்கு அவசியமான நிபந்தனையாகும்; இத்தகைய ஆட்சிதான் — கா. மார்க்சும் பி. எங்கெல்சும் கூறியபடி — பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் எனப்படுகிறது. தனது விடுதலைப் பணியை நிறைவேற்ற இந்த ஆட்சி தொழிலாளி

---

* வி. இ. லெனின், தேர்வு நூல்கள், தொகுதி 5, பக்கம் 389.

வர்க்கத்திற்கு அவசியம். பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்பது தன் சாராம்சத்திலும் லட்சியங்களிலும் பூர்ஷ்வா சர்வாதிகாரத்திற்கு நேர் எதிரானது. பாட்டாளி வர்க்க சர்வாதி காரம் என்பதை எப்படி எளிமையாக, புரியக் கூடிய வகையில் நிர்ணயிப்பது?

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரமானது, தொழிலாளி வர்க்கம் மிகப் பரவலான உழைப் பாளர் திரளினருடன் ஏற்படுத்தும் அரசியல் ஆட்சியாகும்.

''பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம்'' என்ற சொல்லை லெனின் அடிக்கடி பயன்படுத்தினார். அதே சமயம், பாட்டாளி வர்க்க அரசின் வர்க்க சாரத்தை விளக்க அவர் ''தொழிலாளி வர்க்கத் தின் அரசியல் ஆட்சி'', ''தொழிலாளி வர்க்கத் தின் அரசியல் ஆதிக்கம்'' போன்ற சொற்களை யும் பயன்படுத்தினார்.

இந்த ஆட்சியின் வடிவங்கள் உள்நாட்டு, வெளிநாட்டு சூழ்நிலைகளுக்கேற்ப மாற முடியும்.

தொழிலாளி வர்க்க சர்வாதிகாரத்தின் முக்கிய சாரம், புதிய சோஷலிச சமுதாயத்தின் கட்டுமானம் என்ற இதன் ஆக்கபூர்வமான அம் சமாகும். பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் வர்க்க உள்ளடக்கத்தின் இந்த அம்சத்தை வி. இ. லெனின் **''இடதுசாரி'' கம்யூனிசம் — இளம் பருவக் கோளாறு** என்ற தன் நூலில் முழுமையாக விளக்குகிறார். ''பாட்டாளி வர்க்கத்தால் தலை மை பாத்திரத்தையும் அரசாட்சியையும் தன் கரங்களில் தொடர்ந்து வைத்திருக்க முடியுமள விற்குப் பாட்டாளி வர்க்கமானது விவசாயி

களுடன் கூட்டு வைத்துக் கொள்வதுதான்''* பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் உயர் கோட்பாடு என்றார் லெனின்.

பாட்டாளிகள் அல்லாத சிறு உற்பத்தியாளர் களுடன் தொழிலாளி வர்க்கத்தின் பரஸ்பர உறவை ஒழுங்குபடுத்த — இது மிகச் சிக்கலான, முக்கியமான விஷயமாகும் — பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் தேவை என்று சோவியத் ருஷ்யா வின் அனுபவம் காட்டுகிறது. இதன் முக்கிய சிறப்பியல்புகளில் ஒன்று இதில்தான் அடங்கியுள் ளது. தூக்கியெறியப்பட்ட முதலாளி வர்க்கம் இன்னமும் வலிமையானதாக இருக்கிறது. தூக்கி யெறியப்பட்ட முதலாளி வர்க்கத்தின் வல்லமை இதன் சர்வதேச உறவுகளின் உறுதியிலும் சிறு பண்ட உற்பத்தியிலும் உள்ளது. இச்சிறு பண்ட உற்பத்தியானது ''முதலாளித்துவத்தையும் முத லாளி வர்க்கத்தையும் இடையறாது நாள் தோறும் மணிதோறும் தன்னியல்பாகவும் பெரு வீத அளவிலும் தோற்றுவிக்கிறது''. சிறு பண்ட உற்பத்தியாளர்களை ''அகற்றிவிட முடியாது, நசுக்கிவிடவும் முடியாது; நாம் இவர்களுடன் சேர்ந்து வாழ்ந்தாக வேண்டும். நீடித்த, மெது வான, எச்சரிக்கையான ஒழுங்கமைப்புப் பணி யின் மூலமாக மட்டுமே இவர்களை மாற்றவும், போதனை அளித்துத் திருத்தவும் முடியும் (அவ் வாறே செய்யவும் வேண்டும்)''** என்றார் லெனின்.

---

* V. I. Lenin, *Collected Works*, vol. 32, p. 490.

** வி. இ. லெனின், தேர்வு நூல்கள், தொகுதி 10, பக்கங்கள் 188, 222.

எனவே நீண்ட, உறுதியான, அயராத, ஒன்று பட்ட வர்க்கப் போராட்டமின்றி — இது இப் போதுதான் புதிய வடிவங்களை மேற்கொள் கிறது — வர்க்கம் என்ற வகையில் பூர்ஷ்வாக் களை ஒழித்துக் கட்ட முடியாது.

முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்திற்கு மாறும் கட்டத்தில் பல்வேறு விதமான வர்க்கப் போராட்டங்கள் தோன்றுகின்றன, முதலாளித் துவத்தை வெற்றி கொண்டு புதிய, சோஷலிச சமுதாயத்தைக் கட்ட தொழிலாளி வர்க்க ஆட்சி நிறைவேற்ற வேண்டிய கடமைகள் சிக்கலான வையாக, பன்முகத் தன்மையை உடையவையாக மாறுகின்றன. இவற்றையெல்லாம் ஒன்று சேர்த்து, வெற்றியடைந்த பாட்டாளி வர்க் கத்தின் முன் நிற்கும் இச்சிக்கலான பிரச்சினை களை வி. இ. லெனின் பின்வருமாறு குறிப்பிட் டார். ‘‘பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம் என்றால் பழைய சமுதாயத்தின் சக்திகளுக்கும் மரபுகளுக்கும் எதிரான இடையறாத போராட் டம் என்று அர்த்தம், இரத்தக் களரியானதும் அமைதியானதுமான, வன்முறையானதும் சமா தானமானதுமான, ராணுவ வழிப்பட்டதும் பொருளாதார வழிப்பட்டதுமான, போதனைத் துறையிலானதும் நிர்வாகத் துறையிலானதுமான போராட்டம் என்று அர்த்தம்.’’ *

நடைமுறையில் பாட்டாளி வர்க்க சர்வாதி காரத்தை அங்கீகரிப்பது என்றால் கட்சியின் அன்றாடப் பணியை ஆதியோடு அந்தமாக

---

* அதே நூல், பக்கம் 223.

மாற்றியமைப்பது என்று பொருள், கோடானு கோடி தொழிலாளர்கள், கொத்தடிமைகள், சிறு விவசாயிகளின் — பூர்ஷ்வா ஆட்சியை முறியடிக் காமல் இவர்களை முதலாளித்துவ கொடுமை களிலிருந்து மீட்க முடியாது — மட்டம் வரை கீழிறங்கிச் செயல்படுவது என்று பொருள், ஆட்சியை நீங்கள் உங்கள் கரங்களில் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று இந்த கோடானு கோடி மக்களுக்கு விளக்க வேண்டும் என்று பொருள். இவ்வாறுதான் லெனின் தொழிலாளர் களுக்கு விளக்கினார்.

இவ்வாறாக, சோஷலிச சமுதாயத்தை நிர் மாணிப்பதுதான் பாட்டாளி வர்க்க சர்வாதி காரத்தின் முக்கிய வரலாற்றுக் கடமை என்றார் லெனின். சோஷலிசப் புரட்சியின் பொழுது தொழிலாளி வர்க்கம் பூர்ஷ்வாக்களை ஆட்சி யிலிருந்து அகற்ற மட்டுமே செய்கிறது. ஆனால் முறியடிக்கப்பட்ட முதலாளி வர்க்கம், தன் அரசியல் ஆதிக்கத்தை நிலைநாட்டிய தொழி லாளி வர்க்கத்திற்கு எதிரான போராட்டத் தைக் கைவிடுவதில்லை. லெனினின் வார்த்தை களில் சொன்னால், அது தன் எதிர்ப்பை பத்து மடங்கு அதிகப்படுத்துகிறது. ''புரட்சிக்குப் பிறகு நீண்ட காலம் சுரண்டலாளர்கள் பல மாபெரும் நடைமுறை சாதகங்களைத் தவிர்க்க முடியாத படி நீடித்து வைத்திருப்பார்கள்: அவர்களிடம் இன்னும் பணம் இருக்கிறது... ஒரு சில அசையும் சொத்துக்கள் உள்ளன — இவை பெரும்பாலும் ஓரளவு கணிசமானவை; அவர்கள் இன்னும் பல தொடர்புகளை, நிறுவன ஒழுங்கமைப்பு

எனவே நீண்ட, உறுதியான, அயராத, ஒன்று பட்ட வர்க்கப் போராட்டமின்றி—இது இப் போதுதான் புதிய வடிவங்களை மேற்கொள் கிறது—வர்க்கம் என்ற வகையில் பூர்ஷ்வாக் களை ஒழித்துக் கட்ட முடியாது.

முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்திற்கு மாறும் கட்டத்தில் பல்வேறு விதமான வர்க்கப் போராட்டங்கள் தோன்றுகின்றன, முதலாளித் துவத்தை வெற்றி கொண்டு புதிய, சோஷலிச சமுதாயத்தைக் கட்ட தொழிலாளி வர்க்க ஆட்சி நிறைவேற்ற வேண்டிய கடமைகள் சிக்கலானவையாக, பன்முகத் தன்மையை உடையவையாக மாறுகின்றன. இவற்றையெல்லாம் ஒன்று சேர்த்து, வெற்றியடைந்த பாட்டாளி வர்க் கத்தின் முன் நிற்கும் இச்சிக்கலான பிரச்சினை களை வி. இ. லெனின் பின்வருமாறு குறிப்பிட் டார். ''பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம் என்றால் பழைய சமுதாயத்தின் சக்திகளுக்கும் மரபுகளுக்கும் எதிரான இடையறாத போராட் டம் என்று அர்த்தம், இரத்தக் களரியானதும் அமைதியானதுமான, வன்முறையானதும் சமா தானமானதுமான, ராணுவ வழிப்பட்டதும் பொருளாதார வழிப்பட்டதுமான, போதனைத் துறையிலானதும் நிர்வாகத் துறையிலானதுமான போராட்டம் என்று அர்த்தம்.'' *

நடைமுறையில் பாட்டாளி வர்க்க சர்வாதி காரத்தை அங்கீகரிப்பது என்றால் கட்சியின் அன்றாடப் பணியை ஆதியோடு அந்தமாக

---

* அதே நூல், பக்கம் 223.

மாற்றியமைப்பது என்று பொருள், கோடானு கோடி தொழிலாளர்கள், கொத்தடிமைகள், சிறு விவசாயிகளின் — பூர்ஷ்வா ஆட்சியை முறியடிக் காமல் இவர்களை முதலாளித்துவ கொடுமை களிலிருந்து மீட்க முடியாது — மட்டம் வரை கீழிறங்கிச் செயல்படுவது என்று பொருள், ஆட்சியை நீங்கள் உங்கள் கரங்களில் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று இந்த கோடானு கோடி மக்களுக்கு விளக்க வேண்டும் என்று பொருள். இவ்வாறுதான் லெனின் தொழிலாளர் களுக்கு விளக்கினார்.

இவ்வாறாக, சோஷலிச சமுதாயத்தை நிர் மாணிப்பதுதான் பாட்டாளி வர்க்க சர்வாதி காரத்தின் முக்கிய வரலாற்றுக் கடமை என்றார் லெனின். சோஷலிசப் புரட்சியின் பொழுது தொழிலாளி வர்க்கம் பூர்ஷ்வாக்களை ஆட்சி யிலிருந்து அகற்ற மட்டுமே செய்கிறது. ஆனால் முறியடிக்கப்பட்ட முதலாளி வர்க்கம், தன் அரசியல் ஆதிக்கத்தை நிலைநாட்டிய தொழி லாளி வர்க்கத்திற்கு எதிரான போராட்டத் தைக் கைவிடுவதில்லை. லெனினின் வார்த்தை களில் சொன்னால், அது தன் எதிர்ப்பை பத்து மடங்கு அதிகப்படுத்துகிறது. ''புரட்சிக்குப் பிறகு நீண்ட காலம் சுரண்டலாளர்கள் பல மாபெரும் நடைமுறை சாதகங்களைத் தவிர்க்க முடியாத படி நீடித்து வைத்திருப்பார்கள்: அவர்களிடம் இன்னும் பணம் இருக்கிறது... ஒரு சில அசையும் சொத்துக்கள் உள்ளன — இவை பெரும்பாலும் ஓரளவு கணிசமானவை; அவர்கள் இன்னும் பல தொடர்புகளை, நிறுவன ஒழுங்கமைப்பு

மற்றும் நிர்வாகப் பழக்கங்களை வைத்திருக்கி றார்கள்... அதிக உயர்வான கல்வித் தரம் இருக்கிறது, உயர் தொழில்நுட்ப அலுவலருடன் (முதலாளிகளைப் போலவே வாழ்ந்தும் சிந்தித் தும் வருபவர்கள்) நெருக்கமான தொடர்புகள் வைத்திருக்கிறார்கள், போர்க்கலையில் இணை யற்ற வகையில் மேலதிகமான அனுபவம் கொண் டிருக்கிறார்கள் (இது மிகவும் முக்கியம்), இத்தி யாதி, இத்தியாதி.'' *

முறியடிக்கப்பட்ட சுரண்டலாளர்கள் பாட் டாளி வர்க்க அரசாட்சிக்கு எதிரான போராட் டத்தில் மிகக் கடுமையான, முரட்டுத்தனமான வன்முறை நடவடிக்கைகளை மேற்கொள்கின் றனர், தாமே நிலைநாட்டிய பூர்ஷ்வா சட்ட வரையளவுகள், ஒழுங்குமுறை, அரசுக் கட்டுப் பாடு, ஜனநாயகம் ஆகியவற்றை வெட்கங்கெட்ட வகையில் மீறுகின்றனர். கலகங்கள், சதிகள், பொருளாதார மற்றும் அரசியல் சீர்குலைவு ஆகியவற்றிற்குப் பிற்போக்கு ஏற்பாடு செய் கிறது, பயங்கரவாதச் செயல்களில் சற்றும் தயங் காது இறங்கி, உள்நாட்டு யுத்தத்தை மூட்டி விடுகிறது. எனவே தாம் இழந்த நிலைகளை வலுக்கட்டாயமாகத் திரும்பப் பெற முயலும் நகர, கிராம பூர்ஷ்வாக்களின் பால், சுரண்டும் சிறுபான்மையின் பால் புரட்சிகர வர்க்கம் கடைப்பிடிக்கும் சர்வாதிகாரம் வரலாற்று ரீதி யாக நியாயமானது. ஏனெனில் மிகப் பெரும்

---

* வி. இ. லெனின், **தேர்வு நூல்கள்**, தொகுதி 9, பக்கம் 46.

பாலோருக்குச் சொந்தமான பொருளாயத செல்வங்கள், ஆன்மீகச் செல்வங்கள், உரிமைகள், சுதந்திரங்களைத் தம் கரங்களில் குவித்து வைத்திருந்த சிறுபான்மையினருக்கு எதிரானது இச்சர்வாதிகாரம்.

ஆட்சியை வெல்லும் முறைகள், வடிவங்களுக்கு கம்யூனிஸ்டுக் கட்சிகள் பெரும் முக்கியத்துவம் அளிக்கின்றன. இப்பிரச்சினைகளின் தீர்வானது அந்தந்த நாட்டின் திட்டவட்டமான சூழ்நிலைகளைப் பொறுத்தது. நாட்டிற்கு நாடு சூழ்நிலைகள் மாறுபடுமாதலால் ஆட்சியைப் பிடிக்கும் முறைகளும் வெவ்வேறானவை.

ஆட்சியைப் பிடிப்பதில் சமாதான வழிகளும் பலாத்கார வழிகளும் உள்ளன. கம்யூனிஸ்டுகள் தமது மனிதாபிமான நோக்கத்தின் காரணமாய் தொழிலாளி வர்க்கம் சமாதான வழியில் ஆட்சியைப் பிடிக்க வேண்டும் என்றுதான் எப்போதுமே விரும்புகின்றனர்; ஆனால் சோஷலிசத்திற்கு மாறும் வடிவத்தைத் தேர்ந்தெடுப்பது என்பது திட்டவட்டமான சூழ்நிலைகள், வரலாற்று நிலைமை, தேசிய அளவிலும் சர்வதேச அளவிலும் வர்க்க சக்திகளின் விகிதாச்சாரம் ஆகியவற்றைப் பொறுத்தது.

''தொழிலாளி வர்க்கம் சமாதானமான வழியில் தான் ஆட்சியைப் பிடிக்க விரும்பும் என்பது சொல்லாமலேயே அமையும்.''* ஆனால் அதே நேரத்தில், சமாதானமாக ஆட்சியைப் பாட்டாளிகளிடம் விட்டுக் கொடுக்க பூர்ஷ்வாக்கள்

---

* V. I. Lenin, *Collected Works*, vol. 4, p. 276.

ஒப்புக் கொள்வார்களா என்பது சந்தேகமே என்றும் லெனின் எச்சரித்தார். எனவே மார்க்சிய-லெனினியக் கட்சிகளும் இவற்றின் கீழுள்ள தொழிலாளி வர்க்கமும் சமாதான வழியிலும் பலாத்கார வழிகளிலும் ஆட்சியைப் பிடிக்கத் தயாராய் இருக்க வேண்டும்.

தொழிலாளர்களும் இவர்களுடைய கூட்டாளிகளும் பரவலாகப் பங்கேற்றால்தான் ஆட்சியைப் பிடிப்பதற்கான பலாத்காரமான, ஆயுதப் போராட்டம் வெற்றிகரமாக முடியுமென்று மார்க்சிய-லெனினியக் கட்சிகள் கருதுகின்றன. இதற்கு மாறாக, ''இடதுசாரிகள்'' சிறு குழுக்களின் சதித் திட்டங்கள் மீது நம்பிக்கை வைக்கின்றனர்.

பலாத்கார வடிவம் என்றால் ஆயுதக் கிளர்ச்சி என்று மட்டும் பொருளாகாது. கொரில்லா யுத்தம், உள்நாட்டு யுத்தம், தேசிய விடுதலை யுத்தம் ஆகிய வடிவங்களும் உள்ளன. பாசிசத்திற்கு எதிரான யுத்தத்திலும் காலனியாதிக்கத்திற்கு எதிரான ஒடுக்கப்பட்ட மக்களினங்களின் யுத்தங்களிலும் இந்த வடிவங்கள்தான் வெற்றியை ஈட்டித் தந்தன. மக்களின் பரந்த ஆதரவு இருந்தால்தான் ஆயுதப் போராட்டம் வெற்றியடையும்.

இன்று உலகில் பல நாடுகளில் சமாதான முறையில் ஆட்சியைப் பிடிப்பதன் மீது பெரும் கவனம் செலுத்தப்படுகிறது. சமாதானப் புரட்சி என்றால், ஆளும் வர்க்கங்கள் தாமாகவே முன் வந்து ஆட்சியைத் தொழிலாளி வர்க்கத்திற்குத் தரும் என்று பொருளாகாது. இப்படி நடக்காது.

சமாதான வழி என்றால், ஆதிக்கம் செலுத்தும் வர்க்கங்களின் ஆயுத எதிர்ப்பு கண்டிப்பாகத் தோல்வியடையும் அளவு அவற்றின் பலம் உள்ளது என்று பொருள்.

பாசிசம் முறியடிக்கப்பட்டதையடுத்து ஒரு சில ஐரோப்பிய நாடுகளில் மக்கள் ஜனநாயகப் புரட்சிகள் சமாதான வழியில் நடந்தன. தொழிலாளி வர்க்கம், கம்யூனிஸ்டுக் கட்சிகளைச் சுற்றி பெரும்பாலான உழைப்பாளிகள் அணிதிரண்டதால், பூர்ஷ்வாக்களால் மக்கள் இயக்கத்திற்கு எதிராக நிற்க முடியவில்லை.

இன்று தொழிலாளி வர்க்கத்தால் ஆட்சியை சமாதான வழியில் பிடிக்க முடியுமென்பது சில கம்யூனிஸ்டுக் கட்சிகளின் வேலைத்திட்டங்களில் எழுதப்பட்டுள்ளது. கம்யூனிஸ்டு, தொழிலாளர் கட்சிகளின் மாஸ்கோ மகாநாட்டு (1960) பிரகடனத்தில் இது பிரதிபலிக்கிறது.

தொழிலாளி வர்க்கத்தின் மார்க்சியக் கட்சி சமாதானப் பாதை அல்லது ஆயுதப் போராட்டம், எந்தப் பாதையைத் தேர்ந்தெடுத்தாலும், அது பொது நியதிகளின் அடிப்படையிலானது. இரண்டு பாதைகளுக்குமே, போராடும் திறமையும் விருப்பமும் உள்ள புரட்சி வர்க்கங்களின் பலம் வேண்டும். அதாவது, ஆட்சியை எந்த வழியில் பிடித்தாலும், எதிர்ப்பு காட்டும் வர்க்கங்களின் பால் புரட்சிகர பலாத்காரம் கடைப்பிடிக்கப்பட வேண்டும்.

ஆட்சியைப் பிடிக்கும் தூய வடிவங்கள் என்று ஒன்றும் இல்லையென சோஷலிசப் புரட்சிகளின் அனுபவம் காட்டுகிறது. சமாதான வழிகளும்

பலாத்கார வழிகளும் கலந்தே காணப்படுகின்றன. இவை அடிக்கடி மாறி மாறி வரும். ஆட்சியைப் பிடிப்பதென்பது எப்போதுமே எதிர்ப் புரட்சியுடனான மோதலாகும்; இதில் வெற்றி பெறுவதென்பது, தொழிலாளி வர்க்கம், அதன் கூட்டாளிகளின் அரசியல், ஸ்தாபன உணர்வையும், இறுதி வெற்றி வரை போராட இவை எவ்வளவு தயார் என்பதையும் பொறுத்தது.

மற்ற நாடுகள் சோஷலிசத்திற்கு வரும் போது அது வேறு பல வழிகளை முன்வைக்கும் என்று லெனின் பன்முறை கூறினார்.

தொழிலாளி வர்க்கத்தின் அளவு ரீதியான, பண்பு ரீதியான வளர்ச்சி, இதன் வர்க்க உணர்வு, கல்வி, கலாசார வளர்ச்சி, புரட்சி சக்திகள் மற்றும் இவற்றின் கூட்டணிகளின் வளர்ச்சி, இன்னும் பல காரணிகளின் காரணமாய் தொழிலாளி வர்க்கத்தின் சர்வாதிகாரத்திற்கான போராட்டம் வரலாற்று வளர்ச்சிப் போக்கில் கணிசமாகச் செழுமையடையும். எனவே வறட்டுத்தனத்தை, தேக்கத்தை எப்போதுமே எதிர்க்கும் கம்யூனிஸ்டுகள் புதுப்புதுச் சூழ்நிலைகளுக்கேற்ப பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் பற்றிய தத்துவத்தை ஆக்கபூர்வமாக வளர்க்கப் பாடுபடுகின்றனர்.

வாழ்க்கை புதுப்புது படிப்பினைகளையும் அனுபவங்களையும் தருகிறது. எடுத்துக்காட்டாக இன்று, எதிர்ப்பைக் காட்ட ஆதிக்க வர்க்கங்களுக்கு உள்ள வாய்ப்புகள் நாட்டின் உள்ளேயுள்ள வர்க்கச் சக்திகளின் சமன்பாட்டால் மட்டும் முடிவு செய்யப்படுவதில்லை. சமாதான

வழியிலோ, பலாத்கார வழியிலோ, எந்த வழியில் தொழிலாளி வர்க்கம் புரட்சியை நடத்தினாலும் அதற்கெதிராக உள்நாட்டு முதலாளி வர்க்கம் மட்டுமின்றி, சர்வதேச எதிர்ப்புரட்சியும் வெறித் தனமாக எதிர்த் தாக்குதல்களைத் தொடுக் கின்றன.

சுரண்டும் அமைப்பை எப்படியாவது காப் பாற்ற வேண்டும் என்ற ஏகாதிபத்திய நாட் டம், சோஷலிசப் பாதையில் காலடி எடுத்து வைக்கும் எந்த ஒரு நாட்டின் உள் விவகாரங் களிலும் ஏகாதிபத்திய சக்திகளும் உலகத் தன் மையைக் கொண்ட அரசு ஏகபோக முதலாளித்து வமும் தலையிடுவதை முன்நிர்ணயிக்கின்றது. எனவே மார்க்சிய-லெனினியக் கட்சியின் தலைமை, தொழிலாளி வர்க்கம் விழிப்புணர் வோடு இருக்க வேண்டும், புதிய ஆட்சியின் புரட்சி சித்தத்திற்கு பூர்ஷ்வாக்கள் கட்டுப்பட்டு நடக்கு மாறு செய்யும் திறமையைப் பெற்றிருக்க வேண் டும். சிலி நாட்டில் நடந்த ஜனநாயக, ஏகாதி பத்திய எதிர்ப்பு புரட்சியை ஒடுக்குவதில் — இதன் விளைவாக சிலி நாட்டில் பாசிசம் ஆட்சிக்கு வந்தது — அமெரிக்க ஐக்கிய நாட்டின் தலையீடு இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு. சோஷலிசத் திற்கு மாறிச் செல்லும் போது புரட்சியின் சாதனைகளைப் பாதுகாப்பது ஜீவாதார முக் கியத்துவம் வாய்ந்தது என்று சிலி நாட்டுப் படிப்பினைகள் காட்டுகின்றன.

கடந்தகால "இடதுசாரிகளும்" இன்றைய "இடதுசாரிகளும்" பாட்டாளி வர்க்க சர்வாதி காரம் செயல்படும் முறையைப் புரிந்து கொள்

ளாமல், வலதுசாரி சமூக-ஜனநாயகத்தின் அரசியல் பிரமுகர்களின் மீது மக்கள் திரளினருக்கு அதிகரித்து வந்த அதிருப்தியைப் பாட்டாளி வர்க்க அரசின் கட்சித் தலைவர்கள் மீது திருப்பினர், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தில் பாட்டாளி வர்க்கக் கட்சியின் புரட்சிகர உட்கருவின் பாத்திரத்தை ஒப்புக் கொள்ளவில்லை; இந்த ‘‘இடதுசாரிகளின்’’ தவறுகள் இதைத் தான் காட்டின, காட்டுகின்றன. இது கட்சியுணர்வையும் கட்சிக் கட்டுப்பாட்டையும் மறுக்கவும் இதன் மூலம் பூர்ஷ்வாக்கள் முன் பாட்டாளிகள் செயலிழந்து நிற்கவும் இட்டுச் சென்றது.

பூர்ஷ்வா ஆதரவாளர்கள் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்திற்கு எதிராக கடும் போராட்டத்தை நடத்துகின்றனர். இவர்கள் பாட்டாளி வர்க்க அரசின் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளைப் பற்றி மௌனம் சாதிக்கின்றனர், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்பதை, எவ்வித சட்டமும் இல்லாத, நேரடியாக வன்முறையை மட்டுமே ஆதாரமாகக் கொண்ட ஆட்சியாக சித்தரிக்கின்றனர், புரட்சிகர பலாத்காரத்தின் மீது மட்டுமே கவனம் செலுத்துகின்றனர். ஆனால் உண்மையில் விஷயம் என்னவென்றால், சோஷலிச மாற்றங்களை நிறைவேற்றும் தொழிலாளி வர்க்க ஆட்சியால், புரட்சி நடைபெறும் தருணத்தில் நிலவும் பூர்ஷ்வா சட்டத்தின் அடிப்படையில் செயல்பட முடியாது, இச்சட்டம் சுரண்டும் வர்க்கங்களின் ஆதிக்கத்தை நிலைப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டது. சோஷலிசப் புரட்சி புதிய சட்டத்தை, சோஷலிச சட்ட

முறையை ஏற்படுத்துகிறது, உழைப்பாளிகளின் நலன்களைப் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்ட தொழிலாளி வர்க்க சித்தத்தை புதிய சட்ட முறையில் உருக் கொள்ளச் செய்கிறது.

தொழிலாளி வர்க்கம் எந்த வழியில் ஆட்சியைப் பிடித்தாலும் இது அரசின் வர்க்க உள்ளடக்கத்தை அடியோடு மாற்றியாக வேண் டும், பழைய அரசு இயந்திரத்தை உடைத்தாக வேண்டும்.

அரசியல் ஆட்சியைப் பிடித்ததும் மறு தரு ணமே தொழிலாளி வர்க்கத்தின் முன், எப்படி நிர்வகிப்பது, பூர்ஷ்வா அரசை என்ன செய்வது என்பன போன்ற ஏராளமான கடமைகள் நிற் கும்.

மக்கள் திரளினரை ஒடுக்கும் அரசியல் இயந் திரமாகிய பூர்ஷ்வா அரசை அகற்றுவதுதான் மார்க்சிய-லெனினியக் கட்சிகளின் செயல்முறை, செயல்திட்டத்தின் நோக்கமாகும்.

''இடதுசாரி'' கம்யூனிசம் — இளம் பருவக் கோளாறு என்ற நூலில் லெனின் புரட்சிகர நடை முறை முன்வைத்த பல பிரச்சினைகளை ஆராய்ந் தார். அவற்றிற்கு உடனடி, நடைமுறை முக்கியத் துவத்தோடு கூட, எதிர்கால முக்கியத்துவமும் இருந்தது. அப்பிரச்சினைகளில் சில:

—வென்றதை எப்படி பேணிக் காத்து ஸ்திரப் படுத்துவது, எந்த லட்சியங்களுக்காகப் புரட்சி நடத்தப்பட்டதோ அவற்றை எப்படி அடைவது;

—உழைக்கும் மனிதனின் ஆட்சியாக விளங்கி, அவனுடைய நலன்களுக்குச் சேவை புரியவல்ல அரசாட்சியை எப்படி ஏற்படுத்துவது;

—பூர்ஷ்வாக்கள் இல்லாமல் எப்படி ஆட்சி செய்வது, அதாவது மக்களின் சொத்தாகியுள்ள பொருளாதாரத்தை எப்படி நிர்வகிப்பது;

—மக்களாட்சியைப் பயன்படுத்தி, உழைப்பாளி களின் கரங்களில் உள்ள பொருளாதார வளர்ச் சியை ஆதாரமாகக் கொண்டு எப்படி சமூக, தேசிய இன உறவுகள் அனைத்தையும் மாற்றி யமைப்பது;

—வெற்றியடைந்த புரட்சியின் நலன்களை சர் வதேச அரங்கில் எப்படி நன்கு பாதுகாப்பது.

1917ஆம் ஆண்டு நடந்த ருஷ்யப் புரட்சியின் அனுபவம் இதற்கு உதாரணமாகும். ருஷ்யாவில் மாபெரும் அக்டோபர் சோஷலிசப் புரட்சி, சமுதாயத்தை சோஷலிச ரீதியில் மாற்றியமைப் பதை நோக்கமாகக் கொண்ட புதிய அரசு அமைப்பைத் தோற்றுவித்தது என்று லெனின் தன் படைப்புகளில் விரிவாகக் காட்டினார்.

போல்ஷிவிக்குகள் இப்பிரச்சினையை ஆக்கபூர் வமாக அணுகினர் என்பதைக் குறிப்பிட வேண் டும். அரசு இயந்திரம் முழுவதையும் அழிக்க வேண்டியதில்லை என்று அவர்கள் கருதினர். பூர்ஷ்வா அரசு இயந்திரம் ஒரே மாதிரியான தல்ல, இதைத் தனித்தனியே அணுக வேண்டும் என்றார் லெனின். ஒடுக்கும் பணியை, போலீஸ், இராணுவ அதிகாரச் சடங்கு பணிகளை நிறை வேற்றிய இராணுவமும் போலீசும் முழுமை யாக ஒழித்துக் கட்டப்பட வேண்டும். கணக்கு வைப்பு, கண்காணிப்பு, பொருளாதார ஒழுங் கமைப்பு பணிகளை நிறைவேற்றிய உறுப்புகள், அதாவது வங்கிகள், நுகர்வாளர் சங்கங்கள்,

தபால் துறை போன்றவை பயன்படுத்தப்பட வேண்டும், ஆனால் இவற்றிற்குப் புதிய வர்க்க சாரத்தை அளிக்க வேண்டும். ''இந்தப் பகுதியை உடைக்கக் கூடாது, உடைக்கவும் வேண்டிய தில்லை. இதை முதலாளிகளின் கட்டுப்பாட்டி லிருந்து அகற்ற வேண்டும், முதலாளிகளையும் அவர்களின் செல்வாக்கையும் இந்தப் பகுதி யிலிருந்து பிரித்து துண்டித்து வெட்டியெறிய வேண் டும், இதைப் பாட்டாளி வர்க்க சோவியத்து களுக்குக் கீழ்ப்படுத்த வேண்டும், இதை அதிகப் பரவலானதாக, சர்வாம்ச ரீதியானதாக, பொது மக்கள் பகுதியாக மாற்ற வேண்டும்'' என்றார் லெனின்.* ஸ்தாபன வடிவங்களை போல்ஷி விக்குகள் கற்பனை செய்யவில்லை, மாறாக ''வங்கிகள், சிண்டிகேட்டுகள், தலைசிறந்த தொழிற்சாலைகள், பரிசோதனைக் கூடங்கள், விஞ்ஞானப் பேரவைகள் போன்றவற்றைத் தயாராக முதலாளித்துவத்திடமிருந்து''** எடுத்துக் கொண்டனர்.

பழைய இயந்திரத்தை உடைப்பதும் அதே நேரத்தில் புதியதைத் தோற்றுவிப்பதும் ஒரே நேரச் செயலாகக் கருதப்படவில்லை. முறியடிக் கப்பட்ட வர்க்கங்களும் அதிகாரிகளும் எதிர்ப்பு காட்டாமலிருந்தால் இது இன்னமும் அதிகச் சிரமமற்ற வழிகளில் நடைபெற்றிருக்கும்.

ருஷ்யாவில் புதிய அரசு இயந்திரம் தோற்று விக்கப்பட்டதில் ஒரு முக்கிய அம்சம் இருந்தது.

---

* V. I .Lenin, *Collected Works*, vol. 26, p. 106.

** *Ibid.*, p. 110.

அக்டோபர் புரட்சிக்கு முன்னரே ருஷ்யாவில் மக்கள் திரளினரின் முன்முயற்சிகளால் தொழிலாளர், போர்வீரர்கள், விவசாயிகளின் பிரதிநிதிகளின் சோவியத்துகள் என்ற வெகுஜன ஆட்சி உறுப்புகள் தோற்றுவிக்கப்பட்டிருந்தன. இவை முதலில் நிர்வாகப் பணிகளையும் சட்டமியற்றும் பணிகளையும் சேர்த்தே செய்தன.

இவை பழைய ஆட்சியுறுப்புகளை முற்றிலுமாக மாற்றின, அந்தப் பழைய இயந்திரத்தில் அழிக்கப்படாமல், மாற்றியமைக்கப்பட்ட அங்கங்களுக்கு ஜனநாயக சாரத்தை அளித்தன. இப்படிப்பட்ட ஆட்சிக் குவிப்பும் "மேலிருந்தான" இதன் நடவடிக்கைகளும் "கீழிருந்தான" மக்கள் திரளினரின் தீவிர சுறுசுறுப்பும்தான் புதிய புரட்சி அரசாங்கத்திற்கும் பழைய அரசு இயந்திரத்திற்கும் — இது சதி வேலைகளில் ஈடுபட்டது, புதிய அரசாங்கத்தின் முன் சகலவித இடர்ப்பாடுகளையும் ஏற்படுத்தியது — இடையில் தோன்றிய பிளவை அகற்ற உதவின.

இவ்வாறாக, "மேலிருந்து" நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அதே நேரத்தில் "கீழிருந்து" மக்கள் திரளினர் சுறுசுறுப்பாகச் செயல்படுவதும் சேர்ந்து சோஷலிசப் புரட்சியின் வெற்றிக்குப் பின் புதிய அரசு உறுப்புகளைத் தோற்றுவிக்கும் நியதியாக விளங்கியது.

எதிர்ப்புரட்சியின் சதித் திட்டங்கள், சீர்குலைவு நடவடிக்கைகள், ஆயுத எதிர்ப்பு ஆகியவற்றிற்குப் பதிலளிக்கும் முகமாக சோவியத் ஆட்சி உடனடியாக செஞ்சேனையை வலுப்படுத்தியது, தொழிலாளி வர்க்கத்தின் அரசியல்

வெற்றிகளைப் பாதுகாக்கும் உறுப்புகளாக இராணுவ-புரட்சி கமிட்டிகளையும் அகில ருஷ்ய அசாதாரண கமிஷனையும் தோற்றுவித்தது. அதே நேரத்தில் பழைய இராணுவத்தைக் கலைக்கவும் புதிய, சோஷலிச இராணுவத்தை ஏற்படுத்தவும் சுறுசுறுப்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன, ஏனெனில் மக்களின் தரப்பில் நிற்கும் ஒரு இராணுவம் இல்லாமல் புரட்சியின் வெற்றியையும் அதை ஸ்திரப்படுத்துவதையும் பற்றி கற்பனைக் கூடச் செய்ய முடியாது என்று லெனின் சுட்டிக் காட்டினார்.

அதே பொழுது பழைய அரசு இயந்திரத்தை உடைக்க வேறு வழிகளும் உண்டென்று வாழ்க்கை காட்டியது. உதாரணமாக, ருஷ்யாவில் **1917**ஆம் ஆண்டு அக்டோபர் புரட்சி வெற்றி பெற்ற பின் சிதறிய பழைய இராணுவம் கலைக்கப்பட்டு, அதற்குப் பதில் புதிய தொழிலாளர், விவசாயி செஞ்சேனை தோற்றுவிக்கப்பட்டது. பல்கேரியாவில் பழைய இராணுவத்தைக் கலைக்க வேண்டிய அவசியம் இருக்கவில்லை. அங்கு உயர்மட்டத் தலைமை மாற்றப்பட்டது, கொரில்லா வீரர்களுக்கு எதிரான அடக்குமுறை நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள் அகற்றப்பட்டனர். இவர்களுக்குப் பதிலாக, பாசிசத்துக்கு எதிரான போராட்டத்தில் தீவிரப் பங்கேற்றவர்கள் வந்தனர்.

புரட்சி லட்சியங்களோடு நாடாளுமன்ற வடிவம் பயன்படுத்தப்பட்டது உட்பட அரசு சீரமைப்பு பிரச்சினை தீர்க்கப்பட்டது குறித்த மற்ற எடுத்துக்காட்டுகளையும் கூறலாம். செக்கோஸ்

லொவாக்கியாவில் தொழிலாளி வர்க்கம், பிற்போக்கு பூர்ஷ்வாக்களின் எதிர்ப்புரட்சி சதியை முறியடித்து, 1948 பிப்ரவரியில் சட்ட பூர்வமாக ஆட்சிக்கு வந்தது. இதனால் அங்கே நாடாளுமன்றம் சோஷலிச சமுதாய மாற்ற உறுப்பாகியது.

ருமேனியாவில் பழைய அரசு உறுப்பை மாற்றும் போக்கு படிப்படியாக நடந்தது. கிட்டத்தட்ட எல்லா நிறுவனங்களின் கட்டமைப்பும் நிர்வாக உறுப்புகளின் வடிவங்களும் நீண்ட காலம் மாற்றமின்றி இருந்தன. அதே சமயம் இவை புதிய சாரத்தைப் பெற்றன. பாசிச சக்திகளுக்குப் பதில் புதிய ஜனநாயக சக்திகள் வந்தன.

எதிர்காலப் புரட்சிகள், உழைப்பாளிகளின் ஒழுங்கமைப்பில் ஏராளமான புதிய வடிவங்களைத் தருமென்றார் லெனின். நம் நாட்களில், சோஷலிசத்திற்கு மாறிச் செல்லும் போது நிலவக் கூடிய ஆட்சி உறுப்புகளைத் தகர்க்க வேண்டியதில்லை, இவற்றிற்குப் புதிய வர்க்க சாரத்தை அளித்தாலே போதுமென்று வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளின் கம்யூனிஸ்டுக் கட்சிகள் கருதுகின்றன.

அரசாங்கத்தில் இருக்கும் கட்சியை மட்டும் மாற்றுவதன் மூலம் ''வெறும் பூர்ஷ்வா ஆட்சியை'' ''வெறும் பாட்டாளி வர்க்க ஆட்சியாக'' மாற்றலாம் என்ற சீர்திருத்தவாதக் கருத்தமைப்பை மெய்ப்பிக்கக் கூடிய ஒரு நிகழ்ச்சி கூட வரலாற்றில் இதுவரை நடந்ததில்லை. முதலாளி வர்க்கத்தினால் தோற்றுவிக்கப்பட்டு தன்

நலன்களுக்கேற்ப மாற்றியமைக்கப்பட்ட அரசாட்சி முறையின் பால் புரட்சிகர வர்க்கம் தொடர்ச்சியான கொள்கையைப் பின்பற்றாவிடில் அதனால் புரட்சிக்கு எவ்வளவு அபாயம் நேரிடும் என்று சிலி நாட்டுப் படிப்பினைகள் காட்டியுள்ளன. தேர்தலில் வெற்றி பெறுவதால் மட்டும் புதிய அரசாங்கத்தின் ஸ்திரத் தன்மைக்கான உத்திரவாதம் தானாக கிட்டாது. ஆட்சியை ஸ்திரப்படுத்த பொருளாதார நிர்வாகத்திலும் இராணுவத்திலும் ஆழ்ந்த ஜனநாயக மாற்றங்கள் தேவை. சிலி நாட்டு கம்யூனிஸ்டுகளே கூறும்படி சிலி நாட்டில் புரட்சி பாதியிலேயே நின்று விட்டது.

அந்நாட்டில் மக்கள் திரளினரின் முன்முயற்சியால் தோன்றிய பல்வேறு ஜனநாயக அமைப்புகள் (உணவுப் பொருள் கமிட்டிகள், தற்காப்பு கமிட்டிகள், சப்ளை மற்றும் விலைக் கட்டுப்பாட்டு கமிட்டிகள், கட்டிடப் பராமரிப்பு கவுன்சில்கள்) மக்களாட்சியை ஒழுங்குபடுத்தும் மையங்களாகப் பயன்படுத்தப்படவில்லை. பழைய அரசு இயந்திரத்தின் உள்ளே, புரட்சிக்குக் கட்டுப்படாத உறுப்புகள் இருந்தன. மக்கள் முன்னணியின் புரட்சி சக்திகளால் தம் கரங்களில் நிர்வாக ஆட்சியை மட்டுமே எடுத்துக் கொள்ள முடிந்தது. நாடாளுமன்றம், நீதி பரிபாலனம், தணிக்கை, கட்டுப்பாட்டு உறுப்புகள், மற்ற அரசாட்சி உறுப்புகளில் மக்கள் இயக்க எதிரிகளின் நிலை வலுவானதாயிருந்தது; இந்த அம்சம் பிந்தைய நிகழ்ச்சிகளின் மீது தன் தாக்கத்தைச் செலுத்தியது, புரட்சி சக்திகளின் தோல்

விக்கான காரணங்களில் ஒன்றாக அமைந்தது. இச்சூழ்நிலையில், அரசின் நடவடிக்கைகளைக் கண்காணித்து, இயன்ற அளவு அதிகமான அதிகாரங்களை மக்கள் திரளினருக்கே அளிக்கவல்ல முறைகளை ஏற்படுத்துவது அவசியமாயிருந்தது. இப்படிப்பட்ட கீழ்மட்ட கண்காணிப்பு, ஆட்சி செலுத்தவும், உள்ளேயிருந்து புரட்சிகரத் தலைமையின் உதவியோடு அரசு உறுப்புகளில் நடைபெறும் மாற்றங்களுக்குத் துணை நிற்கவும் மக்கள் திரளினருக்கு உதவியிருக்கும்.

எனவே சிலியில் புரட்சி தோல்வியடைந்ததற்கான மிக முக்கியக் காரணங்களில் ஒன்று, பிற்போக்கு அரசு இயந்திரத்தில் கணிசமான அளவு பெரும் பகுதி மாற்றப்படாமல் அப்படியே வைக்கப்பட்டிருந்ததும், மக்கள் திரளினரின் புரட்சிகர முன்முயற்சி மக்கள் முன்னணி அரசாங்கத்தால் உரியபடி மதிப்பிடப்படாமலிருந்ததுமாகும். நடுத்தர வர்க்கத்தினரில் ஒரு பகுதியினர், இராணுவத்தில் ஒரு பகுதியினர் மற்றும் அரசு இயந்திரத்தின் சில பிரிவுகளைச் சேர்ந்த ஊழியர்கள் ஆகியோரை சிலி நாட்டு பிற்போக்கு தன் பக்கம் இழுத்துக் கொண்டது.

இன்று அரசு ஏகபோக முதலாளித்துவம் ஆதிக்கம் செலுத்தும் போது பொருளாதார நிர்வகிப்பு இயந்திரத்தின் பங்கு பெரிதும் அதிகரித்துள்ளது. இந்த இயந்திரத்தை எதிரிகள் பொருளாதாரத்தை சீர்குலைக்க, சதி வேலைகளுக்கு, ஹேஷ்ய வாணிபத்துக்கு, செயற்கையாக இடர்ப்பாடுகளைத் தோற்றுவிக்க, இன்ன பிற வேலைகளுக்குப் பயன்படுத்தலாம். எனவே புரட்சியின்

நலன் கருதி புரட்சி சக்திகள் பொருளாதார கண்காணிப்பு இயந்திரத்தைச் சீரமைத்து, ஜன நாயகமயப்படுத்துவதன் மீது பெரும் கவனம் செலுத்த வேண்டும்.

ஆக, அரசு இயந்திரத்தைத் தகர்த்து அதை மாற்றுவதென்பது ஒரே தருணத்தில் முடியும் செயலல்ல, இது அரசு நிர்வாகத்திற்கு உழைக் கும் மாமக்களைப் பழக்கப்படுத்தும் ஒரு நீண்ட நிகழ்ச்சிப் போக்காகும்.

ஒவ்வொரு நாட்டிலும் இந்நிகழ்ச்சிப் போக்கு பல்வேறு காரணங்களைப் பொறுத்து, முக்கிய மாக, முறியடிக்கப்பட்ட வர்க்கங்களின் எதிர்ப்பு, தொழிலாளிகளின் வர்க்க கூட்டணிகளின் தீவிரம், பலம் ஆகியவற்றைப் பொறுத்து வளர்ச்சி யடையும். இதை கம்யூனிஸ்டுகள் ஆக்கபூர்வ மாக அணுகுகின்றனர். புதிய வரலாற்றுச் சூழ் நிலையில் எதிர்காலத்திற்கான பாதையைச் சுட்டிக் காட்டும் மார்க்சிய-லெனினிய தத்துவத் தின் அடிப்படைக் கோட்பாடுகள்தான் இந்த அணுகுமுறையின் அடிப்படையாகும்.

பூர்ஷ்வா சர்வாதிகாரத்திற்குப் பதில் பாட் டாளி வர்க்க சர்வாதிகாரம், பூர்ஷ்வா ஜனநாய கத்திற்குப் பதில் பாட்டாளி வர்க்க ஜனநாயகம் வருகிறது. பூர்ஷ்வா ஜனநாயகம் எல்லா விதங் களிலும் பிற்போக்கின் பக்கம் சாயும் பொழுது பாட்டாளி வர்க்க ஜனநாயகம் தன் உள் தர்க்கத் தின் காரணமாய் பொதுமக்கள் ஜனநாயகமாக வளருகிறது. பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்பது பூர்ஷ்வா ஜனநாயகத்திலிருந்து குணாம்ச ரீதியாக வேறுபட்ட ஒரு ஜனநாயக

வடிவம், ஏனெனில் இது சமுதாய நிர்வகிப்பில் பரவலான மக்கள் திரளினரின் உண்மையான பங்கேற்பிற்கு வகை செய்கிறது. இன்று பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்திலிருந்து வளர்ந்துள்ள பொதுமக்கள் அரசின் ஜனநாயகம் என்பது சோஷலிச ஜனநாயகத்தின் உயர் வளர்ச்சிக் கட்டமாகும்.

தொழிலாளி வர்க்கத்தின் புரட்சிகர கட்சி என்பது சோஷலிசப் புரட்சியின் பிரதான சித்தாந்த, அரசியல், ஸ்தாபன மையமாகும். இப்படிப்பட்டதொரு அரசியல் வழிகாட்டி இல்லாமல் தொழிலாளி வர்க்கத்தால் மக்கள் திரளினரைத் தன்னுடன் இட்டுச் செல்ல முடியாது, ஆட்சியைப் பிடித்து சோஷலிசப் புரட்சியை வெற்றி பெறச் செய்ய முடியாது. “போராட்டத்தில் புடம் போடப்பட்டு உருக்கு உறுதி கொண்ட ஒரு கட்சி இல்லையேல், குறிப்பிட்ட அந்த வர்க்கத்திலுள்ள நேர்மையானோர் அனைவரின் நம்பிக்கைக்குப் பாத்திரமான ஒரு கட்சி இல்லையேல், வெகுஜனங்களது மனப்பாங்கைக் கவனித்து வருவதற்கும் வயப்படுத்துவதற்குமான திறன் கொண்ட ஒரு கட்சி இல்லையேல், இத்தகைய ஒரு போராட்டத்தை வெற்றிகரமாய் நடத்த முடியாது” என்று லெனின் தன் நூலில் எழுதினார். *

தொழிலாளி வர்க்கத்தின் புரட்சிக் கட்சி, புதிய வகையான ஒரு கட்சி இருப்பது சோஷலிசப் புரட்சி வெற்றி பெற ஒரு முக்கிய நிபந்

---

* வி. இ. லெனின், தேர்வு நூல்கள், தொகுதி 10, பக்கம் 223.

தனையாகும். 1917ஆம் ஆண்டின் அக்டோபர் புரட்சி இதற்கு எடுத்துக்காட்டு. இந்த லெனினியக் கருத்து இன்றும் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டது. உலகெங்கும் உள்ள எல்லா கம்யூனிஸ்டுகளும் இதை ஒப்புக் கொள்கின்றனர். பிரபல கம்யூனிஸ்டுத் தலைவர்களின் கூற்றுகள் இதற்குச் சான்று பகர்கின்றன. இத்தாலிய நாட்டு கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைவர் ப. டல்யாட்டி பின்வருமாறு கூறினார்: ''நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட முன்னணிப் படையாகிய போல்ஷிவிக் கட்சி இருந்ததால்தான், லெனினின் தலைமையில் இக்கட்சி 20 ஆண்டுகளாக சந்தர்ப்பவாதத்தின் சகலவித வெளிப்பாடுகளுக்கும் எதிராகப் போராடி புரட்சி செயல்திட்டத்தையும் செயல்முறையையும் தீட்டியதால்தான் 1917இல் அக்டோபர் சோஷலிசப் புரட்சி வெற்றி பெற்றது.'' *

பின்லாந்து, பவாரியா, ஹங்கேரி, ஜெர்மனி ஆகிய நாடுகளில் அனுபவம் மிக்க, போர்க்குணம் மிக்க மார்க்சிய-லெனினியக் கட்சிகள் இருக்காததும், சமூக-ஜனநாயகம் பிளவுண்டு இருந்ததும் தான் அக்டோபர் புரட்சிக்குப் பின் உடனடியாக ஐரோப்பாவில் நடந்த ஒரு சில புரட்சிகள் தோல்வியடைய முக்கியக் காரணம்.

புதிய வகையான கட்சியாகிய கம்யூனிஸ்டுக் கட்சிக்கும் இரண்டாவது அகிலத்தின் வரம்புகளில் தோன்றி இறுதியில் சீர்திருத்தவாதக் கட்சிகளாகிய மற்ற கட்சிகளுக்கும் இடையில்

---

* *World Marxist Review*, 1959, No 11.

என்ன அடிப்படை வேறுபாடு?

கம்யூனிஸ்டுக் கட்சியின் மிக முக்கிய சிறப்பியல்பு என்னவெனில் இது தொழிலாளி வர்க்கக் கட்சி என்ற வகையில் தன் வர்க்க சாரத்தை வெளிப்படையாகப் பிரகடனப்படுத்துகிறது என்பதாகும்.

சகலவிதமான சமூக மற்றும் தேசிய இன ஒடுக்குமுறைகளிலிருந்து சமுதாயத்தை விடுவிக்கும் வரலாற்றுக் கடமையை நிறைவேற்றத்தான் தொழிலாளி வர்க்கத்திற்கு அரசியல் கட்சி தேவை.

கட்சியின்றி தொழிலாளர்களால் தனியே இக்கடமையை நிறைவேற்ற இயலுமா? முடியவே முடியாது. விஷயம் என்னவெனில், பல நூற்றாண்டுகளாக உருவாகிய சர்வதேசிய முதலாளித்துவ முறை — இதற்கு பூர்ஷ்வா அரசியல் ஆட்சியின் பாதுகாப்பு உள்ளது — தொழிலாளி வர்க்கத்திற்கு எதிராய் நிற்கிறது. தனிப்பட்ட போராட்டங்கள், செயல்களால் இம்முறையை வெற்றி கொள்ள முடியாது. இதற்கு ஒரு சுயமான அரசியல் ஸ்தாபனம் வேண்டும். தொழிலாளி வர்க்கத்தின் அரசியல் கட்சியால்தான் இப்படிப்பட்ட ஸ்தாபனமாய் இருக்க முடியும்.

புரட்சிகர தொழிலாளர் இயக்கத்தின் தத்துவமூளையும் அரசியல் தலைமையும் கட்சியில் இணைந்து நிற்கின்றன. இது வர்க்கப் போராட்ட அனுபவத்தைப் பொதுமைப்படுத்தி பரிசீலிக்கிறது, தொழிலாளர் இயக்கத்திற்கு சோஷலிச உணர்வை அளிக்கிறது; மற்ற வர்க்கங்கள், அரசியல் கட்சிகளுடனான பரஸ்பர உறவு

களில் தொழிலாளி வர்க்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது; உழைக்கும் மாமக்களின் புரட்சிப் போராட்டத்திற்கு அரசியல் தலைமையளிக்கிறது.

தொழிலாளி வர்க்கம் ஒரே மாதிரியானதல்ல. இது வெவ்வேறு வளர்ச்சிக் கட்டங்களில் நிற்கிறது. இதில் குழு ரீதியில், தேசிய இன ரீதியில், தொழில் ரீதியில் பல பிரிவுகள் உள்ளன. எனவே இந்த வேறுபாடு எவ்வளவுக்கெவ்வளவு அதிகமோ, தனிப்பட்ட தொழிலாளர் பிரிவினரின் நலன்களையன்றி, மொத்தமாக வர்க்கத்தின் அடிப்படை நலன்களைப் பிரதிபலிக்க வல்ல ஸ்தாபனம் அவ்வளவுக்கவ்வளவு அவசியம். இப்படிப்பட்ட ஸ்தாபனம்தான் புதிய வகையான கட்சியாகும்.

இது பல்வேறு நலன்களின் அடிப்படையில் உழைப்பாளர் பிரிவினரிடையே நிலவும் பிளவுகளை அகற்றி, அவர்களை இணைக்கும் பொது அம்சங்களின் அடிப்படையில் அணிதிரட்டுகிறது. "தொழிலாளி வர்க்கத்தின் அரசியல் கட்சி, அதாவது கம்யூனிஸ்டுக் கட்சி மட்டுமே பாட்டாளி வர்க்கத்தின் மற்றும் உழைக்கும் மக்கள் திரள் முழுவதன் முன்னணிப் படையை ஒன்று திரட்டிப் பயிற்றுவித்து ஒழுங்கமைக்க உரிய ஆற்றல் பெற்றது, இந்த மக்கள் திரளின் தவிர்க்க முடியாத குட்டி முதலாளித்துவ வகைப்பட்ட ஊசலாட்டங்களையும் பாட்டாளிகள் மத்தியிலான குறுகிய கைவினைத் துறைச் சங்கவாதம், கைவினைத்துறைத் தப்பெண்ணங்கள் ஆகியவற்றின் தவிர்க்க முடியாத மரபுகள் மற்றும் முறிவு

களையும் எதிர்த்து நிற்கும் ஆற்றலை இந்த முன்னணிப் படை பெற்றது, பாட்டாளிகள் முழுமையின் ஒன்றுபட்ட செயல்பாடுகளுக்கு வழி காட்டும், அதாவது அவர்களையும் அவர்கள் மூலம் உழைக்கும் மக்கள் திரளினர் அனை வரையும் அரசியல் ரீதியில் தலைமை தாங்கிச் செல்லும் வல்லமை உடையது.'' *

லெனினின் கருத்துப்படி கம்யூனிஸ்டுக் கட்சி கள் தோன்றியதற்கான அடிப்படைக் காரணங் கள் முதலாளித்துவ முரண்பாடுகளின் வளர்ச்சி யிலும், சமூக-ஜனநாயகக் கட்சிகளின் தன்மை மோசமானதிலும், உழைக்கும் மாமக்களின் நலன்களை வெளிப்படுத்தி பாதுகாக்கவும் சோஷ லிச அடிப்படையில் சமுதாயத்தை மாற்றிய மைக்கும் உடனடி கடமைகளை நிறைவேற்றவும் இவற்றிற்கு திறமையில்லாமையிலும் பிரதிபலிக் கின்றன. பல கம்யூனிஸ்டுக் கட்சிகளின் வேலைத் திட்டங்களிலும் விதிமுறைகளிலும் இந்த லெனி னிய கருத்து அடங்கியுள்ளது.

சோஷலிஸ்டுகள், சமூக-ஜனநாயகவாதிகள், இடதுசாரி ஸ்தாபனங்கள் ஆகிய பல்வேறு போக்குகளும் கட்சிகளும் தொழிலாளி வர்க்கத் தின் பெயரால் போராடுகின்றன. இவற்றிற்கும் லெனினிய வகையிலான கட்சிக்கும் உள்ள வேறு பாடு என்னவெனில் இக்கட்சி தன்னை தொழி லாளி வர்க்கத்தின் பிரதிநிதியாகப் பிரகடனப் படுத்துவதோடு கூட தொழிலாளர் இயக்கத்தின்

---

* வி. இ. லெனின், தேர்வு நூல்கள், தொகுதி 11, பக்கம் 302.

நலன்களையும் இறுதி லட்சியங்களையும் பிரதி பலிக்கும் வர்க்கக் கொள்கையையும் நடைமுறையில் கடைப்பிடிக்கிறது என்பதாகும்.

பல நாடுகளில் சமூக-ஜனநாயகக் கட்சிகள் அரசாட்சியைப் பிடித்து, பல பத்தாண்டுகளாக அரசாங்கத்தில் இடம் பெற்றிருந்தாலும் இவற்றில் ஒன்றில் கூட ஏகபோக ஆதிக்கத்திற்கு முடிவு கட்டப்படவில்லை, இவற்றில் ஒன்றில் கூட தொழிலாளி வர்க்கம், அதன் கூட்டாளிகளின் உண்மையான ஆட்சி நிலைநாட்டப்படவில்லை. அவ்வப்போது அவற்றால் ஒரு சில இணக்கங்களை முதலாளிகளிடமிருந்து பெற முடிந்ததே தவிர அடிப்படை தீண்டப்படாமல் அப்படியே இருந்தது. அது மட்டுமல்ல, நெருக்கடியான தருணங்களில் (உதாரணமாய் அக்டோபர் புரட்சிக்குப் பின் அல்லது இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பின்) அவை மக்கள் திரளினரின் புரட்சித் தாக்குதல் அலையை எதிர்த்து சமாளிக்க பெரும் மூலதனத்திற்குப் பன்முறை உதவின. சோஷலிசப் புரட்சி தத்துவம் மற்றும் புரட்சி செயல்திட்டத்தை விடுத்து ஒரு நாட்டில் கூட சமூக-ஜனநாயகம் சோஷலிச வெற்றிக்கு வழிகோலவில்லை. மார்க்சிய-லெனினிய போதனையிலிருந்து விலகுவது என்றால் சமுதாய வாழ்க்கையைப் புரட்சிகரமாக மாற்றியமைக்கும் வழிகள், வடிவங்கள், முறைகளிலிருந்து விலகுவதாகும் என்று வலதுசாரி சமூக-ஜனநாயகத்தின் அனுபவம் காட்டுகிறது. வலதுசாரி சமூக-ஜனநாயகவாதிகளின் சீர்திருத்தவாதப் பாதை சோஷலிசத்திற்கு இட்டுச் செல்லாது.

சமூக வளர்ச்சி மற்றும் வர்க்கப் போராட்டம் பற்றி மார்க்சிய-லெனினியம் கண்டுபிடித்த விதிகளின் அடிப்படையில்தான் சோஷலிசத்தை அடைய முடியும்.

கம்யூனிஸ்டுக் கட்சி எப்போதும் முன்னணிப் படையாக இருக்கவே விழைகிறது. இதற்குப் பொருள் பின்வருமாறு:

—தொழிலாளி வர்க்கத்தின் முன் நிற்கும் பிரச்சினைகளை உரிய நேரத்தில் கிரகித்தல்;

—இவற்றைத் தீர்க்கும் வழிகளைத் திட்டவட்டமாகச் சுட்டிக் காட்டுதல்;

—மக்கள் திரளினரைக் கவர்ந்து, தம் தீர்மானகரமான செயல்களால் அவர்களை நம்ப வைக்கும் திறமை;

—கம்யூனிச லட்சியங்களுக்கான போராட்டத்தில் உறுதியையும் நம்பிக்கையையும் எடுத்துக் காட்டும் திறமை;

—கம்யூனிச லட்சியங்களின் பாலான விசுவாசத்தின் மீது மக்கள் திரளினருக்கு நம்பிக்கை ஏற்படுத்தல்;

—அச்சமின்றி களத்தில் இறங்கும் துணிவு;

—முன்னுள்ள பாதைக்கு ஒளியூட்டி, தம் லட்சியங்களின் நியாயத்தில் நம்பிக்கையை ஏற்படுத்தும் திறமை;

—மற்றவர்களை விடத் துணிவாக இயங்கும் திறமை, கம்யூனிச லட்சியங்களை இயன்ற வரை தொடர்ச்சியாகக் காத்து நிற்கும் திறமை.

எனவேதான் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் செல்வாக்கு வளர வளர, இவற்றின் மீதான பூர்ஷ்வா ஆதரவாளர்களின் தாக்குதலும் அதிகரிக்கிறது.

கம்யூனிஸ்டுக் கட்சி முன்னணிப் பங்கை வகிப்பதால் மற்ற கட்சிகளின் சுயமான பங்கை மறுப்பதாகப் பொருளாகாது. இயக்கத்தின் மட்டத்தை உயர்த்த கம்யூனிஸ்டுக் கட்சி இயன்ற அனைத்தையும் செய்கிறது, உழைப்பாளிகளின் நலன்களுக்கான போராட்டத்தில் இது மற்ற ஜனநாயகக் கட்சிகளையும் ஈடுபடுத்தவே முயலுகிறது.

ஜனநாயக சக்திகளை அணிதிரட்டி போராட்டத்திற்கு இட்டுச் செல்ல வல்ல செயல்திட்டங்களைத்தான் கம்யூனிஸ்டுகள் தீட்டி முன்வைக்கின்றனர்.

இவ்வாறாக, தொழிலாளர் மற்றும் ஜனநாயக இயக்கத்தின் முற்போக்கு லட்சியங்களை எப்போதும் காத்து நிற்பதும் இந்த இயக்கத்தின் வெற்றிகளுக்கு எல்லா விதங்களிலும் உதவுவதும் தான் கம்யூனிஸ்டுகளின் முன்னணிப் பாத்திரத்தின் நோக்கமாகும்.

பல சமூக-ஜனநாயகக் கட்சிகள் வெறுமனே வாக்காளர்களின் கட்சிகளாக விளங்குகின்றன. கம்யூனிஸ்டுக் கட்சி என்பது சுறுசுறுப்பாக இயங்கும் ஸ்தாபனமாகும். தன் உறுப்பினர்கள் அனைவரும் வேலைத்திட்டத்தை அங்கீகரிப்பதோடு கூட அதன் நிறைவேற்றத்தில் நடைமுறையில் பங்கேற்க வேண்டுமென்று கம்யூனிஸ்டுக் கட்சி கோருகிறது, அதாவது கட்சி உறுப்பினர்கள் ''ஏதாவதொரு கட்சி ஸ்தாபனத்தில் தனிப்பட்ட முறையில் பங்கேற்க வேண்டும்'' *.

* V. I. Lenin, *Collected Works*, vol. 6, p. 476.

தன் உறுப்பினர்களுக்குத் தலைமை தாங்கவும் இவர்களின் நடவடிக்கைகளுக்கு வழிகாட்டி இவர்களின் ஆற்றலை விவேகமாகப் பயன்படுத்தவும் கட்சிக்கு வாய்ப்புண்டு என்று இதற்குப் பொருள்.

மார்க்சிய-லெனினியக் கட்சிகள், உழைப்பாளிகளின் எல்லா பிரிவினரும் தம் அணிகளில் இருக்க வேண்டுமென்று விரும்புகின்றன.

தொழிலாளி வர்க்கம் அதிகமாக இல்லாத வளர்முக நாடுகளில் கம்யூனிஸ்டுக் கட்சிகளில் அரைப் பாட்டாளிகளும் குட்டி பூர்ஷ்வா பிரிவினரும்தான் கணிசமாக உள்ளனர், ஏன் சில நேரங்களில் விஞ்சி நிற்கின்றனர். கம்யூனிஸ்டுக் கட்சிகளின் விதிமுறைகளில் எந்த ஒரு உறுப்பினருக்கும் — அவர் தொழிலாளியாக, அறிவுஜீவியாக, வேறு யாராக இருந்தாலும் — எவ்வித விசேஷ உரிமைகளும் கிடையாது. கட்சி விதிமுறைகளின் முன் எல்லா உறுப்பினர்களும் சமம். தொழிலாளர் அல்லாத பிரிவிலிருந்து கட்சியில் சேர்ந்த அனைவரும் தம் அரசியல் நடவடிக்கையால் தொழிலாளி வர்க்கக் கொள்கையைப் பின்பற்ற வேண்டும், இதன் புரட்சி நிலைகளையும் கண்ணோட்டங்களையும் காத்து நிற்க வேண்டும்.

கட்சியின் வளர்ச்சியானது, மக்கள் மத்தியில் இதன் செல்வாக்கு அதிகரித்துள்ளதற்கு அறிகுறியாகும். வெகுஜனக் கட்சிக்கு இயங்குவது எளிது. இத்தகைய கட்சியால் எல்லா இடங்களிலும் — தொழிற்சாலைகளிலிருந்து நாட்டின் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்புகள் வரை — இயங்க முடியும்.

இன்று தார்மீக பிரச்சினைகள் எல்லா இடங்களிலும் கடுமையாகி வரும் போது, கம்யூனிஸ்டுகள் தன்னலம், எதையும் விலைபேசும் போக்கு, பதவிவெறி, அரசியலிலும் வாழ்விலும் ஏனோ தானோவென்ற போக்கு ஆகியவற்றை எதிர்த்துப் போராடுகின்றனர். ஜனநாயக மத்தியத்துவம் என்பது உள்கட்சி வாழ்க்கையில் மிகவும் அவசியமான ஒன்றாகும். இது ஒருமித்த கருத்துடையவர்களுக்கு இடையிலான பரஸ்பர உறவுகளில் கோட்பாட்டு நிலைக்கும் தோழமையுணர்விற்கும் வழிகோலுகிறது.

ஜனநாயக மத்தியத்துவம் என்றால், கீழிருந்து மேல்மட்டம் வரை எல்லா தலைமை உறுப்புகளையும் தேர்ந்தெடுத்தல், கட்சி உறுப்புகள் தத்தம் ஸ்தாபனங்களின் முன் அறிக்கை சமர்ப்பித்தல்; கறாரான கட்சிக் கட்டுப்பாடு, சிறுபான்மை பெரும்பான்மைக்குக் கட்டுப்படுதல்; கீழ்மட்ட உறுப்புகள் மேல்மட்ட உறுப்புகளின் முடிவுகளுக்கு நிபந்தனையின்றி கட்டுப்பட்டு நடத்தல். பரவலான செயலாற்றலின் அடிப்படையில் ஒரே திட்டத்தின்படி கட்டுகோப்பாக கம்யூனிஸ்டுக் கட்சி இயங்கத் தேவையான முன்தேவைகளை ஜனநாயக மத்தியத்துவம் தோற்றுவிக்கிறது. கட்சி விவகாரங்களின் நிர்வகிப்பில் எந்த ஒரு கம்யூனிஸ்டும் பங்கேற்கலாம், தவறுகளைச் சுதந்திரமாக விவாதித்து திருத்தலாம். கட்சி விமரிசனமும் சுயவிமரிசனமும் ஆக்கபூர்வமானவையாக இருக்க வேண்டும். தவறுகள், குறைகளைக் கண்டுபிடித்து நிவர்த்தி செய்வதுதான் இவற்றின் நோக்கமாகும். "நடவடிக்கைகளில் ஒற்றுமை,

விவாத, விமர்சன உரிமை — இதுதான் நம் வரையறுப்பு.''* ஆனால் ''உரிய உறுப்புகள் முடிவெடுத்த பின் கட்சி உறுப்பினர்களாகிய நாமனைவரும் ஒரே மனிதனைப் போல் இயங்குகின்றோம்''** என்றார் லெனின்.

புதிய வகையான புரட்சிக் கட்சியின் கட்டுப்பாடு எதை ஆதாரமாகக் கொண்டது? இது முக்கியமாக வர்க்க உணர்வு, புரட்சியின் மீதான விசுவாசம், பொறுமை, தியாக மனப்பாங்கு, வீரம் ஆகியவற்றின் அடிப்படையிலானது.

மார்க்சிய-லெனினியக் கட்சி தன் பணியில் புரட்சித் தத்துவத்தின் அடிப்படையில் செயல்படுகிறது. ''தத்துவம் இல்லாவிடில் புரட்சிக் கட்சியால் நிலவ முடியாது, என்றாவது ஒரு நாள் அது அரசியல் தோல்வியைத் தழுவும்'' என்றார் லெனின்.*** புதிய வகையான கட்சியின் நடைமுறை நடவடிக்கைகள் அனைத்தும் புரட்சி தத்துவத்தின் அடிப்படையிலானவை. மார்க்சிய-லெனினிய தத்துவம்தான் கட்சியின் அடிப்படை, வேலைத்திட்டம். ''வேலைத்திட்டம் இல்லாமல் கட்சியால், எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் கொள்கை பிறழாத ஒரு முழு அரசியல் உறுப்பாக இயங்க முடியாது'' என்றார் லெனின்.****

தத்துவமானது சர்வதேச கம்யூனிஸ்டு இயக்கம் முழுவதற்கும் பாதை காட்டி, வர்க்கப்

---

* V. I. Lenin, *Collected Works*, vol. 11, p. 320.

** *Ibid.*, p. 323.

*** V. I. Lenin, *Collected Works*, vol. 6, p. 188.

**** V. I. Lenin, *Collected Works*, vol. 17, p. 280.

போராட்ட நடைமுறை முன்வைக்கும் பிரச்சினைகளுக்குச் சரியான தீர்வுகாணும் வாய்ப்பை ஒவ்வொரு கட்சிக்கும் வழங்குகிறது. "பொதுவான பிரச்சினைகளுக்குப் பூர்வாங்கத் தீர்வு காணாது தனிப்பட்ட பிரச்சினைகளை எடுப்பவர்கள் தவிர்க்க இயலாது, ஒவ்வொரு கட்டத்திலும் இந்த பொது பிரச்சினைகளுடன் தன்னையறியாமலேயே 'மோதுவார்கள்'. ஒவ்வொரு தனிப்பட்ட சந்தர்ப்பத்திலும் குருட்டுத்தனமாக இவ்வாறு மோதுவது என்றால் தன் கொள்கையை மோசமாக ஆட்டங்காணவைத்து கோட்பாடற்ற நிலைக்குத் தள்ளுவது என்று பொருள்." *

எனவேதான் கம்யூனிஸ்டுக் கட்சிகள் மார்க்சிய-லெனினியப் புரட்சி தத்துவத்தைக் காத்து நிற்கின்றன; மார்க்சிய-லெனினிய தத்துவத்தின் பலம் நடைமுறையுடனான அதன் ஒற்றுமையில் அடங்கியுள்ளது என்பதை அறிந்து அவை புதிய வரலாற்றுச் சூழ்நிலைகளுக்கேற்ப இதை ஆக்கபூர்வமாக வளர்க்கின்றன.

கம்யூனிஸ்டுக் கட்சிகளின் நடவடிக்கை மனிதகுலத்திற்கு எவ்வளவு அவசியமானது என்று பல நாடுகளின் வரலாறு அனுபவம் காட்டுகிறது. இக்கட்சிகள் சமூக முன்னேற்றத்திற்கான பாதையை, சகலவிதமான சமூக, தேசிய இன ஒடுக்குமுறைகளிலிருந்து உழைப்பாளிகளை விடுவிக்கும் பாதையை சுட்டிக் காட்டுகின்றன. மனிதகுலம் முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்திற்கு

* V. I. Lenin, *Collected Works*, vol. 12, p. 489.

மாறிச் செல்ல வேண்டிய அவசியம் முதிர்ச்சி யடைந்துள்ளதை இவைதான் பிரதிபலிக்கின்றன. சகலவித இடர்ப்பாடுகளிலிருந்து மீளும் சக்தியைக் கண்டுபிடிக்கவும் சுரண்டலற்ற சமுதா யத்தைப் படைத்து கம்யூனிச நாகரிகத்தைத் தோற்றுவிக்கும் லட்சியத்தை நோக்கிய பாதை யில் எல்லா சோதனைகளையும் சமாளித்து வெற்றியடையவும் கம்யூனிஸ்டுகளுக்கு உயரிய லட்சிய மனப்பாங்கும், சோஷலிச லட்சியங் களின் மீதான நம்பிக்கையும் உதவுகின்றன. கம்யூனிஸ்டு இயக்கம்தான் நாளைய தினத் திற்குக் கதவைத் திறந்து விடும் ஒரே அரசியல் சக்தியாகும். கம்யூனிஸ்டு இயக்கம் பெரிதும் சர்வதேசியத் தன்மையை உடையது. தேசிய மட்டுப்பாட்டு வரம்புகளை மீறி வரலாற்றில் வேறெந்த அரசியல் இயக்கமும் இப்படி முன் சென்றதில்லை, இது உலக அரங்கில் விடுதலை இயக்கத்தை ஒன்றிணைக்கிறது.

கம்யூனிஸ்டுக் கட்சிகள் தேசிய அடிப்படையில் தோற்றுவிக்கப்படுகின்றன, ஆனால் தொழி லாளர் இயக்கம் சர்வதேசியத் தன்மையை உடையது ஆகையால், ஒவ்வொரு கம்யூனிஸ்டுக் கட்சியின் வளர்ச்சிக்கும் பொது நியதிகள் உண்டு. ''வெளித்தோன்றி மேலும் மேலும் பலமடைந்து வெற்றியை நோக்கி முன்னேறும் கம்யூனிசம் முக்கியமாய்த் தனது 'மென்ஷிவிசத்தை' எதிர்த் தும், அதாவது சந்தர்ப்பவாதத்தையும் சமூக-தேசியவெறியையும் (அந்தந்த நாட்டிலுமுள்ள உள்நாட்டு வகையைச் சேர்ந்தவை) எதிர்த்தும், பிறகு — அனுபந்தமாய் எனலாம் — 'இடதுசாரி'

கம்யூனிசத்தை எதிர்த்தும் நடத்தும் போராட்டத்தை எல்லா நாடுகளும் காணப் போகின்றன (ஏற்கெனவே கண்டும் வருகின்றன) என்பதைத் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் வரலாறு இன்று தெளிவுபடுத்துகிறது.'' *

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் அவசியம், சந்தர்ப்பவாதத்திலிருந்து முழுமையாகப் பிரிய வேண்டியதன் அவசியம் ஆகிய முக்கிய புரட்சிக் கோட்பாடுகளை ஒப்புக் கொண்டதன் அடிப்படையில்தான் கம்யூனிஸ்டுக் கட்சிகள் தோன்றின. ''இடதுசாரிகளின்'' தவறுகள் என்னவெனில், ஒவ்வொரு நாட்டின் விசேஷ சூழ்நிலைகளில் பொதுக் கோட்பாடுகளை நிறைவேற்றும் வழி பற்றி அவர்களுக்கிருந்த குழப்பங்களாகும். நடைமுறையில் இது புரட்சிகர மார்க்சிய தத்துவம், நடைமுறையிலிருந்து விலகுவதைக் குறித்தது.

பெரும்பாலான ''இடதுசாரி'' கம்யூனிஸ்டுகள் பெரும் புரட்சி ஆற்றலுடனும், மக்கள் திரளினரின் ஆதரவின்றி சமுதாயத்தில் ஒரு அரசியல் சக்தியாகி புரட்சியை நடத்தலாம் என்ற உள்ளார்ந்த நம்பிக்கையுடனும் அரசியலுக்கு வந்தனர்.

புரட்சிகர மனநிலை வெகுஜனத் தன்மையைப் பெறும் வரை பொறுத்திராமல் சம்பவங்களைத் துரிதப்படுத்தி, இச்சம்பவங்களின் பாலான ''அதிதீவிர புரட்சி'' அணுகுமுறையின்

---

* வி. இ. லெனின், **தேர்வு நூல்கள்**, தொகுதி 10, பக்கம் 301.

அடிப்படையில் தம் செயல்முறையை உருவாக்க ''இடதுசாரிகள்'' முயன்றதானது, சமூக வளர்ச்சி மற்றும் வர்க்கப் போராட்ட விதிகளை அவர்கள் புரிந்து கொள்ளவில்லை என்பதை, குறிப்பாக வர்க்கத்தில் பெரும்பாலானோருக்கும் அதன் கம்யூனிஸ்டு முன்னணிக்கும் — இதனால் மட்டுமே மூலதனத்தின் மீதான பாட்டாளிகளின் வெற்றிக்கு உத்தரவாதம் தர முடியும் — இடையிலான அங்கக ரீதியான தொடர்பைப் புரிந்து கொள்ளவில்லை என்பதைக் காட்டியது.

எனவே பாட்டாளிகளின் விடுதலைப் போராட்டத்திற்கான இரண்டாவது அபாயம் ''இடதுசாரி'' கம்யூனிஸ்டுகளின் குறுங்குழுவாதச் செயல்முறையில் அடங்கியிருந்தது. ஏனெனில் சதியாளர்களின் ஸ்தாபனங்களாலோ, வேறு நாடுகளுக்கு ''ஏற்றுமதி'' செய்வதாலோ புரட்சியை நடத்த முடியாதென்று வர்க்கப் போராட்டத்தின் சர்வதேச அனுபவம் காட்டுகிறது. தொழிலாளி வர்க்கத்தின் புரட்சிக் கட்சியின் தலைமையிலான பரவலான மக்கள் இயக்கத்தின் அடிப்படையில்தான் இது தோன்றுகிறது.

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்திற்காகவும் சமூக மாற்றங்களுக்காகவும் நடைபெறும் போராட்டத்தில் கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைமைப் பங்கு ஒரு பொது நியதி என்று லெனின் கருதினார். சரியான அரசியல் தலைமை முறைகளைக் கிரகிக்காமல், மக்கள் திரளினரைக் கவர்ந்து பாட்டாளி வர்க்கக் கட்சியின் பக்கம் அவர்களை சித்தாந்த ரீதியாக இழுக்கும் திறமையைப் பெறாமல் உண்மையான அரசியல் சக்தி

யாக முடியாது என்று அவர் ''இடதுசாரி'' கம்யூனிஸ்டுகளுக்குக் காட்டினார்.

புதிய வகையான கட்சியின் பங்கையும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் தலைமைக் கரு என்ற வகையில் சோஷலிச அரசியல் முறையில் இதற்குள்ள இடத்தையும் ''இடதுசாரி'' கம்யூனிஸ்டுகள் புரிந்து கொள்ளாதது அவர்களைக் கட்சிப் பற்றையும் கட்சிக் கட்டுப்பாட்டையும் மறுக்க இட்டுச் சென்றது. இது பூர்ஷ்வாக்களின் முன் தொழிலாளி வர்க்கத்தை முழுமையாக ஆதரவின்றி நிறுத்துவதற்குச் சமம். கறாரான, மையப்படுத்தப்பட்ட உள்கட்சிக் கட்டுப்பாடின்றி தொழிலாளி வர்க்கம் மற்றும் உழைக்கும் மாமக்களின் போராட்டத்திற்கு சரியான, வெற்றிகரமான அரசியல் தலைமையை அளிக்க முடியாது, ''பாட்டாளி வர்க்கத்தின் ஒழுங்கமைப்புப் பாத்திரத்திற்கு (அதுவே அதன் தலைமையான பாத்திரம்)''* வகை செய்ய முடியாது என்றார் லெனின். கம்யூனிஸ்டு அகிலத்தின் இரண்டாவது காங்கிரசில் நாடாளுமன்றவாதம் பற்றி உரையாற்றிய லெனின் ''இடதுசாரி'' கம்யூனிஸ்டுகளுக்குக் கூறினார்: ''தன்னுடைய உறுப்பினர்களைக் கட்சிக் கட்டுப்பாட்டிற்கு உட்படும்படி நிர்ப்பந்திக்கக் கூடிய உண்மையிலேயே கட்டுக்கோப்பான கட்சியைத் தோற்றுவிக்க நீங்கள் தொழிலாளர்களைத் தயார்படுத்தாவிடில் உங்களால் என்றுமே பாட்

---

* அதே நூல், பக்கம் 222.

டாளி வர்க்க சர்வாதிகாரத்தைத் தயார்படுத்த முடியாது.'' *

''இடதுசாரிகள்'' தம் தவறுகளை விமர்சன ரீதியாக அணுகாததற்காக லெனின் அவர்களைக் கண்டித்தார். ''ஓர் அரசியல் கட்சி தன்னுடைய தவறுகள் குறித்து அனுசரிக்கும் போக்கு, அக்கட்சி எந்த அளவுக்குப் பொறுப்புணர்ச்சி கொண்டுள்ளது என்பதையும், அதன் வர்க்கத்துக்கும் உழைப்பாளி வெகுஜனங்களுக்கும் அதற்குள்ள கடமைகளை நடைமுறையில் எந்த அளவுக்கு அது நிறைவேற்றுகிறது என்பதையும் மதிப்பிட்டு முடிவு செய்வதற்கான மிக முக்கியமான, நம்பகமான வழிகளில் ஒன்றாகும். தவறை ஒளிவுமறைவின்றி ஒப்புக் கொள்ளுதல், அத்தவறுக்குரிய காரணங்களை நிச்சயித்துக் கொள்ளுதல், அதனை நோக்கி இட்டுச் சென்ற நிலைமைகளைப் பகுத்தாய்தல், இதைச் சரிசெய்வதற்குரிய வழிகளை ஆராய்ந்தறிந்து வகுத்துக் கொள்ளுதல்—இவையே பொறுப்புணர்ச்சி கொண்ட ஒரு கட்சிக்குரிய அடையாளம்; இவ்வாறுதான் அது தனது கடமைகளைச் செய்து முடிக்க வேண்டும்; இவ்வாறுதான் அது தனது வர்க்கத்துக்கும் பிறகு வெகுஜனங்களுக்கும் போதமளித்துப் பயிற்றுவிக்க வேண்டும்'' என்று லெனின் எழுதினார். **

சுயமான அரசியல் கட்சியின்றி தொழிலாளி வர்க்கத்தால் புரட்சியை நடத்த முடியாது,

---

* V. I. Lenin, *Collected Works*, vol. 31, p. 256.

** வி. இ. லெனின், **தேர்வு நூல்கள்**, தொகுதி 10, பக்கங்கள் 244—245.

ஆட்சியைத் தன் கரங்களில் எடுத்துக் கொள்ள முடியாது.

ஆக, புதிய வகையான கட்சி என்பது:

முதலில், முதலாளி வர்க்கத்தை முறியடித்து, சோஷலிச அடிப்படையில் சமூக வாழ்வை மாற்றியமைப்பதை நோக்கமாகக் கொண்ட முன்னணி வர்க்கமான தொழிலாளி வர்க்கத்தின் அரசியல் கட்சி;

இரண்டாவதாக, இது மிக முற்போக்கான சித்தாந்த, அரசியல், ஸ்தாபனக் கோட்பாடு களைப் பின்பற்றி நடந்து, விஞ்ஞான சோஷ லிசத்தை வெகுஜன தொழிலாளர் இயக்கத்துடன் இணைக்கும் புரட்சிகர மார்க்சியக் கட்சியாகும்;

மூன்றாவதாக, இது புரட்சிகர நடவடிக்கை களில் ஈடுபடும் கட்சி, தொழிலாளி வர்க்கத்தின் ஒழுங்கமைக்கப்பட்ட, ஆக்கபூர்வமான முன் னணிப் படை, ஒருமித்த கருத்துடையவர்களின் தன்னிச்சையான ஸ்தாபனம், சித்தாந்த ஒற்று மையால் அணிதிரண்டு, எல்லோருக்கும் பொது வான லட்சியத்திற்காகப் போராடும் கட்சி;

நான்காவதாக, ஜனநாயக மத்தியத்துவக் கோட்பாடுகளின் அடிப்படையில் இயங்கும் கட்சி, இது கறாரான உள்கட்சிக் கட்டுப்பாட் டையும் பரவலான ஜனநாயகத்தையும் விமர் சனம், சுய விமர்சனத்தையும் இணைக்கிறது;

ஐந்தாவதாக, உருக்கனைய ஒற்றுமையை உடைய கட்சி, எனவே கட்சியின் ஒற்றுமைக் காகப் பாடுபடுவதென்பது ஒவ்வொரு உறுப் பினரின் முதற் கடமை;

ஆறாவதாக, மக்கள் திரளினருடன், குறிப்

பாகத் தொழிலாளி வர்க்கத்துடன் பிரிக்க இயலா பன்முகத் தொடர்புகளைக் கொண்ட கட்சி;

ஏழாவதாக, லெனினின் வார்த்தைகளில் சொன்னால், இது "பாட்டாளிகளின் வர்க்க ஒற்றுமையின் மிக உயர்ந்த வடிவம்"*; வர்க்கம் முழுவதற்கும் அதன் எல்லா ஸ்தாபனங்களுக்கும் தலைமை தாங்குவதும், எப்போதும் தன் சகாப் தத்தின் கடமைகளின் மட்டத்தில் இருப்பதும் தான் இதன் லட்சியமாகும்;

எட்டாவதாக, பாட்டாளி வர்க்க சர்வதேசிய வாதத்தை முக்கியக் கோட்பாடாக ஒப்புக் கொண்டு அதைத் தொடர்ச்சியாக வாழ்க்கை யில் நிறைவேற்றும் சர்வதேசியவாதிகளின் கட்சி யாகும்.

ருஷ்யாவில் புதிய வகையான கட்சியைத் தோற்றுவித்து, இதன் சித்தாந்த, அரசியல், ஸ்தாபன அமைப்புக் கோட்பாடுகளை உருவாக் கியதன் மூலம் வி. இ. லெனின் பல நாடுகளில் இதே போன்ற கட்சிகளைத் தோற்றுவிக்க உதவினார், சர்வதேச கம்யூனிஸ்டு இயக்கம் அணிதிரள பாதையமைத்தார். புதிய வகை யான கட்சிக்காக போல்ஷிவிக்குகள் நடத்திய போராட்ட அனுபவம் குறித்து "இடதுசாரி" **கம்யூனிசம் — இளம் பருவக் கோளாறு** என்ற நூலில் லெனின் எழுதியது இன்றும் தன் முக் கியத்துவத்தை இழக்கவில்லை.

உலக புரட்சி நிகழ்ச்சிப் போக்கானது, கம் யூனிஸ்டுக் கட்சிகள் "நம் சகாப்தத்தின் ஞானம்,

---

* அதே நூல், பக்கங்கள் 232 — 233.

கௌரவம், மனசாட்சி''* என்பதை மெய்ப்பிக்கிறது. கம்யூனிஸ்டு இயக்கத்தின் வரலாறு உழைக்கும் மக்கள் மத்தியில் இதன் செல்வாக்கு வளர்ந்து வருவதைக் காட்டுகிறது. இதற்கான சான்றுகளில் ஒன்று, கம்யூனிஸ்டுகளின் எண்ணிக்கை வளர்ச்சியாகும். 1917இல் உலகில் கம்யூனிஸ்டுகளின் எண்ணிக்கை 4 லட்சத்திற்கு சற்று கூடுதலாக இருந்ததெனில் 1928இல் 1.6 மில்லியனாக உயர்ந்து, இன்று 80 மில்லியனை எட்டியுள்ளது.

இன்று கம்யூனிஸ்டு இயக்கம் மட்டுமே நவீன காலத்தின் எல்லாப் புரட்சிப் போக்குகளிலும் — சோஷலிச நாடுகள், சர்வதேச தொழிலாளர் இயக்கம், தேசிய விடுதலை இயக்கம், வெகுஜன ஜனநாயக இயக்கங்கள் — ஒரே நேரத்தில் செயல்படும் ஒரே அரசியல் சக்தியாகும்.

இன்று கம்யூனிஸ்டுக் கட்சிகள் 100க்கும் மேற்பட்ட நாடுகளில் நன்கு சுறுசுறுப்பாக இயங்குகின்றன. பிரதேச ரீதியாகப் பார்த்தால் இவை சமமற்று பரவியுள்ளன. நாடுகள் வாரியாகப் பார்த்தால் இச்சமமின்மை இன்னமும் அதிகம்.

சோஷலிச அரசுகளில் கம்யூனிஸ்டுக் கட்சிகள் ஆளும் கட்சிகளாகும். உலகில் உள்ள கம்யூனிஸ்டுகளில் மிகப் பெரும்பாலோர் சோஷலிச நாடுகளில் உள்ளனர். இங்கே இவர்கள் புதிய சமுதாயத்தை நிர்மாணிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். தாம் வகிக்கும் நிலை, தம் பலம், தாம் தீர்க்கும் பிரச்சினைகள் ஆகியவற்றில்

---

* V. I. Lenin, *Collected Works*, vol. 25, p. 260.

இக்கட்சிகள் சர்வதேச கம்யூனிஸ்டு இயக்கத்தில் பலம் மிக்க சக்தியாகும். சோஷலிச நாடுகளில் உள்ள ஆளும் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் மார்க்சிய-லெனினிய முதிர்ச்சி, புதிய சோஷலிச சமுதாய நிர்மாணிப்பில் பெரும் வெற்றிகளை ஈட்டி சர்வதேசியக் கடமைகளை வெற்றிகரமாகத் தீர்க்க உதவுகிறது.

சோஷலிச அமைப்பிற்கு வெளியில் உள்ள கம்யூனிஸ்டுகளில் நான்கில் மூன்று பங்குகளுக்கு மேற்பட்டோர் தொழிற்துறை ரீதியாக வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளில் உள்ளனர். தொழிலாளர் வர்க்கத்தின் மத்தியில் பிறந்து வளர்ந்த இக்கட்சிகள் மூலதன ஆதிக்கத்திற்கு எதிராகப் போராடுகின்றன, தொழிலாளி வர்க்கம், விவசாயிகள், நகர நடுத்தரப் பிரிவினர் ஆகியோரின் நலன்களைக் காத்து நிற்கின்றன. ஒரு சில கம்யூனிஸ்டுக் கட்சிகள் (பிரான்ஸ், இத்தாலி, இந்தியா) தொழிலாளர் மற்றும் ஜன நாயக இயக்கத்தில் உறுதியான நிலைகளுக்கு வந்து செல்வாக்கு மிக்க தேசிய முக்கியத்துவம் வாய்ந்த சக்தியாகியுள்ளன. வேறு சில கட்சிகளால் மக்கள் திரளினர் மத்தியிலும் அவர்களுடைய ஸ்தாபனங்களிலும் பரவ இன்னும் முடியவில்லை. வெகுஜன உணர்வின் மீது சித்தாந்த தாக்கம் செலுத்தவல்ல சாதனங்களும் இதில் பெரும் அனுபவமும் பூர்ஷ்வாக்களுக்கு இருந்து, தொழிலாளர் இயக்கத்தில் சமூக சீர்திருத்தவாதத்தின் செல்வாக்கு அதிகமாக உள்ள நாடுகளில் கம்யூனிஸ்டுக் கட்சிகளுக்குப் பல தீவிர இடர்ப்பாடுகள் தோன்றுகின்றன.

விடுதலையடைந்த ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளில் கம்யூனிஸ்டுக் கட்சிகள் இன்னமும் ஒப்பீட்டளவில் சிறியவை. தொழிலாளி வர்க்கம் எண்ணிக்கையில் குறைவாயிருப்பதும் அதன் பலவீனமுமே இதற்குக் காரணம். இந்நாடுகளில் பலவற்றில் தொழிலாளி வர்க்கம் அறவேயில்லை, அல்லது இப்போதுதான் உருவாகி வருகிறது. தொழிலாளி வர்க்கம் தலைதூக்கியுள்ள நாடுகளில் பொதுவான பின்தங்கிய நிலையும் காலனியாதிக்க மிச்சங்களும் அதன் மீது தாக்கம் செலுத்துகின்றன. இந்த நாடுகளில் தொழிலாளி வர்க்கத்தில் விவசாயத் தொழிலாளர்களும் அரைப் பாட்டாளிகளுமே மிகுந்துள்ளனர், தொழிற்துறைத் தொழிலாளர்கள் மிகக் குறைவு, அதுவும் இவர்கள் அதிக ஸ்தாபன ஒற்றுமையற்றவர்கள். வாழ்க்கைச் சூழ்நிலைகள் குட்டி பூர்ஷ்வா தன்மையை உடையவை, இதுவும் அரசியல் உணர்வு மட்டத்தின் மீது தாக்கம் செலுத்துகிறது. என்றாலும் வளர்முக நாடுகளில் உள்ள கம்யூனிஸ்டுகள் இடர்ப்பாடுகளையெல்லாம் பொருட்படுத்தாது தேசிய ஜனநாயகப் புரட்சிகளை இறுதி வரை இட்டுச் செல்லவும் சோஷலிசத் திசையமைவுப் பாதையைத் தேர்ந்தெடுத்து சோஷலிச ரீதியில் வளர்ச்சியுறவும் போராடுகின்றனர்.

லத்தீன் அமெரிக்க கம்யூனிஸ்டுக் கட்சிகள் சர்வதேச கம்யூனிஸ்டு இயக்கத்தில் ஒரு பெரும் சக்தியாகும். இவை தம் நாட்டு ஏகபோகங்களுக்கு எதிராயும் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளுக்கு எதிராயும் உறுதியோடு போராடுகின்

றன. லத்தீன் அமெரிக்க நாடுகளில் உள்முரண் பாடுகள் வலுத்து வருகின்றன. இது வெகுஜன ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கத்திற்கான அடிப் படையை ஏற்படுத்துகிறது. அரசு ஏகபோக மூலதனத்தையும் இதைப் பாதுகாக்கும் இரா ணுவத் துறையையும் எதிர்த்து நிற்க வல்ல பரவலான, வளைந்து கொடுக்கக் கூடிய இடது சாரி ஜனநாயக கூட்டணியை ஏற்படுத்தும் கடமை லத்தீன் அமெரிக்க கம்யூனிஸ்டுகளின் முன் நிற்கிறது.

மார்க்சிய-லெனினியக் கட்சிகளின் வளர்ச்சி, இவற்றின் செல்வாக்கு, உள் நாட்டிலும் மற்றும் சர்வதேச அரங்கிலும் இவற்றின் ஒற்றுமை, மக்கள் திரளினரின் மீது மேன்மேலும் அதிகரித்து வரும் இவற்றின் தாக்கம் ஆகியவை நவீன வரலாற்று வளர்ச்சியின் நியதிகளாகும்.

## முடிவுரை

இருபதாம் நூற்றாண்டில் மேன்மேலும் வளர்ந்து வரும் உலக கம்யூனிஸ்டு இயக்கத்தில் **''இடதுசாரி'' கம்யூனிசம் — இளம் பருவக் கோளாறு** என்ற நூல் ஒரு மிக முக்கிய இடத்தை வகிக் கிறது. தன் சாராம்சத்தின் ஆழம், புரட்சி செயல்திட்டத்தைப் பொதுமைப்படுத்திய விதம், புரட்சி செயல்முறையை விவரித்துள்ள பாங்கு, வெற்றிகரமாக வர்க்கப் போராட்டங்களை நடத்தி மக்கள் திரளினரைப் புரட்சிக்காகத் தயாரிக்கும் கலையைப் பற்றி விவரித்துள்ள முறை, உலகெங்கும் புதிய சோஷலிச சமுதாயத் தைக் கட்டும் வழிகளைச் சுட்டிக் காட்டியுள்ள முறை ஆகியவற்றில் இன்றும் இந்நூல் கம்யூ னிசத்தின் புரட்சிகர செயல்திட்டம், செயல் முறைக் கலைக்களஞ்சியமாகத் திகழுகிறது.

இந்நூலில் இடம் பெற்றுள்ள கருத்துநிலை கள் மார்க்சிய-லெனினியத்தின் தத்துவ வளர்ச் சியில் ஒரு முக்கியக் கட்டமாக அமைந்தன. இதுதான் இதன் வரலாற்று முக்கியத்துவம் ஆகும். மக்கள் திரளினரைக் கவர்ந்திழுப்பதற் கான போராட்டத்தில் அரசியல், தத்துவார்த்த, ஸ்தாபன மற்றும் செயல்முறைத் தலைமையின் அனுபவக் கலையைக் கிரகிக்க இது கம்யூனிஸ்டு களுக்குச் சொல்லித் தருகிறது. கம்யூனிஸ்டுக்

கட்சிகள் தோன்றி உருவெடுக்கச் சிறப்பாக இந்நூலின் சாரம் மதிப்பிடற்கரிய உதவியாகத் திகழ்ந்தது. இன்றும் இந்த அம்சம் மறைய வில்லை.

வி. இ. லெனினின் இப்படைப்பைப் பயிலுவ தன் மூலம் சர்வதேச தொழிலாளர், கம்யூனிஸ்டு இயக்கத்தின் மிகச் சிக்கலான புலப்பாடுகளைப் புரிந்து கொள்ள முடியும். நெளிவு சுழிவான செயல்முறையைப் பின்பற்றுமாறும் சகலவித போராட்ட முறைகள், வடிவங்களையும் கிரகிக்கு மாறும், சந்தர்ப்பச் சூழ்நிலைக்கேற்ப இவற்றை மாற்றி மாற்றி பயன்படுத்துமாறும் இந்நூல் அறைகூவியழைக்கிறது. தம் நடவடிக்கையில் புறவய, அகவயக் காரணிகளைப் பன்முக ரீதியில் கவனத்தில் கொள்ளுமாறும் ஒவ்வொரு திட்ட வட்டமான சந்தர்ப்பத்திலும் அரசியல் கொள் கையையும் செயல்முறையையும் சரிவர நிர்ணயிக் குமாறும் லெனின் கம்யூனிஸ்டுகளுக்குக் கூறு கிறார்.

''அரசியலானது எண் கணிதத்தை விட குறிக் கணிதத்தையே அதிகம் ஒத்தது; இன்னும் சொன் னால், ஆரம்பக் கணிதத்தை விட உயர் கணிதத் தையே அதிகம் ஒத்தது'' என்கிறார் லெனின். *

இதே கருத்தைத் தொடர்ந்து லெனின் எழுது கிறார்: ''அரசியல் என்பது ஒரு விஞ்ஞானமும் கலையுமாகும், அது அப்படியே ஆகாயத்திலிருந்து வந்து குதித்து விடுவதோ, வரப்பிரசாதமாய்க்

---

* வி. இ. லெனின், தேர்வு நூல்கள், தொகுதி 10, பக்கம் 321.



15–207

கிடைப்பதோ அல்ல, பாட்டாளி வர்க்கமானது முதலாளி வர்க்கத்தின் மீது வெற்றி பெற விரும்பினால் அது முதலாளித்துவ அரசியல் வாதிகளுக்கு எவ்விதத்திலும் சப்பையில்லாத தனது சொந்தப் பாட்டாளி 'வர்க்க அரசியல் வாதிகளை' உருவாக்க வேண்டும்.'' * அங்கேயே அவர் விஞ்ஞானம் என்ற வகையில் அரசியலைப் பற்றிய வரையறுப்பைத் தருகிறார். இது ''முதலாவதாக, பிற நாடுகளின் அனுபவத்தை — முக்கியமாய் முதலாளித்துவ நாடுகளேயான இந்தப் பிற நாடுகள் இதே மாதிரியான அனுபவத்தைக் கண்டு வருமாயின், அல்லது அண்மையில் கண்டிருக்குமாயின் — கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கோருகிறது; இரண்டாவதாக, அது அந்தந்த நாட்டில் செயல்படும் எல்லாச் சக்திகளையும் கோஷ்டிகளையும் கட்சிகளையும் வர்க்கங்களையும் வெகுஜனங்களையும் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டுமென்றும், மற்றும் ஒரேயொரு கோஷ்டி அல்லது கட்சியின் விருப்பங்களையும் அபிப்பிராயங்களையும் வர்க்க உணர்வின், போர்க்குணத்தின் நிலையையும் மட்டும் கொண்டு கொள்கையை நிர்ணயித்துவிடக் கூடாதென்றும் கோருகிறது.'' **

சோதரக் கட்சிகள் வளைந்து கொடுக்க வேண்டும், எச்சரிக்கையோடிருக்க வேண்டும், மக்கள் திரளினருக்குத் தலைமை தாங்கும் கலையை

---

* அதே நூல், பக்கங்கள் 283 — 284.

** அதே நூல், பக்கங்கள் 284 — 285.

இடையறாது மேம்படுத்த வேண்டும் என்று லெனினின் நூல் சொல்லித் தருகிறது. ஒவ்வொரு கம்யூனிஸ்டுக் கட்சியும் செயல்திட்டக் கட்டங்களை அறிந்து துல்லியமாக வரையறுக்க கற்றிருக்க வேண்டும், வர்க்கப் போராட்டத்தைப் புதிய கட்டத்திற்கு உயர்த்த அடுத்து என்ன நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்று அது அறிந்திருக்க வேண்டும், நெளிவு சுழிவான, பயன்மிகு கொள்கையைக் கடைப்பிடிக்க அறிந்திருக்க வேண்டும், போராட்டச் சூழ்நிலைகளுக்கேற்ப இதை ஆக்கபூர்வமாக மாற்ற அதற்குத் தெரிந்திருக்க வேண்டும், வர்க்கச் சக்திகளின் நிலை, இயக்கத்தைப் பகுப்பாய்வு செய்து மக்கள் திரளினரைப் புரட்சிக்கு அழைத்துச் செல்ல அக்கட்சிக்குத் தெரிந்திருக்க வேண்டும்.

மக்கள் திரளினரின் பங்கு, இவர்களிடம் சொந்த அனுபவத்தைப் பயிற்றுவித்தல், வர்க்கப் போராட்டத்திற்கான அரசியல் தலைமையை ஏற்க அவசியமான அனுபவத்தைக் கட்சி பெறுதல் ஆகியவற்றின் மீது தன் நூலில் லெனின் பெரும் கவனம் செலுத்துகிறார். ''உழைப்பாளி மக்களின் விரிவான பகுதிகள் யாவும், மூலதனத்தால் ஒடுக்கப்படுவோர் எல்லோரும் இத்தகைய ஒரு நிலையை அடைவதற்கு, வெறும் பிரசாரமும் கிளர்ச்சியும் மட்டும் போதாது. இதற்கு வெகுஜனங்கள் தாமே அரசியல் அனுபவம் பெற வேண்டியது அவசியமாகும், மாபெரும் புரட்சிகள் யாவற்றுக்குமான அடிப்படை விதி இது. ருஷ்யாவில் மட்டுமின்றி... இது மிகுந்த வலிமையுடனும் தெட்டத் தெளி

கிடைப்பதோ அல்ல, பாட்டாளி வர்க்கமானது முதலாளி வர்க்கத்தின் மீது வெற்றி பெற விரும்பினால் அது முதலாளித்துவ அரசியல் வாதிகளுக்கு எவ்விதத்திலும் சப்பையில்லாத தனது சொந்தப் பாட்டாளி 'வர்க்க அரசியல் வாதிகளை' உருவாக்க வேண்டும்.'' * அங்கேயே அவர் விஞ்ஞானம் என்ற வகையில் அரசியலைப் பற்றிய வரையறுப்பைத் தருகிறார். இது ''முதலாவதாக, பிற நாடுகளின் அனுபவத்தை — முக்கியமாய் முதலாளித்துவ நாடுகளேயான இந்தப் பிற நாடுகள் இதே மாதிரியான அனுபவத்தைக் கண்டு வருமாயின், அல்லது அண்மையில் கண்டிருக்குமாயின் — கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கோருகிறது; இரண்டாவதாக, அது அந்தந்த நாட்டில் செயல்படும் எல்லாச் சக்திகளையும் கோஷ்டிகளையும் கட்சிகளையும் வர்க்கங்களையும் வெகுஜனங்களையும் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டுமென்றும், மற்றும் ஒரேயொரு கோஷ்டி அல்லது கட்சியின் விருப்பங்களையும் அபிப்பிராயங்களையும் வர்க்க உணர்வின், போர்க்குணத்தின் நிலையையும் மட்டும் கொண்டு கொள்கையை நிர்ணயித்துவிடக் கூடாதென்றும் கோருகிறது.'' **

சோதரக் கட்சிகள் வளைந்து கொடுக்க வேண்டும், எச்சரிக்கையோடிருக்க வேண்டும், மக்கள் திரளினருக்குத் தலைமை தாங்கும் கலையை

---

* அதே நூல், பக்கங்கள் 283 — 284.

** அதே நூல், பக்கங்கள் 284 — 285.

இடையறாது மேம்படுத்த வேண்டும் என்று லெனினின் நூல் சொல்லித் தருகிறது. ஒவ்வொரு கம்யூனிஸ்டுக் கட்சியும் செயல்திட்டக் கட்டங் களை அறிந்து துல்லியமாக வரையறுக்க கற் றிருக்க வேண்டும், வர்க்கப் போராட்டத்தைப் புதிய கட்டத்திற்கு உயர்த்த அடுத்து என்ன நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்று அது அறிந்திருக்க வேண்டும், நெளிவு சுழிவான, பயன்மிகு கொள்கையைக் கடைப்பிடிக்க அறிந் திருக்க வேண்டும், போராட்டச் சூழ்நிலைகளுக் கேற்ப இதை ஆக்கபூர்வமாக மாற்ற அதற்குத் தெரிந்திருக்க வேண்டும், வர்க்கச் சக்திகளின் நிலை, இயக்கத்தைப் பகுப்பாய்வு செய்து மக்கள் திரளினரைப் புரட்சிக்கு அழைத்துச் செல்ல அக்கட்சிக்குத் தெரிந்திருக்க வேண்டும்.

மக்கள் திரளினரின் பங்கு, இவர்களிடம் சொந்த அனுபவத்தைப் பயிற்றுவித்தல், வர்க்கப் போராட்டத்திற்கான அரசியல் தலைமையை ஏற்க அவசியமான அனுபவத்தைக் கட்சி பெறுதல் ஆகியவற்றின் மீது தன் நூலில் லெனின் பெரும் கவனம் செலுத்துகிறார். ''உழைப்பாளி மக்களின் விரிவான பகுதிகள் யாவும், மூலதனத்தால் ஒடுக்கப்படுவோர் எல் லோரும் இத்தகைய ஒரு நிலையை அடை வதற்கு, வெறும் பிரசாரமும் கிளர்ச்சியும் மட்டும் போதாது. இதற்கு வெகுஜனங்கள் தாமே அரசி யல் அனுபவம் பெற வேண்டியது அவசியமாகும், மாபெரும் புரட்சிகள் யாவற்றுக்குமான அடிப் படை விதி இது. ருஷ்யாவில் மட்டுமின்றி... இது மிகுந்த வலிமையுடனும் தெட்டத் தெளி

வாகவும் ஊர்ஜிதம் செய்யப்பட்டிருக்கிறது.'' *

உலக இயக்கத்தின் அனுபவத்தை, குறிப்பாக போல்ஷிவிக் கட்சியின், மாபெரும் அக்டோபர் சோஷலிசப் புரட்சியின் அனுபவத்தை கம்யூனிஸ்டுக் கட்சிகள் பெற வேண்டும் என்ற லெனினிய ஆலோசனை, நூல் பூராவும் காணப்படுகிறது. ஏற்கெனவே உள்ள அனுபவத்தை அலட்சியப்படுத்தக் கூடாது, ஏனெனில் இதன் பாலான ஆக்கபூர்வமான அணுகுமுறைதான் கடந்த காலத்தில் செய்த தவறுகளைத் திரும்பவும் செய்யாமலிருக்கவும் சரியான பாதைகளைக் கண்டு பிடிக்கவும் உதவும்.

மகத்தான எதிர்கால நம்பிக்கையையும் மக்கள் திரளினரின் புரட்சிகர படைப்பாற்றல் மீதான அசைக்க இயலா நம்பிக்கையையும் உடைய லெனினிய படைப்பு, சமாதானம், ஜனநாயகம், சமூக முன்னேற்றத்திற்கான போராட்டத்திற்கு எல்லா நாடுகளிலும் உள்ள கம்யூனிஸ்டுகளையும் உழைப்பாளிகளையும் ஊக்குவிக்கிறது. நம் கண்களில் உலகம் விரைவாக மாறி வருகிறது. இது ஏகாதிபத்தியம் எழுப்பும் தடைகளை மீறி மாறி வருகிறது. இது மாற்ற இயலா வரலாற்றுப் போக்காகும், இதன் மீது கம்யூனிஸ்டுகள் தம் கவனம், ஆற்றல் முழுவதையும் செலுத்துகின்றனர். மனிதகுலம் முழுவதையும் சுரண்டலிலிருந்து விடுவிப்பதைத்தான் தம் வாழ்க்கை லட்சியமாகக் கருதுகின்றனர்.

எல்லா உழைப்பாளிகளின் விடுதலையும் மகிழ்ச்

---

* அதே நூல், பக்கங்கள் *304 — 305*.

சியும்தான் கம்யூனிஸ்டுகளுக்கு மிக முக்கியமான வையாகும், இவர்களுடைய செல்வாக்கின் ''ரகசியம்'' இதில்தான் உள்ளது. கம்யூனிஸ்டு இயக்கத்தைப் போல் வேறெந்த ஒரு அரசியல் இயக்கமும் இவ்வளவு சக்தியுடன் பரவியதில்லை. உலக கம்யூனிஸ்டு இயக்கம் நவீன உலகில் மிகவும் ஒழுங்கமைந்த, மிகவும் செல்வாக்கான அரசியல் சக்தியாகியுள்ளது.

இன்று உலகில் 100க்கும் மேற்பட்ட கம்யூனிஸ்டுக் கட்சிகள் உள்ளன, இவற்றில் சுமார் 8 கோடி உறுப்பினர்கள் இருக்கின்றனர். சமூக சமமின்மை, சகலவிதமான ஒடுக்குமுறைகள், சுரண்டல், யுத்தக் கொடுமைகள் ஆகியவற்றிலிருந்து மனிதகுலத்தை விடுவித்து பூமியில் சமாதானம், உழைப்பு, விடுதலை, சமத்துவம், சகோதரத்துவம், மகிழ்ச்சி ஆகியவற்றை நிலைநாட்டும் தம் வரலாற்றுக் கடமையை கம்யூனிஸ்டுகள் வெற்றிகரமாக நிறைவேற்றி வருகின்றனர்.

மனிதகுலத்தின் எதிர்காலத்தை நன்னம்பிக்கையோடு பார்த்து லெனின் எழுதினார்: ''வாழ்க்கையானது தன்னைத் தானே நிலைநாட்டிக் கொள்ளவே செய்யும். முதலாளி வர்க்கம் கொடுஞ் சீற்றங் கொண்டு வெறி தலைக்கேறி கோரநர்த்தனம் புரியட்டும்.... எது எப்படி ஆயினும் வருங்காலம் நமதே என்பது கம்யூனிஸ்டுகளுக்குத் தெரிந்திருக்க வேண்டும். ஆகவே நம்மால் மாபெரும் புரட்சிப் போராட்டத்தின் பால் அடங்காத உணர்ச்சிப் பரவசத்தை முதலாளி வர்க்கத்தின் தலைவிரி கோலமான வெறியாட்டத்தைப் பற்றிய மிகமிக அமைதியான, மிகமிக

நிதானமான மதிப்பீட்டுடன் இணைத்துக் கொள்ள முடியும் (அவ்வாறே இணைத்துக் கொள்ளவும் வேண்டும்).'' *

---

* அதே நூல், பக்கங்கள் 318 — 319.

# சொற்றொடர் விளக்கம்

**அகிலம்:**

**இரண்டாவது அகிலம்** — *சோஷலிஸ்டுக் கட்சிகளின் சர்வதேச அமைப்பு, 1889இல் தோற்றுவிக்கப் பட்டது. ஏகாதிபத்திய சகாப்தம் பிறந்ததும் இதில் சந்தர்ப்பவாதப் போக்குகள் மேன்மேலும் தலைதூக்கின. 1914இல் முதலாவது உலக யுத்தம் ஆரம்பமான போது இரண்டாவது அகிலத்தின் சந்தர்ப்பவாதத் தலைவர்கள் (காவுத்ஸ்கியும் இதரரும்) தத்தம் நாடுகளிலிருந்த பூர்ஷ்வா அரசாங் கங்களின் ஏகாதிபத்தியக் கொள்கையை வெளிப் படையாக ஆதரிக்கலாயினர். இரண்டாவது அகி லம் கலைந்தது.*

**இரண்டரையாவது அகிலம்** — *மக்கள் திரளினரின் நிர்ப்பந்தத்தால் இரண்டாவது அகிலத்திலிருந்து வெளியேறிய மத்தியத்துவ சோஷலிஸ்டுக் கட்சி கள், குழுக்களின் சர்வதேச ஸ்தாபனம்; 1921 பிப்ரவரியில் வியன்னா மகாநாட்டில் உரு வானது. வாயளவில் இரண்டாவது அகிலத்தை விமர்சித்த இரண்டரையாவது அகிலத் தலைவர் கள் நடைமுறையில் தொழிலாளர் இயக்கத்தைப் பிளவுபடுத்தும் கொள்கையைப் பின்பற்றினர், தொழிலாளர் மத்தியில் கம்யூனிஸ்டுகளின் செல் வாக்கு வளருவதைத் தடுக்க முயன்றனர். 1923 மேயில் இரண்டாவது, இரண்டரையாவது*

அகிலங்கள் சோஷலிசத் தொழிலாளர் அகிலமாக ஒன்றிணைந்தன.

**கம்யூனிஸ்டு அகிலம், மூன்றாவது அகிலம்** – பல்வேறு நாடுகளிலிருந்த கம்யூனிஸ்டுக் கட்சிகளை ஒன்றிணைத்த சர்வதேசப் புரட்சிகர பாட்டாளி வர்க்க ஸ்தாபனம்; 1919 முதல் 1943 வரை நிலவியது. கம்யூனிஸ்டு அகிலம், பல்வேறு நாடுகளின் உழைப்பாளிகளுக்கு இடையில் நிலவிய தொடர்புகளைப் புனர்நாட்டி வலுப்படுத்தியது, சர்வதேச தொழிலாளர் இயக்கத்திலிருந்த சந்தர்ப்பவாதத்தை அம்பலப்படுத்த உதவியது, சர்வதேச கம்யூனிஸ்டு இயக்க செயல்திட்டத்தையும் செயல்முறையையும் தீட்ட வழிகோலியது.

**இடதுசாரி எஸ்ஸேர்கள்,** முதலில் சோஷலிஸ்டுப் புரட்சியாளர் கட்சியின் இடதுசாரிப் பிரிவு – 1917 நவம்பரில் நடந்த முதலாவது காங்கிரசில் ஸ்தாபன ரீதியாக உருவெடுத்தது. விவசாயிகள் மத்தியில் தம் செல்வாக்கைத் தக்க வைக்க முயன்ற எஸ்ஸேர்கள் போல்ஷிவிக்குகளுடன் ஒத்துழைத்து சோவியத் அரசாங்கத்தில் இடம் பெற்றனர். 1918 ஜனவரி – பிப்ரவரியில் இடதுசாரி எஸ்ஸேர்கள் பிரேஸ்த் சமாதான ஒப்பந்தம் செய்து கொள்வதை எதிர்த்தனர், இந்த ஒப்பந்தம் கையெழுத்தானதும் அரசாங்கத்திலிருந்து வெளியேறி சோவியத் ஆட்சிக்கு எதிராக ஆயுத கலகத்தில் இறங்கினர்.

**''இடதுசாரி'' கம்யூனிஸ்டுகள்** – 1918ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் பிரேஸ்த் சமாதானம் செய்து கொள்ளப்பட்டதையடுத்து ருஷ்ய கம்யூனிஸ்டு

(போல்ஷிவிக்) கட்சியில் தோன்றிய சந்தர்ப்ப வாதக் குழு. புரட்சி யுத்தம் பற்றிய இடதுசாரி கோஷத்தின் கீழ் மறைந்து கொண்டு "இடது சாரி" கம்யூனிஸ்டுகள், இன்னமும் இராணுவத் தைக் கூடத் தோற்றுவிக்காத சோவியத் குடியரசு ஏகாதிபத்திய ஜெர்மனிக்கு எதிரான யுத்தத் தைத் தொடர வேண்டுமென்ற அதிசாகசக் கொள்கையை முன்வைத்தனர். இவர்கள் ஒரே தலைமை, உழைப்புக் கட்டுப்பாடு, பூர்ஷ்வா நிபுணர்களைப் பயன்படுத்தல் ஆகியவற்றையும் எதிர்த்தனர். "இடதுசாரி" கம்யூனிஸ்டுகளின் கண்ணோட்டங்களுக்கு போல்ஷிவிக் கட்சி சரி யான பதிலடி தந்தது.

**கின்தால்** – *1916 ஏப்ரலில் கின்தாலில் (ஸ்விட் சர்லாந்து) நடந்த இரண்டாவது சர்வதேச சோஷலிச மகாநாடு. இது மேற்கு ஐரோப்பிய சமூக-ஜனநாயகத்தின் இடதுசாரி சக்திகள் அணி திரள உதவியது. இச்சக்திகள் பின்னால் தத்தம் நாடுகளில் கம்யூனிஸ்டுக் கட்சிகளைத் தோற்று விப்பதில் பெரும் பங்காற்றின.*

**"சட்டபூர்வ மார்க்சிஸ்டுகள்"** – *பி. பி. ஸ்துரூவே தலைமையிலான பூர்ஷ்வா அறிவுஜீவிகள், இவர் கள் மார்க்சியத்தைத் திரித்து சட்டபூர்வமான பத்திரிகைகளில் எழுதினர். முந்தைய பொரு ளாதார அமைப்புகளுடன் ஒப்பிடும் பொழுது முதலாளித்துவத்தின் முற்போக்குத் தன்மையை ஒப்புக் கொண்ட இவர்கள் பாட்டாளிகளின் வர்க்கப் போராட்டம், சோஷலிசப் புரட்சி, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் ஆகியவற்றைப்*

பற்றிய படிப்பினையாகிய மார்க்சியத்தின் புரட்சிகர சாரத்தை மறுத்தனர்.

**சோஷலிஸ்டுப் புரட்சியாளர்கள் (எஸ்ஸேர்கள்)** — *1901 — 1902இல் ருஷ்யாவில் தோன்றிய குட்டி பூர்ஷ்வாக் கட்சி. நிலத்தின் மீதான தனிச் சொத்துடைமையை ஒழித்து, கொச்சை சமப் படுத்தலின் அடிப்படையில் இதை விவசாயக் கூட்டுச் சமூகங்களுக்கு அளிக்க வேண்டுமென்று எஸ்ஸேர்கள் கோரினர். எஸ்ஸேர்கள் தம்மை சோஷலிஸ்டுகள் என்று அழைத்துக் கொண்டா லும் நடைமுறையில் இவர்களுடைய வேலைத் திட்டத்தில் சோஷலிச அம்சம் எதுவும் இருக்க வில்லை, ஏனெனில் உழைப்பாளிகளின் ஆட் சியை ஏற்படுத்தி எல்லா அடிப்படை உற்பத்திச் சாதனங்களையும் உழைப்பாளிகளுக்கு அளிக் காமல் நிலத்தின் மீதான தனிச் சொத்துடை மையை ஒழித்தால் மட்டுமே முதலாளித்துவ சுரண்டலை ஒழித்துக் கட்ட முடியாது. எஸ்ஸேர் கள் அரசியலில் அதிசாகசவாதத்தைக் கடைப் பிடித்தனர், தனிநபர் பயங்கரவாதம்தான் ஜாரி சத்திற்கு எதிரான போராட்டத்தில் இவர்களு டைய முக்கிய முறையாக இருந்தது. அக்டோபர் புரட்சிக்குப் பின் எஸ்ஸேர்கள் சோவியத் ஆட்சிக்கு எதிராகத் தீவிரமாகப் போராடினர்.*

**ஸிம்மர்வால்டு** — *1915 செப்டெம்பரில் ஸிம்மர் வால்டில் (ஸ்விட்சர்லாந்து) நடந்த முதலாவது சர்வதேச சோஷலிச மகாநாடு. இது ஏகாதிபத் தியவாதிகள் கட்டவிழ்த்து விட்ட முதலாவது உலக யுத்தத்தையும் சமூக இனவெறியையும்*

சாடியது. இம்மகாநாட்டில் மத்தியவாதப் பெரும்பான்மைக்கும் வி. இ. லெனின் தலைமையிலான புரட்சிகர சர்வதேசியவாதிகளுக்கும் இடையில் கடும் போராட்டம் மூண்டது.

**டூமா, அரசு டூமா** – ஜாரிச ருஷ்யாவிலிருந்த பிரதிநிதித்துவ அமைப்பு, **1905 – 1907**ஆம் ஆண்டு புரட்சியின் விளைவாய் தோற்றுவிக்கப்பட்டது. முறைப்படி அரசு டூமா சட்டமியற்றும் உறுப்பாகும்; நடைமுறையிலோ இதற்கு எவ்வித உண்மை அதிகாரமும் இருக்கவில்லை, ஏனெனில் இதன் தீர்மானங்கள் அனைத்திற்கும் ஜார் மன்னனின் ஆமோதிப்பு தேவையாய் இருந்தது. அரசு டூமாவிற்கான தேர்தல் நேரடியானதாகவோ, சமமானதாகவோ, சர்வபொதுவானதாகவோ இருக்கவில்லை. உழைக்கும் வர்க்கங்கள் மற்றும் ருஷ்யாவிலிருந்த ருஷ்யரல்லாதோர் ஆகியோரின் வாக்குரிமைகள் பெரிதும் பறிக்கப்பட்டிருந்தன, கணிசமான அளவு தொழிலாளர்கள், விவசாயிகளுக்கும் வாக்குரிமை இருக்கவில்லை.

**பிரேஸ்ட் சமாதானம்** – **1918** மார்ச்சில் பிரேஸ்ட்-லித்தோவ்ஸ்கில் சோவியத் ருஷ்யாவிற்கு மிகக் கடினமான நிபந்தனைகளில் ருஷ்யாவிற்கும் ஜெர்மனிக்கும் இடையில் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது. பழைய ஜாரிச இராணுவம் சிதறுண்டுப் போய், செஞ்சேனை அப்போது தான் உருவாகி வந்ததால் சோவியத் அரசாங்கம் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட வேண்டியிருந்தது. இந்த ஒப்பந்தம் கடினமானதாயிருந்தாலும் இது சோவியத் நாட்டிற்கு அவசியமான

கால இடைவெளியைத் தந்தது, உலக ஏகாதிபத்திய யுத்தத்திலிருந்து வெளியேறி, உள்நாட்டு எதிர்ப்புரட்சி மற்றும் அன்னிய தலையீட்டிற்கு எதிரான போராட்டத்திற்குப் பலம் திரட்ட உதவியது. 1918 நவம்பரில் ஜெர்மனியில் நடந்த புரட்சிக்குப் பின் பிரேஸ்ட் சமாதான ஒப்பந்தம் ரத்தானது.

**போல்ஷிவிக்குகள்** – புரட்சிகர சமூக-ஜனநாயகவாதிகள், மார்க்சிஸ்டுகள், ருஷ்ய சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியில் லெனினைப் பின்பற்றியவர்கள். 1903இல் கட்சியின் 2ஆவது காங்கிரசில் மத்திய உறுப்புகளுக்கான தேர்தலில் பெரும்பான்மையைப் பெற்றதால் (''போல்ஷின்ஸ்த்வோ'' என்ற ருஷ்யச் சொல்லுக்குப் பெரும்பான்மை என்று பொருள்) இப்பெயர் வந்தது.

**மென்ஷிவிக்குகள்** – ருஷ்ய சமூக-ஜனநாயகத்தில் சந்தர்ப்பவாதப் போக்கின் ஆதரவாளர்கள். 1903இல் நடந்த ருஷ்ய சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் இரண்டாவது காங்கிரசில் மத்திய உறுப்புகளுக்கான தேர்தலில் சிறுபான்மையை (''மென்ஷின்ஸ்த்வோ'' என்ற ருஷ்யச் சொல்லிற்குச் சிறுபான்மை என்று பொருள்) பெற்றதையடுத்து இப்பெயர் வந்தது.

## வாசகர்களுக்கு

இந்தப் புத்தகத்தைப் பற்றியும் இதன் தயாரிப்பைப் பற்றியும் தங்கள் கருத்தை அறியவும், அடுத்துவரும் வெளியீடுகள் சம்பந்தமாகத் தங்கள் ஆலோசனைகளை வரவேற்கவும் **முன்னேற்றப் பதிப்பகம்** மகிழ்ச்சியோடு காத்திருக்கிறது.

தங்கள் கடிதங்களை "Progress Publishers, 17, Zubovsky Boulevard, Moscow, USSR" என்ற முகவரிக்கு அனுப்புங்கள்.

**விற்பனையாளர்கள்**

**நியூ செஞ்சுரி புக்ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்**

**தலைமை அலுவலகம்**

*41 — பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்,*
*சென்னை — 600098*

**ஷோ-ரூம்**

*136, அண்ணாசாலை, சென்னை — 600002*

**கிளைகள்**

*80, மேலக் கோபுர வீதி, மதுரை — 625001*
*3 — 4, நேரு ஸ்டேடியம், கோயம்பத்தூர் — 641018*
*42/7, சிங்காரத் தோப்பு, திருச்சிராப்பள்ளி — 620008*
*செர்ரி ரோடு, சேலம் — 636001*

**விற்பனை நிலையங்கள்**

3 — 22 — 75 — D, மதுரை சாலை;
திருநெல்வேலி ஜங்ஷன் — 627001
66, கீழராஜ வீதி, தஞ்சாவூர்
சேரிங் கிராஸ், உதகமண்டலம் — 643001
நகராட்சி அலுவலகம் எதிரில், திண்டுக்கல் — 624001